


SHANKAR IAS ACADEMY™

SINCE 2004

Best Academy for Civil Services Exam Coaching

# மைக்ரோ நடப்பு நிகழ்வுகள் தொகுப்பு

ஜனவரி 2026 - ஆகஸ்ட் 15/2026

# TNPSC தேர்வுப் பெட்டகம்

shankariasacademy.com

tnpscthervupettagam.com

# உள்ளடக்கம்

தமிழ்நாடு செய்திகள் ........ 2
தேசியச் செய்திகள் ........ 13
சர்வதேசச் செய்திகள் ........ 42
பொருளாதாரச் செய்திகள் ........ 51
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 57
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 67
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 79
மாநிலச் செய்திகள் ........ 89
புவிசார் குறியீடுகள் ........ 104
முன்னெடுப்புகள், திட்டங்கள் மற்றும் பிரச்சாரங்கள் ........ 104
பிரபலமானவர்கள் மற்றும் விருதுகள் ........ 112
நிகழ்வுகள் மற்றும் மாநாடுகள் ........ 127
பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் ........ 134
விளையாட்டுச் செய்திகள் ........ 136
முக்கிய தினங்கள் ........ 141

# தமிழ்நாடு செய்திகள்

- ககன்தீப் சிங் பேடி தலைமையிலான இந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்கள் K.R. சண்முகம் மற்றும் பிரதிக் தயாள் ஆகியோர் உள்ளிட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஓய்வூதியக் குழு தனது இறுதி அறிக்கையை சென்னையில் தமிழக அரசிடம் சமர்ப்பித்தது.
- ஸ்ரீ வைணவ சமயத்தின் முதல் ஆச்சார்யரான நாதமுனிகளின் சிலை, 2000 ஆம் ஆண்டில் கங்கை கொண்ட சோழபுரம் அருகே (செம்போடை) கண்டுபிடிக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டில் இயல்பை விட அதிகமான மழை பெய்யும் என்று கணிக்கப் பட்டதற்கு மாறாக தமிழ்நாட்டில் சாதாரண வடகிழக்குப் பருவமழை (அக்டோபர்–டிசம்பர்) பதிவானது.
- முந்தைய ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வாகனப் பதிவுகள் 8.4% அதிகரித்துள்ளன.
- தனியார் பங்கு மற்றும் துணிகர மூலதன முதலீட்டு (PE–VC) நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களில் 61 ஒப்பந்தங்களில் 3,513 மில்லியன் டாலரை முதலீடு செய்தன.
- 2025–26 நிதியாண்டின்படி, தமிழ்நாட்டின் கடன் நிலுவை, மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 26.1% ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு இது 2024–25 ஆம் ஆண்டில் 26.4% ஆகவும், 2023–24 ஆம் ஆண்டில் 26.6% ஆகவும் இருந்தது.
- தமிழ்நாடு அரசானது, பழைய ஓய்வூதியத் திட்டத்தை (OPS) பெருமளவில் பின்பற்றுகின்ற தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை (TAPS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு மாநில அரசானது, சுரங்கத்தினால் பாதிக்கப்பட்டப் பகுதிகள் மற்றும் சமூகங்களுக்கு DMF நிதிகளின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக மாவட்ட கனிம அறக்கட்டளை (DMF) விதிகளைத் திருத்தி அமைத்துள்ளது.
- இசைக்கலைஞர்கள் மற்றும் இசை குறித்த உ.வே. சுவாமிநாத ஐயரின் படைப்புகளின் ஆங்கில மொழிபெயர்ப்பை தி மியூசிக் அகாடமி வெளியிட்டுள்ளது.
- கடைசி மாத சம்பளத்தில் 50 சதவீதத்திற்குச் சமமான ஓய்வூதியத்தை உறுதி செய்யும் தமிழ்நாடு அரசின் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) ஆனது மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில், தேசிய மஞ்சள் வாரியத்தின் (NTB) பிராந்திய அலுவலகம் மற்றும் அங்கீகாரம் பெற்ற மஞ்சள் பரிசோதனை ஆய்வகம் அமைக்கப் பட உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- 2025–26 ஆம் ஆண்டு குஞ்சு பொரிப்பிற்கான வலையமைக்கும் பருவத்திற்காக சென்னையில் உள்ள நீலாங்கரை, கோவளம் மற்றும் பழவேற்காடு ஆகிய பகுதிகளில் சிற்றாமைகள்/ஆலிவ் ரெட்லி கடல் ஆமை குஞ்சு பொரிக்கும் தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் பெண்கள் நலன், பாலின சமத்துவம் மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியை வலுப்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசானது, ஐ.நா. பெண்கள் அமைப்புடன் சென்னையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டது.
- தமிழ்நாட்டில் பெரிய அளவில் நடைபெறும் பொதுக் கூட்டங்களை ஒழுங்கு படுத்துவதற்கான ஒரு சீர்தர இயக்கச் செயல்முறையை (SOP) தமிழ்நாடு மாநில அரசு அறிவித்துள்ளது.

- தமிழ்நாடு அரசானது உங்கள் கனவைச் சொல்லுங்கள் (உங்கள் விருப்பங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்) என்ற மாநில அளவிலான வீடு வாரியான கணக்கெடுப்பைத் தொடங்குகிறது.
- சென்னையின் நகர்ப்புறப் போக்குவரத்தின் பரிமாற்றத்திற்காக பெருநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) உலக வங்கியிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளது.
- உலகளவில் அதன் முதல் துணை–தேசிய அரசாங்கக் கூட்டாளியாக யுனிசெஃப் தமிழ்நாடு அரசாங்கத்துடன் ஒரு முக்கிய கூட்டாண்மையில் கையெழுத்திட்டுள்ளது.
- சென்னையில் நடைபெற்ற UmagineTN 2026 நிகழ்வில் இந்தியாவின் முதல் பிரத்யேக உள்ளார்ந்த தொழில்நுட்பம் சார்ந்த புத்தொழில் நிறுவனக் கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டது.
- தமிழ்நாடு அரசானது குடிமக்களுக்கு வாட்ஸ்அப் (கட்செவி அஞ்சல்) மூலம் அரசு சேவைகளை வழங்குவதற்காக 'நம்ம அரசு' எனும் வாட்ஸ்அப் சாட்பாட்–ஐ அறிமுகப் படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு அரசு, மாநில அரசு ஊழியர்களுக்காக தமிழ்நாடு அரசின் உறுதிப்படுத்தப் பட்ட ஓய்வூதியத் திட்டத்தை (TAPS) 2026 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் செயல்படுத்தியுள்ளது.
- தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மேலும் இரண்டு மாநிலத் தகவல் ஆணையர்களை நியமிக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளில் (SDGs) முன்னேற்றத்தைக் கண்காணிக்க தமிழ்நாடு மாநிலக் குறிகாட்டி கட்டமைப்பு (SIF) 2.0 என்ற கட்டமைப்பினை வெளியிட்டுள்ளது.
- சென்னை மாநகரக் கழகம் (GCC) ஆனது மொத்தம் 90 லட்சம் மெட்ரிக் டன் அளவிலான நீண்ட நாள் கழிவுகளில் கிட்டத்தட்ட 50 லட்சம் மெட்ரிக் டன் கழிவுகளை நுண்ணுயிர்க் கழிவுப் பிரிப்பு செயல்முறை மூலம் அகற்றியுள்ளது.
- சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL) கழகத்தின் நிலத்தடி சுரங்கப்பாதையின் மீது கட்டப்படுகின்ற இந்தியாவின் முதல் சாலை வழிப் பாலத்தில் முதல் தளத்தின் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு முதலமைச்சர் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சுழற் பொருளாதார முதலீட்டுக் கொள்கையை சென்னையில் வெளியிட்டார்.
- தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குக் கொள்கையை வெளியிட்டார்.
- 10,000 கோடி ரூபாய் மதிப்பிலான இந்தியாவின் முதல் இறையாண்மை செயற்கை நுண்ணறிவு (AI) பூங்காவை அமைப்பதற்காக தமிழ்நாடு அரசு சர்வம் AI அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தமிழ்நாட்டின் கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தை ஊக்குவிப்பதற்கும் கொண்டாடுவதற்குமான சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா 2026 என்ற நிகழ்ச்சியினை தமிழக முதல்வர் சென்னையில் தொடங்கி வைத்தார்.
- இராமநாதபுரத்தின் பரமக்குடியில் இம்மானுவேல் சேகரனின் நினைவாக கட்டப் பட்டு உள்ள 'மணிமண்டபத்தை' தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- தமிழ்நாடு அரசு சுப வீரபாண்டியன் தலைமையிலான சமூக நீதி கண்காணிப்புக் குழுவின் பதவிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டித்தது.

- தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, வங்காளம் மற்றும் மராட்டியம் உள்ளிட்ட 7 மொழிகளில் வழங்கப்படும் வருடாந்திர இலக்கிய விருதுகளை தமிழக முதல்வர் அறிவித்தார்.
- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கிழக்குக் கடற்கரைச் சாலையில் மாமல்லன் நீர்த்தேக்கத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- தமிழ்நாடு அரசின் TNWeSAFE திட்டம், 2026 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பெண்கள் உச்சி மாநாட்டை சென்னையில் ஏற்பாடு செய்ய உள்ளது.
- ஜனவரி 20 ஆம் தேதி மாநில சட்டமன்றத்தில் மாநில அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட தனது வழக்கமான உரையைப் படிக்க தமிழ்நாடு ஆளுநர் R.N. ரவி மறுத்து, அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.
- தமிழ்நாடு அரசு ஜனவரி 21 முதல் 23, 2026 ஆம் தேதி வரை மூன்று நாட்கள் அளவிலான மாநிலம் தழுவிய குப்பைத் திருவிழா (குப்பை சேகரிப்பு இயக்கம்) நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.
- வடகிழக்குப் பருவமழை ஜனவரி 19, 2026 அன்று தமிழ்நாட்டிலிருந்து விலகியதாக, சென்னை பிராந்திய வானிலை ஆய்வு மையத்தினால் (RMC) உறுதிப்படுத்தப்பட்டது.
- தமிழ்நாட்டின் திருச்சிராப்பள்ளியில் உள்ள ஒரு அரசுப் பள்ளி, மாற்றத்திற்கான இளம் தூதர்கள் முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- இராணிப்பேட்டை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கிராமங்கள் மற்றும் சிறு நகரங்களை மையமாகக் கொண்ட தெரு (சமூக) நாய்களுக்கான சிறப்பு கால்நடை வளாகத்தைத் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- தமிழ்நாடு அரசானது, மகாபலிபுரத்தில் 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்து வருகிறது.
- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சொத்துப் பதிவை முழுமையாக டிஜிட்டல் மயமாக்க ஸ்பிரிண்ட் 1 தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையத்தை உருவாக்குவதற்கான மசோதாவை தமிழ்நாடு அரசு மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்தது.
- தமிழ்நாடு வனத்துறையானது, தூத்துக்குடி மாவட்டத்தின் தேரி வனப்பகுதியில் மெட்ராஸ் முள்ளெலி குறித்த தனது முதல் ஆய்வைத் தொடங்கியுள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், தமிழ்நாடு உலக மகளிர் உச்சி மாநாடு 2026–ல் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் (TNWESafe) மற்றும் மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- சென்னை பிராட்வேயில் குறளகத்துடன் இணைந்த ஒருங்கிணைந்த பன்முகப் போக்குவரத்து வசதி வளாகத்திற்கான (MMFC) அடிக்கல்லை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நாட்டினார்.
- சென்னையில் நடைபெற்ற இந்தியா உலகளாவிய கல்வி உச்சி மாநாடு 2026ல், திருவள்ளூர் மாவட்டத்தில் 872 ஏக்கர் பரப்பளவில் ஒரு ஒருங்கிணைந்த கல்வி-தொழில்துறை சூழல் அமைப்பாக அறிவு நகரம் திட்டமிடப்பட்டுள்ளது.
- மாநில அரசு தமிழ்நாடு ஆனந்த் திருமணப் பதிவு விதிகள், 2026ஐ அறிவித்துள்ளது, பொதுவாக ஆனந்த் கரஜ் என்று அழைக்கப்படும் ஆனந்த் திருமணங்கள், சீக்கிய திருமணச் சடங்குகளின்படி நடத்தப்படுகின்றன.

- ❖ சென்னையில் உள்ள திருவொற்றியூர் நெடுஞ்சாலை இனிமேல் 'வள்ளலார் நெடுஞ் சாலை' என்று அழைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்து உள்ளார்.
- ❖ திமுக அரசு தஞ்சாவூரில் உள்ள சோழர் அருங்காட்சியகத்தில் சோழ மன்னர் ராஜ ராஜ சோழனின் 125 அடி உயர சிலையை நிறுவ திட்டமிட்டுள்ளது.
- ❖ முதன்முறையாக, மெட்ராஸ் உயர் நீதிமன்றம் 'சூப்பர் லா கோர்ட்ஸ்' எனப்படும் செயற்கை நுண்ணறிவு (AI) உதவியுடன் இயங்கும் ஒரு வழிமுறை அமைப்பைப் பயன்படுத்த உள்ளது.
- ❖ சென்னை, ஓமந்தூரார் அரசு வளாகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில், சென்னை மாகாணத்தின் முன்னாள் பிரதமரான (முதலமைச்சர்) ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரின் சிலை நிறுவப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- ❖ 50 ஆண்டுகளுக்கு முன்பு, 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி, தமிழ்நாட்டு அரசாங்கம் வரலாற்றில் முதல் முறையாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டது.
- ❖ ஜனவரி 2026ல் இந்தியா உலகின் இரண்டாவது மிகவும் நம்பிக்கையான நுகர்வோர் சந்தையாக மாறியது.
- ❖ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாட்டின் மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகாரில் புதுப்பிக்கப்பட்ட பூம்புகார் சுற்றுலா வளாகத்தை திறந்து வைத்தார்.
- ❖ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில் உள்ள சிப்காட் (தமிழ்நாடு மாநிலத் தொழிலகங்கள் மேம்பாட்டுக் கழகம்) வளாகத்தில் உள்ள நாவலூர் ஏரியில் ஒரு சூழலியல் பூங்காவைத் திறந்து வைத்தார்.
- ❖ சென்னையில் நடைபெற்ற 2026 தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாட்டில், 2027 ஜனவரியில் தமிழ்குறித்த பெரிய அளவிலான சர்வதேச சமகால கலைக் கண்காட்சி நடைபெறும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.
- ❖ 16வது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, பகிரப்படக் கூடிய மத்திய வரிகளின் நிகர வருவாயில் 4.097 சதவீதத்தைத் தமிழ்நாடு பெறும்.
- ❖ தமிழ்நாடு முதலமைச்சர், ராணிப்பேட்டையின் முதல் கார் உற்பத்தி ஆலையை, பனப்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு மாநில தொழில்கள் மேம்பாட்டுக் கழகம் (சிப்காட்) வளாகத்தில் திறந்து வைக்கவுள்ளார்.
- ❖ தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றமானது (TNSCST) 38வது கேரள மாநில அறிவியல் மாநாட்டில் முதல் பரிசை வென்றது.
- ❖ தமிழக முதல்வர், மறைந்த நடிகர் 'கலைவாணர்' என்.எஸ். கிருஷ்ணனின் சிலையை சென்னையில் திறந்து வைத்தார்.
- ❖ தமிழக முதல்வர் மாமல்லபுரத்தில் மாநிலத்தின் முதல் ஒளிரும் பூங்காவைத் திறந்து வைத்தார்.
- ❖ காவல் துறை உதவியாளர் (ஆர்டர்லி) முறையை ஒழிப்பதற்காக 2026 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் தேதி அரசாணை பிறப்பித்துள்ளதாக தமிழ்நாடு அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தது.
- ❖ தமிழ்நாட்டின் திருச்சி, புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 500க்கும் மேற்பட்ட கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதோடு இது பழங் கற்கால மற்றும் இடைக் கற்கால வாழ்விடங்களைக் குறிக்கிறது.
- ❖ தமிழ்நாடு 2030 ஆம் ஆண்டுக்குள் 150 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னணுவியல் மையமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ❖ தமிழ்நாடு இந்தியாவில் மிக உயர்ந்த தனிநபர் வருமான வளர்ச்சியைப் பதிவு செய்து உள்ளது என்பதோடு இது 2020–2021 இல் 0.07% இலிருந்து 11.19% ஆக அதிகரித்துள்ளது.
- ❖ ஜனவரி 2026 இல் 33 நன்கொடையாளர்களுடன் தமிழ்நாடு அதன் அதிகபட்ச மாதாந்திர இறந்த உறுப்பு தானங்களைப் பதிவு செய்தது.
- ❖ உண்மையான வளர்ச்சி விகிதம் 11.2% உடன் தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) 2024–25 ஆம் ஆண்டில் ₹31.19 லட்சம் கோடியை எட்டியது என்பதோடு இது பெரிய மாநிலங்களில் மிக உயர்ந்ததாகும்.
- ❖ அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பான பிரசவங்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடத்தில் உள்ளது.
- ❖ தமிழ்நாட்டின் தாய் இறப்பு விகிதம் (MMR) ஒரு லட்சம் பிறப்புகளுக்கு 35 ஆகக் குறைந்துள்ளது என்பதோடு குழந்தை இறப்பு விகிதம் (IMR) ஆயிரம் பிறப்புகளுக்கு 12 ஆக உள்ளது.
- ❖ தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு-5 (NFHS-5) அடிப்படையிலான மதிப்பீடுகளின் படி, சக மாநிலங்களில் அதிக இரத்த உறவுகளுக்கிடையே திருமணங்கள் (28%) நடைபெறும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.
- ❖ ரூ.261 கோடி மதிப்பிலான சர்வதேச விளையாட்டு நகரத்திற்கான அடிக்கல்லை சென்னையில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நாட்டினார்.
- ❖ குறைக்கடத்தி மற்றும் விண்வெளி உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக தமிழக அரசு ₹5,980 கோடி மதிப்புள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் (MoU) கையெழுத்திட்டது.
- ❖ கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குமிட்டிபதி கிராமத்தில் உள்ள 2,300 ஆண்டுகள் பழமையான பாறை ஓவியங்கள் 2025 ஆம் ஆண்டில் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்ட போதிலும் பாதுகாப்பின்றி உள்ளன.
- ❖ 2026–2027 ஆம் ஆண்டிற்கான ₹9,319 கோடி பட்ஜெட்டை சென்னை மாநகராட்சி தாக்கல் செய்தது.
- ❖ தமிழ்நாடு தனது முதல் இரவு வான்வெளிப் பூங்காவை (Dark Sky Park) கொல்லி மலைகளில் தொடங்கியுள்ளது என்ற நிலையில் இது வானியல் சுற்றுலாவை நன்கு ஊக்குவிக்கவும் இரவு நேர வானத்தின் காணும் நிலையைப் பாதுகாக்கவும் உதவச் செய்கிறது.
- ❖ கப்பல் கட்டும் தொகுதிகளை உருவாக்குவதையும், மாநிலத்தில் கப்பல்களின் உற்பத்தி, பழுதுபார்ப்பு மற்றும் மறுசுழற்சி ஆகியவற்றை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்ட 2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கப்பல் கட்டும் கொள்கையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.
- ❖ நிலையான வேளாண் காடுகள் வளர்ப்பை ஊக்குவிப்பதையும், விவசாயிகள் அதிக மதிப்புள்ள மர இனங்களை வளர்க்க ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்ட 2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண் காடுகள் வளர்ப்புக் கொள்கையை தமிழ்நாடு அரசு வெளியிட்டது
- ❖ தமிழ்நாட்டில் பெண் தொழில்முனைவோரை ஆதரிப்பதற்காக StartupTN மற்றும் TNWeSafe (தமிழ்நாடு பெண்கள் பாதுகாப்புத் திட்டம்) ஆகியவை இணைந்து EmpowHer 1.0 எனும் திட்டத்தைத் தொடங்கின.
- ❖ தமிழ்நாட்டின் முதலமைச்சர் புனல் (1916) என்ற தமிழ்நாடு ஒருங்கிணைந்த குடிநீர் குறை தீர்க்கும் மையத்தை சென்னையில் தொடங்கினார்.

❖ விழுப்புரம் மாவட்டம் கழுவேலி ஈரநிலப் பறவைகள் சரணாலயத்திற்கு அருகிலுள்ள அகரம் காப்புக் காடுகள் பகுதியில் சர்வதேசப் பறவை மையத்திற்கு (IBC) தமிழக முதல்வரால் அடிக்கல் நாட்டப்பட்டது.

❖ நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி சென்னை உயர் நீதிமன்றத்தின் 55வது தலைமை நீதிபதியாக பதவியேற்றார்.

❖ ஐந்து ஆண்டுகளில் சுமார் 1 லட்சம் பெண்கள் தொழில்முனைவோராக மாறுவதை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு பெண்கள் தொழில்முனைவோர் அதிகாரமளிப்புத் திட்டம் (TWEES) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) துறையால் தொடங்கப் பட்டது.

❖ நகர்ப்புற மேம்பாட்டிற்காக திருச்சிராப்பள்ளி முழுமைத் திட்டம் 2045 மற்றும் தூத்துக்குடி முழுமைத் திட்டம் 2045 ஆகியவற்றை தமிழ்நாடு அரசாங்கம் வெளியிட்டது.

❖ பிச்சாவரத்தில் சதுப்புநில பாதுகாப்பு மையம், மரக்காணத்தில் சர்வதேச இடம் பெயர்வு பறவை மையம் மற்றும் கோயம்புத்தூரில் நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

❖ பெரியார்வாதி வி. ஆனைமுத்து மற்றும் எழுத்தாளர் ஈரோடு தமிழன்பன் ஆகியோரின் படைப்புகளை தமிழக அரசு தேசியமயமாக்கியது என்பதோடு மேலும் காப்புரிமைத் தொகை அவர்களின் குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

❖ தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னையில் 14-அம்ச துறை வாரியான செயல்திட்டமான “தமிழ்நாடு 2030” ஐ வெளியிட்டார்.

❖ டிஜிட்டல் போலீஸ் சேவைகளை வழங்குவதற்காக, தமிழ்நாடு காவல்துறை, CCTNS 2.0 (குற்றம் மற்றும் குற்ற கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் அமைப்புகள்) உடன் ஒருங்கிணைந்த ஒரு புதிய வலைத் தளத்தைத் தொடங்கியது.

❖ தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் அதிகாரமளிப்புத் திட்டம் (TWEES) தமிழ்நாட்டின் முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டது.

❖ தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் (V.O.C.) துறைமுகம், ஒரே கப்பலில் இருந்து 147 காற்றாலை இறக்கைகளை கையாண்டு புதிய தேசிய சாதனை படைத்துள்ளது.

❖ தமிழக முதலமைச்சர் 'சென்னையின் 100 ஆண்டு பழமையான மரங்கள்' என்ற புத்தகத்தை வெளியிட்டார் என்பதோடு இது நகரில் உள்ள நூறு ஆண்டுகளைக் கடந்த மரங்களை ஆவணப்படுத்தும் விரிவான வழிகாட்டியாகும்.

❖ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மெரினா கடற்கரையில் 'கற்றனைத் தூறும் அறிவு' சிலையைத் திறந்து வைத்து, தொடர்ச்சியான கற்றலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

❖ தமிழக ஆளுநரின் பணிகளைக் கூடுதலாக கவனிப்பதற்காக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ அசைவூட்டம், காட்சி விளைவுகள், விளையாட்டு, சித்திரக்கதைகள் மற்றும் விரிவாக்கப் பட்ட மெய்நிகர் நிலை ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு 'AVGC-XR கொள்கை 2026'-ஐ அறிவித்துள்ளது.

❖ தூத்துக்குடி விமான நிலையத்தின் ஆங்கிலப் பெயரை "Tuticorin Airport" என்பதற்குப் பதிலாக "Thoothukudi Airport" என மாற்ற மத்திய சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

❖ கீழடி மற்றும் பிற ஏழு இடங்களில் 11-ஆம் கட்ட அகழ்வாராய்ச்சியை மேற்கொள்ள தமிழ்நாடு மாநில தொல்லியல் துறைக்கு இந்திய தொல்லியல் ஆய்வு மையம் (ASI) அனுமதி வழங்கியுள்ளது.

- ❖ அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு ஒற்றைமுறைப் பயன்பாட்டு ஹீமோடையாலிசிஸ் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளது.
- ❖ கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்காக தமிழ்நாடு அரசு பிரத்தியேக மன நலக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ தேர்தல் விழிப்புணர்வு மற்றும் சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்க, திண்டுக்கல் மாவட்டம் 'திண்டு' என்ற தேவாங்கு விலங்கினைத் தேர்தல் சின்னமாக அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ 2024-25 ஆம் நிதியாண்டில் குஜராத் மற்றும் மகாராஷ்டிராவை முந்தி, மொத்த ஏற்றுமதி மதிப்பில் இந்தியாவின் முதன்மை ஜவுளி ஏற்றுமதி மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.
- ❖ தமிழ்நாடு ஊர்க்காவல் படையினருக்கான அதிகபட்ச வயது வரம்பை 58-லிருந்து 60-ஆக உயர்த்தி, தமிழக உள்துறை விதியை திருத்தியுள்ளது.
- ❖ 16-வது தமிழ்நாடு சட்டப்பேரவையின் ஐந்தாண்டு பதவிக்காலம் 2026 ஆம் ஆண்டு மே 10-ஆம் தேதியுடன் முடிவடைகிறது.
- ❖ எழுத்தாளர் கி. ராஜநாராயணன் எழுதிய புகழ்பெற்ற நாவலான 'கோபல்லபுரத்து மக்கள்', தற்போது ஆங்கிலத்தில் 'People of Gopallapuram' என்ற பெயரில் வெளியிடப் பட்டுள்ளது.
- ❖ கந்துவட்டியால் பாதிக்கப்பட்டவர்கள் புகார்களை அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு இணையதளம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ தமிழ்நாடு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 அன்று சட்டமன்றத் தேர்தலில் தனது அதிகபட்ச வாக்குப்பதிவு சதவீதத்தைப் (84.69%) பதிவு செய்தது.
- ❖ தூத்துக்குடி மாவட்டம் பனையூரில் காணப்பட்ட தொல்லுயிர் எச்சங்கள் ஹோலோசீன் காலத்தை (சுமார் 8,000–12,000 ஆண்டுகளுக்கு முந்தையது) சேர்ந்தவை என ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- ❖ அரசு மருத்துவமனைகளில் அதிக அளவில் மக்கள் சிகிச்சை பெற்று வருவதன் மூலம், பொது சுகாதாரப் பயன்பாட்டில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடத்தில் உள்ளது.
- ❖ 2025-26 ஆம் ஆண்டில் தமிழ்நாடு 10.83% என்ற அதிக உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.
- ❖ நீலகிரி மாவட்டத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால பாறை ஓவியங்கள் உள்ள அமைந்துள்ள "ஊர் பாறை" என்று அழைக்கப்படும் இடம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ❖ 2024-25-ஆம் ஆண்டில் 11.19% ஆக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியானது (GSDP), 2025-26-ஆம் ஆண்டில் 10.83% ஆக வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- ❖ சுமார் 6.85 லட்சம் டன்களாக மீன் உற்பத்தியுடன் 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் கடல் மீன் உற்பத்தியில் (பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு) தமிழ்நாடு மிக உயர்ந்த பதிவைப் பெற்றுள்ளது.
- ❖ ஏப்ரல் 23 அன்று 75,064 தமிழ்நாடு வாக்குச்சாவடிகளில் மொத்தம் உள்ள 5,73,43,291 வாக்காளர்களில் 4,87,98,833 வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்து உள்ளனர்.
- ❖ 16-வது தமிழ்நாடு சட்டப்பேரவையை 2026 ஆம் ஆண்டு மே 5 முதல் அமலுக்கு வரும் வகையில் தமிழக ஆளுநர் கலைத்தார்.

- தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தங்களது தொகுதிகளில் பதிவான செல்லத் தக்க வாக்குகளில் ஆறில் ஒரு பங்கு (1/6) வாக்குகளைப் பெறத் தவறியதால் மொத்தம் 3,352 வேட்பாளர்கள் தேர்தல் வைப்புத்தொகையை இழந்தனர்.
- சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமானது, 2026 ஆம் ஆண்டிற்கான GEEF (உலகளாவிய ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் அறக்கட்டளை) உலகளாவிய சுற்றுச்சூழல் மேன்மை விருதுகளில், மெட்ரோ ரயில் பிரிவில் "ஆண்டின் சிறந்த உலகளாவிய சுற்றுச்சூழல் தலைமைத்துவத் திட்டம் 2026" விருதை வென்றுள்ளது.
- நகர்ப்புற வானிலை முன்னறிவிப்பு மற்றும் பருவநிலை ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக, இந்தியாவின் முதல் நகர்ப்புற வானிலை சோதனைத் தளம் மற்றும் காற்றூர்தித் துகள் ஆய்வகம் சென்னையில் தொடங்கப்பட்டது.
- தமிழக வெற்றிக் கழகத்தின் (TVK) தலைவர் சி. ஜோசப் விஜய், தமிழ்நாட்டின் 15-வது முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- தேசிய மாதிரி கணக்கெடுப்பு (NSS) அறிக்கையின்படி, இந்தியாவின் முக்கிய மாநிலங்களில் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கு மிகக்குறைந்த சொந்தச் செலவில் மேற்கொள்ளும் மருத்துவச் செலவை (OOPME) தமிழ்நாடு பதிவு செய்துள்ளது.
- சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினரான கருப்பையா எம்.வி., லோக் பவனில் ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் முன்னிலையில் தற்காலிக சபாநாயகராக பதவி ஏற்றார்.
- 17-வது தமிழ்நாடு சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் (சட்டமன்ற உறுப்பினர்கள்) 2026 ஆம் ஆண்டு மே 11 அன்று பதவியேற்றனர்.
- பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்தவும், மாநிலம் முழுவதும் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழக அரசால் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டது.
- தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த ஜே. சி. டி. பிரபாகர், 2026 ஆம் ஆண்டு மே 12 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையின் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- சி. ஜோசப் விஜய் 2026 ஆம் ஆண்டிற்கான நம்பிக்கை வாக்கெடுப்பில் 144 வாக்குகள் பெற்று தமிழக சட்டப்பேரவையில் வெற்றி பெற்றார்.
- 2026 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் போட்டியிட்ட வேட்பாளர்களில் சுமார் 83% பேர் தங்கள் தேர்தல் வைப்புத்தொகையை இழந்தனர்.
- தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் நாட்டின் முதல் மிகப்பெரிய புதிய (greenfield) கப்பல் கட்டும் தளத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது.
- கன்னியாகுமரியில் உள்ள 1,100 மெகாவாட் வெள்ளிமலை நீரேற்று நீர்மின் திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திடம் இருந்து ஆய்வு வரம்புகளுக்கான (ToR) அனுமதி கிடைத்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மே 1 முதல் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 வரை கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட விவசாயிகளுக்கான கூட்டுறவுப் பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தை தமிழ்நாடு அரசு அறிவித்தது.
- சந்தீப் ராய் ரத்தோர் அவர்களைத் தொடர்ந்து, தமிழக காவல்துறை தலைமை இயக்குநராகவும் (DGP) காவல்துறை தலைவராகவும் (HoPF) மகேஷ் குமார் அகர்வால் அவர்களை தமிழக அரசு நியமித்துள்ளது.

- ❖ தமிழ்நாட்டின் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறியீடுகள் மேம்பட்டுள்ளதுடன் வயதுக்கேற்ற வளர்ச்சியின்மை 25.0% என்ற அளவிலிருந்து 20.7% ஆகவும், கடுமையான எடைக் குறைவு / மெலிதல் 5.5% இலிருந்து 4.9% ஆகவும் குறைந்துள்ளது.
- ❖ தமிழ்நாடு மறு வரையறை ஆணையம் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் மாநிலத் தேர்தல் ஆணையர் பி. ஜோதி நிர்மலாசாமி தலைமையில் நடைபெற்றது.
- ❖ 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ராதாபுரம் சட்டப்பேரவைத் தேர்தலில் திரு. ஐ.எஸ். இன்ப துரை வெற்றி பெற்றதை சுமார் பத்தாண்டுகளுக்குப் பிறகு ரத்து செய்த சென்னை உயர் நீதிமன்றம், திரு. எம். அப்பாவு வெற்றி பெற்றதாக அறிவித்தது.
- ❖ 2025-26 ஆம் நீர் ஆண்டில் தமிழ்நாடு தனக்கு ஒதுக்கப்பட்ட பங்கை (177.25 டிஎம்சி அடி) விட அதிக காவிரி நீரைப் (330 டிஎம்சி அடி) பெற்றுள்ளது.
- ❖ தமிழ்நாடு அரசு தனது முதல் அமைச்சரவைக் கூட்டத்தின் போது அரசின் தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையில் 436 தொலைநோக்கு அறிக்கைகளைக் கொண்டுள்ள 'வெற்றித் தமிழகம் தொலைநோக்கு ஆவணத்தை' வெளியிட்டது.
- ❖ குளிர் கூரை பூச்சு பயன்பாட்டிற்கான இந்தியாவின் முதல் மாநில அளவிலான நிலையான செயல்பாட்டு நடைமுறையை (SOP) தமிழ்நாடு அறிமுகப்படுத்தியது.
- ❖ தமிழ்நாடு 10.83% பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்த போதிலும், 2025-26 ஆம் ஆண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் (SOTR) 6.8% என்ற மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- ❖ 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத நிலவரப்படி, தமிழ்நாட்டில் இறந்தவர்களின் உடல் உறுப்பு தானத்தில் 64% அரசு மருத்துவமனைகளின் பங்களிப்பாகும்.
- ❖ தமிழ்நாட்டின் முதலமைச்சர் 2026 ஆம் ஆண்டு ஜூன் 9 அன்று சென்னையில் சிங்கப்பெண் சிறப்புப் படையை தொடங்கி வைத்தார்.
- ❖ மாநிலம் முழுவதும் வெப்ப அலைக்கான தயார்நிலையை வலுப்படுத்தவும் மற்றும் வெப்பத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும் 'மாநில வெப்ப செயல் திட்டம் (HAP) 2026'-ஐ தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.
- ❖ ஆவடி காவல் ஆணையரகத்தின் கீழ், தமிழ்நாட்டின் முதல் இளஞ்சிவப்புநிற (Pink) காவல் சாவடி பொன்னேரியில் திறக்கப்பட்டது.
- ❖ மாநில அரசானது, 'தமிழ்நாட்டின் நிதி மேலாண்மை - 2021-22 முதல் 2025-26 ஆம் ஆண்டு வரையிலான பொது நிதிகளின் ஆய்வு' என்ற வெள்ளை அறிக்கையை வெளியிட்டது.
- ❖ தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகத்தின் (TNGECL) கீழ் ஐந்து பிரத்யேக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மண்டலங்களுக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ஐந்து மண்டல தலைமையகங்கள் சென்னை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.
- ❖ சிங்கப்பெண் சிறப்புப் படையின் (SSF) அதிகாரப்பூர்வ உதவி எண்ணாக '1091' என்ற எண்ணை தமிழ்நாடு காவல்துறை அறிவித்துள்ளது.
- ❖ 2023 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் போதைப்பொருள் உற்பத்தியை ஒழிப்பது மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பது ஆகியவற்றில் சிறப்பான பணியாற்றியதற்காக முதலமைச்சரின் காவல்துறைப் பதக்க விருதுகளை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- ❖ தமிழ்நாடு அரசு பாடத்திட்ட வடிவமைப்பு குழுவை திருத்தியமைத்து, அதன் புதிய தலைவராக மயில்சாமி அண்ணாதுரையை நியமித்துள்ளது.

- ❖ விக்சித் பாரத் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாத ஊரக இயக்கத் (VB-G RAM G) திட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் செயல்படுத்துவதற்கான அறிவிப்பை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.
- ❖ இருளர் பழங்குடியின சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, கடலூரில் உள்ள பிச்சாவரம் சதுப்பு நிலங்களில் தேனீ வளர்ப்பு முன்னெடுப்பைத் தமிழ்நாடு வனத்துறை தொடங்கியுள்ளது.
- ❖ ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் பெயரை 'சமூக நீதித் துறை' என தமிழ்நாடு அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது.
- ❖ காமராஜர் துறைமுகமானது 18 மீட்டர் வரைவு திறனைக் கொண்ட இந்தியாவின் இரண்டாவது பெரிய துறைமுகமாக உருவெடுத்துள்ளது.
- ❖ தொடக்கக் கல்வி நிலையில் தமிழ்நாடு 92% மொத்தச் சேர்க்கை விகிதத்தைப் (GER) பதிவு செய்துள்ளது
- ❖ தமிழக அரசானது, பெண்களுக்கான இலவசப் பேருந்து பயணத் திட்டத்தின் பெயரை "மகளிர் விடியல் பயணம்" என்பதிலிருந்து "மகளிர் பயணம்" என மாற்றியுள்ளது.
- ❖ இந்தியாவில் உயர் கல்வியில் அதிக மொத்த சேர்க்கை விகிதத்தை (GER) 52.3% தமிழ்நாடு பதிவு செய்துள்ளது.
- ❖ தமிழ்நாட்டின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) 2026 ஆம் ஆண்டில் 1.3 ஆகக் குறைந்து உள்ளதுடன் இது மக்கள்தொகை நிலைத்தன்மைக்குத் தேவையான மாற்று அளவான 2.1 ஐ விடக் குறைவாக உள்ளது.
- ❖ தமிழ்நாடு அரசு 'நலம் TN' என்ற ஒருங்கிணைந்த டிஜிட்டல் பொது சுகாதார சேவை இணையதளத்தை சென்னையில் அறிமுகப்படுத்தியது.
- ❖ தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டம், துக்காச்சியில் உள்ள 12-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆபத்சகாயேஸ்வரர் கோயிலானது, பாரம்பரியப் பாதுகாப்பிற்கான யுனெஸ்கோவின் ஆசிய-பசிபிக் சிறப்பு விருதைப் (2024) பெற்றுள்ளது.
- ❖ மத்திய அரசானது, தமிழகத் தலைமைச் செயலாளர் எம். சாய் குமாருக்கு 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 1 முதல் 2027 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 வரை ஆறு மாத காலப் பணி நீட்டிப்பை வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராகப் போராட 'தூஃபான் நடவடிக்கை' என்ற போதைப் பொருள் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் மூலம் ஒத்துழைப்பை வலுப்படுத்த கேரளாவும் தமிழ் நாடும் முடிவு செய்துள்ளன.
- ❖ தமிழ் மொழி மற்றும் இலக்கியத்திற்கு மறைமலை அடிகளார் ஆற்றிய பங்களிப்பை நினைவுகூரும் வகையில், அவரது 150வது பிறந்தநாள் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டது.
- ❖ வேல்ஸ் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மேம்பட்ட ஆய்வுகள் நிறுவனமானது (VISTAS), இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) ஒருங்கிணைக்கப்பட்ட அடுக்குமாடி பல்கலைக்கழக வளாகத்தை சென்னையின் திருவான்மியூரில் திறந்து உள்ளது.
- ❖ தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 18 மற்றும் நவம்பர் 1 ஆகிய இரு தினங்களிலும் மாநில வரலாற்று தினத்தைக் கொண்டாட முடிவு செய்துள்ளது.
- ❖ தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையானது (TNSDA) கோயம்புத்தூர் வெள்ளலூரில் உள்ள நொய்யல் ஆற்றுப்படுகையிலிருந்து சுமார் 1,000க்கும் மேற்பட்ட தொல் பொருட்களைக் கண்டுபிடித்துள்ளது.

- 2025-26-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சரக்கு ஏற்றுமதி 58.95 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது மேலும் இந்தியாவில் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக (2023-24 ஆம் ஆண்டு முதல்) மூன்றாவது பெரிய ஏற்றுமதி செய்யும் மாநிலமாக தமிழ்நாடு நீடிக்கிறது.
- 2025-26-ஆம் ஆண்டில், இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் 41.63%, மோட்டார் வாகனங்கள் மற்றும் கார்களில் 33.38%, தோல் மற்றும் தோல் பொருட்களில் 35.59%, ஜவுளி மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களில் 23.13%, மற்றும் பொறியியல் இயந்திரப் பொருட்களில் 16.66% ஆகியவற்றை தமிழ்நாடு பங்களித்து உள்ளது.
- இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 32.84% (2023-24) லிருந்து 38% (2024-25) ஆகவும், 41.63% (2025-26) ஆகவும் அதிகரித்துள்ளது.
- கழிவு நீர் தொட்டிகளைச் சுத்தம் செய்யும் போது தமிழ்நாடு 38 உயிரிழப்புகளைப் பதிவு செய்துள்ளது. இது மகாராஷ்டிரா (58) மற்றும் அரியானாவுக்கு (47) அடுத்தப படியாக நாட்டில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்' எனத் தமிழ்நாடு அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது.
- கடலூர் மாவட்டத்தில் உள்ள கிள்ளை, தமிழ்நாட்டின் முழுமையாகச் செயல்படும் முதல் பருவநிலை-எதிர்ப்புத் திறன் கொண்ட கிராமமாக (CRV) மாறியுள்ளது.
- சேலம், கொண்டப்பநாயக்கன்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியானது, தமிழ்நாட்டில் ISO 9001:2015 சான்றிதழைப் பெற்ற முதல் அரசுத் தொடக்கப் பள்ளி ஆனது.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் மாமல்லபுரத்தில் 31-வது தென் மண்டல சபைக் கூட்டத்தை தமிழ்நாடு நடத்தவுள்ளது.
- தமிழ்நாடு அரசு கே. அல்லாவுதீன் (ஓய்வுபெற்ற IAS அதிகாரி) தலைமையில் அமைக்கப்பட்ட ஏழாவது மாநில நிதிக்குழுவின் பதவிக்காலத்தை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 முதல் 2026 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை நான்கு மாதங்களுக்கு நீட்டித்து உள்ளது.
- மாநிலத்தின் வருவாய் ஆதாரத்தை வலுப்படுத்துவதற்காக வேண்டி மாண்டேக் சிங் அலுவாலியா தலைமையில் தமிழ்நாடு வருவாய் பெருக்குக் குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.
- இந்தியத் தொழிற்சாலைகளில் நேரடியாகப் பணிபுரியும் பெண்களில் 40% தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- நெய்யாறு நதிநீர் தொடர்பாக தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கு இடையே நீண்டகாலமாக நிலுவையில் உள்ள சட்டரீதியான பிரச்சினை உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்து விசாரணையில் உள்ளது.
- 2026-27 மற்றும் 2027-28 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எல் நினோ வானிலை நிகழ்வின் சாத்தியமான தாக்கத்தைக் கண்காணித்து மதிப்பிடுவதற்காகத் தமிழ்நாடு அரசு ஒரு நிபுணர் ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜூலை 27 நிலவரப்படி, தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி 3.87 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொண்டுள்ளது, இது 2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 5.05 லட்சம் ஏக்கராக இருந்தது.
- கூட்டுறவுக் கடன்களை அதிகரிப்பதன் மூலமும், பயனாளிகளின் வரம்பை விரிவுபடுத்துவதன் மூலமும் சிங்கப்பெண்கள் தொழில்முனைவோர் கடன் திட்டத்தை விரிவுபடுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

❖ முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் என்ற பெயரை மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான பொது விநியோகத் திட்ட (PDS) (ரேஷன்) பொருட்களை வீடு தேடி வழங்கும் திட்டம் என்று அதிகாரப் பூர்வமாக மாற்றியுள்ளது.

❖ புதுடெல்லியில் நடைபெற்ற 16வது இந்திய உடல் உறுப்பு தான தின விழாவில், உடல் உறுப்பு தானத்திற்கான 'சிறந்த மாநில' விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது.

❖ தமிழக நிதியமைச்சர் என். மரிய வில்சன் அவர்களால் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5 அன்று சட்டமன்றத்தில் TVK தலைமையிலான அரசின் 2026-27 ஆம் ஆண்டிற்கான முதல் பட்ஜெட்டைத் தாக்கல் செய்தார்.

❖ தமிழ்நாடு கடற்கரை மறுசீரமைப்பு முன்னெடுப்பின் (TN-SHORE) கீழ் கடலூர் மாவட்டம் கிள்ளை அருகே முழுக்குத்துறையில் தமிழ்நாட்டின் முதல் சதுப்புநிலப் பாதுகாப்பு மையம் நிறுவப்பட்டு வருகிறது.

❖ 2026-27 ஆம் ஆண்டிற்கான மாநில பட்ஜெட்டில் 'அறிவகம்' என்ற பெயரிலான இந்தியாவின் முதல் பிரத்தியேக செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கண்டுபிடிப்பு நகரத்தை தமிழ்நாடு அறிவித்துள்ளது.

❖ 2026-27 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆர்.வினோத் தாக்கல் செய்தார்.

❖ மதுபான விற்பனை மீது சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலத் தீர்வையை விதிப்பதற்கான மசோதாவை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது.

❖ மாநிலம் முழுவதும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கையை வலுப்படுத்துவதற்காக தமிழ்நாடு ₹264 கோடியில் போதைப்பொருள் தடுப்புச் சிறப்புப் படையை (ANTF) உருவாக்கியுள்ளது.

❖ தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் உள்ள வ.உ.சிதம்பரனார் துறைமுகம், Scope-2 உமிழ்வற்ற நிலையை அடைந்த இந்தியாவின் முதல் பெரிய துறைமுகமாக உருவெடுத்துள்ளது.

## தேசியச் செய்திகள்

❖ பொது விமானப் போக்குவரத்து அமைச்சகம் (MoCA) ஆனது விமானப் பயணிகளுக்காக 24×7 பயணிகள் உதவிக் கட்டுப்பாட்டு அறையை (PACR) நிறுவி உள்ளது.

❖ தேசியப் புலனாய்வு முகமை (NIA), 2025 ஆம் ஆண்டு தீவிரவாத எதிர்ப்பு மாநாட்டில் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான தீவிரவாத எதிர்ப்புப் படை (ATS) அமைப்பின் அவசியத்தை எடுத்துரைத்து, ஒரு பொதுவான ATS கட்டமைப்பைத் தயாரித்து, அதை மாநிலக் காவல் படைகளுடன் பகிர்ந்து கொண்டுள்ளது.

❖ தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள தொலைத்தொடர்பு துறை (DoT) ஆனது இந்தியாவில் ரேடியோ–அதிர்வெண் அலைக்கற்றையின் மேலாண்மை மற்றும் ஒதுக்கீட்டிற்கு உதவும் 2025 ஆம் ஆண்டு தேசிய அதிர்வெண் ஒதுக்கீட்டுத் திட்டத்தினை வெளியிட்டுள்ளது.

❖ இந்தியா சுமார் 6.9 மில்லியன் டன் அருமண் ஆக்சைடு (REO) இருப்புடன் உலகளவில் 3வது இடத்தில் உள்ளது.

❖ இந்தியாவில் ஓராண்டில் இதுவரை பதிவாகாத வகையில் அதிகபட்சமாக 2024–25 ஆம் நிதியாண்டில் 5.5 லட்சத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டு வர்த்தக முத்திரைகள் பதிவு செய்யப் பட்டன.

- 8வது மத்திய ஊதிய ஆணையம் (CPC) 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்திய அரசால் அறிவிக்கப்பட்டது.
- தேசிய நெடுஞ்சாலை திட்டங்களில் தரக் கட்டுப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக தேசிய சோதனை மையம் (NTH) ஆனது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்துடன் (NHAI) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சர், புது டெல்லியில் IS 19262:2025 என்ற மின்சார வேளாண் பயன்பாட்டு இழுவை வாகனங்கள் (டிராக்டர்) சோதனைக் குறியீட்டை வெளியிட்டார்.
- அரிசி உற்பத்தியில் சீனாவை விஞ்சி இந்தியா உலகில் முதலிடத்தை எட்டியுள்ளது.
- ஸ்டெராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்து (NSAID) ஆன நிம்சுலைடு மருந்தின் 100 மில்லி கிராமிற்கு மேலான அளவிலான வாய்வழி உட்கொள்ளும் மருந்து தயாரிப்பிற்கான சூத்திரங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகத்தை மத்திய அரசு தடை செய்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இந்தியாவின் அகலக் கற்றை சேவை சந்தாதாரர் தளம் ஆனது 100 கோடி (1 பில்லியன்) பயனர்களைத் தாண்டியது என்ற நிலையில் இந்தியாவில் இந்த எண்ணிக்கையை எட்டியது இது முதல் முறையாகும் என்பதோடு இது 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பதிவான ஆறு மடங்கு அதிகரிப்பைக் குறிக்கிறது.
- 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் புகையிலை மற்றும் பான் மசாலா மீதான புதிய கலால் வரி மற்றும் வீத வரி (பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (GST) கீழ் 40 சதவீத வரி விதிக்கப்படும்) ஆகியவற்றை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL) பயனர்கள் கைபேசி இணைப்புச் சேவை கோபுரங்களுக்குப் பதிலாக அருகலை வலையமைப்பினைப் பயன்படுத்தி குரல் வழி அழைப்புகளைச் செய்யவும் செய்திகளை அனுப்பவும் அனுமதிக்கின்ற நாடு தழுவிய அளவிலான அருகலை வழி குரல் அழைப்பு (VoWiFi) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது "மேம்பாட்டிற்கான தரவு" என்ற கருத்துருவினை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய முத்திரைச் சின்னம் மற்றும் "சாங்க்யிகி" (புள்ளி விவரம் என்று பொருள்) என்ற உருவச் சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உச்ச நீதிமன்றம் ஆனது, சொத்துப் பதிவு மற்றும் பிறழ்வு விதிகள் குறித்து சமிமுல்லா மற்றும் பீகார் மாநில அரசு இடையிலான வழக்கில் சொத்துப் பதிவுக்கு பிறழ்வுச் சான்றினைக் கட்டாயமாக்கிய பீகார் பதிவு விதிகளை (2019) ரத்து செய்து தீர்ப்பளித்தது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்தியா மற்றும் பாகிஸ்தான் தங்கள் அணுசக்தி நிறுவல்களின் பட்டியல்களைப் பரிமாறிக் கொண்டன.
- மத்திய அரசானது, இந்தியா முழுவதும் உள்ள போதைப்பொருள் பயன்பாட்டு நிலைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக 2025–26 ஆம் ஆண்டு தேசிய மருந்து பயன்பாட்டுக் கணக்கெடுப்பை (NDUS) நடத்த உள்ளது.
- ப்ளூ கிராஸ் ஆஃப் இந்தியா அமைப்பானது, விலங்கு நலன் சேவையில் தனது 60 ஆண்டு கால சேவையினைக் கொண்டாடியது.
- உலக சுகாதார அமைப்பின் (WHO) கீழ் மருந்தியல் கண்காணிப்பு (மருந்து பாதுகாப்பு கண்காணிப்பு) பங்களிப்புகளில் இந்தியா உலகளவில் 8வது இடத்தைப் பிடித்தது.

- இந்தியா வருடாந்திரத் தொழிலாளர் கணக்கெடுப்பில் (PLFS) உள்ளடக்கப்படாத உண்மையான திறன் நிலைகள் குறித்த தரவு இடைவெளியை நிரப்புவதை நோக்கமாகக் கொண்ட தனது முதல் நாடு தழுவிய வயது வந்தோர் திறன் மதிப்பீட்டு ஆய்வை 2026 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.
- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது "Know Your Survey –உங்கள் கணக்கெடுப்பை அறிந்து கொள்ளுங்கள்" என்ற தலைப்பில் அதன் முதல் வாசகருக்கு உகந்த வகையிலான வழிகாட்டியை வெளியிட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சர் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் கண்காணிப்பு, தகவல் தொடர்பு மற்றும் பல தரப்பு பாதுகாப்பு மற்றும் நிர்வாக முகமைகளுக்கிடையே ஒருங்கிணைப்பைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை திறந்து வைத்தார்.
- ஆராய்ச்சி, கல்வி, புதுமை மற்றும் புத்தொழில் நிறுவனங்களில் அதன் உலகளாவிய இருப்பை விரிவுபடுத்துவதற்காக மதராஸின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் (IIT) IITM உலகளாவிய ஆராய்ச்சி அறக்கட்டளை தொடங்கப்பட்டது.
- இம்பால் அகில இந்திய வானொலியிலிருந்து (ஆகாஷ்வாணி) தடௌ மொழியில் நேரடி வானொலி நிகழ்ச்சிகளை மீண்டும் தொடங்க பிரச்சார் பாரதி நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.
- இராணுவ நடவடிக்கைகளில் டிஜிட்டல் ஒருங்கிணைப்பு மற்றும் நிகழ்நேரத் தரவுப் பகிர்வை மேம்படுத்துவதற்காக இந்திய இராணுவம் ஆனது 2026 ஆம் ஆண்டை பிணையமாக்கம் மற்றும் தரவு மையப் படுத்தல் ஆண்டாக அறிவித்துள்ளது.
- இந்தியாவிற்கென குறிப்பிட்ட தரநிலைகளை உருவாக்குவதற்காகவும், மாசுக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை ஆதரிப்பதற்காகவும் இந்தியா உலகின் இரண்டாவது தேசிய சுற்றுச்சூழல் தர ஆய்வகத்தை (NESL) புது டெல்லியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் (CSIR) தேசிய இயற்பியல் ஆய்வகத்தில் திறந்து வைத்துள்ளது.
- இந்திய நாடானது, சூரிய மின்கல அளவுத்திருத்தத்திற்கான உலகின் ஐந்தாவது தேசிய முதன்மை தர மையத்தினை புது டெல்லியில் உள்ள CSIR – தேசிய இயற்பியல் ஆய்வகத்தில் திறந்து வைத்துள்ளது.
- சீன நாட்டினர் ஆறு மாதங்கள் வரை இந்தியாவில் தங்கியிருக்க அனுமதிக்கும் புதிய இணையவழி உற்பத்தி முதலீட்டு வணிக நுழைவு இசைவுச் சீட்டினை (e–B–4) இந்தியா அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தியாவின் இசை நிகழ்ச்சி பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் நேரடி நிகழ்வுகள் மேம்பாட்டுப் பிரிவினை (LEDC) அமைத்துள்ளது.
- மின்சார வாகனங்களின் (EV) மின்கலங்களுக்கான தனித்துவமான ஆதார் போன்ற அடையாள அமைப்பை போக்குவரத்து அமைச்சகம் முன்மொழிந்துள்ளது.
- ரஷ்யாவிலிருந்து இந்தியாவின் எண்ணெய் இறக்குமதி 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், கடந்த ஆறு மாதங்களில் இல்லாத அளவுக்கு உயர்ந்தது, அதே நேரத்தில் அமெரிக்காவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதியும் அதிகரித்தது.
- இந்திய அரசு ஆனது கற்கரி வர்த்தகக் கொள்கையின் கீழ் குறைந்த சாம்பல் உள்ளடக்கம் கொண்ட உலோகவியல் கற்கரி மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கியுள்ளது.
- இந்திய இராணுவமானது, பைரவ் என்ற புதிய நவீனப் போர் படையை உருவாக்கி உள்ளது.

- ஹரியானாவில் உள்ள ஜிந்த் முதல் சோனிபட் வரையிலான வழித்தடத்தில் இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருள் மூலம் இயங்கும் ரயிலின் சோதனை ஓட்டங்களை இந்தியா தொடங்க உள்ளது.
- சாலை அமைப்பதற்காக உயிரி–நீலக்கீலை (Bio–Bitumen) வணிக ரீதியாக உற்பத்தி செய்த உலகின் முதல் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- சுரங்கப் பாதுகாப்பு தலைமை இயக்குநரகமானது (DGMS) ஜனவரி 7 அன்று தனது 125வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- 2027ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமான 'வீடுவாரியான பட்டியல் தயாரிப்புப் பணிகளானது', அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் 2026 ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 ஆம் தேதி வரை நடைபெறும்.
- ஆதார் புதுப்பித்தல், அங்கீகாரம், அகல்நிலை (ஆஃப்லைன்) சரிபார்ப்பு மற்றும் பாதுகாப்பான தரவுப் பகிர்வு ஆகியவற்றைப் பயனர்கள் புரிந்து கொள்ள உதவும் வகையில், இந்தியத் தனித்துவ அடையாள ஆணையமானது (UIDAI) 'உதய்' என்ற ஆதார் உருவச் சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சர் மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் சாதனங்கள் (IED) தரவை சேமித்து பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு தேசிய டிஜிட்டல் தளமான தேசிய IED தரவு மேலாண்மை அமைப்பை (NIDMS) தொடங்கி வைத்தார்.
- இந்தியாவில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கையை எளிதாக்குவதற்காக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் PANKHUDI வலை தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவின் தரவு மையத்தின் கூடுதல் சேர்ப்பு செயல் திறன் 2025 ஆம் ஆண்டில் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்து, 2024 ஆம் ஆண்டில் இருந்த 191 மெகாவாட் தகவல் தொழில்நுட்பத் திறனுடன் ஒப்பிடும்போது சுமார் 387 மெகாவாட் தகவல் தொழில்நுட்ப திறனை எட்டியது.
- தேசிய விளையாட்டு நிர்வாகச் சட்டம் பகுதியளவு நடைமுறைக்கு வந்துள்ளது, இது அனைத்து சக்திவாய்ந்த தேசிய விளையாட்டு வாரியம் (NSB) மற்றும் விளையாட்டு தகராறுகளைக் கையாள்வதற்கான ஒரு தீர்ப்பாயத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை அமைக்கும்.
- Umagine 2026 நிகழ்வில், தமிழ்நாட்டில் குவாண்டம் கணினித் திட்டங்களைத் தொடங்குவதற்காக, iTNT மையம் ஆனது ஜெர்மனியில் உள்ள XeedQ GmbH உடன் ஒரு உத்தேச ஒப்புதல் ஆவணத்தில் (LoI) கையெழுத்திட்டது.
- ஷாக்ஸ்காம் பள்ளத்தாக்கு தனது பிரதேசத்தின் ஒரு பகுதி என்பதை இந்தியா மீண்டும் உறுதிப்படுத்தி, அந்தப் பகுதி வழியாகச் செல்லும் சீனா–பாகிஸ்தான் பொருளாதார வழித் தட (CPEC) பாதையை நிராகரித்துள்ளது.
- இந்தியாவின் பால்வளத் துறையை டிஜிட்டல் மயமாக்குவதன் ஒரு பகுதியாக தேசிய டிஜிட்டல் கால்நடை திட்டத்தின் (NDLM) கீழ் சுமார் 35.68 கோடிக்கும் மேற்பட்ட விலங்குகளுக்கு பசு ஆதார் வழங்கப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தியாவின் புதிய விமான நிறுவனமான ஆகாசா ஏர், சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தில் (IATA) உறுப்பினராகியுள்ளது.
- இந்தியா 2025 ஆம் ஆண்டில் 524.62 லட்சம் டன் உரங்களை உற்பத்தி செய்து, அதன் உள்நாட்டு தேவையில் சுமார் 73 சதவீதத்தை பூர்த்தி செய்துள்ளது.
- 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மீன் உற்பத்தி 197.75 லட்சம் டன்களாக அதிகரித்துள்ளது.

- ❖ உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட 15 மாநிலங்களில் உள்ள 100 அதிக ஆபத்துள்ள மாவட்டங்களில் தரவு சார்ந்த உயிரிழப்பு இல்லா சாலைப் பாதுகாப்புத் திட்டத்தை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சகம் (MoRTH) தொடங்கியது.
- ❖ இந்தியாவின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான மத்திய அமைச்சர் ஐக்கிய அரபு அமீரகத்தின் (UAE) அபுதாபியில் நடைபெற்ற சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமையின் (IRENA) 16வது மாநாட்டில் பங்கேற்றார்.
- ❖ இணைய சங்கேதப் பணப் பயனர்களுக்கு இந்தியாவானது கடுமையான உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (KYC) மற்றும் பணமோசடித் தடுப்பு (AML) விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்திய இராணுவமானது DIME (நிலைய ஒருங்கிணைப்பு மேலாண்மை பதிப்பைக்) எனப்படும் புதிய டிஜிட்டல் தளவாடத் தளத்தை அறிமுகப்படுத்தியது.
- ❖ இஸ்ரேலின் ஈலாட்டில் நடைபெற்ற "Blue Food Security: Sea the Future 2026" என்ற இரண்டாவது உலகளாவிய உச்சி மாநாட்டில் இந்தியா பங்கேற்றது.
- ❖ சூரிய சக்தியில் இயங்கும் இந்தியாவின் முதல் கண்காணிப்பு ஆளில்லா விமானமான நடுத்தர உயரத்தில் இயங்கும் நிலையான கண்காணிப்பு அமைப்பிற்கான (MAPSS) 168 கோடி ரூபாய் ஒப்பந்தத்தில் இந்திய இராணுவம் கையெழுத்திட்டது.
- ❖ அமெரிக்க வெளியுறவுத்துறை தலைமையிலான பாக்ஸ் சிலிக்கா முன்னெடுப்பில் 2026 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்திலேயே இந்தியா முழு உறுப்பினராக இணைய உள்ளது.
- ❖ இந்தியாவானது 28வது காமன்வெல்த் நாடுகளின் பேச்சாளர்கள் மற்றும் தலைமை அதிகாரிகள் (CSPOC) மாநாட்டை புது டெல்லியில் நடத்துகிறது.
- ❖ இந்தியா ஜனவரி 15, 2026 அன்று இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) 151வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- ❖ இந்தியாவின் நிறுவப்பட்ட புதைபடிவமற்ற எரிசக்தி திறன் 2025 ஆம் ஆண்டில் 266.78 ஜிகாவாட் (GW) ஆக உயர்ந்தது.
- ❖ இந்தியாவின் சூரிய சக்தி உற்பத்தித் திறன் 135.81 GW ஆக அதிகரித்தது என்பதோடு மேலும் காற்றாலை மின் உற்பத்தித் திறன் 2025 ஆம் ஆண்டில் 54.51 GW அளவினை எட்டியது.
- ❖ இந்தியாவின் உயிரி ஆற்றல் 11.61 GW ஆகவும், சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தித் திறன் 5.16 GW ஆகவும், பெரிய அளவிலான நீர் மின் உற்பத்தித் திறன் 50.91 GW ஆகவும் இருந்தது.
- ❖ தேசிய PNG இயக்கம் 2.0 முன்னெடுப்பிற்காக GAIL இந்தியா லிமிடெட் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்துடன் (PNGRB) கூட்டு சேர்ந்துள்ளது.
- ❖ இந்தியாவும் ஜெர்மனியும் 2026 ஆம் ஆண்டில் அவற்றின் 75 ஆண்டுகால அரசுமுறை உறவுகளைக் கொண்டாடுகின்றன.
- ❖ சீனாவிற்கு அடுத்தபடியாக 400 மில்லியனுக்கும் அதிகமான 5G பயனர்களுடன் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய 5G சந்தாதாரர் தளமாக மாறியுள்ளது.
- ❖ மத்திய அரசின் சுகாதாரத் திட்ட (CGHS) பயனாளிகளுக்காக நிதிச் சேவைகள் துறை பரிபூரண மெடிக்ளைம் ஆயுஷ் பீமா திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.
- ❖ இடஒதுக்கீடு செய்யப்படாத (பொது) பிரிவு இடங்கள் தகுதியின் அடிப்படையில் அனைத்து தேர்வர்களுக்கும் பொருந்தும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- ❖ தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதாரத் திட்டம் (DAY–NRLM) கிராமப்புற பெண்களுக்கு வேளாண் அல்லாத வாழ்வாதார வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்காக தொழில்முனைவோர் குறித்ததான தேசியப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ குஜராத்தில் உயிரிப் பாதுகாப்பு நிலை–4 (BSL–4) உயிரிக் கட்டுப்பாட்டு வசதியின் தொடக்கத்தின் போது அறிவிக்கப்பட்டபடி, இந்தியாவின் உயிரிப் பொருளாதாரம் 2024 ஆம் ஆண்டில் 166 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.
- ❖ உயர்கல்வி நிறுவனங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டைத் தடுக்க, பல்கலைக்கழக மானியக் குழு (UGC) 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் புதிய விதிமுறைகளை அறிவித்தது.
- ❖ 2014 ஆம் ஆண்டிற்குப் பிறகு முதல் முறையாக 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் உணவுப் பொருட்களின் விலைகள் பணவாட்டத்தினை எதிர்கொண்டன (–0.2%) என்ற நிலையில் இது 12 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2.2% குறைந்த சில்லறைப் பண வீக்கத்திற்குப் பங்களித்தது.
- ❖ இந்திய அரசாங்கம் கரன் ஃப்ரைஸ் மற்றும் விருந்தாவனி ஆகிய இரண்டு அதிக பால் தரும் செயற்கை கால்நடை இனங்களை பதிவு செய்துள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் பசுமை அம்மோனியா உற்பத்தித் திட்டம் ஆந்திரப் பிரதேச காக்கிநாடாவில் உருவாக்கப்பட்டு வருகிறது
- ❖ இந்தியாவின் நிலக்கரி மின் உற்பத்தி சுமார் 50 ஆண்டுகளில் முதல் முறையாக 2025 ஆம் ஆண்டில் ஆண்டாண்டு வீதத்தில் குறைந்துள்ளது.
- ❖ இந்தியாவின் கடல்சார் ஆராய்ச்சி கப்பலான ஐஎன்எஸ் சாகர்த்வானி, சாகர் மைத்ரி–5 முன்னெடுப்பிற்காக கொச்சியிலிருந்து கொடியசைத்துத் தொடங்கப்பட்டது.
- ❖ மலைப்பாங்கான மற்றும் இமயமலைப் பகுதிகளில் சாலை கட்டுமானத்திற்கு எஃகு கசடுகளைப் பயன்படுத்த மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் முன்மொழிந்தார்.
- ❖ அடல் ஓய்வூதிய யோஜனா (APY) திட்டத்தை 2030–31 ஆம் நிதியாண்டு வரை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ தேசிய சட்டமன்றக் குறியீடு (NLI) ஆனது 86வது அகில இந்திய சபாநாயகர் மாநாட்டில் மக்களவை சபாநாயகரால் அறிவிக்கப்பட்டது.
- ❖ 86வது அகில இந்திய சபாநாயகர் மாநாடு (AIPOC) லக்னோவில்"Strong Legislature-Prosperous Nation" என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- ❖ மின்சார அமைச்சகம் ஆனது, 2026 ஆம் ஆண்டு தேசிய மின்சாரக் கொள்கை (NEP) வரைவைப் பொதுமக்களின் ஆலோசனைக்காக வெளியிட்டது.
- ❖ மும்பை நகரானது, பிப்ரவரி 17 முதல் 19 ஆம் தேதி வரை இந்தியாவின் முதல் நகர நிர்வாகத் தலைமையிலான பருவநிலை நடவடிக்கை முன்னெடுப்பான 2026 ஆம் ஆண்டு மும்பை பருவநிலை வாரம் என்ற கொண்டாட்டத்தினை நடத்த உள்ளது.
- ❖ இந்தியா அந்தமான் கடலில் தனது முதல் திறந்தவெளி கடல் மீன் வளர்ப்பு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி 8.5 லட்சத்திற்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுகளுடன், உலகளாவிய கூட்டுறவு சக்தி மையமாக இந்தியா உருவெடுத்து உள்ளது.

- புது டெல்லியில் நடைபெற்ற மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை குறித்த சர்வதேச மாநாடு (IICDEM) 2026, டெல்லி பிரகடனம் 2026 என்பதை ஏற்றுக் கொண்டதுடன் நிறைவடைந்தது.
- காலநிலை சார்ந்த சவால்களை எதிர்கொள்ள விவசாயிகளுக்கு உதவுவதற்காக, இந்திய அரசு இந்திய விவசாயத்தில் காலநிலை தழுவல் வரைபடத்தை (ACASA–இந்தியா) அறிமுகப்படுத்தியுள்ளது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, புது தில்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் 'கிரந்த குடீர்' என்ற புத்தக இல்லத்தைத் திறந்து வைத்தார்.
- 2047 ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் அளவில் நீரேற்ற சேமிப்பிடத்தை அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- DRDO அமைப்பானது, 77வது குடியரசு தின அணிவகுப்பில் LR–AShM அதிவேக இழைவியக்க ஏவுகணை அமைப்பை முதன்முறையாக காட்சிப்படுத்தியது.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது, கூடுதலாக 208 அதிக உமிழ்வு வெளியிடும் அலகுகளுக்கு பசுமை இல்ல வாயு உமிழ்வுச் செறிவுக் குறியீட்டு இலக்குகளை அறிவித்துள்ளது.
- இந்தியா 2015 மற்றும் 2023க்கு இடையில் மலேரியா பாதிப்புகளைக் கிட்டத்தட்ட 80% குறைத்துள்ளதுடன், 2030 ஆம் ஆண்டுக்கான தனது ஒழிப்பு இலக்கை அடைவதற்கான பாதையில் உள்ளது.
- இந்தியா தனது நிறுவப்பட்ட மின்சார உற்பத்தி அமைப்பில் 50 சதவீதத்தை புதை படிவமல்லாத எரிபொருள் மூலங்களிலிருந்து பெறுவதில், 2030 இலக்குக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அந்த இலக்கை எட்டி வருகிறது.
- டெல்லி பகுதியின் ஜெனரல் ஆபீசர் கமாண்டிங் லெப்டினன்ட் ஜெனரல் பவ்னிஷ் குமார் அணி வகுப்புத் தளபதியாக இருந்து இந்தியாவின் 77வது குடியரசு தின அணிவகுப்பை வழிநடத்தினார்.
- இந்திய அரசானது, 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டத்தின் (MMDR சட்டம்) கீழ், கற்கரியை (Coking Coal) ஒரு முக்கிய மற்றும் மூலோபாய கனிமமாக அறிவித்துள்ளது.
- இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்படும்; வீடுகளின் பட்டியல் தயாரிப்பு மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு (HLO) ஏப்ரல் முதல் செப்டம்பர் 2026 வரை நடைபெறும் என்ற நிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு (PE) பிப்ரவரி 2027-ல் நடைபெறும்.
- இந்தியா தனது முதல் செயற்கை நுண்ணறிவுத் திறன் கொண்ட பல்கலைக்கழக முன்னோடித் திட்டத்தை உத்தரப் பிரதேசத்தின் மீரட்டில் உள்ள சௌத்ரி சரண் சிங் பல்கலைக்கழகத்தில் (CCSU) தொடங்கியுள்ளது.
- மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், கனிம வளம் நிறைந்த ஒடிசா, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கு ஆதரவளிக்க முன்மொழிந்தார்.
- அரசியலமைப்பின் 21வது பிரிவின் கீழ் வாழ்வதற்கான உரிமையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக மாதவிடாய் சுகாதாரத்திற்கான உரிமை உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- அடல் புத்துயிர்ப்பு மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டத்தின் (அம்ருத்) மற்றும் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ், நகர்ப்புறங்களில் குழாய் நீர் இணைப்பு வசதி 2011-ஆம் ஆண்டிலிருந்து 64% அதிகரித்துள்ளது.

- இந்திய இரயில்வேயானது ஒரே நாளில் 472.3 கி.மீ. தூரத்திற்கு கவாச் அமைப்பு 4.0 பாதுகாப்பு அமைப்பைச் செயல்படுத்தியுள்ளது என்பதோடு இது இதுவரையில்லாத அளவிலான நீண்ட தொலைவாகும்.
- 2026-27 ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலையறிக்கையில் வடகிழக்கு இந்தியாவில் ஒரு பௌத்த சமயம் சார்ந்த பகுதிகளில் சுற்றுலா வழித்தடத்தை மேம்படுத்துவதற்காக ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது, இந்தத் திட்டம் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பௌத்தக் கோயில்கள் மற்றும் மடாலயங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற இரண்டாவது இந்திய-அரபு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் போது 2026 டெல்லி பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- கடல்சார் தளவாடங்களை வலுப்படுத்தும் நோக்கில், பாரத் கொள்கலன் கப்பல் நிறுவனத்தை (BCSL) நிறுவுவதற்காக மத்திய அரசு பல்வேறு பங்குதாரர்களுடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்தியாவும் சீனாவும் 2025 ஆம் ஆண்டில் 155.6 பில்லியன் அமெரிக்க டாலர் வரலாற்று இருதரப்பு வர்த்தகத்தைப் பதிவு செய்தன என்ற நிலையில் இது இந்த ஆண்டில் சுமார் 12% அதிகரித்துள்ளது, சீனாவிற்கான இந்திய ஏற்றுமதி 2025 ஆம் ஆண்டில் 9.7% அதிகரித்துள்ளது.
- மத்திய ரயில்வே அமைச்சகமானது, மும்பை-அகமதாபாத் அதிவேக ரயில் (MAHSR) திட்டத்திற்காக வெட்டப்பட்ட மகாராஷ்டிராவின் பால்கரில் உள்ள இரண்டாவது மலைச் சுரங்கப்பாதை MT-6 முடிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தியாவின் முதல் பிரத்யேக கண்ணாடி அருங்காட்சியகமானது, 'இந்தியாவின் கண்ணாடி நகரம்' என்று அழைக்கப்படும் உத்தரப் பிரதேசத்தின் ஃபிரோசாபாத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சென்னையில் உள்ள எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் தமிழ்நாட்டில் முதன் முறையாக அமைக்கப் பட்டுள்ள ஜெர்மானிய தத்துவஞானியும் பொதுவுடைமைத் தலைவருமான கார்ல் மார்க்ஸின் சிலையைத் திறந்து வைத்தார்.
- வ.உசிதம்பரனார் (VOC) துறைமுக ஆணையமானது, இந்தியாவில் ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்பை நிறுவிய முதல் துறைமுகமாக மாறியுள்ளது.
- இந்திய ரயில்வேயானது, இந்தியாவின் முதல் LNG-டீசல் இரட்டை எரிபொருள் DEMU (Diesel Electric Multiple Unit) ரயிலை அகமதாபாத்தில் உள்ள சபர்மதியில் அறிமுகப்படுத்தியது.
- மேஜர் ஜெனரல் பிபின் பக்சி (ஓய்வு), ஏர் மார்ஷல் ராஜேஷ் குமார் (ஓய்வு), தூதர் அனில் த்ரிகுனாயத் மற்றும் பிரிகேடியர் அகிலேஷ் பார்கவா (ஓய்வு) ஆகியோரால் எழுதப்பட்ட 'Red Lines Redrawn: Operation Sindoor and India's New Normal' என்ற புத்தகம், இந்தியாவின் சிந்தூர் நடவடிக்கை பற்றி விரிவாகக் கூறுகிறது.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986-இன் கீழ், 2016 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளுக்குப் பதிலாக, 2026 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளை அறிவித்துள்ளது.
- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) PAIMANA (நாட்டைக் கட்டமைப்பதற்கான திட்ட மதிப்பீடு, உள்கட்டமைப்பு கண்காணிப்பு மற்றும் பகுப்பாய்வு) என்ற இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

- மத்திய மீன்வளத் துறை, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் உள்ள மாயாபந்தரில் ஒரு திறன்மிகு மற்றும் ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ராஜஸ்தான் இந்தியாவின் மிகப்பெரிய கம்பளி உற்பத்தி செய்யும் மாநிலமாகும் என்ற நிலையில் மேலும் இது 16,013.50 ஆயிரம் கிலோ (மொத்த உற்பத்தியில் 47.53%) அளவில் பங்களிக்கிறது.
- இந்திய எஃகு ஆணையம் லிமிடெட் (SAIL) ஆனது, பிப்ரவரி 2026 முதல் பிப்ரவரி 2027 வரையிலான காலத்திற்கான "பணிபுரிய சிறந்த இடம்" சான்றிதழைப் பெற்றுள்ளது.
- வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) தலைமையிலான பங்கேற்புடன், இந்தியா முதல் முறையாக துபாயில் நடைபெற்ற Gulfood 2026 கண்காட்சியில் பங்காளர் நாடாகப் பங்கேற்றது.
- பிப்ரவரி 4–10, 2026 வரை கொழும்பில் ஒரு பொது கண்காட்சிக்காக இந்தியா தேவ்னிமோரி புத்தர் நினைவுச்சின்னங்களை இலங்கைக்கு அனுப்பியது.
- கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்காக இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஷிப்கி லா கணவாய் உட்பட கூடுதல் பாதையைத் திறப்பது குறித்து ஆராய சீனாவுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.
- கொத்தடிமை தொழிலாளர் முறையை ஒழித்த 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழிப்பு) சட்டத்தின் (BLSA) 50வது ஆண்டை இந்தியா கொண்டாடுகிறது.
- 2025 பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து சிந்து நதி நீர் ஒப்பந்தம் இடை நிறுத்தப்பட்ட பிறகு சவல்கோட் நீர்மின் திட்டம் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது.
- ரயில் பாதைகளில் யானைகள் இறப்பதைத் தடுக்க இந்திய ரயில்வே செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான அமைப்பைப் பயன்படுத்தியுள்ளது.
- SATYA தளம் ஆனது மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (MeitY) கீழ் தொடங்கப்பட்டது.
- 2026 பிப்ரவரி 10–13 வரை ஜெர்மனியின் நியூரம்பெர்க்கில் நடைபெற்ற உலகின் மிகப் பெரிய கரிம வர்த்தக கண்காட்சியான BIOFACH 2026 இல் இந்தியா ஆண்டின் சிறந்த நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- உலகளாவிய வைர வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக கிம்பர்லி செயல்முறை சான்றிதழ் திட்டத்தில் சீர்திருத்தங்களை இந்தியா முன்மொழிந்துள்ளது.
- Zscaler அமைப்பின் புதிய அறிக்கையானது, நிறுவன செயற்கை நுண்ணறிவு ஏற்பு மற்றும் இயந்திரக் கற்றல் பயன்பாட்டில் இந்தியாவை உலகளவில் இரண்டாவது இடத்தில் வைத்துள்ளது.
- ₹10,000 கோடி நிதியுடன் ஸ்டார்ட்அப் இந்தியா நிதியின் நிதி 2.0 (FoF 2.0) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- கடந்த 10 ஆண்டுகளில் பணியில் இருக்கும் நீதிபதிகளுக்கு எதிராக 8,630 புகார்கள் வந்துள்ளதாக மத்திய அரசு மக்களவையில் தெரிவித்துள்ளது.
- இந்திய ராணுவம் முதன்முதலில் சர்வதேச Military Adventure Challenge Cup (IMACC ) 2026 என்ற நிகழ்வினை கிழக்கு இமயமலைப் பகுதியில் நடத்தவுள்ளது.
- இந்தியாவின் அசாமில் முதல் நீருக்கடியில் இரட்டைக் குழல் வடிவ சாலை மற்றும் ரயில் சுரங்கப்பாதை திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY), பிப்ரவரி 2026 இல் "அனைவருக்கும் யுவா AI" தேசிய AI எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ், கௌஷல் ரத் என்ற கைபேசி வழி செயற்கை நுண்ணறிவு (AI) விழிப்புணர்வு முயற்சியைத் தொடங்கியது
- 2025 ஆம் ஆண்டில், சீனாவிற்குப் பிறகு 740 மில்லியனுக்கும் அதிகமான திறன்பேசிகள் பயன்பாட்டில் உள்ள நிலையில், உலகளவில் இரண்டாவது பெரிய செயலில் உள்ள திறன்பேசிகள் நிறுவப்பட்ட தளமாக இந்தியா மாறியது.
- கூட்டுறவுத் துறையில் உலகின் மிகப்பெரிய தானியங்கள் சேமிப்புத் திட்டத்தின் கீழ், மத்தியப் பிரதேசத்தின் பாலகாட், முன்னோடி மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளது.
- இந்தியாவை மாற்றுவதற்கான நிலையான அணுசக்திப் பயன்பாடு மற்றும் முன்னேற்றம் (சாந்தி) சட்டம், 2025 நிறைவேற்றப்பட்ட பிறகு அதானி குழுமம் அணு சக்தித் துறையில் நுழைந்தது.
- இந்தியப் பிரதமர், அசாமின் திப்ருகரில் உள்ள மோரன் பைபாஸில் வடகிழக்கு இந்தியாவில் முதல் அவசரகாலத் தரையிறங்கும் தளத்தை (ELF) திறந்து வைத்தார்.
- இந்தியாவின் முதல் தேசியப் பசு கலாச்சார அருங்காட்சியகம் உத்தரப் பிரதேச மாநிலம் மதுராவில் நிறுவப்படவுள்ளது.
- அஸ்ஸாம் ரைபிள்ஸ், 2050 ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு டாங்குல் ஹுய் மற்றும் கோம்பை நாய் இனங்களை அதன் நாய்ப் படையில் சேர்த்து, வெளிநாட்டு இனங்களை படிப்படியாக குறைக்க திட்டமிட்டுள்ளது.
- இந்தியக் கடற்படை முதல் முறையாக ஒருங்கிணைந்தப் பணிக்குழு-154 (CTF-154) இன் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் பால் கொள்முதலை 50% அதிகரிக்க இந்திய அரசு வெண்மைப் புரட்சி 2.0 ஐத் தொடங்கியுள்ளது.
- ₹1 லட்சம் கோடி மத்திய உதவியுடன் நகர்ப்புறச் சவால்கள் நிதியை (UCF) தொடங்குவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- குஜராத்தின் காந்திநகரில் இந்தியாவின் முதல் மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணயம் (CBDC) அடிப்படையிலான பொது விநியோக முறையை (PDS) மத்திய உள்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவின் முதல் இறையாண்மை ஜிகாவாட் அளவிலான செயற்கை நுண்ணறிவு (AI) தொழிற்சாலை உள்கட்டமைப்பை உருவாக்க லார்சன் & டூப்ரோ (L&T) NVIDIA உடன் கூட்டு சேர்ந்தது.
- நீதித்துறை நியமனங்களில் இடஒதுக்கீடு வழங்குவதற்காக, நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பி. வில்சன், 2026 ஆம் ஆண்டு தனிநபர் அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதாவை அறிமுகப்படுத்தினார்.
- புதுதில்லியில் நடைபெற்ற இந்திய AI தாக்க உச்சி மாநாட்டில் பிரதமர் "MANAV" AI தொழில்நுட்ப இலக்கு திட்டக் கட்டமைப்பை விளக்கினார், MANAV என்பது தார்மீக மற்றும் நெறிமுறை அமைப்புகள், பொறுப்புணர்வு கொண்ட ஆட்சி, தேசிய இறையாண்மை, அணுகக் கூடிய மற்றும் உள்ளடக்கிய செயற்கை நுண்ணறிவு (AI), மற்றும் செல்லுபடியாகும் மற்றும் சட்டபூர்வமான அமைப்புகள் ஆகியவற்றைக் குறிக்கிறது.

- இந்தியாவின் புவிசார் குறியீடு பெற்ற தயாரிப்புகளை உலகளவில் " A World Exclusive " என்ற முழக்கத்தின் கீழ் ஊக்குவிப்பதற்காக, தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையானது (DPIIT) 'பாரத் GI' முன்னெடுப்பைத் தொடங்கி உள்ளது.
- கர்நாடகாவின் வேமகலில் H125 க்கான தனது முதல் தனியார் துறை ஹெலிகாப்டர் இறுதி அசெம்பிளி லைனை (FAL) இந்தியா தொடங்கியுயுள்ளது.
- புதுதில்லியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு இந்திய AI தாக்க உச்சி மாநாட்டில் டெல்லி பிரகடனம் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இந்தப் பிரகடனம் செயற்கை நுண்ணறிவு (AI) நிர்வாகத்திற்கான ஏழு கொள்கைகளை ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற AI உச்சி மாநாட்டின் போது, வேளாண் அமைச்சகம் Bharat VISTAAR திட்டத்தின் முதல் கட்டத்தை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் புது தில்லியில் ஒல் சிக்கி எழுத்துமுறையின் கண்டு பிடிப்பின் 100 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் அதன் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தார்.
- அசாம் மாநிலம் கோலாகாட்டில் மூங்கிலை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் உலகின் முதல் வணிக அளவிலான இரண்டாம் தலைமுறை (2G) உயிரி எத்தனால் ஆலையை பிரதமர் திறந்து வைத்தார்.
- 1946 ராயல் இந்தியக் கடற்படை (RIN) கிளர்ச்சியின் 80வது ஆண்டு விழா பிப்ரவரி 18, 2026 அன்று அனுசரிக்கப்பட்டது.
- விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 9வது தலைவர்கள் மாநாட்டில் இந்தியப் பெருங்கடல் கடற்படைக் கருத்தரங்கின் (IONS) தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டது.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI), தேசிய நெடுஞ்சாலைகளில் இந்தியாவின் முதல் தேனீ வழித்தடங்கள் முன்முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- இந்தியக் கடற்படை தனது முதல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட படைப் பிரிவு பயிற்சி கப்பல் (CTS) 'கிருஷ்ணா'வை சென்னை காட்டுப்பள்ளியில் உள்ள எல்&டி கப்பல் கட்டும் தளத்தில் அறிமுகப்படுத்தியது.
- உத்தரப்பிரதேசத்தில் உள்ள டெல்லி மற்றும் மீரட்டை இணைக்கும் டெல்லி-மீரட் வழித் தடத்தில் இந்தியாவின் முதல் நமோ பாரத் விரைவு ரயில் போக்குவரத்து அமைப்பை (RRTS - பிராந்திய விரைவு போக்குவரத்து அமைப்பு) இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்.
- இந்தியாவின் சுகாதார AI சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்த, இந்திய AI தாக்க உச்சி மாநாடு 2026 இல், மத்திய சுகாதார அமைச்சர், சுகாதார முன்முயற்சிக்கான பாதுகாப்பான AI (SAHI) மற்றும் சுகாதார AIக்கான தரப்படுத்தல் திறந்தநிலை தரவுத் தளத்தை (BODH) தொடங்கினார்.
- உள்துறை அமைச்சகம் இந்தியாவின் முதல் பயங்கரவாத எதிர்ப்புக் கொள்கையை வெளியிட்டு, அதற்கு PRAHAAR என்று பெயரிட்டுள்ளது.
- இஸ்ரேலுக்கான இரண்டு நாள் பயணத்தின் போது, இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் நெசெட் பிளீனத்தில் (இஸ்ரேல் நாடாளுமன்றம்) உரையாற்றிய முதல் இந்தியப் பிரதமராக பிரதமர் நரேந்திர மோடி மாறியுள்ளார்.
- தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் குவாண்டம் தொழில்நுட்ப வசதியை ஆந்திரப் பிரதேசத்தின் அமராவதி திறக்கவுள்ளது.

- ❖ துணைக் குடியரசுத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், இந்திய அரசியலமைப்பின் புதுப்பிக்கப் பட்ட தமிழ் மற்றும் குஜராத்தி பதிப்புகளை உபராஷ்டிரபதி பவனில் வெளியிட்டார்.
- ❖ Centre for Research on Energy and Clean Air (CREA) வெளியிட்ட தரவுகளின்படி, 2026 ஜனவரியில் ரஷ்யாவின் புதைபடிவ எரிபொருட்களை வாங்குவதில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாகத் தொடர்கிறது.
- ❖ இந்தியக் கடற்படையானது சென்னை துறைமுகத்தில் INS Anjadip-ஐ செயல்பாட்டிற்கு கொண்டு வரவுள்ளது என்பதோடு, இது ஆழமற்றப் பகுதிகளில் செயல்படும் நீர்மூழ்கி எதிர்ப்புப் போர்க் கப்பல் (ASW-SWC) திட்டத்தின் கீழ் வரும் மூன்றாவது கப்பலாகும்.
- ❖ லைசோசோமால் சேமிப்பு கோளாறு நோய்க்கென அர்ப்பணிக்கப்பட்ட முதல் அரசு ஆதரவு பெற்ற தேசிய உயிரி வங்கியை இந்தியா நிறுவியது.
- ❖ உயிரித்தொழில்நுட்ப துறையானது (DBT), அதன் 40வது நிறுவன தினத்தைக் குறிக்கும் வகையில், பிப்ரவரி 25, 2026 அன்று, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான உயிரித் தொழில்நுட்ப தயாரிப்பு தரவு தளமான "SUJVIKA" ஐ அறிமுகப்படுத்தியது.
- ❖ மத்திய கல்வி அமைச்சர் புது தில்லியில் பள்ளி ஆசிரியர்களுக்கு உதவும்வகையிலான AI-ஆதரவுடன் இயங்கும் டிஜிட்டல் கருவியாக Teacher App 2.0 செயலியை அறிமுகப் படுத்தினார் என்ற நிலையில் இது வகுப்பறை கற்றலை மேம்படுத்துவதற்கு கற்பித்தல் கருவிகள், டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் செயல்திறன் தளங்களை வழங்குகிறது.
- ❖ சரி பார்க்கப்பட்ட மாசு குறைப்புக்கான அதன் முதல் முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட சுற்றுச்சூழல் விருதான Zero Prize-ஐ இந்தியா அறிமுகப்படுத்தியது, காற்று, நீர் மற்றும் நில மாசுபாட்டைக் குறைப்பதற்காக தலா ₹1 கோடியுடன் இந்தப் பரிசு மொத்தம் ₹5 கோடி நிதியைக் கொண்டுள்ளது.
- ❖ புது தில்லியில் நடைபெற்ற TERI (எரிசக்தி மற்றும் வள நிறுவனம்) 25வது உலக நீடித்த வளர்ச்சி உச்சி மாநாட்டின் போது, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC) Him-CONNECT எனும் நிகழ்வை ஏற்பாடு செய்தது, Him-CONNECT என்பது இந்திய நாட்டின் இமயமலைப் பகுதியைச் சேர்ந்த அறிவியல் ஆராய்ச்சியாளர்களை புத்தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சில கொள்கை வகுப்பாளர்களுடன் இணைப்பதற்கான ஒரு தளமாகும்.
- ❖ தெற்கு மத்திய ரயில்வே, செகந்திராபாத்தில் உள்ள ரயில் நிலையத்தில் Rail Parcel செயலியை அறிமுகப்படுத்தியது.
- ❖ மாருதி சுசுகி இந்தியா லிமிடெட்டின் குஜராத்தில் உள்ள சரக்குகளை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் பயன்படுத்தப்படும் ரயில் பாதையின் ஓரத்தில் உள்ள ஒரு குறுகிய பகுதி, உலகளாவிய கார்பன் மதிப்பு வர்த்தக பதிவேடான வெர்ராவின் சரி பார்க்கப் பட்ட கார்பன் தரநிலை (VCS) இன் கீழ் உலகின் முதல் மாதிரி மாற்றப் போக்குவரத்து திட்டமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ நிதி ஆயோக்கின் கீழ் உள்ள அடல் புத்தாக்கத் திட்டமானது (AIM), இந்தியாவின் முதல் மாநில புத்தாக்க திட்டத்தினை (SIM) திரிபுராவில் தொடங்கியது.
- ❖ ஏப்ரல் 1, 2026 முதல் இந்தியா முழுவதும் குறைந்தபட்ச ஆக்டேன் எண் (RON) 95 உடன் 20% எத்தனால் கலந்த பெட்ரோலை விற்பனை செய்வதை இந்திய அரசு கட்டாயமாக்கி உள்ளது.
- ❖ மத்திய ரயில்வே அமைச்சர் ரயில் தொழில்நுட்பக் கொள்கை 2026, ரயில் தொழில்நுட்ப தளம் மற்றும் மின்னணு -ரயில்வே உரிமைகோரல் தீர்ப்பாயம் (e-RCT) ஆகியவற்றைப் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

- இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறன் சுமார் 520 ஜிகாவாட்களைத் தாண்டியுள்ளது என்ற ஒரு நிலையில் இதில் பாதிக்கும் மேற்பட்டவை புதைபடிவ எரி பொருள் அல்லாத மூலங்களிலிருந்து பெறப்படுகின்றன.
- பிரான்சுடனான இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்திருந்து (DTAC) மிகவும் விரும்பத் தக்க நாடு (MFN) என்ற பிரிவை இந்தியா நீக்கியுள்ளது.
- இந்திய அரசு புதுச்சேரியில் மத்திய வங்கியின் டிஜிட்டல் நாணயம் (CBDC) அடிப்படையிலான டிஜிட்டல் உணவு நாணய முன்னோட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- 2024–25 முதல் 2028–29 வரையிலான ஆண்டுகளுக்கான எழுச்சிமிகு கிராமங்கள் திட்டம்-II (VVP-II)-க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, இந்தத் திட்டம் மூலம் ஏற்கனவே VVP-I இன் கீழ் உள்ள வடக்கு எல்லைப்புறப் பகுதிகள் தவிர இந்தியாவின் சர்வதேச நில எல்லைகளுக்கு (ILBs) அருகிலுள்ள கிராமங்களை மேம்படுத்த உதவும்.
- 14 வயது நிரம்பிய சிறுமிகளுக்கு, கார்டசில்-4 (Gardasil-4) தடுப்பூசியைப் வழங்கும் நாடு தழுவிய மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி இயக்கத்தைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- நக்சலிசத்திற்கு எதிரான பெரும் வெற்றிக்குப் பிறகு இடதுசாரி தீவிரவாதம் (LWE) மீண்டும் வருவதைத் தடுக்க உள்துறை அமைச்சகம் பாரம்பரிய முனைப்பு மண்டலங்கள் (Legacy Thrust Territories) என்ற கருத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய அரசானது மேகக் கணிமை, தரவு மைய செயல்திறன் மற்றும் அறநெறிசார் செயற்கை நுண்ணறிவு (AI) ஆகியவற்றுக்கான நாட்டின் முதல் தரநிலைகளை அறிவித்துள்ளது.
- மேற்கு ஆசியாவில் அதிகரித்து வரும் பதட்டங்கள் காரணமாக மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் (HADR) நடவடிக்கைகளுக்காக இந்திய கடற்படை போர்க் கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவின் அணுமின் நிலையங்களை ஆதரிப்பதற்காக வேண்டி சுமார் 10,000 டன் யுரேனியத்திற்கான (2027–2035) $1.9 பில்லியன் யுரேனியம் விநியோக ஒப்பந்தத்தில் இந்தியாவும் கனடாவும் கையெழுத்திட்டன.
- மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, 2026 ஆம் ஆண்டிற்கான சிறப்புரிமைகள் குழுவிற்கு 15 உறுப்பினர்களை பரிந்துரைத்தார்.
- ஆகாஷவானியின் கூடுதல் தலைமை இயக்குநர் தீரஜ் காகடியா எழுதிய "Mahatma: A Great Communicator" என்ற புத்தகம் புது தில்லியில் வெளியிடப்பட்டது.
- பொது விழிப்புணர்வையும் பங்கேற்பையும் அதிகரிக்க இந்திய அரசு 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக பிரகதி மற்றும் விகாஸ் என்ற சின்னங்களை அறிமுகப்படுத்தியது.
- நிதி ஆயோக் மற்றும் யுனிசெஃப் இந்தியா ஆகியவை இலட்சிய மாவட்டங்கள் மற்றும் இலட்சியத் தொகுதிகளில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார விளைவுகளை மேம்படுத்துவதற்கான நோக்க அறிக்கை (SOI) ஒன்றில் கையெழுத்திட்டன.
- தேசிய நீர்வழி-2 என்ற பாதையின் பகுதியான, பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே இந்தியாவின் முதல் ஆற்றுவழிக் கலங்கரை விளக்கங்களை இந்தியா உருவாக்க உள்ளது.
- உலகளாவிய எரிசக்தி நெருக்கடியின் போது திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு (LPG) போதுமான அளவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக, இந்திய அரசு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955 என்பதை அமல் படுத்தி யது.

- ❖ டெல்லியில் இந்தியாவின் முதல் ரிங் மெட்ரோவை இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்தியாவில் பரவலாக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நன்கு விரிவு படுத்தச் வதற்காக, எரிசக்தி மற்றும் வளங்கள் நிறுவனம் (TERI) புது தில்லியில் LaBL 2.0 (Lighting a Billion Lives 2.0) முன்னெடுப்பைத் தொடங்கியது.
- ❖ தனிநபர் சட்டங்களில் உள்ள பாலின பாகுபாடுகளைக் களைய பொது சிவில் சட்டத்தை (UCC) அமல்படுத்துமாறு 'பாவினி சுக்லா எதிர் இந்திய ஒன்றியம்' வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்தது.
- ❖ இந்தியாவுடன் நில எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளுக்கான அந்நிய நேரடி முதலீட்டு (FDI) விதிகளில் பத்திரிகை குறிப்பு 3 (2020 ஆம் ஆண்டின் கீழ்) ஒரு பகுதியளவு தளர்வுக்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ 2013 ஆம் ஆண்டு முதல் மூளைச்சாவு நிலையில் இருந்த 32 வயதான ஹரிஷ் ராணாவுக்கு உயிர் காக்கும் சிகிச்சைகளை விலக்கிக் கொள்ள இந்திய உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்தது என்ற நிலையில் இது இந்தியாவில் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட முதல் செயலற்ற கருணைக்கொலை அமலாக்கமாகும்.
- ❖ நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ள பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் நகர்ப்புற எரிவாயு விநியோகத் திட்டத்திற்குப் (CGD) பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- ❖ உலகளாவிய திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) விநியோகச் சிக்கல்களுக்கு மத்தியில், இயற்கை எரிவாயு ஒதுக்கீட்டிற்கு முன்னுரிமை அளிப்பதற்காக இந்திய அரசு 'இயற்கை எரிவாயு (வழங்கல் ஒழுங்குமுறை) ஆணை, 2026' என்பதை வெளியிட்டுள்ளது.
- ❖ சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.
- ❖ மத்திய ஜல் சக்தி அமைச்சகம், கிராமப்புற குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக சுஜல் காவ்ன் அடையாள எண் எனும் தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டையை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான மசோதாவை மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது.
- ❖ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் (MoHUA) எழுப்பிய கவலைகளைத் தொடர்ந்து, இந்தியத் தர நிர்ணய அமைப்பு (BIS) 2025 நில அதிர்வு விதிமுறையை (IS 1893) திரும்பப் பெற்றுள்ளது.
- ❖ தேசிய கனிம மேம்பாட்டுக் கழகம் (NMDC), 2025-26 ஆம் நிதியாண்டில் 50 மில்லியன் டன் இரும்புத் தாதுவை உற்பத்தி செய்த இந்தியாவின் முதல் சுரங்க நிறுவனம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- ❖ இந்தியாவின் தரவு மையத் திறன் 2020 ஆம் ஆண்டில் சுமார் 375 மெகாவாட்டிலிருந்து (MW) 2025 ஆம் ஆண்டில் சுமார் 1500 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது.
- ❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் (FSSAI) வழங்கப்படும் உரிமங்களுக்கு வாழ்நாள் செல்லுபடியாகும் காலத்தை இந்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் அங்கீகரித்துள்ளது.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் நெல்லூர் மாவட்டத்தில் உலகின் முதல் தன்னாட்சி கடல்சார் கப்பல் கட்டுதல் மற்றும் அமைப்புகள் மையத்தை இந்தியா நிறுவுகிறது.
- ❖ போதைப்பொருள் கட்டுப்பாட்டு வாரியம் (NCB), "டீம் கல்கி" என்ற அகில இந்திய டார்க்நெட் போதைப்பொருள் வலையமைப்பை முடக்கியது.

- 1,143 கி.மீ நீளத்திற்கும் அதிகமான செயல்பாட்டு மெட்ரோ பாதைகளுடன் இந்தியாவின் மெட்ரோ ரயில் வலையமைப்பு உலகின் மூன்றாவது பெரிய வலை அமைப்பாக மாறியுள்ளது.
- 2026–27 முதல் 2030–31 ஆம் நிதியாண்டு வரையிலான காலத்திற்கு ₹2,584.60 கோடி செலவில் சிறு நீர்மின் சக்தி (SHP) மேம்பாட்டுத் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மேற்கு பசிபிக் பெருங்கடலில் உள்ள குவாம் அருகே அமெரிக்கா தலைமையிலான நீர்மூழ்கி எதிர்ப்புப் போர் பயிற்சியான சீ டிராகன் பயிற்சிக்காக இந்தியக் கடற்படை P-8I விமானத்தை நிலை நிறுத்தியுள்ளது.
- அஞ்சல் துறையின் கீழ் அவசரப் பொருட்களை வேகமாகவும் நம்பகத் தன்மையுடனும் அனுப்ப, அடுத்த நாள் டெலிவரி செய்யும் சேவையான "24 Speed Post " என்ற வசதியை இந்திய அஞ்சல் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பெண் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் இந்திய விவசாயக் காப்பீட்டு நிறுவனம் (AIC) 'கிரிஷி சகி' முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- பல் மருத்துவக் கல்வி மற்றும் ஒழுங்குமுறைகளைச் சீர்திருத்துவதற்காக, இந்திய பல் மருத்துவச் சபைக்குப் பதிலாக தேசியப் பல் மருத்துவ ஆணையத்தை இந்திய அரசு நிறுவியது.
- நுண்நிதி நிறுவனங்களுக்கான கடன் உத்திரவாதத் திட்டம் 2.0 (CGSMFI-2.0) என்பதை இந்திய அரசு ₹20,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடங்கியுள்ளது.
- கல்வி அமைச்சகம், இந்தியத் தொழில்நுட்பக் கழகம் கான்பூருடன் இணைந்து 'SATHEE' செயலியை அறிமுகப்படுத்தியது.
- இந்தியா தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 1 பில்லியன் டன் நிலக்கரி உற்பத்தியை எட்டியுள்ளது.
- பணியிடப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்திய இரயில்வே துறையானது SHINE (அதிகாரமளித்தலுக்காக பாலியல் துன்புறுத்தல் சம்பவம் குறித்த அறிவிப்பு) செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்கள் மட்டுமே பட்டியலிடப் பட்ட சாதியினர் (SC) அந்தஸ்தைக் கோர முடியும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- பிராந்திய விமான இணைப்பை மேம்படுத்துவதற்காக 'மாற்றியமைக்கப்பட்ட உதான்' திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- குடியேற்றம், விசா மற்றும் வெளிநாட்டினர் பதிவு ஆகியவற்றைக் கண்காணிக்கும் IVFRT (குடியேற்றம், விசா, வெளிநாட்டினர் பதிவு மற்றும் கண்காணிப்பு) திட்டத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- அதானி போர்ட்ஸ் மற்றும் SEZ லிமிடெட் நிறுவனமானது, திகி மற்றும் கோபால்பூர் துறைமுகங்களில் இந்தியாவின் முதல் 'அடைக்கலத் துறைமுகத்தை' (PoR) செயல் பாட்டிற்கு கொண்டு வந்தது.
- 'திட்டம் 17A'-வின் கீழ் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐந்தாவது நீலகிரி-வகை போர்க்கப்பலான INS துனகிரியை இந்திய கடற்படை பெற்றுக்கொண்டது.
- தேசியப் புள்ளிவிவர அலுவலகம் "இந்திய எரிசக்தி புள்ளிவிவரங்கள் 2026" என்ற வெளியீட்டை வெளியிட்டது.

- கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய ஒரு நபர், பட்டியலிடப்பட்ட சாதியினர் அந்தஸ்தைக் கோர முடியாது என்று 'சிந்தாடா ஆனந்த் Vs ஆந்திரப் பிரதேச அரசு' என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- மத்திய அரசாங்கம் 'திடக் கழிவு மேலாண்மை விதிகள், 2026'-ஐ அறிவித்துள்ளது, இது 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும்.
- ஏவுகணை போர்க்கப்பலான துனகிரி, கடலோர மற்றும் கடல் ஆராய்ச்சிக்கான ஆய்வுக் கப்பலான சன்ஷோதக் மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பலான அக்ரே ஆகிய மூன்று முக்கிய கப்பல்களை இந்திய கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய கடற்படை, ஆழமற்ற மற்றும் கடலோரப் பகுதிகளில் நீர்மூழ்கி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக உள்நாட்டிலேயே கட்டப்பட்ட இரண்டாவது கப்பலான மல்வான்-ஐப் பெற்றுள்ளது.
- 11 அடுத்த தலைமுறை கடலோர ரோந்துக் கப்பல்கள் (NGOPV) திட்டத்தின் முதல் கப்பலான INS ஷாச்சி கோவாவில் தொடங்கப்பட்டது.
- இந்திய கடற்படையானது, நான்கு பெரிய ஆய்வுக் கப்பல்களில் கடைசி கப்பலான கடல்சார் வரைபடங்கள் மற்றும் ஹைட்ரோகிராஃபிக் ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் சன்ஷோதக்-ஐப் பெற்றுள்ளது.
- துணைத் குடியரசுத் தலைவர் மற்றும் சட்ட அமைச்சரால் 'நியாய சேது' என்ற AI சாட்பாட் அறிமுகப்படுத்தப்பட்டது.
- நகோயா நெறிமுறையின் கீழ் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்களை (IRCCs) வழங்குவதில் இந்தியா உலக அளவில் முதலிடம் பிடித்துள்ளது.
- 1961-ம் ஆண்டின் வருமான வரிச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்ட வருமான வரிச் சட்டம் 2025 ஆனது, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வந்தது.
- சட்ட விதிகளை சீர்திருத்துவதற்காக 'ஜன் விஸ்வாஸ் (திருத்தச் சட்ட) மசோதா 2026'-ஐ மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- இந்தியத் தேர்தல் ஆணையமானது (ECI) தேர்தல் சின்னங்கள் (இடஒதுக்கீடு மற்றும் ஒதுக்கீடு) (திருத்த) ஆணை, 2026-இன் கீழ், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் (RUPPs) பொதுவான சின்னங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கான விதிகளைத் தளர்த்தியுள்ளது.
- நாடு முழுவதும் எரிவாயு இணைப்புகளை விரிவாக்கும் நோக்கில், தேசிய PNG (குழாய் மூலம் விநியோகிக்கப்படும் இயற்கை எரிவாயு) இயக்கம் 2.0-ஐ அரசாங்கம் 2026 ஆம் ஆண்டு 30 ஜூன் வரை நீட்டித்துள்ளது.
- 2025–26 ஆம் நிதியாண்டில் இந்தியாவானது ₹38,424 கோடி மதிப்பிலான பாதுகாப்பு ஏற்றுமதியைச் செய்து சாதனை படைத்துள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் இந்தியக் கடற்படையின் 'புராஜெக்ட் 17A' திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நான்காவது போர்க்கப்பலான INS தாராகிரி என்ற அதிநவீன மறைந்து தாக்கும் போர்க்கப்பலை மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இந்தியாவின் 3வது அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலான INS அரிதாமன் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகம் இடதுசாரி தீவிரவாதத்தால் (LWE) பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் வகைப்பாட்டை மாற்றியமைத்துள்ளது. இதன்படி, முன்பு இருந்த "மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்" என்ற முறை மாற்றப்பட்டு, தற்போது

"தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவை", "கவனத்திற்குரிய மாவட்டங்கள்" மற்றும் "மரபு மற்றும் உத்வேக மாவட்டங்கள்" என மூன்று புதிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

❖ எல்லைப்புறச் சாலைகள் அமைப்பு (BRO), ராஜஸ்தானின் பிகானேரில் சேத்தக் திட்டத்தின் 47வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.

❖ 2025-26 ஆம் நிதியாண்டில் 6.05 கிகாவாட் (GW) என்ற மிக உயர்ந்த காற்றாலை மின் உற்பத்தித் திறன் கூடுதலை இந்தியா பதிவு செய்துள்ள நிலையில் நாட்டின் மொத்த காற்றாலை மின் திறன் 56 கிகாவாட்டைக் கடந்துள்ளது.

❖ தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) 2024-25 ஆம் ஆண்டிற்கான முதலாவது பதிவு செய்யப்பட்ட சேவைத் துறை நிறுவனங்களின் வருடாந்திர கணக்கெடுப்பைத் தொடங்கியது.

❖ ஊட்டச்சத்து விளைவுகளை மேம்படுத்துவதற்காக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 முதல் 23 ஆம் தேதி வரை 8-வது போஷன் பக்வாடா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் மருத்துவ குணமுடைய மரங்களை நடுவதற்காக 'ஆரோக்ய வன்' என்ற முன்னெடுப்பை இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) தொடங்கியுள்ளது.

❖ தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் 1,000 கி.மீ தூரத்திற்கான குவாண்டம் தகவல் தொடர்பு வலையமைப்பை இந்தியா வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டியுள்ளது.

❖ குஜராத் ஜாம்நகரில் வனவிலங்கு மற்றும் கால்நடை அறிவியலுக்கான உலகின் முதல் உலகளாவிய பல்கலைக்கழகத்தை வன்தாரா நிறுவனம் தொடங்கியது.

❖ தேசியப் பழங்குடியினர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (NSTFDC) தனது 25வது ஸ்தாபன தினத்தை ஏப்ரல் 10 அன்று புதுதில்லியில் கொண்டாடியது.

❖ 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியா இதுவரை இல்லாத அளவாக 45 ஜிகாவாட் (GW) சூரியசக்தித் திறனைக் கூடுதலாகச் சேர்த்துப் பதிவு செய்துள்ளது.

❖ 2026 ஆம் ஆண்டில் குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இந்திய அரசியலமைப்பின் சிந்தி மொழிப் பதிப்பை வெளியிட்டார்.

❖ வாக்களிக்கும் உரிமையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையும் ஒரு சட்ட ரீதியான உரிமையே தவிர, அடிப்படை உரிமை அல்ல என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

❖ 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவில் காப்புரிமை விண்ணப்பங்கள் 30.2% அதிகரித்து 1,43,729 ஆக உயர்ந்துள்ளது.

❖ ₹10,000 கோடி நிதியுடன் ஸ்டார்ட்அப் இந்தியா நிதியங்களுக்கான நிதி (FoF) 2.0 திட்டத்தை இந்திய அரசு அறிவித்துள்ளது.

❖ அரசியலமைப்பு (131-வது திருத்த) மசோதா, 2026 மக்களவையை விரிவுபடுத்தவும், முன்கூட்டியே மகளிர் இடஒதுக்கீட்டைச் செயல்படுத்தவும் முன்மொழிகிறது.

❖ அவைக்கு வந்து வாக்களித்த 528 உறுப்பினர்களில், 298 பேர் மசோதாவுக்கு ஆதரவாகவும் 230 பேர் எதிராகவும் வாக்களித்த நிலயில் அரசியலமைப்பு (நூற்று முப்பத்து ஒன்றாவது திருத்தம்) மசோதா, 2026-ஐ மக்களவை நிராகரித்தது.

❖ கே.ஜி. பாலகிருஷ்ணன் தலைமையிலான விசாரணை ஆணையத்தின் பதவிக் காலத்தை 2026 ஆம் ஆண்டு ஜூன் 10 வரை மத்திய அரசு மூன்றாவது முறையாக நீட்டித்துள்ளது.

- தற்சார்பு இந்தியா/ஆத்மநிர்பார் பாரத் திட்டத்தின் கீழ் 2040 ஆம் ஆண்டிற்குள் கோகோ உற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கான வழிகாட்டுதல் திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ளது.
- நாரி சக்தி வந்தன் ஆதினியம் 2023 சட்டமானது மத்திய அரசால் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.
- பீரங்கிப் படையின் 200வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் சமுத்ர சாஹஸ் பாய்மரப் படகுப் பயணம் மும்பையின் மார்வேயிலிருந்து தொடங்கி வைக்கப்பட்டது.
- ₹12,980 கோடி உத்தரவாதத்துடன் பாரத் கடல்சார் காப்பீட்டுத் தொகுப்பிற்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- பிரதம மந்திரி கிராம சடக் யோஜனா-III (PMGSY-III) திட்டத்தை 2028 ஆம் ஆண்டு மார்ச் வரை மத்திய அமைச்சரவை நீட்டித்துள்ளது.
- 2026-31 ஆம் ஆண்டிற்கான நதிப் படுகை மேலாண்மைத் (RBM) திட்டத்தை ₹2,183 கோடி மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்த இந்திய அரசு முன்மொழிந்துள்ளது.
- சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தோர்களைக் கண்டறிந்து வெளியேற்றுவதை விரைவு படுத்துவதற்காக, உள்துறை அமைச்சகம் (MHA) புதிய நாடுகடத்தல் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவில் 222 லட்சம் மெட்ரிக் டன் (LMT) கோதுமை மற்றும் 380 LMT அரிசி உட்பட மொத்தம் 602 LMT உணவு தானியங்கள் இருப்பில் உள்ளன.
- மத்தியப் புலனாய்வுத் துறையானது (CBI) அத்துறையின் அறிவிப்புகள் உண்மையானதா அல்லது போலியானதா என்பதை குடிமக்கள் சரிபார்க்கவும், இணையவழி மோசடிகளைத் தவிர்க்கவும் உதவும் ஒரு செயற்கை நுண்ணறிவு கருவியான 'அபய்' என்ற செயற்கை நுண்ணறிவு சாட்பாட்டை அறிமுகப்படுத்தியது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் கடல் உணவுகள் ஏற்றுமதி சாதனை அளவாக ₹72,325.82 கோடியை எட்டியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு இரத்த தான மையமாவது நிறுவ சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி 2.1% அதிகரித்து ₹3.16 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.
- ரோபார் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT Ropar) இந்தியாவின் முதல் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட வேளாண் நுண்ணறிவு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஐ.என்.எஸ் சுதர்சினி லாஸ் பால்மாஸிற்கு தனது முதல் பயணத்தை மேற்கொண்டதன் மூலம் இந்த தீவுக் கூட்டத்தை அடைந்த முதல் இந்தியக் கடற்படைக் கப்பல் என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பாகப் பயணம் செய்வது, அரசியலமைப்புச் சரத்து 21-இன் கீழ் வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதி என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இந்தியா முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கான (ICU) குறைந்தபட்ச தரநிலைகளை இந்திய உச்ச நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.

- ஆசியாவின் முதல் பாலின உள்ளடக்கம் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான யுனெஸ்கோ இருக்கையை புனேவில் உள்ள சிம்பயோசிஸ் திறன் மற்றும் தொழில் முறை பல்கலைக்கழகம் (SSPU) நிறுவியுள்ளது.
- மைத்தோஸ் என்ற செயற்கை நுண்ணறிவு (AI) தளத்தால் ஏற்படும் அபாயங்களை மதிப்பிடுவதற்காக இந்திய அரசு சி.எஸ். செட்டி தலைமையிலான ஒரு குழுவை அமைத்துள்ளது.
- தலைமைப் பதிவாளர் அலுவலகம் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகமானது, 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பிற்காக 1855 என்ற உதவி எண்ணை ஆனது நாடு முழுவதும் செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.
- இந்திய மத்திய குடிசைத் தொழில் கழகம் தனது முதல் பாரம்பரிய ஆடை வடிவமைப்பான "சோல் த்ரெட்ஸ்" (Soul Threads) என்பதை அறிமுகப்படுத்தி உள்ளது.
- இந்திய ராணுவம் பெலகாவியில் உள்ள மராட்டிய இலகுரக காலாட்படை படைப்பிரிவு மையத்தில் 16வது பைரவ் படைப்பிரிவை உருவாக்கியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் $92.1 பில்லியன் ராணுவச் செலவினத்துடன் இந்தியா உலகளவில் 5வது இடத்தைப் பிடித்துள்ள நிலையில் இது 2024 ஆம் ஆண்டை விட 8.9% அதிகமாகும்.
- இந்தியாவை ஒரு வளர்ந்த பொருளாதாரமாக மாற்றுவதற்கான 'DPI@2047' என்ற வழி காட்டுதல்களை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.
- DRDO நிறுவனமானது இந்தியக் கடற்படையுடன் இணைந்து வங்காள விரிகுடாவில் ஒடிசா கடற்கரைக்கு அப்பால் ஒரு ஹெலிகாப்டரில் இருந்து NASM-SR (குறுகிய தூர கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணை) எறிகணையின் முதல் சால்வோ சோதனையை நடத்தியது.
- ஊழியர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமானது (EPFO) EPF கணக்கு நிர்வாகத்திற்காக E-PRAAPTI தளத்தை தொடங்க உள்ளது.
- 21 வகை குறைபாடுகளைக் கண்டறியவும், பள்ளிகளில் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளை (CWSN) முன்கூட்டியே பரிசோதிக்கவும், சான்றிதழ் பெறுவதை எளிதாக்கவும், மாணவர்களை சமக்ர சிக்ஷாவுடன் இணைக்கவும் இந்திய அரசு பிரசாஸ்ட் 2.0 எனும் திட்டத்தைத் தொடங்கவுள்ளது.
- ஈ-ஸ்போர்ட்ஸ் மற்றும் மோட்டார் ஸ்போர்ட்ஸை இணைக்கும் வகையில், ஃபார்முலா 1 மற்றும் மும்பை ஃபால்கான்ஸ் ரேசிங் லிமிடெட் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தியாவின் முதல் அதிகாரப்பூர்வ 2026 ஆம் ஆண்டிற்கான F1 சிம் ரேசிங் இந்தியா ஓபன்-ஐ இந்தியா தொடங்கியுள்ளது.
- மருத்துவக் கல்லூரிகளில் எம்பிபிஎஸ் (MBBS) இடங்களுக்கான உச்சவரம்பை தேசிய மருத்துவ ஆணையம் (NMC) நீக்கியுள்ளது.
- UCG (நிலத்தடி நிலக்கரி வாயுவாக்கம்) விதிகளுடன் கூடிய நான்கு நிலக்கரித் தொகுதிகளுக்கான நிலக்கரிச் சுரங்க மேம்பாடு மற்றும் உற்பத்தி ஒப்பந்தங்களில் மத்திய நிலக்கரி அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.
- உத்தரகண்டில் உள்ள லிபுலேக் கணவாய் மற்றும் சிக்கிமில் உள்ள நாது லா கணவாய் வழியாக கயிலை மானசரோவர் யாத்திரை மீண்டும் இந்தியப் பயணிகளுக்காக திறக்கப் படுவதாக சீனா அறிவித்துள்ளது
- 2026-27 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழு, மதிப்பீட்டுக் குழு, பொதுத்துறை நிறுவனங்களுக்கான குழு, மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் குழு ஆகிய நான்கு முக்கிய நாடாளுமன்றக் குழுக்களை மக்களவை சபாநாயகர் மாற்றியமைத்துள்ளார்.

- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்ய காரியக்ரம் (RBSK) 2.0 வழிகாட்டுதல்களை வெளியிட்டது.
- கரீபியன் நாடுகளுடனான சுகாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக ஜமைக்காவில் 'ஆரோக்ய மைத்ரி' அமைப்பை இந்தியா நிறுவியுள்ளது.
- தேசிய கீதத்தைப் போலவே 'வந்தே மாதரம்' பாடலுக்கும் சட்டப் பாதுகாப்பை விரிவுபடுத்தும் வகையில், தேசியக் கவுரவச் சின்னங்கள் அவமதிப்புத் தடுப்புச் சட்டம், 1971-இல் திருத்தம் செய்ய மத்திய அமைச்சரவை முன்மொழிந்துள்ளது.
- தெற்கு கடற்கரை ரயில்வே மண்டலம் (SCoR) 2026 ஆம் ஆண்டு ஜூன் 1 அன்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் (RPwD) சட்டம், 2016-இன் கீழ், 'ஆசிட்/அமில வீச்சால் பாதிக்கப்பட்டவர்கள்' என்பதற்கான வரையறையை இந்திய உச்ச நீதிமன்றம் விரிவுபடுத்தியுள்ளதுடன், இதில் கட்டாயமாக ஆசிட்/அமிலம் குடிக்க வைக்கப்பட்ட சம்பவங்களில் உயிர் பிழைத்தவர்களையும் உள்ளடக்கியுள்ளது.
- 2023-ஆம் ஆண்டில் 31,365 ஆக இருந்த சிறார் குற்ற வழக்குகள், 2024-ஆம் ஆண்டில் 34,878 ஆகப் பதிவாகியுள்ளன.
- 2024-ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் 58.86 லட்சம் புலன் விசாரணைக்கு உட்பட்ட குற்றங்கள் பதிவாகியுள்ளதுடன் 2023-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 6% குறைவாகும்.
- தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்ட 'இந்தியாவில் தற்செயலான மரணங்கள் மற்றும் தற்கொலைகள் (ADSI) 2024' அறிக்கையின்படி, 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 1,70,746 தற்கொலைகள் பதிவாகியுள்ளன.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை (தலைமை நீதிபதி உட்பட) 34-லிருந்து 38-ஆக உயர்த்த, உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா 2026-க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனில் இந்தியா உலகின் 3-வது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.
- 2026-27 முதல் 2030-31 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு ₹5,659 கோடி மதிப்பீட்டில் பருத்தி உற்பத்தித்திறனுக்கான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்களை நவீனமயமாக்குவதற்கான ஒரு செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்காக, உச்ச நீதிமன்ற நீதிபதி அரவிந்த் குமார் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழுவை அமைக்கப் போவதாக இந்தியத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் அறிவித்துள்ளார்.
- சிறந்த நடைமுறைகளுக்கான தேசிய உச்சி மாநாட்டின் போது, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகமானது ஜனனி - JANANI (கர்ப்பகால, பிரசவ மற்றும் பச்சிளங்குழந்தைப் பருவ ஒருங்கிணைந்த பராமரிப்பின் பயணம்) என்ற டிஜிட்டல் தளத்தைத் தொடங்கியது.
- நாடு முழுவதும் ஒரு ஒருங்கிணைந்த டிஜிட்டல் சுகாதார தளத்தை உருவாக்குவதற்காக இந்திய அரசு சமீபத்தில் 'ஸ்வஸ்த் பாரத்' தளத்தைத் தொடங்கியது.
- இந்தியாவின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் இணைப்பு பேருந்து சேவை புது தில்லியின் சென்ட்ரல் விஸ்டா பகுதியில் தொடங்கியது.
- 2026–27 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற பெண்கள் அதிகாரமளித்தல் குழுவானது டக்குபதி புரந்தேஸ்வரி தலைமையில் மக்களவை சபாநாயகர்-ஆல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

- ஹம்சானந்தினி நந்தூரி எதிர் இந்திய ஒன்றியம் வழக்கில், குழந்தையைத் தத்தெடுக்கும் தாய்மார்களுக்கான 12 வார மகப்பேறு விடுப்பு பலன்களை இந்திய உச்ச நீதிமன்றம் விரிவுபடுத்தியுள்ளது.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 33-லிருந்து 37 ஆக உயர்த்துவதற்காக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த அவசரச் சட்டம், 2026-ஐப் பிறப்பித்துள்ளார்.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது, அடம்யா வகையைச் சேர்ந்த புதிய தலை முறை அதிவேக ரோந்து கப்பலும் (FPV), எட்டு கப்பல்கள் கொண்ட தொடரின் ஐந்தாவது கப்பலுமான ICGS அச்சலை கோவா கப்பல் கட்டும் தளத்தில் பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது.
- சமூக பாதுகாப்புச் சட்டம் 2020-இன் கீழ், கட்டுமானச் செலவுகளுக்கு 1% தொழிலாளர் நல வரி விதிப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.
- உள்துறை அமைச்சகம், குடியுரிமை விதிகள், 2009-ஐத் திருத்தி குடியுரிமை (திருத்த) விதிகள், 2026-ஐ அறிவித்துள்ளது.
- இந்திய தர நிர்ணய பணியகம் (BIS) ஆனது IS 19850:2026 என்பதன் கீழ் E22, E25, E27 மற்றும் E30 எத்தனால் கலக்கப்பட்ட பெட்ரோல் எரிபொருள்களுக்கான புதிய தர நிலைகளை அறிவித்துள்ளது.
- சிந்து நதி நீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், புதிய செனாப் நதி நீர்மின் திட்டப் பணிகளை இந்தியா தொடங்கியுள்ளது.
- சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) கீழ் 2026 ஆம் ஆண்டிற்கான பிராந்திய கூட்டுறவு ஒப்பந்தத்தின் (RCA) தலைவர் பதவியை இந்தியா ஏற்றுள்ளது.
- மேற்கு வங்காளத்தின் கொல்கத்தாவில் இந்தியக் கடற்படைக்கான அடுத்த தலைமுறை கடல் ரோந்துக் கப்பலான (NGOPV) யார்டு 3039 'INS சங்கமித்ரா', அறிமுகப்படுத்தப்பட்டது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் பருவநிலை மாற்றம் தொடர்பான துறைகள் சார்ந்த நாடாளுமன்ற நிலைக்குழுவின் தலைவராக மேதா விஷ்ராம் குல்கர்னி நியமிக்கப்பட்டுள்ளார்.
- பெருநிறுவனச் சட்டங்கள் (திருத்த) மசோதா, 2026-க்கான கூட்டுக் குழுவின் தலைவராக சுதீர் குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.
- மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினரான (எம்.பி) ராகவ் சதா, புதுடெல்லியில் உள்ள மாநிலங்களவையின் மனுக்கள் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் பிறப்பு விகிதம் 2014-ஆம் ஆண்டில் 1,000 மக்கள் தொகைக்கு 21 ஆக இருந்த நிலையில், 2024-ஆம் ஆண்டில் 18.3 ஆகக் குறைந்துள்ளது என்பதோடு, இறப்பு விகிதமும் 6.7-லிருந்து 6.4 ஆகக் குறைந்துள்ளது.
- இந்தியாவில் 1,000 உயிருள்ள பிறப்புகளுக்கு ஏற்படும் சிசு மரணங்களை அளவிடும் சிசு மரண விகிதம் (IMR), 2014-ஆம் ஆண்டில் 39 ஆக இருந்த நிலையில் 2024-ஆம் ஆண்டில் 24 ஆகக் குறைந்துள்ளது.
- நிபே லிமிடெட் நிறுவனம் உருவாக்கிய உள்நாட்டுத் தயாரிப்பான வாயு அஸ்த்ரா எனும் இலக்கைச் சுற்றிவந்து தாக்கும் ஆயுதத்தை இந்தியா வெற்றிகரமாகச் சோதித்தது.
- ஆயில் இந்தியா லிமிடெட் நிறுவனமானது, மேற்கு ராஜஸ்தானின் ஜெய்சால்மர் மாவட்டத்தில் அமைந்துள்ள தண்டேவாலா களத்தில் ஒரு புதிய இயற்கை எரிவாயு மண்டலத்தைக் கண்டறிந்துள்ளது.

- ❖ மகாராஷ்டிராவின் சீரடியில் இந்தியாவின் முதல் உள்நாட்டு 300 கி.மீ தூரம் பாயும் "சூர்யாஸ்த்ரா" எனும் உலகளாவிய ஏவுகணை அமைப்பை இந்தியா வெளியிட்டது.
- ❖ இந்திய ராணுவமானது கட்டளைப் புலனாய்வு மற்றும் தளவாட மேலாண்மைக்காக கௌடில்யா மற்றும் Q-FORCE ஆகிய இரண்டு செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தளங்களை உருவாக்கியுள்ளது.
- ❖ இந்தியாவில் நடப்பு சுகாதார செலவினங்களில் (CHE) கிட்டத்தட்ட 50% பொதுமக்களின் சொந்த செலவினங்களாக (OOPE) உள்ளன.
- ❖ அரசு சுகாதார செலவினம் (GHE) 2013-14 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1.15% ஆக இருந்த நிலையில், 2022-23 ஆம் ஆண்டில் சுமார் 1.48% ஆக அதிகரித்துள்ளது.
- ❖ பட்டியலிடப்பட்ட சாதியினரின் (SC) நலத்திட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும் வகையில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், புதுதில்லியில் PM-AJAY இணையதளம் மற்றும் AJAY அலைபேசிச் செயலியை அறிமுகப்படுத்தியது.
- ❖ இந்தியாவில் உள்ள பள்ளி மற்றும் உயர்கல்வி ஆசிரியர்களுக்கான “Google AI கல்வியாளர் தொடர் (GES)” எனப்படும் இலவச செயற்கை நுண்ணறிவு (AI) பயிற்சி திட்டத்தை கூகுள் அறிவித்துள்ளது.
- ❖ இந்தியாவில் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் அசாதாரண இடம்பெயர்வு முறைகளால் ஏற்படும் மக்கள்தொகை மாற்றங்களை ஆய்வு செய்வதற்காக ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. பிரகாஷ் பிரபாகர் நவ்லேகர் தலைமையில் மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்துள்ளது.
- ❖ சர்வதேச எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக மத்திய உள்துறை அமைச்சர் நான்கு பரிமாண கட்ட எல்லையோரப் பாதுகாப்பு மாதிரியை முன்மொழிந்தார்.
- ❖ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது, 2022-23 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தேசிய சுகாதார கணக்குகள் (NHA) மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) 2024 ஆம் ஆண்டில் ஒரு பெண்ணுக்கு 1.9 குழந்தைகளாகக் குறைந்துள்ளது என்பதோடு இது மாற்று நிலை அளவான 2.1-ஐ விடக் குறைவு ஆகும்.
- ❖ மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் தரப்புகளின் 2026 ஆம் ஆண்டிற்கான ஐநாவின் (UN) தடைப் பட்டியல்/கறுப்புப் பட்டியலில் இஸ்ரேல் மற்றும் ரஷ்யா சேர்க்கப்பட்டுள்ளன.
- ❖ 2026 ஆம் ஆண்டு மே மாத நிலவரப்படி, ஆசிய-பசிபிக் (APAC) பிராந்தியத்தில் செயல்பாட்டில் உள்ள தரவு மையங்களின் திறனில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ 100, 101, 108, 102, 1033, 1091 போன்ற அனைத்து அவசரகால எண்களும் 112 உடன் இணைக்கப்பட உள்ளது
- ❖ வியட்நாமுக்கு பிரம்மோஸ் மீயொலி வேக ஏறிகணைகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது
- ❖ இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 10 பெட்டிகள் கொண்ட ஹைட்ரஜன் எரிபொருள் மின்கல அடிப்படையிலான ரயிலை ஹரியானாவில் உள்ள ஜிந்த்-சோனிபட் வழித்தடத்தில் இயக்க இந்திய ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் ஸ்கைகாஸ்ட் அமைப்பானது, புவி அறிவியல் அமைச்சகத்தால் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

- இந்தியா - ஓமன் விரிவான பொருளாதாரக் கூட்டாண்மை ஒப்பந்தம் (CEPA) 2026 ஆம் ஆண்டு ஜூன் 1 அன்று நடைமுறைக்கு வந்தது.
- இமாச்சலப் பிரதேசத்தில் செனாப்-பியாஸ் இணைப்புச் சுரங்கப் பாதை திட்டத்திற்கு 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.
- தெற்கு கடற்கரை ரயில்வே (SCoR) ஆனது 2026 ஆம் ஆண்டு ஜூன் 1 அன்று நாட்டின் 18-வது ரயில்வே மண்டலமாக மாறியதை அடுத்து, இந்திய ரயில்வே புதிய 18-நட்சத்திர சின்னத்தை வெளியிட்டது.
- ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டமானது (ABDM), 2026 ஆம் ஆண்டு மே 30 அன்று 90 கோடி ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குகள் (ABHA) என்ற மைல்கல்லைத் தாண்டியது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO) உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட வானிலிருந்து தரையிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கும் 'ருத்ரம்-II' என்ற கதிர்வீச்சு எதிர்ப்பு எறிகணையை (ARM) இந்திய விமானப்படை (IAF) வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.
- மத்திய அரசானது, மையப்படுத்தப்பட்ட பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்பின் (CPGRAMS) கீழ் 'சமாதான் தீதி' என்ற செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான குரல்வழி சாட்பாட்டைத் தொடங்கி வைத்தார்.
- ஆண்டுதோறும் சூரியசக்தித் திறன் சேர்ப்பதில் அமெரிக்காவை முந்தி, 2025 ஆம் ஆண்டில் உலகின் இரண்டாவது மிகப்பெரிய சூரியசக்தி வளர்ச்சிச் சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களின் (OMCs) 48 சில்லறை விற்பனை நிலையங்களில் E85 எரிபொருளை அரசு அறிமுகப்படுத்தியது.
- இந்தியாவின் 7-வது மண்டல வானிலை ஆய்வு மையமானது (RMC) 2026 ஆம் ஆண்டு ஜூன் 5 அன்று ஜம்முவில் திறக்கப்பட்டது.
- எல்லைப்புறக் கிராமங்களில் இளைஞர்களின் ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்காக 'வளர்ந்த எழுச்சிமிகு கிராமங்கள் திட்டத்தின்' (VVVP) 2026 ஆம் ஆண்டிற்கான முதல் கட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- விண்கலத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதை அடுத்து, அமெரிக்காவின் நாசா, செவ்வாய் வளிமண்டலம் மற்றும் ஆவியாகும் பொருட்களின் பரிணாமம் (MAVEN) விண்கலத் திட்டத்தை அதிகாரப்பூர்வமாக முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது.
- இந்தியாவின் ஏற்றுமதி சரக்குகள் கையாளும் பகுதிங்களின் (Land Port) செயல்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்காக நிலத் துறைமுக மேலாண்மை அமைப்பை (LPMS) மத்திய உள்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- 2026 ஆம் ஆண்டு ஜூன் 10 அன்று தொடர்ந்து நீண்ட காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமராகப் பணியாற்றியவர் என்ற பெருமையை பிரதமர் நரேந்திர மோடி பெற்றார்.
- பீகார், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாட்டில் சுமார் ₹898 கோடி முதலீட்டில் மாபெரும் அளவிலான தோல், காலணி மற்றும் உதிரிபாகங்கள் தொழிலகக் குழுமங்களை மத்திய அரசு நிறுவி வருகிறது.
- 2026-27 ஆம் ஆண்டு ராபி பருவத்தில் இமிடாசோலினோன்-எதிர்ப்புத் திறன் கொண்ட கடுகு கலப்பினங்களை பெரிய அளவில் பயிரிட இந்திய விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.
- இந்தியத் தர நிர்ணய அமைப்பு (BIS) ஆனது முதல் முறையாகத் தேநீர் பைகளுக்கான தரநிலைகளை வெளியிட்டுள்ளது, இதில் எபிக்ளோரோஹைட்ரின் மற்றும் குளோரின் வெளுப்பாக்கம் ஆகியவற்றைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

- ஜம்மு காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் செனாப் ஆற்றின் குறுக்கே 930 மெகாவாட் (MW) திறன் கொண்ட நீண்ட காலமாக நிலுவையில் இருந்த கிர்தாய்-II நீர்மின் திட்டத்தை அரசாங்கம் மீண்டும் துவங்கியுள்ளது.
- இந்தியா முழுவதும் 100 தொழில் பூங்காக்களின் வளர்ச்சியை நன்கு விரைவுபடுத்தச் வதற்காக மத்திய அரசு BHAVYA இணையதளத்தை தொடங்கி வைத்தது.
- இந்தியாவில் சமுதாய விதை வங்கிகளின் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும், உள்நாட்டுப் பயிர் வகைகளைப் பாதுகாப்பதற்கும் இந்தியத் தர நிர்ணய அமைப்பு (BIS) IS 20201:2026 என்ற புதிய தரநிலையை வெளியிட்டுள்ளது.
- பிரான்சின் நைஸ் நகரில் நடைபெற்ற 'பாரத் இன்னோவேட்ஸ் 2026' உச்சிமாநாட்டின் போது இந்தியா-பிரான்ஸ் ATL (அடல் டிங்கரிங் ஆய்வகங்கள்) இணைப்பு அதிகாரப் பூர்வமாகத் தொடங்கப்பட்டது.
- ₹1.25 லட்சம் கோடி மதிப்பிலான விக்சித் பாரத்-கிராம்ஜி (VB-GRAM-G) ஊரக மேம்பாட்டு முன்னெடுப்பை மத்திய அரசு அறிவித்துள்ளதுடன் இது 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் நடைமுறைக்கு வரும்.
- இந்தியாவின் முதல் ஆளில்லா விமான அடிப்படையிலான அஞ்சல் மற்றும் பொட்டலம் / பார்சல் பரிமாற்ற சேவையை இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மண்டி தலைமை அஞ்சலகம் மற்றும் ரெஹர்தார் கிளை அஞ்சலகம் இடையே அஞ்சல் துறை தொடங்கி உள்ளது.
- இந்தியக் கடற்படையின் INAS 330 ("தி ஹார்பூன்ஸ்/ஈட்டிகள்") 55 ஆண்டுகால சேவைக்குப் பிறகு பயன்பாட்டிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது, இதன் மூலம் Sea King Mk 42B ஹெலிகாப்டர்கள் ஓய்வு பெறுகின்றன; இதற்கு மாற்றாக MH-60R Seahawks ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்படவுள்ளன.
- அணுக்கருப் பொறியியலில் இந்தியாவின் முதல் வடிவமைப்பு சிறப்பு மையத்தை (CODENE) ஹைதராபாத் இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) அமைக்க உள்ளது.
- இந்தியா 2035 ஆம் ஆண்டிற்குள் 155 ஜிகாவாட் (GW) நிறுவப்பட்ட காற்றாலை ஆற்றல் திறனை இலக்காக நிர்ணயித்துள்ளதுடன் இதில் 2030 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் என்ற இடைக்கால இலக்கும் அடங்கும்.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் வருடாந்திர பாதுகாப்பு உற்பத்தி இதுவரை இல்லாத அளவாக ₹1.78 லட்சம் கோடியை எட்டி சாதனை படைத்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜூன் 18 அன்று அரசியலமைப்பு (முதல் திருத்தம்) சட்டம், 1951 இன் 75வது ஆண்டு நிறைவு அனுசரிக்கப்பட்டது.
- இந்தியக் கடலோரக் காவல்படை, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தனது முதல் காற்றழுத்த மிதவை ஊர்தியான (ACV) H-561-ஐ படையில் இணைத்துள்ளது
- பாதுகாப்பான மற்றும் பிரிக்கப்பட்ட நடைபாதைகளில் நடக்கும் உரிமை என்பது அரசியலமைப்பின் 21-வது சரத்தின் கீழ் ஒரு அடிப்படை உரிமை என்று இந்திய உச்ச நீதிமன்றம் "மணியார் இலியாஸ் @ ஷேக் ரியாஸ் எதிர் பி. ஐயப்பன் மற்றும் பலர்" வழக்கில் தீர்ப்பளித்துள்ளது.
- சட்ட அமலாக்க முகமைகளால் குற்றங்கள் தொடர்பான தரவுகளைப் பயன்படுத்துவதை வலுப்படுத்துவதற்காக, அபிக்யான் செயலியை மத்திய உள்துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.

- 2047 ஆம் ஆண்டிற்குள் அரிவாள் செல் இரத்த சோகையை ஒழிப்பதற்கான தேசிய அரிவாள் செல் இரத்த சோகை ஒழிப்பு இயக்கத்தை (NSCEM) இந்தியப் பிரதமர் மத்தியப் பிரதேசத்தின் ஷாதோல் மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்.
- இந்திய கடற்படை உள்நாட்டிலேயே கட்டப்பட்ட ஐஎன்எஸ் துணகிரி, ஐஎன்எஸ் அக்ரே மற்றும் ஐஎன்எஸ் சன்ஷோதக் ஆகிய மூன்று போர்க்கப்பல்களை கொல்கத்தாவில் நாட்டுக்கு அர்ப்பணித்தது.
- 'சேவ்லைஃப் ஃபவுண்டேஷன் மற்றும் பலர் எதிர் இந்திய ஒன்றியம்' வழக்கில், அவசரகால சிகிச்சைக்கான உரிமை என்பது இந்திய அரசியலமைப்பின் 21-வது சரத்தின் கீழ் உள்ள வாழும் உரிமையின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- கர்நாடகாவின் மங்களூருவில் புதிய உத்திசார் பெட்ரோலிய இருப்பு (SPR) ஒன்றை அமைக்கும் பணி எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திற்கு (ONGC) ஒதுக்கப் பட்டுள்ளது.
- இந்திய மருந்தியல் புத்தகம் (IP) 2026 ஆனது, இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகளுக்கான உலகின் முதலாவது பிரத்யேக தரநிலைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- எரிசக்தி சேமிப்பு மற்றும் மின்விநியோகத் தொகுப்பு நிலைத் தன்மையை வலுப் படுத்துவதற்காக, 2035-36 ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் (GW) புனல் மின் சேமிப்புத் திறனை எட்ட இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இஸ்லாத்திற்கு மதம் மாறும் ஒருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) தகுதியைக் கோர முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுடன், தமிழ்நாடு அரசின் 2024 ஆம் ஆண்டின் அரசாணையை அரசியல் சாசனத்திற்கு முரணானது எனவும் அறிவித்துள்ளது.
- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது உலகின் மிகப்பெரிய பெண்கள் பாதுகாப்பு மற்றும் பாலின உணர்திறன் குறித்த முன்னெடுப்பான 'நிர்பய் சேத்னா'-வைத் தொடங்கியுள்ளது.
- புது தில்லியில் நடைபெற்ற 5-வது இந்திய விண்வெளி காங்கிரஸில் (ISC) இந்தியாவின் முதல் 'இந்திய விண்வெளித் துறை மின்னணு-பட்டியல்' வெளியிடப்பட்டது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது, மேற்கு வங்காளத்தில் உள்ள ஹால்டியா துறைமுகத்தை ஒரு குடியேற்றச் சோதனைச் சாவடியாக அறிவித்துள்ளது.
- குற்றவியல் நீதி அமைப்பில் விசாரணை, வழக்குத் தொடுத்தல் மற்றும் தடயவியல் செயல்முறைகளை விரைவுபடுத்துவதற்காக மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) அபிக்யான், CrPI, e-Prosecution 2.0 மற்றும் e-Forensics 2.0 ஆகிய நான்கு செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் (MoRTH) கூற்றுப்படி, இந்தியா தொடர்ந்து உலகின் இரண்டாவது பெரிய சாலைக் கட்டமைப்பைக் கொண்ட நாடாக உள்ளது.
- இந்தியாவின் மிகவும் கனமான உள்நாட்டு 120-மிமீ வாகனத்தில் பொருத்தப்பட்ட மின்னியற்றி அமைப்பான 'கருடாஸ்த்ரா' வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
- டிஜிட்டல் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான அமைப்புகள் மூலம் சட்ட உதவியை அணுகுவதை மேம்படுத்துவதற்காக DISHA 2.0 (நீதிக்கான முழுமையான அணுகலை உறுதிசெய்யும் புதுமையான தீர்வுகளை வடிவமைத்தல்) திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்திய ராணுவம் தனது முதல் 'ஒருங்கிணைந்த போர் குழுக்களை' (IBGs) 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் மேற்கு வங்கத்தின் பனகரில் உள்ள XVII படையின் (மலைப் பாங்குத் தாக்குதல் படை) கீழ் பயன்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது.
- தனது 90வது ஆண்டு விழா மற்றும் இந்தியாவில் வானொலி ஒலிபரப்பின் வரவிருக்கும் 100 ஆண்டுகளை (2027) குறிக்கும் வகையில், 'ஸ்வர் பிரேர்ணா வீதிகா' (Swar Prerna Veethika) என்ற நிரந்தர புகைப்படக் கண்காட்சியை ஆகாஷ்வாணி திறந்துள்ளது.
- கோவாவில் புதிய தலைமுறை விரைவு ரோந்துக் கப்பலான (FPV) ICGS அக்சய், இந்திய கடலோரக் காவல்படையில் (பாரதிய தத்ரக்சக்) இணைக்கப்பட்டது.
- ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய திறன் சவாலில் இந்தியா ஐந்து பதக்கங்களை (3 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம்) வென்றுள்ளது.
- 2026-ஆம் ஆண்டில் மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் துறைமுகப் பாதுகாப்புப் பணியகத்தை (BoPS) இந்திய அரசு நிறுவியுள்ளது.
- 2026-27 முதல் 2035-36 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு ₹28,840 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்பட்ட உதான் (Ude Desh ka Aam Nagrik - UDAN) திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- சுயஉதவிக் குழுக்கள் (SHGs) மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளின் (CBOs) முழுமையான டிஜிட்டல் மயமாக்கலுக்கான டிஜிட்டல் தளமான LokOS-ஐ (மக்கள் இயங்குதளம்) மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவும் ஜப்பானும் 2027-ஐ 'இந்தியா-ஜப்பான் பகிரப்பட்ட எல்லைகளின் ஆண்டாக' கொண்டாடும்.
- ராஜஸ்தானின் பலோத்ரா மாவட்டத்தில் உள்ள பச்சபத்ராவில் இந்தியாவின் முதல் புதிய கட்டமைப்புடன் கூடிய ஒருங்கிணைந்த சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோலிய வேதிப்பொருள் வளாகத்தை பிரதமர் திறந்து வைத்தார்.
- துன்பத்தில் உள்ள பெண்களுக்கு ஆதரவளிப்பதற்காக, தேசிய மகளிர் ஆணையம் (NCW) தனது 24×7 செயல்படும் மகளிர் உதவி எண்ணான 14490 ஐ விரிவுபடுத்தியுள்ளது.
- இந்திய கடற்படையானது, திட்டம் 17A என்ற திட்டத்தின் கீழான உள்நாட்டிலேயே கட்டப்பட்ட ஆறாவது எதிரிகளுக்குப் புலப்படாத போர்க்கப்பலான ஐ.என்.எஸ் மகேந்திரகிரியை (F38) விசாகப்பட்டினத்தில் நாட்டுக்கு அர்ப்பணிக்கவுள்ளது.
- பெங்களூரு இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM Bangalore) தனது முதல் வெளிநாட்டு வளாகத்தை இந்தோனேசியாவின் சிங்காசாரி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைக்கவுள்ளது.
- 93 கோடிக்கும் அதிகமான ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்குகளுடன் (ABHA) 104 கோடிக்கும் அதிகமான சுகாதாரப் பதிவுகள் இணைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் கடந்த பத்து ஆண்டுகளில் பெண்களின் சேர்க்கை 42% அதிகரித்துள்ளது. இது 2014-15 ஆம் ஆண்டில் 1.57 கோடியாக இருந்து 2023-24 ஆம் ஆண்டில் 2.24 கோடியாக உயர்ந்து உள்ளது.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது மகாராஷ்டிராவின் நவி மும்பை விமான நிலையத்தை மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட துறைமுகமாக அறிவித்தது.
- மாவட்டங்கள் முழுவதும் பள்ளிக் கல்வியின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக என மாவட்டங்களுக்கான செயல்திறன் தரக் குறியீட்டை (PGI-D) 2025–26-ஐ கல்வி அமைச்சகம் வெளியிட்டது.

- 2028-29 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் (UNSC) நிரந்தரமற்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தனது பிரச்சாரத்தை இந்தியா அதிகாரப் பூர்வமாகத் தொடங்கியுள்ளது.
- ஜெனீவாவில் நடைபெற்ற கோடெக்ஸ் அலிமென்டரியஸ் ஆணையத்தின் (CAC49) 49வது அமர்வின் போது ஏழு கோடெக்ஸ் தரநிலைகளை ஏற்றுக்கொள்வதற்கு இந்தியா தலைமை தாங்கியது.
- ஹார்முஸ் நீர்ச்சந்தியில் எம்டி அல் பாஹியா (MT Al Bahiyah) மற்றும் எம்டி மொம்பாசா (MT Mombasa) ஆகிய வணிகக் கப்பல்கள் மீதான தாக்குதல்களுக்குப் பிறகு, இந்தியா "கடலோடிகளுக்கு முதலிடம்" என்ற அவசரக்கால கடல்சார் பாதுகாப்புத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது (CCEA) தற்சார்பு இந்தியாவுக்கான யூரியா-2026 தேசிய முதலீட்டுக் கொள்கைக்கு (NIPU-2026) ஒப்புதல் அளித்துள்ளது.
- பூச்சிக்கொல்லிகள் சட்டம், 1968-இன் கீழ், நச்சுத்தன்மை தொடர்பான இறப்புகளுடன் தொடர்புடைய 'பாராக்குவாட் டைகுளோரைடு' (Paraquat Dichloride) என்ற களைக் கொல்லிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.
- கொல்கத்தாவில் உள்ள தேசிய நூலக வளாகத்தில் இந்தியாவின் முதல் ஆழ்ந்த அனுபவத்தை வழங்கும் மொழி அருங்காட்சியகமான "சப்தலோக் (வார்த்தைகளின் அருங்காட்சியகம்)" திறக்கப்பட்டுள்ளது.
- இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 33-லிருந்து 37 ஆக (இந்தியத் தலைமை நீதிபதி நீங்கலாக) உயர்த்துவதற்கான உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா, 2026-க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- இந்திய இணையம் மற்றும் அலைபேசி சங்கமானது (IAMAI) பெங்களூருவில் இந்திய மின்னணு வர்த்தக சபையை (ECCI) அறிமுகப்படுத்தியது.
- ஹரியானாவில் ஜிந்த் மற்றும் சோனிபட் இடையேயான இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் மூலம் இயங்கும் ரயில் தொடங்கப்பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தின் போபாலில் உள்ள மண்டல அறிவியல் மையத்தில் இந்தியாவின் முதல் விண்வெளி ஆய்வு கூடம் திறக்கப்பட்டது.
- உலக வர்த்தக அமைப்பிடம் (WTO) தனது ஏற்புக்கான ஆவணத்தைச் சமர்ப்பித்ததன் மூலம், மீன்பிடித் துறைக்கான மானியங்கள் குறித்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட உலக வர்த்தக அமைப்பின் 123-வது உறுப்பினராக இந்தியா மாறியது.
- "வெள்ளைத் தங்கம்: இந்தியாவின் பருத்திக் கதை" என்ற தலைப்பிலான உண்மை அறிக்கையை இந்திய அரசு வெளியிட்டது.
- இந்திய விமானப்படை WDMMA (நவீன இராணுவ விமானங்களின் உலக அடைவு) 2026 ஆம் ஆண்டில் உலகின் 3வது வலிமையான விமானப்படையாக தரவரிசைப்படுத்தப் பட்டது.
- ஒடிசாவில் உள்ள ஏபிஜே அப்துல் கலாம் தீவில் இருந்து 'குஷா' (Kusha) நீண்ட தூரம் தரையிலிருந்து வான் நோக்கிப் பாயும் எறிகணையின் (LR-SAM) முதல் கட்டப் பரிசோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) வெற்றிகரமாக நடத்தியது.
- 350 கிலோ உந்துவிசை பிரிவில் இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய டர்போஜெட் இயந்திரத்தை (ETJE) DRDO உருவாக்கியுள்ளது.

- 2033 ஆம் ஆண்டிற்குள் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட குறைந்தது ஐந்து சிறிய வகை அணு உலைகளை (SMRs) உருவாக்கி செயல்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜூன் 30 நிலவரப்படி, இந்தியாவின் நிறுவப்பட்ட காற்றாலை மின் உற்பத்தித் திறன் 57,443 மெகாவாட் (MW) ஆக உயர்ந்துள்ள அதே வேளையில் 2025–26 ஆம் நிதியாண்டில் காற்றாலை மின் உற்பத்தி 106 பில்லியன் அலகுகளை எட்டியது.
- தேர்வு முறையில் சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்க தொழில்நுட்ப வல்லுநர் நந்தன் நிலேகனி தலைமையில் உயர்மட்டப் பணிக்குழு அமைக்கப்படவுள்ளது
- 99.6% அகல ரயில் பாதை வலையமைப்பை மின்மயமாக்கியதன் மூலம் சுவிட்சர்லாந்திற்கு அடுத்தபடியாக, ரயில்வே மின்மயமாக்கலில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள சாரநாத்தின் பண்டைய புத்த தளம் யுனெஸ்கோவின் (ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- நீரற்ற அம்மோனியாவை உரமாகத் தயாரிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் இந்தியா மூன்று ஆண்டுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- கடந்த இருபது ஆண்டுகளில், இந்தியா தனது ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள மக்களின் எண்ணிக்கையை 42% குறைத்துள்ளது என்பதோடு இது பட்டினிக்கு எதிரான அதன் போராட்டத்தில் உலகளாவியப் போக்குகளை விஞ்சியுள்ளது.
- 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் தேதிக்கு முன் இறந்த இந்து மகள்களுக்கு பூர்வீகச் சொத்தில் சமமான பங்காளர் உரிமை கிடையாது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- ₹100 கோடி அல்லது அதற்கும் மேல் வருமானம் ஈட்டுபவர்களின் எண்ணிக்கை 2021-22 ஆம் மதிப்பீட்டு ஆண்டில் 142 ஆக இருந்த நிலையில், 2025-26 ஆம் மதிப்பீட்டு ஆண்டில் 576 ஆக அதிகரித்துள்ளது.
- சுமார் 3.11 லட்சம் கடல்சார் தொழில் வல்லுநர்களுடன், உலகளாவிய கடல்சார் பணியாளர்களில் சுமார் 12.16% பங்களிப்பை வழங்கி பிலிப்பைன்ஸுக்கு அடுத்த படியாக இந்தியா தரவரிசையில் உள்ளது.
- இந்திய அறிவியல் வளர்ச்சிக் கழகமானது (IACS) 2026 ஆம் ஆண்டு ஜூலை 29 அன்று நிறுவப்பட்டு 150 ஆண்டுகளை நிறைவு செய்தது.
- நேபாளத்தின் லலித்பூரில் புனரமைக்கப்பட்ட ஸ்ரீ குஸ்தல் மகாவிஹார் மற்றும் பிரதம் ஸ்ரீ மகாவிஹாரின் ஆகம் ஆகியவற்றை இந்தியாவும் நேபாளமும் கூட்டாகத் திறந்து வைத்தன.
- முன்தேதியிடப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி தொடர்பான மத்திய அரசின் 2021 ஆம் ஆண்டு அலுவலகக் குறிப்பாணையை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- நிதி அமைச்சகம் "ஒரு அதிகாரிக்கு ஓர் அரசு வாகனம்" என்ற கடுமையான கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் எல்லைப் பதற்றம் காரணமாக ஆறு ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிக்கிமின் நாது லா கணவாய் வழியான இந்தியா-சீனா எல்லை வர்த்தகம் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 அன்று மீண்டும் தொடங்கியது.
- இந்தியக் கடற்படையானது ஐந்தாவது மூழ்குப் பணி ஆதரவுக் கப்பலை (DSC A24) கொல்கத்தாவில் உள்ள திட்டாகர் ரயில் சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் (TRSL) அறிமுகப்படுத்தியது.

- ❖ உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை 34 லிருந்து 38 ஆக உயர்த்துவதற்கான உச்ச நீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) திருத்த மசோதா, 2026-ஐ மக்களவை நிறைவேற்றியது.
- ❖ இந்தியாவின் பகிர்ந்தளிக்கப்பட்ட சூரியசக்தித் திறன் 2026 ஆம் நிதியாண்டில் 31.5 ஜிகாவாட் (GW) ஆக அதிகரித்துள்ளது, இது 2018 ஆம் நிதியாண்டில் இருந்த 1.8 ஜிகாவாட்டில் இருந்து 17 மடங்குக்கும் மேலான அதிகரிப்பாகும்.
- ❖ இந்தியாவின் முதல் தொலைத்தொடர்பு உற்பத்தி மண்டலம் - மத்தியப் பிரதேசத்தின் குவாலியரில் நிறுவப்படும்.
- ❖ 5 கிலோமீட்டர் சுற்றளவுக்குள் வங்கிச் சேவை மையத்தைக் கொண்ட 99.92% மக்கள் வசிக்கும் கிராமங்களுடன், இந்தியா ஏறக்குறைய முழுமையான வங்கிச் சேவைத் பரவலை எட்டியுள்ளது.
- ❖ 'ஒரே நாடு, ஒரே உரம்' திட்டம் 2026 ஆம் ஆண்டின் காரீப் பருவத்தில் இந்தியா முழுவதும் உரம் கிடைப்பதையும் விநியோகத்தையும் மேம்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் பிரத்தியேக இராணுவ மருத்துவத் துறை லக்னோவில் உள்ள மத்திய கட்டளை மையத்தின் கட்டளை மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்டது.
- ❖ இந்தியக் கடற்படை 'மச்சிலிப்பட்டினம்' எனும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு மற்றும் ஆழமற்ற நீர்நிலைப் போர் நடவடிக்கைகளுக்கான கப்பலை (ASW SWC) அறிமுகப் படுத்தியது.
- ❖ -42°C வரையிலான அதீத குளிரான சூழ்நிலைகளிலும் செயல்படும் வகையில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட அதீத வானிலைக்கான தரம் (XWG) கொண்ட டீசலை இந்திய ராணுவம் அறிமுகப்படுத்தியது.
- ❖ அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை - தேசிய தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSIR-NBRI) முதல் சுற்றுச்சூழல் கல்வி மையமான 'பிரகிருதி ஞான் தாம்' (Prakriti Gyan Dham), உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் திறக்கப்பட்டது.
- ❖ உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட ஷாச்சி வகுப்பைச் சேர்ந்த அடுத்த தலைமுறை கடல் ரோந்து கப்பலான (NGOPV) 'யார்டு 3037 சுருதி' (Yard 3037 Shruti), கொல்கத்தாவில் இந்திய கடற்படைக்காக தொடங்கப்பட்டது.
- ❖ இந்தியாவின் முதல் தனியார், முத்திரையிடப்பட்ட ரயிலான லக்னோ-டெல்லி தேஜாஸ் எக்ஸ்பிரஸ், 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 முதல் 2026 ஆம் ஆண்டு நவம்பர் 11 வரை 'ஸ்ப்ரைட்' தேஜாஸ் எக்ஸ்பிரஸாக (Sprite Tejas Express) இயங்கும்.
- ❖ முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் வாழ்க்கைப் பயணம், போராட்டங்கள் மற்றும் பொதுச் சேவையை உள்ளடக்கிய அவரது சுயசரிதையான "Triumph of the Indian Republic: My Life, My Struggles" என்ற புத்தகத்தை இந்தியப் பிரதமர் புது தில்லியிலுள்ள விக்யான் பவனில் வெளியிட்டார்.
- ❖ ஆயுஷ் அமைச்சகமும், சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமும் (MoHFW) 'ஒரு மூலிகை, ஒரு தரநிலை' (One Herb, One Standard) முன்னெடுப்பை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளன.
- ❖ இந்தியா, புதைபடிவ எரிபொருள் அல்லாத மின் உற்பத்தித் திறனில் 300 ஜிகாவாட்டை அதிகாரப்பூர்வமாகத் தாண்டியுள்ளதுடன் 2026-ஆம் ஆண்டுக்குள் இந்தத் திறன் 300.50 ஜிகாவாட்டை எட்டும்.

# சர்வதேசச் செய்திகள்

- ❖ நிமோனியாவின் கடுமையான வடிவமான லெஜியோனேயர்ஸ் நோய்த் தொற்றானது, ஆஸ்திரேலிய நாட்டில் பெரும் சுகாதார எச்சரிக்கையைத் தூண்டியுள்ளது.
- ❖ தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சீனாவில் பேரரசர் கின் ஷி ஹுவாங்கால் கட்டப் பட்ட 900 கி.மீ நெடுஞ்சாலையான 2,200 ஆண்டுகள் பழமையான கின் நேரடிச் சாலையைக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ அபுதாபியின் ஷேக் கலீஃபா மருத்துவ நகரம் ITVISMA மரபணு சிகிச்சையை வழங்கிய உலகின் முதல் மருத்துவமனையாக மாறியது.
- ❖ சிரியாவின் இடைக்கால அதிபர் அகமது அல்–ஷாரா நாட்டின் புதிய பணத் தாள்களை வெளியிட்டார்.
- ❖ 2021 ஆம் ஆண்டில் இராணுவம் கையகப்படுத்தியதிலிருந்து நாட்டில் நடைபெற்ற முதல் தேர்தலில், கினியாவின் ஆட்சிக் கவிழ்ப்புக் குழுவின் தலைவர் மமாடி டூம்பௌயா அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ துர்க்மெனிஸ்தான் இணைய சங்கேதப் பண எடுப்பு மற்றும் பரிமாற்ற நடவடிக்கைகளை அதிகாரப்பூர்வமாக சட்டப்பூர்வமாக்கியுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) 2026 ஆம் ஆண்டினை சர்வதேச மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களின் ஆண்டாக அறிவித்துள்ளது.
- ❖ பல்கேரியா நாடானது யூரோவை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதுடன், யூரோ மண்டலத்தின் 21வது உறுப்பினராக மாறியது.
- ❖ ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆனது எஃகு, அலுமினியம், சிமெண்ட், இரசாயனங்கள், காகிதம், கண்ணாடி, உரங்கள் மற்றும் மின்சாரத் துறைப் பொருட்களின் இறக்குமதிக்கு கார்பன் வரியை விதிக்கின்ற கார்பன் எல்லைச் சீரமைப்புச் செயல்முறையை (CBAM) தொடங்கியது.
- ❖ ரஷ்யா நாடானது, பெலாரஸில் அணுசக்தித் திறன் கொண்ட ஓரெஷ்னிக் ஏறிகணை அமைப்பை நிறுவியுள்ளது.
- ❖ இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் ஆனது 2026 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் காலாவதியாக உள்ள கங்கை நீர்ப் பகிர்வு ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளன.
- ❖ பஹ்ரைன், கொலம்பியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, லாட்வியா மற்றும் லைபீரியா ஆகியவை UNSC சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களாக இரண்டு ஆண்டு காலப் பதவிக் காலத்தைத் தொடங்கியுள்ளன.
- ❖ வெனிசுலாவில் அமெரிக்க இராணுவ நடவடிக்கையை நியாயப்படுத்துவதற்காக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மன்றோ கோட்பாட்டைப் பயன்படுத்தினார்.
- ❖ பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) மற்றும் G20 நாடுகள் உலகளாவிய குறைந்தபட்ச வரித் தொகுப்பில் உடன்பட்டன.
- ❖ பாகிஸ்தானியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தட்சசீலாவிற்கு அருகிலுள்ள யுனெஸ்கோ அமைப்பினால் பட்டியலிடப் பட்ட இடத்தில் அரிய நாணயங்கள் மற்றும் அலங்கார கற்களைக் கண்டெடுத்துள்ளனர்.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையானது (UN) 2026 ஆம் ஆண்டினைக் கால் நடை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ப்பர்களுக்கான சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளது.

- டிரம்ப் நிர்வாகத்தின் கீழ், அமெரிக்கா 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.
- அமெரிக்காவானது வெனிசுலாவின் கனிம வளம் நிறைந்த ஓரினோகோ மண்டலம் மற்றும் கயானா கேடயப் பகுதி மீது கவனம் செலுத்தியுள்ளது.
- பிரேசில் நாடானது, 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா) அமைப்பின் தலைமைப் பதவியை இந்தியாவிடம் ஒப்புவித்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் (UNSC) நிரந்தர உறுப்பினர் பதவிக்கான இந்தியாவின் விருப்பத்தை சிலி அதிகாரப் பூர்வமாக ஆதரித்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வாஷிங்டனில் நடைபெறும் முக்கிய கனிமங்கள் குறித்த G7 நாடுகளின் நிதியமைச்சர்களின் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள அமெரிக்கா இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் அழைத்துள்ளது.
- இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் பிரான்சு, ஜெர்மனி மற்றும் போலந்துடன் சேர்ந்து வெய்மர் முக்கோண அமைப்புடனான இந்தியாவின் முதல் ஈடுபாட்டில் பங்கேற்றார்.
- 2012 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்ட நுகர்வோர் விலைக் குறியீட்டு (CPI) தொடரை இந்தியா முடிவுக்கு கொண்டு வந்து 2024 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஒரு புதிய CPI தொடரைத் தொடங்க உள்ளது.
- ரிலையன்ஸ் ஜியோ நிறுவனமானது இந்தியாவில், இந்தியாவிற்கும், உலகிற்கும் கட்டமைக்கப் பட்ட People–First செயற்கை நுண்ணறிவு (AI) தளத்தை அறிமுகப்படுத்த உள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பெருங்கடல் ஒப்பந்தம் ஜனவரி 18, 2026 அன்று அதிகாரப் பூர்வமாக நடைமுறைக்கு வர உள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் ஏழு ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா.) நிறுவனங்கள் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளிலிருந்து இஸ்ரேல் விலகுவதாக அறிவித்தது.
- புவியியல் சான்றுகளின் அடிப்படையில் ஃபின்கே நதி உலகின் மிகப் பழமையான பாயும் நதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- உலக அறிவுசார் அறக்கட்டளை (WIF) பொறுப்புள்ள நாடுகளின் குறியீட்டை (RNI) வெளியிட உள்ளது.
- சீனா டைப் 096 டாங்–கிளாஸ் எனப்படும் அதன் மிகவும் மேம்பட்ட உந்துவிசை எறிகணை நீர்மூழ்கிக் கப்பலினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திரக் கூட்டம் ஆனது சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெற்றது.
- இந்தியாவின் வெளியுறவு அமைச்சரிடம் அணுகல் பிரகடனத்தை ஒப்படைப்பதன் மூலம் ஸ்பெயின் இந்தோ–பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பில் (IPOI) இணைந்தது.
- டாவோஸில் நடைபெற்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான "அமைதி வாரியம்" சாசன அறிவிப்பை இந்தியா புறக்கணித்தது.
- ஜனவரி 23, 2026 அன்று அமெரிக்கா சுமார் 260 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிலுவைத் தொகையை செலுத்தாமல், உலக சுகாதார அமைப்பிலிருந்து (WHO) அதிகாரப் பூர்வமாக வெளியேறியது.
- இது BRICS அமைப்பின் நிறுவனமயமாக்கப் பட்ட செயல்பாடு அல்ல என்று கூறி, இந்தியா 'Will for Peace 2026' என்ற BRICS பிளஸ் கடற்படைப் பயிற்சியைத் தவிர்த்துள்ளது.

❖ ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக மன்றமானது (ECOSOC) தனது 80வது ஆண்டு நிறைவை 2026 ஆம் ஆண்டு ஜனவரி 23 அன்று கொண்டாடியது.

❖ கிரீன்லாந்து ஆக்கிரமிப்பு தொடர்பான அமெரிக்காவின் (அமெரிக்கா) வர்த்தக வரி அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்காக, ஐரோப்பிய ஒன்றியம் (EU) தனது வர்த்தக 'பசூக்கா' (கட்டாயப்படுத்துதலுக்கு எதிரான கருவி – ACI) என்பதை முதல் முறையாகப் பயன்படுத்துவது குறித்து பரிசீலித்து வருகிறது.

❖ இந்தியாவின் டிஜிட்டல் கட்டண முறைமையான UPI (ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகம்) ஆனது 2026–ஆம் ஆண்டில் ஜப்பானில் தொடங்கப்பட உள்ளது.

❖ 6வது ASEAN–இந்தியா டிஜிட்டல் அமைச்சர்கள் கூட்டம் காணொளி வாயிலாக நடைபெற்றது, இக்கூட்டத்தின் கருத்துரு "Adaptive ASEAN: From Connectivity to Connected Intelligence" ஆகும்

❖ இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) தங்களின் முதல் விரிவான பாதுகாப்பு மற்றும் தற்காப்புக் கூட்டாண்மையில் கையெழுத்திட்டன.

❖ இந்தோனேசியாவில் கண்டுபிடிக்கப்பட்ட உலகின் மிகப் பழமையான குகை ஓவியம் குறித்து ஆராய்ச்சியாளர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

❖ 15 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதற்கான சட்டத்திற்கு பிரான்சின் தேசிய சட்டமன்றம் ஆதரவளித்துள்ளது.

❖ அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அமெரிக்காவிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 100 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய்ய இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.

❖ மத்திய அரசு, 'நமஸ்தே' (NAMASTE - தேசிய இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதார சுற்றுச் சூழல் அமைப்புக்கான தேசிய நடவடிக்கை) திட்டத்தின் கீழ், குப்பை சேகரிப்பாளர்கள் குறித்த முதல் தேசிய தரவுகளை வெளியிட்டது.

❖ 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடக அணுகலுக்கு நாடு தழுவிய தடையை ஸ்பெயின் அறிவித்துள்ளது.

❖ BRICS நாடுகளிடையே உற்பத்தித் திறன்களையும் தொழில்துறை ஒத்துழைப்பையும் வலுப்படுத்தும் நோக்கில், இந்தியா BRICS தொழில்துறைத் திறன் மையத்தில் (BCIC) இணைந்துள்ளது.

❖ வாஷிங்டன் டிசியில் நடந்த முக்கியக் கனிமங்கள் அமைச்சகக் கூட்டத்தில் FORGE (வளம், புவிசார் மூலோபாய ஈடுபாடு குறித்த மன்றம்) முன்முயற்சியை இந்தியா ஆதரித்தது.

❖ இங்கிலாந்தின் மான்செஸ்டரைச் சேர்ந்த இரண்டு வயது ஜூட் ஓவன்ஸ், ஸ்னூக்கர் விளையாட்டில் பேங்க் ஷாட் மற்றும் டபுள்-பாட் ஷாட் ஆகியவற்றை அடித்த இளம் வீரர் என்ற இரண்டு கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்தார்.

❖ சீனா, ஜியாங்சு மாகாணத்தில் உலகின் மிகப்பெரிய அழுத்தப்பட்ட காற்று ஆற்றல் சேமிப்பு (CAES) மின் நிலையத்தை இயக்கித் தொடங்கியுள்ளது என்ற நிலையில் இதன் சேமிப்புத் திறன் 2,400 மெகாவாட் மணிநேரம் மற்றும் மின் உற்பத்தித் திறன் 600 மெகாவாட் ஆகும்.

❖ இந்தியா 2026 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) வழக்கமான வரவு செலவுத் திட்டத்திற்கு 35.18 மில்லியன் டாலர் தொகையைச் செலுத்தியுள்ளது, இதன் மூலம், தங்கள் நிலுவைத் தொகையை முழுமையாகவும் சரியான நேரத்திலும் செலுத்திய 51 ஐ.நா. உறுப்பு நாடுகளின் 'கௌரவப் பட்டியலில்' இந்தியாவும் இடம் பெற்றுள்ளது.

- ❖ அமெரிக்க அதிபரான டொனால்ட் டிரம்ப், முக்கியமான கனிமங்களின் மூலோபாய இருப்பை உருவாக்குவதற்கான 12 பில்லியன் டாலர் முன்முயற்சியான Project Vault திட்டத்தை அறிவித்தார்.
- ❖ விக்சித் பாரத் தொலைநோக்குப் பார்வைக்கு இணையாக இந்தியாவின் வளர்ச்சியை ஆதரிப்பதற்காக, இந்தியாவும் உலக வங்கி குழுமமும் 2026–2031 ஆம் ஆண்டுக்கான புதிய நாடு கூட்டாண்மை கட்டமைப்பை (NCPF) அறிவித்துள்ளன.
- ❖ இந்தியாவும் ஐக்கியப் பேரரசும் புது தில்லியில் ஒரு சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- ❖ கிரீன்லாந்து தொடர்பான பதட்டங்களுக்குப் பிறகு ஆர்க்டிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை வலுப்படுத்த வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) "ஆர்க்டிக் சென்ட்ரி" திட்டத்தினைத் தொடங்கியது.
- ❖ உலகப் பொருளாதார மன்றம் 2025 ஆம் ஆண்டில் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் தொற்றுகளுக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கையை ஆதரிப்பதற்காக டாவோஸ் நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்பு (AMR) ஒப்பந்தத்தைத் தொடங்கியது.
- ❖ மடகாஸ்கரில் உள்ள ஒரு முக்கியத் துறைமுக நகரமான டோமாசினா பகுதியில் கெசானி புயல் கரையைக் கடந்தது.
- ❖ புதிய நுண்ணியப் பகுப்பாய்விற்குப் பிறகு எகிப்தில் தோண்டப்பட்ட ஒரு செப்பு கருவி வில் துளையிட பயன்படக்கூடியதாக மீண்டும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ❖ தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக வேண்டி இந்தியாவும் பிரான்சும் இந்தியா-பிரான்ஸ் புத்தாக்க ஆண்டைத் தொடங்கியுள்ளன.
- ❖ தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் டென்மார்க்கில் உள்ள ஹெடேகார்டில் 2,000 ஆண்டுகள் பழமையான இரும்புக் காலக் கோயில் வளாகத்தைக் கண்டுபிடித்தனர்.
- ❖ ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட நிதி முன்முயற்சியானது (UNEP FI), UNEP FI தாக்க மையத்தைத் தொடங்கியது, நிதி நிறுவனங்களில் தாக்கவிளைவுகளின் மேலாண்மையை ஆதரிப்பதற்கான ஒரு சிறப்பு தளமாக இந்த மையம் உள்ளது.
- ❖ பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோனின் இந்திய வருகையின் போது இந்தியாவும் பிரான்சும் தங்கள் உறவுகளை "சிறப்பு உலகளாவிய மூலோபாய கூட்டாண்மை"யாக மேம்படுத்தின.
- ❖ சூடானின் வடக்கு டார்பூரில் உள்ள எல்-ஃபாஷர் நகரத்தை முற்றுகையும் கைப்பற்றலும், ஐக்கிய நாடுகள் சபையால் அமைக்கப்பட்ட சுயாதீனமான உண்மைக் கண்டறியும் குழுவின் விசாரணையைத் தொடர்ந்து "இனப்படுகொலையின் அடையாளங்களை" கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ சராக்ஸ் ஸ்பாசினோ நகரமானது தெற்கு மெசபடோமியாவில், இன்றைய ஈராக்கில் உள்ள டைக்ரிஸ் நதிக்கு அருகில் உள்ள ஒரு பழங்கால நகரமாகும் என்பதோடு இது சமீபத்தில் ஒரு மேம்பட்ட தொல்பொருள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மீண்டும் கண்டுபிடிக்கப் பட்டது.
- ❖ ஒட்டாவா ஒப்பந்தத்திலிருந்து (மனிதர்களுக்கான கண்ணிவெடி தடை ஒப்பந்தம்) போலந்து விலகியுள்ளது.
- ❖ 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய AI தாக்க உச்சி மாநாட்டிற்குப் பிறகு, ஜெனீவாவில் (2027) மற்றும் 2028 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகத்தில் அடுத்த உலகளாவிய AI உச்சி மாநாடுகளுக்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டன.
- ❖ பிப்ரவரி 22, 2026 அன்று ஷிமானே மாகாணத்தில் நடைபெற்ற ஜப்பானின் டகேஷிமா தின நிகழ்வுக்கு எதிராக தென் கொரியா ஒரு இராஜதந்திர எதிர்ப்பை பதிவு செய்தது.

- ❖ உலகிலேயே அதிக அளவில் குடை மிளகாயை (capsicum) உற்பத்தியை செய்யும் நாடாக சீனா உள்ளது.
- ❖ 1940 இல் லாஸ்காக்ஸ் குகை கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம் தென்மேற்கு பிரான்சில் 17,000 ஆண்டுகள் பழமையான வரலாற்றுக்கு முந்தைய ஓவியங்கள் வெளிப்பட்டன.
- ❖ சர்ச்சைக்குரிய துரந்த் எல்லைக்கோட்டுப் பகுதியில் ஆப்கானிஸ்தான் நாட்டின் தாலிபான்களுக்கு எதிராக பாகிஸ்தான் Operation Ghazab Lil Haq என்ற தாக்குதலைத் தொடங்கியது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையானது, பிரிவு 6.4 இன் பாரிஸ் ஒப்பந்த மதிப்பு வர்த்தக செயல்முறையின் (PACM) கீழ் முதல் கார்பன் மதிப்புகளை அங்கீகரித்துள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகளின் சாலைப் பாதுகாப்பு நிதியமானது சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், WHO மற்றும் UNICEF ஆகியவற்றுடன் இணைந்து, ராஜஸ்தான், கேரளா, தமிழ்நாடு மற்றும் அசாம் ஆகிய மாநிலங்களில் ஒரு நீடித்த சாலைப் பாதுகாப்பு நிதித் திட்டத்தைத் தொடங்கியது.
- ❖ ஐக்கிய அரபு அமீரகத்தின் மத்திய வங்கியானது உலகின் முதல் இறையாண்மை கொண்ட நிதிசார் கிளவுட் சேவைகள் உள்கட்டமைப்பை (SFCSI) தொடங்கியுள்ளது.
- ❖ இந்தோனேசியாவின் சுலவேசியில் உள்ள லியாங் மெட்டாண்டுனோ குகையில் கண்டுபிடிக்கப் பட்ட கையால் வரையப்பட்ட ஓவியம், குறைந்தது 67,800 ஆண்டுகளுக்கு முந்தையது என்று தேதியிடப்பட்டுள்ளது, இது அறியப்பட்ட மிகப் பழமையான பாறை ஓவியமாகும்.
- ❖ உலகளாவிய பசி நிவாரணத்திற்காக நிலையான அரிசி விநியோகங்களை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்துடன் (WFP) இந்தியா ஐந்து ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ பாக்ஸ் சிலிக்கா பிரகடனத்தில் கையெழுத்திட்டதன் மூலம், அமெரிக்கா தலைமையிலான மூலோபாய கூட்டணியான பாக்ஸ் சிலிக்கா கூட்டணியில் இந்தியா முறையாக இணைந்தது.
- ❖ ஹான்சன் நோய் என்றும் அழைக்கப்படும் தொழுநோயை ஒழித்ததற்காக உலக சுகாதார அமைப்பால் (WHO) சரிபார்க்கப்பட்ட முதல் அமெரிக்க நாடாகவும், உலகளவில் இரண்டாவது நாடாகவும் சிலி மாறியுள்ளது.
- ❖ கார நீர்ப்பகுப்பு என்றும் அழைக்கப்படும் நீர் தகனத்தைச் சட்டப்பூர்வமாக்கிய ஐக்கியப் பேரரசில் முதல் நாடாக ஸ்காட்லாந்து ஆனது.
- ❖ புதிய விதிமுறை மூலம் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடக அணுகலுக்கான கட்டுப்பாடுகளை இந்தோனேசியா அறிவித்துள்ளது.
- ❖ அமெரிக்கா, 6,000 மைல்களுக்கும் (சுமார் 13,000 கி.மீ.) அதிகமான செயல்பாட்டுத் தொலைவு கொண்ட, நிலப்பரப்பிலிருந்து ஏவக்கூடிய மினிட்மேன் III எனும் கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஆயுத ஏவுகணையைச் சோதனை செய்தது.
- ❖ நேபாளத்தின் ராஷ்டிரிய ஸ்வதந்த்ரா கட்சி (RSP), 2026 பொதுத்தேர்தலில் பெரும்பான்மை வெற்றி பெற்றதையடுத்து, அக்கட்சியின் தலைவர் பாலேந்திர ஷா, அடுத்த பிரதமராகப் பொறுப்பேற்க உள்ளார்.
- ❖ காங்கோ ஜனநாயகக் குடியரசில் உள்ள உபெம்பா தேசிய பூங்காவின் தலைமையகத்தின் மீது ஆயுதமேந்திய தாக்குதல் நடத்தப்பட்டது
- ❖ ஈரானின் முக்கிய எண்ணெய் ஏற்றுமதி மையமான கார்க் தீவில் உள்ள ராணுவ இலக்குகள் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

- ❖ ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா இடையே வர்த்தகம், விவசாய ஒத்துழைப்பு, முதலீடு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றத்தை அதிகரிக்க ஆசியா ஆப்பிரிக்கா விவசாயக் கூட்டணி நிறுவப்பட்டுள்ளது.
- ❖ கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதற்காக பிரம்பானன் கோயில் வளாகத்தைப் புனரமைக்க இந்தியாவும் இந்தோனேசியாவும் இணைந்துள்ளன.
- ❖ ஈரான்-அமெரிக்கா-இஸ்ரேல் மோதலுக்கு மத்தியில் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள புஜைரா துறைமுகம் தாக்கப்பட்டது.
- ❖ இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்கள் லெபனானின் லித்தானி ஆற்றின் குறுக்கே உள்ள ஒரு முக்கிய பாலத்தை அழித்தன.
- ❖ மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றங்கள் எரிபொருள் விநியோகத்தைப் பாதித்ததால், பிலிப்பைன்ஸ் தேசிய எரிசக்தி அவசரநிலையை அறிவித்தது.
- ❖ ருமேனியா சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் (ISA) கட்டமைப்பிற்கான ஒப்பந்தத்தை அங்கீகரித்து, அதிகாரப்பூர்வமாக அக்கூட்டணியில் இணைந்துள்ளது.
- ❖ உக்ரைனின் எல்விவ் நகரின் வரலாற்று மையத்தில் உள்ள யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தளத்தின் பெர்னார்டைன் மடாலயத்திற்கு அருகில் உள்ள ஒரு குடியிருப்புக் கட்டிடம் ரஷ்ய ஆளில்லா விமானத் தாக்குதலால் சேதமடைந்தது.
- ❖ நிதி நடவடிக்கை பணிக்குழுவானது (FATF), அதன் சமீபத்திய கூட்டத்திற்குப் பிறகு குவைத் மற்றும் பப்புவா நியூ கினியாவை தனது 'சாம்பல் நிறப் பட்டியலில்' (கண்காணிப்புப் பட்டியல்) சேர்த்துள்ளது.
- ❖ பிரேசிலில் நடைபெற்ற 'CMS COP15' மாநாட்டில் புல்வெளிக் கழுகுகளுக்கான உலகளாவியச் செயல்பாட்டுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ❖ வேகமாகப் பரவி வரும் தட்டம்மை நோயைக் கட்டுப்படுத்த வங்காள தேசம் அவசரகால தடுப்பூசி இயக்கத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ உலகளாவிய குறைக்கடத்தி மற்றும் தொழில்நுட்ப விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துவதற்காக, அமெரிக்கா தலைமையிலான 'பாக்ஸ் சிலிக்கா' முன்னெடுப்பில் பிலிப்பைன்ஸ் இணைந்துள்ளது.
- ❖ பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக இந்தியாவும் ரஷ்யாவும் RELOS (பரஸ்பர தளவாடப் பரிமாற்ற ஒப்பந்தம்) ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன.
- ❖ 2009 ஆம் ஆண்டு ஜனவரி 1 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்தவர்கள் சட்டப் பூர்வமாகப் புகையிலை வாங்குவதைத் தடைசெய்யும் புகையிலை மற்றும் வேப்ஸ் / மின்-சிகரெட்டுகள் சட்டத்தை இங்கிலாந்து (UK) நிறைவேற்றியுள்ளது.
- ❖ உலகின் முதல் நிரந்தர அணுக்கழிவு சேமிப்பு கிடங்கை செயல்பாட்டுக்கு கொண்டு வர பின்லாந்து தயாராகி வருகிறது.
- ❖ ஆர்ட்டெமிஸ் ஒப்பந்தங்களில் ஜோர்டான் கையெழுத்திட்டுள்ளதன் மூலம் பொறுப்பான விண்வெளி ஆய்வுக்கான உலகளாவிய கட்டமைப்பில் இணையும் 63-வது நாடாக ஜோர்டான் ஆகியுள்ளது.
- ❖ உலக சுகாதார நிறுவனமானது, பிறந்த குழந்தைகள் மற்றும் 2 முதல் 5 கிலோ எடை கொண்ட பச்சிளம் குழந்தைகளுக்கான முதல் மலேரியா சிகிச்சை மருந்தான ஆர்டெமிதர்-லுமெஃ பாண்ட்ரைனுக்கு முன்-அங்கீகாரம் அளித்துள்ளது.
- ❖ பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பான OPEC மற்றும் OPEC+ ஆகியவற்றிலிருந்து 2026 ஆம் ஆண்டு மே 1 முதல் வெளியேறப்போவதாக ஐக்கிய அரபு அமீரகம் அறிவித்துள்ளது.

- ❖ சபஹார் துறைமுகத்தின் மீதான தடைகளுக்கு அளிக்கப்பட்டிருந்த விலக்கை அமெரிக்கா 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 அன்று முடிவுக்குக் கொண்டு வந்தது.
- ❖ ஐரோப்பாவின் முதல் முழுமையான ஒருங்கிணைந்த லித்தியம் திட்டத்தை பின்லாந்து கொக்கோலா அருகே தொடங்கியுள்ளது.
- ❖ 2026 ஆம் ஆண்டில் அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியின் (USTR) முன்னுரிமை கண்காணிப்புப் பட்டியலில் இந்தியா சேர்க்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தியா தலைமையிலான உலகளாவிய முன்னெடுப்புகளான ISA, CDRI மற்றும் GBA ஆகியவற்றில் ஜோர்டான் இணைந்தது.
- ❖ யுனெஸ்கோ 12 புதிய உலகளாவிய புவிசார் பூங்காக்களை அறிவித்துள்ள நிலையில் உலகளாவிய புவிசார் பூங்காக்களின் மொத்த எண்ணிக்கை 51 நாடுகளில் உள்ள 241 இடங்களாக அதிகரித்துள்ளது.
- ❖ பிலிப்பைன்ஸில் மயோன் எரிமலை வெடித்ததால், ஏறக்குறைய 1,500 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர் மற்றும் மணிலாவுக்கு அருகிலுள்ள வான்வெளிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன.
- ❖ ஐரோப்பிய அரசியல் சமூக (EPC) உச்சி மாநாட்டில் பங்கேற்ற முதல் ஐரோப்பாவிற்கு வெளியே உள்ள நாடாக கனடா உருவெடுத்துள்ளது.
- ❖ நாசா அறிவியலாளர்கள் செயற்கைக்கோள் படம்பிடிப்பு மற்றும் புவி இயற்பியல் வரைபடத்தைப் பயன்படுத்தி, ஜிம்பாப்வேயின் கிரேட் டைக் பகுதிக்குள் 2.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான ஒரு மறைந்திருக்கும் உள் கட்டமைப்பைக் கண்டறிந்து உள்ளனர்.
- ❖ அமெரிக்கா ஹார்முஸ் நீர்ச்சந்தியில் ஃப்ரீடம் திட்டம் என்ற திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- ❖ பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், ஆண்டுதோறும் மே 10 ஆம் தேதி 'மார்க்கா-இ-ஹக் தினமாக' கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ளார்.
- ❖ இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியமானது (IUCN), மெக்சிகோ, மத்திய அமெரிக்கா மற்றும் கரீபியன் பிராந்தியத்தைச் சேர்ந்த ஐந்து அமைப்புகள் உட்பட உலகளவில் 48 புதிய உறுப்பினர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ காங்கோ ஜனநாயகக் குடியரசு மற்றும் உகாண்டாவில் ஏற்பட்டுள்ள எபோலா நோய் பரவலை, சர்வதேச கவலைக்குரிய பொது சுகாதார அவசரநிலையாக (PHEIC) உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவித்துள்ளது.
- ❖ கொரியப் போரின் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், சியோல் அருகே உள்ள இம்ஜிங்காக் பூங்காவில் இந்தியப் போர் நினைவுச் சின்னம் திறக்கப்பட்டுள்ளது.
- ❖ "கிரேட் பிரிட்டிஷ் கோடைக்காலச் சேமிப்புகள்" திட்டத்தின் கீழ், இங்கிலாந்தில் உள்ள 5 முதல் 15 வயதுடைய குழந்தைகள் வரும் 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் உள்ளூர் பேருந்துகளில் வரம்பற்ற இலவசப் பயணம் மேற்கொள்வதற்கான புதிய திட்டத்தை இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது.
- ❖ 2026 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற 79-வது உலக சுகாதார சபையானது, பக்கவாதத்தை ஒரு முக்கிய பொது சுகாதார முன்னுரிமையாக அங்கீகரிக்கும் தனது முதல் தீர்மானத்தை நிறைவேற்றியது.
- ❖ மொத்தச் சந்தை மதிப்பில் இந்தியாவை முந்தி, உலகின் ஐந்தாவது பெரிய பங்குச் சந்தையாக தைவான் உருவெடுத்துள்ளது.

- ❖ ரஷ்யாவும் கஜகஸ்தானும், கஜகஸ்தானின் முதலாவது அணுமின் நிலையத்தைக் கட்டுவதற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன
- ❖ புது தில்லியில் நடைபெற்ற 11-வது Quad வெளியுறவுத் துறை அமைச்சர்கள் கூட்டத்தில், Quad நாடுகள் 'Quad முக்கியமான கனிமங்கள் முன்னெடுப்புக் கட்டமைப்பை' வெளியிட்டன.
- ❖ மோதல் தொடர்பான பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் தரப்புகளின் 2026 ஆம் ஆண்டிற்கான ஐநாவின் (UN) தடைப் பட்டியல்/கறுப்புப் பட்டியலில் இஸ்ரேல் மற்றும் ரஷ்யா சேர்க்கப்பட்டுள்ளன.
- ❖ கஜகஸ்தான் தனது நாட்டின் முதல் அணுமின் நிலையத்தை அமைப்பதற்காக, ரஷ்யாவின் அரசுக்கு சொந்தமான அணுசக்தி நிறுவனமான ரோசாட்டம் உடன் 16.5 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ ரஷ்யாவின் மாஸ்கோவில் நடைபெற்ற 1வது சர்வதேசப் பாதுகாப்பு மன்றத்தில் (ISF) இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பங்கேற்றார்.
- ❖ வங்கதேச வெளியுறவுத்துறை அமைச்சர் கலிலூர் ரஹ்மான், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் (UNGA) 81-வது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ❖ சமூக ஊடகத் தளங்கள் பயனர்களின் வயதைச் சரிபார்க்கவும், 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கணக்குகளை உருவாக்குவதைத் தடுக்கவும் கோரும் சட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஜூன் 1 முதல் மலேசியா அமல்படுத்தத் தொடங்கியுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) ஆனது, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் (UNSC) நிரந்தரமற்ற உறுப்பினர்களாக ஐந்து நாடுகளை (ஆஸ்திரியா, போர்ச்சுகல், டிரினிடாட் மற்றும் டொபாகோ, ஜிம்பாப்வே மற்றும் கிர்கிஸ்தான்) தேர்ந்தெடுத்துள்ளது.
- ❖ இந்தியாவும் இங்கிலாந்தும் இணைந்து புதுடெல்லியில் 'இந்தியா - இங்கிலாந்து முக்கிய தாதுக்கள் உலகளாவிய விநியோகச் சங்கிலி கண்காணிப்பகத்தை' தொடங்கின.
- ❖ 2035 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய இறுதி ஆற்றல் தேவையில் மின்சாரத்தின் பங்கை 35% ஆக உயர்த்துவதற்கான "35க்கு 35" ("35 by 35") இலக்கை COP31 இணைத் தலைமையான ஆஸ்திரேலியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் முன்மொழிந்துள்ளன.
- ❖ சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான குறைந்தபட்ச வயதை 15 ஆக ஐக்கிய அரபு அமீரகம் நிர்ணயித்துள்ளது; இதன்மூலம் இத்தகைய விதியை அறிமுகப் படுத்திய முதல் அரபு நாடு என்ற பெருமையை அது பெற்றுள்ளது.
- ❖ உஸ்பெகிஸ்தான் புதிய மேம்பாட்டு வங்கியின் (NDB) 10-வது உறுப்பு நாடாகவும், மத்திய ஆசியாவிலிருந்து இதில் இணையும் முதல் நாடாகவும் இணைந்துள்ளது.
- ❖ வங்காள தேசமானது ராஜ்பாரி மாவட்டத்தில் பத்மா ஆற்றின் குறுக்கே பத்மா அணைக்கட்டு திட்ட கட்டுமானத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவின் இந்தோ-பசிபிக் கட்டளையகம் (USINDOPACOM) என்ற பெயரை மீண்டும் அமெரிக்க பசிபிக் கட்டளையகம் (USPACOM) என மாற்றினார்.
- ❖ சட்டவிரோத மீன்பிடித்தலுக்கு எதிரான உலகளாவிய முயற்சிகளை வலுப்படுத்தும் நோக்கில் ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, கரீபியன் மற்றும் பசிபிக் பகுதிகளைச் சேர்ந்த 15 நாடுகளால் மொம்பாசா பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ❖ செயற்கை நுண்ணறிவு (AI) விநியோகச் சங்கிலிகள் மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடுகள் குறித்த அமெரிக்க தலைமையிலான கட்டமைப்பான 'பாக்ஸ் சிலிக்கா' முன்னெடுப்பில் இணைய ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஒப்புக்கொண்டுள்ளது.

- ஐநா அமைதிப்படையினருக்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை வலுப் படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையானது 2026 ஆம் ஆண்டு ஜூன் 23 அன்று தீர்மானம் 2823 (2026) ஐ ஏற்றுக்கொண்டது.
- 50 நாட்களாக நடைபெற்று வந்த போராட்டங்கள் மற்றும் நெடுஞ்சாலை மறியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர, அதிபர் ரோட்ரிகோ பாஸ் அறிவித்த நாடு தழுவிய அவசரநிலைக்கு பொலிவியாவின் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- மோங்லா துறைமுகப் பொருளாதார மண்டலத்தை மேம்படுத்துவதற்காக சீன அரசுக்குச் சொந்தமான நிறுவனத்துடன் வங்காள தேசம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- அமெரிக்காவில் ஆவணமற்ற அல்லது தற்காலிகமாகப் குடியேறியவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கான குடியுரிமையைக் கட்டுப்படுத்தும் நிர்வாக உத்தரவை நிராகரித்த அமெரிக்க உச்ச நீதிமன்றம், பிறப்புரிமை குடியுரிமையை உறுதி செய்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் எய்ட்ஸ் (AIDS) நோயைப் பொது சுகாதார அச்சுறுத்தல் என்ற நிலையிலிருந்து முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்த, எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொடர்பான 2026 ஆம் ஆண்டு அரசியல் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UNGA) ஏற்றுக்கொண்டது.
- மொத்தம் 61 பாதுகாக்கப்பட்ட தளங்களுடன், உலகிலேயே அதிக யுனெஸ்கோ (UNESCO) உலகப் பாரம்பரியத் தளங்களைக் கொண்ட நாடாக இத்தாலி உருவெடுத்து உள்ளது.
- 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சீஷெல்ஸில் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகத்தை (UPI) அறிமுகப்படுத்துவதற்காக இந்தியாவும் சீஷெல்ஸும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டன.
- இந்திய தேசிய கொடுப்பனவு கழகத்தால் (NPCI) உருவாக்கப்பட்ட இந்தியாவின் ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம் (UPI) ஆனது, யூரோபேங்க் மூலம் கிரேக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) அழைப்பின் பேரில் கஜகஸ்தான், நன்மைக்கான செயற்கை நுண்ணறிவு உலகளாவிய ஆணையத்தில் ஒரு நிறுவன உறுப்பினராக இணைந்துள்ளது.
- சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் மற்றும் நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக வேண்டி, அசாமின் கவுஹாத்தியில் பிரிக்ஸ் நாடுகள் குவஹாத்தி பிரகடனத்தை ஏற்றுக் கொண்டன.
- 2026 ஆம் ஆண்டு வியட்நாமின் பூ குவாக் (Phu Quoc) பகுதியில் உள்ள மே ரட் ங்கோய் தீவு அருகே அதிவேகப் படகு கவிழ்ந்த விபத்தில் குறைந்தது 15 இந்திய சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.
- குணப்படுத்த முடியாத மற்றும் உயிருக்கு ஆபத்தான நோய்களால் பாதிக்கப்பட்ட வயதுவந்தோர்களுக்கு கருணைக் கொலைக்கான சட்டப்பூர்வ உரிமையை உருவாக்கும் மசோதாவிற்கு பிரான்ஸ் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.
- 2040-ஆம் ஆண்டுக்குள் ஐரோப்பிய ஒன்றியத்தின் மின்மயமாக்கல் விகிதத்தை 46% ஆக உயர்த்தவும், ஐரோப்பாவை உலகின் முதல் “மின்மயமாக்கப்பட்ட கண்டமாக" மாற்றவும் ஐரோப்பிய ஆணையம் மின்மயமாக்கல் செயல் திட்டத்தை வெளியிட்டது.
- இந்தியாவின் அரசுத் தலைவர் ஒருவர் மால்டோவா மற்றும் வடக்கு மாசிடோனியா ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட முதலாவது அரசுமுறைப் பயணத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் நிறைவு செய்தார்.
- மாட்ரிட் மற்றும் அவிலா மாகாணங்களில் ஏற்பட்ட கடுமையான காட்டுத்தீ காரணமாக ஸ்பெயின் நாடு முதல் முறையாக தேசிய அவசர நிலையை அறிவித்து உள்ளது.

- அமெரிக்காவும் சவுதி அரேபியாவும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன; இதன் மூலம் அந்த வளைகுடா நாடு சிவில் அணுசக்தித் திட்டத்தை உருவாக்கிக்கொள்ள வழிவகுக்கும் என்று கூறப்படுகிறது.
- அமெரிக்கா முதன்முறையாக குவாமில் (Guam) டார்க் ஈகிள் அதிமீயொலி எறிகணை அமைப்பை நிறுவியுள்ளது.
- IEA-வின் 2026 மின்சார இடைக்கால அறிக்கையின்படி, உலகளாவிய மின்சார நுகர்வு 2025-ஆம் ஆண்டில் 28,600 டெராவாட் மணிநேரத்திலிருந்து 2027-ஆம் ஆண்டுக்குள் 30,700 டெராவாட் மணி நேரமாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- பசிபிக் தீவு நாடான நௌரு (Nauru), 2026 ஆம் ஆண்டு மே மாதம் அதன் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பு திருத்தத்திற்குப் பிறகு, தனது பெயரை நவோரோ குடியரசு (Republic of Naoero) என அதிகாரப்பூர்வமாக மாற்றியது.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து (ICC) விலகுவதற்கான தனது "திரும்பப் பெற முடியாத" முடிவை வெனிசுலா ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகாரப்பூர்வமாகத் தெரிவித்துள்ளது.
- நிகழ்நேரப் பணப் பரிமாற்றங்களுக்காக இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகள் ஃபவாரா-ஒருங்கிணைந்த கட்டண இடைமுக (Favara-UPI) எல்லை தாண்டிய கட்டண வழிமுறையைத் தொடங்கியுள்ளன.
- சியூட்டாவிற்குள் முறையற்றுக் குடியேறுவோர்கள் அதிகளவில் நுழைந்ததையடுத்து, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 முதல் ஸ்பெயினுடனான ஷெங்கன் தடையில்லாப் போக்குவரத்து விதிகளுக்கு ஒரு மாத காலத்திற்கு இத்தாலி தற்காலிகமாக தடை
- கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதல், கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், சர்வதேச வர்த்தகப் பாதைகள் மற்றும் எரிசக்தி விநியோக வழிகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டு சவூதி அரேபியா மற்றும் 13 நாடுகள் இணைந்து ஒரு கடல்சார் பாதுகாப்பு கூட்டணியை நிறுவியுள்ளன.
- கொலம்பியாவின் சோகோவில் உள்ள சான் ஜோஸ் டெல் பால்மர் அருகே 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது, இதில் குறைந்தது 164 பேர் உயிரிழந்தனர் மற்றும் காலி மற்றும் பெரேராவில் பெரும் சேதம் ஏற்பட்டது.
- லெபனான் நாடாளுமன்றம் மரண தண்டனையை ரத்து செய்ததன் மூலம் மரண தண்டனையை முறையாக ரத்து செய்த முதல் மத்திய கிழக்கு நாடாக லெபனான் உருவெடுத்துள்ளது.
- சவூதி அரேபியா, துருக்கி மற்றும் பாகிஸ்தான் ஆகியவை பரஸ்பர பாதுகாப்பு உத்தரவாதங்களை அளிக்கும் ஒரு கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

## பொருளாதாரச் செய்திகள்

- 2025 ஆம் ஆண்டில், 4.18 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (GDP) இந்தியா ஜப்பானை முந்தி உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது.
- வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கான (NBFCs) அளவு சார் ஒழுங்குமுறை (2022 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டது) கட்டமைப்பை இந்திய ரிசர்வ் வங்கி மறுஆய்வு செய்யத் தொடங்கியுள்ளது.

- ❖ தொழில்துறை உற்பத்திக் குறியீட்டின் (IIP) வளர்ச்சி 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கடந்த 25 மாதங்களில் இல்லாத அளவிற்கு 6.7% ஆக உயர்ந்தது.
- ❖ பண வழங்கீட்டு ஒழுங்குமுறை வாரியத்தின் (PRB) முதல் கூட்டம் மும்பையில் நடைபெற்றது.
- ❖ இந்தியா 2024–ஆம் ஆண்டில் 6.4 பில்லியன் டாலர் மதிப்புள்ள தூய்மையாக்கப்பட்ட வெள்ளியை இறக்குமதி செய்து, பயன்படுத்தும் வகையிலான வெள்ளியின் உலகின் மிகப்பெரிய நுகர்வோராகத் திகழ்கிறது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 2026 ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி மேலாண்மை (உத்தரவாதங்கள்) விதிமுறைகளை அறிவித்தது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஜூலை 1, 2026 முதல் 2026 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி – ஒருங்கிணைந்த குறைதீர்ப்பு திட்டத்தினை (RB–IOS) செயல்படுத்த உள்ளது.
- ❖ தேசிய ஓய்வூதிய முறையின் (NPS) கீழ் உறுதியான கொடுப்பனவுகளுக்கான கட்டமைப்பை வடிவமைக்க ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) M.S. சாஹூ தலைமையிலான ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்துள்ளது.
- ❖ ஆரம்பப் பொதுப் பங்கு வெளியீடுகளின் (IPO) எண்ணிக்கையில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளது மற்றும் IPO மதிப்பில் உலகளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தியா 2030 ஆம் ஆண்டிற்குள் உயர் நடுத்தர வருமானம் கொண்ட நாடாகவும், 2028 ஆம் ஆண்டுக்குள் மூன்றாவது பெரிய பொருளாதாரமாகவும் மாறும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- ❖ ஸ்மார்ட்போன் ஏற்றுமதிக்கான உற்பத்தி ஊக்குவிப்புத் (PLI) திட்டத்தின் மூலம், 2025 ஆம் ஆண்டில் இந்தியாவின் மின்னணு ஏற்றுமதி 47 பில்லியன் டாலரை (4.15 டிரில்லியன் டாலர்) தாண்டியது.
- ❖ இந்திய வங்கிகளின் கடன்–வைப்புத்தொகை (CD) விகிதம் 2025 ஆம் ஆண்டில் சாதனை அளவாக 81.75 சதவீதத்தினை எட்டியது என்பதோடு இது வலுவான கடன் தேவையைக் காட்டுகிறது.
- ❖ தேசிய ஓய்வூதிய அமைப்பின் முதலீட்டு விதிகளை நவீனமயமாக்குவதற்காக, ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) நாராயண் ராமச்சந்திரன் குழுவை அமைத்துள்ளது.
- ❖ இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (FTA) பரவலாக 'அனைத்து ஒப்பந்தங்களுக்கும் தாய்' என்று அழைக்கப்படுகிறது, நான்கு ஆண்டு காலத்தில் ஐரோப்பிய ஒன்றிய (EU) வங்கிகள் நாட்டில் 15 கிளைகளைத் திறக்க இந்தியா அனுமதித்துள்ளது.
- ❖ மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஒரு புதிய நுகர்வோர் விலைக் குறியீட்டுத் (CPI) தொடரின் விவரங்களை வெளியிட்டது, நுகர்வோர் விலைக் குறியீட்டின் அடிப்படை ஆண்டு 2011–12 இலிருந்து 2023–24 ஆகத் திருத்தப்பட்டுள்ளது.
- ❖ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) ஜூலை 2026 முதல் ஜூன் 2027 வரை நாடு தழுவிய புலம்பெயர்வு கணக்கெடுப்பை நடத்தவுள்ளது.
- ❖ கோடக் மஹிந்திரா வங்கியானது, இந்தியாவில் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப் பட்ட வெளிநாட்டு துறைசார் முதலீட்டாளர் (FPI) உரிமத்தை வழங்கிய முதல் வங்கியாக ஆனது.
- ❖ சவுதி அரேபியாவை விஞ்சி, ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) 2025 ஆம் ஆண்டில் இந்திய திறன்சாரா தொழிலாளர்களுக்கான மிகப்பெரிய வெளிநாட்டு இடமாக மாறியது.

- ❖ இந்தியாவின் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் மொத்த வராக் கடன்கள் (NPA) செப்டம்பர் 2025 இல் மிகக் குறைந்த அளவான 2.15% ஆகக் குறைந்தன.
- ❖ முக்கியப் பொருளாதார குறிகாட்டிகளுக்கான அடிப்படை ஆண்டைத் திருத்துவதாக புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) அறிவித்துள்ளது, மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மற்றும் தொழில்துறை உற்பத்திக் குறியீடு (IIP) 2022-23 என்ற புதிய அடிப்படை ஆண்டைக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் நுகர்வோர் விலைக் குறியீட்டின் (CPI) அடிப்படை ஆண்டு 2024 ஆக திருத்தப்படும்.
- ❖ இந்தியாவின் சில்லறை விலை பணவீக்கம் ஜனவரி 2026 இல் புதிய நுகர்வோர் விலை குறியீட்டு (CPI) தொடரின் கீழ் 2.75% ஆக பதிவாகியுள்ளது (அடிப்படை: 2024 = 100).
- ❖ இந்திய அரசாங்கம் 2012–13 முதல் 2022–23 வரை இந்தியாவின் வணிக வர்த்தக குறியீடுகளின் அடிப்படை ஆண்டை திருத்தியுள்ளது.
- ❖ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI), 2022–23 அடிப்படை ஆண்டைக் கொண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பீடுகளின் புதிய தொடரை வெளியிட்டது.
- ❖ நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் புது தில்லியில் தேசிய பணமாக்கல் செயல்திட்டம் (NMP) 2.0 ஐத் தொடங்கி வைத்தார்.
- ❖ சமூக ஊடகங்களில் நிதி நுந்துநர்களால் (Influencer) வெளியிடப்பட்ட 1.2 லட்சத்திற்கும் அதிகமான தவறாக வழிநடத்தும் பதிவுகளை நீக்குவதற்கு, SEBI 'சுதர்சன்' என்ற செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்பைப் பயன்படுத்தியது.
- ❖ சீனாவுடனான இந்தியாவின் வர்த்தகப் பற்றாக்குறை முதல் முறையாக 100 பில்லியன் டாலர்களைத் தாண்டிய நிலையில் 2025–26 நிதியாண்டில் (ஏப்ரல்-பிப்ரவரி) சுமார் 102 பில்லியன் டாலர்களை எட்டியது.
- ❖ 2025 ஆம் ஆண்டு மார்ச் 17 அன்று ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிவித்த பிறகு, அர்ஜென்டினா உலக சுகாதார அமைப்பிலிருந்து அதிகாரப்பூர்வமாக விலகியுள்ளது.
- ❖ WPP மீடியா அறிக்கையின்படி, இந்தியாவின் விளையாட்டுத் துறை 2025 ஆம் ஆண்டில் $2 பில்லியனைக் (₹18,864 கோடி) கடந்தது.
- ❖ 2025-ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்கு பருத்திப் பொருட்களை வழங்கும் மிகப்பெரிய நாடாக சீனாவை முந்தி இந்தியா முதலிடம் பிடித்துள்ளது.
- ❖ பணப்பரிமாற்றப் பாதுகாப்பை மேம்படுத்த, ஏப்ரல் 1, 2026 முதல் அனைத்து டிஜிட்டல் பணப்பரிமாற்றங்களுக்கும் இரண்டு அடுக்கு அங்கீகாரத்தை (2FA) இந்திய ரிசர்வ் வங்கி கட்டாயமாக்கியுள்ளது.
- ❖ 2025–26 நிதியாண்டிற்கான உள்நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த காப்பீட்டு நிறுவனங்களாக (D-SII), LIC, GIC Re மற்றும் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் ஆகியவற்றை இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) தக்க வைத்துள்ளது.
- ❖ உலகளாவிய மீன் உற்பத்தியில் சுமார் 8% பங்களிப்புடன், சீனாவிற்கு அடுத்தபடியாக உலகின் 2-வது பெரிய மீன் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- ❖ சில்லறைப் பணவீக்கம் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 3.21% ஆக இருந்து 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 3.4% ஆக அதிகரித்துள்ளது.
- ❖ உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தரவரிசையின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் இந்தியா 6வது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளது.

- 2025-26 ஆம் நிதியாண்டில் மொத்த வர்த்தகம் 151.1 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும், வர்த்தகப் பற்றாக்குறை சாதனை அளவாக 112.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் பதிவாகி அமெரிக்காவை முந்தி, இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தகப் பங்குதாரராக சீனா உருவெடுத்துள்ளது.
- இந்தியா தனது RELIEF (ஏற்றுமதி எளிதாக்கத்திற்கான மீள்திறன் மற்றும் தளவாட இடைக்கீடுகள்) திட்டத்தை எகிப்து மற்றும் ஜோர்டான் நாடுகளை உள்ளடக்கும் வகையில் விரிவுபடுத்தியுள்ளது.
- இந்தியாவும் நியூசிலாந்தும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் (FTA) கையெழுத்திட்டுள்ளன.
- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI), கடந்தகால அபாயம் மற்றும் வருவாயைச் சரிபார்க்கும் முகமையை (PaRRVA) செயல்பாட்டிற்குக் கொண்டு வந்து உள்ளது.
- நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்காக இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 'சக்ஷம்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்ட (FEMA) விதிகள், 2019-ஆம் ஆண்டில் செய்யப் பட்ட திருத்தங்கள் மூலம், காப்பீட்டுத் துறையில் தானியங்கி வழிமுறையின் கீழ் 100% அந்நிய நேரடி முதலீட்டை (FDI) இந்தியா அனுமதித்துள்ளது.
- தேசிய பங்குச் சந்தையானது (NSE), 2026 ஆம் ஆண்டில் மின்னணு தங்க வைப்பு ரசீது (EGR) வர்த்தகத்தைத் தொடங்கியது.
- 2025-26 நிதியாண்டில் இந்திய வேளாண் ஏற்றுமதி, 50 பில்லியன் டாலர்களைத் தாண்டியது.
- மாற்று முதலீட்டு நிதிகளுக்கான (AIFs) 'கருடா' என்ற பசுமை வழித்தட பொறி முறையை இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) முன்மொழிந்து உள்ளது.
- உலகளாவிய வெல்லம் உற்பத்தியில் 70% க்கும் அதிகமான பங்களிப்புடன், உலகின் மிகப்பெரிய வெல்லம் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா தொடர்ந்து நீடிக்கிறது.
- வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்காக, அந்நிய நேரடி முதலீட்டு (FDI) ஒப்புதல்களை வழங்குவதற்கான திருத்தப்பட்ட நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) வர்த்தக அமைச்சகம் வெளியிட்டது.
- வங்கதேச புள்ளியியல் பணியகத்தின் (BBS) தரவுகளின்படி, அமெரிக்காவை முந்தி வங்கதேசத்தின் இரண்டாவது பெரிய வர்த்தகப் பங்களிப்பாளராக இந்தியா உருவெடுத்துள்ளது.
- தேசியப் பண்டங்கள் மற்றும் வகையீடுகள் பரிவர்த்தனை மையமானது (NCDEX), 'RAINMUMBAI' எனப்படும் இந்தியாவின் முதல் SEBI ஒப்புதல் பெற்ற வானிலை வகையீடு ஒப்பந்தத்தை அறிமுகப் படுத்தியது.
- இந்திய ரிசர்வ் வங்கி (RBI), 2025–26 ஆம் நிதியாண்டிற்காக மத்திய அரசுக்கு இதுவரை இல்லாத அளவில் ₹2.86 லட்சம் கோடி உபரி நிதியை மாற்ற ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) IIT-M பேராசிரியர் அனில் பிரபாகர் தலைமையிலான Q-SAFE (குவாண்டம் பாதுகாப்பான மற்றும் தகவமைவுடைய நிதிச் சூழலமைப்பு) எனப்படும் 8 உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில், ஐக்கியப் பேரரசை (UK) பின்னுக்குத் தள்ளி இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

- 2026-27 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் முதல் நீலப் பத்திரத்தை சாகர்மாலா நிதிக் கழகம் வெளியிடத் திட்டமிட்டுள்ளது.
- டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை வழிகளுக்கான உலகளாவிய 'கில் ஸ்விட்ச்' பொறிமுறை மற்றும் 'செயல்படுத்து/நிறுத்து' வசதியை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆராய்ந்து வருகிறது.
- 2025-26 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் கடல் உணவுகள் ஏற்றுமதி சாதனை அளவாக 8.46 பில்லியன் அமெரிக்க டாலர்களை (₹73,890 கோடி) எட்டியுள்ளது.
- மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) தொழில்துறை உற்பத்திக் குறியீட்டின் (IIP) அடிப்படை ஆண்டை 2011–12 ஆம் ஆண்டில் இருந்து 2022–23 ஆக மாற்றியமைத்துள்ளது
- தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT), 2011–12 ஆம் ஆண்டுத் தொடருக்குப் பதிலாக 2022–23 ஆம் ஆண்டை புதிய அடிப்படை ஆண்டாகக் கொண்டு திருத்தப்பட்ட WPI-ஐ வெளியிடும்.
- உலகளாவிய பங்குச் சந்தை மூலதனத் தரவரிசையில் இந்தியாவை தென்கொரியா முந்தியதை அடுத்து, இந்தியா 7வது இடத்திற்கு சரிந்தது.
- NPCI இன்டர்நேஷனல் பேமெண்ட்ஸ் லிமிடெட் (NIPL) மற்றும் அக்லேடா (ACLEDA) வங்கி ஆகியவை KHQR தளம் மூலம் கம்போடியாவில் எல்லை தாண்டிய UPI (ஒருங்கிணைந்த கட்டண இடைமுகம்) பணப்பரிவர்த்தனை சேவையைத் தொடங்கியுள்ளன.
- தமிழ்நாடு-அந்தமான் நிக்கோபார் தீவுகள்-புதுச்சேரி (TAP) பிராந்திய சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (SEZs) 2025-26 ஆம் ஆண்டில் தங்களின் இதுவரை இல்லாத அதிகபட்ச ஏற்றுமதியை எட்டியுள்ளன.
- 2025 ஆம் ஆண்டில் 440 மில்லியனுக்கும் அதிகமான செயலி பதிவிறக்கங்களுடன், இந்தியா உலகின் மிகப்பெரிய டிஜிட்டல் வாலட் / எண்ணிமக் கோப்புறைச் சந்தையாக உருவெடுத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரேசில் மற்றும் இந்தோனேசியாவை பின்னுக்குத் தள்ளி, அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக உலகின் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமான போக்குவரத்து சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- மிகப் பெரிய மின்துறை நிதி நிறுவனத்தை உருவாக்கும் நோக்கில், ஊரக மின்னாக்கக் கழகத்தை (REC Limited), மின் நிதி நிறுவனத்துடன் (PFC) இணைக்க குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.
- 2025-26 ஆம் நிதியாண்டில் தொழிலாளர்கள் அனுப்பிய பணமாக 100 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான தொகையை இந்தியா பெற்றுள்ளது
- பெங்களூரைச் சேர்ந்த Sarvam AI நிறுவனமானது, Series B நிதிச் சுற்றில் $234 மில்லியன் நிதியைத் திரட்டிய பிறகு, இந்தியாவின் 130-வது யூனிகார்ன் நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- டிஜிட்டல் பயனர்களிடையே இணையப் பாதுகாப்பு மற்றும் நிதி மோசடிகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக என இந்திய ரிசர்வ் வங்கி (RBI) "Reelathon 2026" என்ற முன்னெடுப்பை இந்தியாவில் தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் 'NSE இண்டிசஸ் லிமிடெட்' நிறுவனமானது 11 புதிய துறை சார்ந்த குறியீடுகளை அறிமுகப்படுத்தியுள்ளது, இதன் மூலம் அதன் மொத்த துறைசார் குறியீடுகளின் எண்ணிக்கை 34 ஆக விரிவடைந்துள்ளது.

❖ சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (CPCL) நிறுவனமானது இந்தியாவின் 28வது நவரத்னா மத்திய பொதுத்துறை நிறுவனமாக (CPSE) உருவெடுத்துள்ளது

❖ உலகளாவிய கப்பல் மறுசுழற்சியில் 35.4% பங்குகளுடன், இந்தியா 2025 ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய கப்பல் மறுசுழற்சி செய்யும் நாடாக உருவெடுத்துள்ளது.

❖ 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய நீர்வாழ் விலங்கு உற்பத்தியில் சுமார் 9% பங்குகளுடன் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்து உள்ளது.

❖ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது, 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சோதனை அடிப்படையில் சேவைகள் உற்பத்திக் குறியீட்டை (ISP) அறிமுகப்படுத்த உள்ளது.

❖ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) 2026 ஆம் நிதியாண்டுத் தரவுகளின்படி, இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் $762.8 பில்லியனாக அதிகரித்துள்ளதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கடனின் விகிதம் 20.8% ஆக அதிகரித்துள்ளது.

❖ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) குடும்பங்களின் பணவீக்க எதிர்பார்ப்பு கணக்கெடுப்பு, ஊரக நுகர்வோர் நம்பிக்கை கணக்கெடுப்பு மற்றும் நகர்ப்புற நுகர்வோர் நம்பிக்கை கணக்கெடுப்பு ஆகிய மூன்று முக்கிய கணக்கெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.

❖ விநியோகச் சங்கிலிகளில் கட்டாயத் தொழிலாளர் தொடர்பான கவலைகள் காரணமாக, இந்தியா மற்றும் 16 பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அமெரிக்கா 10% சுங்கவரியை விதித்துள்ளது.

❖ இந்தியாவானது தனது முதல் உள்நாட்டு தரவுகளின் அடிப்படையிலான இயற்கை எரிவாயு எதிர்கால ஒப்பந்தத்தை தேசியப் பங்குச் சந்தை (NSE) மூலம் தொடங்க உள்ளது.

❖ இந்திய ரிசர்வ் வங்கி, ₹10 மற்றும் ₹20 மதிப்புள்ள நோட்டுகளுக்கான ஒரு சோதனைத் திட்டத்துடன் தொடங்கி, பாலிமர் (நெகிழி) ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களை மீண்டும் செயல்படுத்தி வருகிறது.

❖ 2026 ஆம் ஆண்டில் பாசல் III (Basel III) விதிமுறைகளுக்கு உட்பட்ட கூடுதல் அடுக்கு-I (AT-1) நிரந்தரப் பத்திரங்களை வெளியிடும் முதல் இந்திய வங்கியாக பாரத ஸ்டேட் வங்கி (SBI) மாறவுள்ளது.

❖ காம்பிடேர் அறக்கட்டளை (Competere Foundation) அறிக்கையின்படி, சந்தை விலகல்கள் செயல்திறன் குறியீட்டில் இந்தியா 2010 ஆம் ஆண்டில் 82 வது இடத்திலிருந்து 2023 ஆம் ஆண்டில் 57வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

❖ புள்ளிவிவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI), நுகர்வோர் விலைக் குறியீட்டின் அடிப்படை ஆண்டை 2012=100 என்பதிலிருந்து 2024=100 என மாற்றி அமைத்துள்ளது.

❖ கப்பல் மறுசுழற்சி செய்யும் உலகின் முன்னணி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது, அதன் உலகளாவியப் பங்கை 2024 ஆம் ஆண்டில் 30.1% இலிருந்து 2025 ஆம் ஆண்டில் 35.4% ஆக உயர்த்தியுள்ளது.

❖ உள்நாட்டு கண்டெய்னர்/சரக்கு கொள்கலன் உற்பத்தியை அதிகரிக்கவும், இறக்குமதி சார்பைக் குறைக்கவும் ₹10,000 கோடி மதிப்பிலான கண்டெய்னர்/சரக்கு கொள்கலன் உற்பத்தி உதவித் திட்டத்தை (CMAS) அரசாங்கம் முன்மொழிந்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

- ❖ சீனாவின் தேசியப் பாதுகாப்பு தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (NUDT) ஆராய்ச்சியாளர்கள், ஒரு மாக்லெவ் (காந்த மிதவை) சோதனை வாகனத்தின் வேகத்தினை வெறும் இரண்டு வினாடிகளில் மணிக்கு 700 கிமீ வேகத்திற்கு முடுக்கி உள்ளதுடன், இது வரை உலகில் உள்ள வேகமான மீக்கடத்தி காந்த மிதவுந்து அமைப்பு என்று சாதனை படைத்த மாக்லெவ் என்று விவரிக்கப்படுகிறது.
- ❖ சீன நாடானது, வகை 055 பெரிய அழிகலன் கப்பலில் இருந்து ஏவப்பட்ட YJ–20 அதி மீயொலி கப்பல் எதிர்ப்பு எறிகணையை வெளியிட்டது.
- ❖ சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனைத் தளத்தில் (ITR) நீண்ட தூர தாக்குதல் வரம்பு கொண்ட வழிகாட்டப்பட்ட ஏவு கலத்தின் (LRGR–120) முதல் ஏவுதல் சோதனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) வெற்றிகரமாக நடத்தியது.
- ❖ பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது ஒரே ஏவு அமைப்பிலிருந்து உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இரண்டு பிரளய் எறிகணைகளை ஒரே நேரத்தில் ஏவி சோதனையை மேற்கொண்டது.
- ❖ போதைப்பொருள் உபயோகக் கண்டுபிடிப்பை விரைவாகக் கண்காணிப்பதற்காக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது PathGennie எனும் புதிய திறந்த மூல மென்பொருளினை (அனைவருக்குமான) உருவாக்கியுள்ளது.
- ❖ இந்திய இராணுவம் ஆனது iStent சிகிச்சை மூலம் இந்தியாவின் முதல் முப்பரிமாண ஃப்ளெக்ஸ் அக்வஸ் ஆஞ்சியோகிராஃபியை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.
- ❖ தலாசீமியாவினால் பாதிக்கப்பட்ட வயது வந்த நோயாளிகளுக்கு இரத்த சோகைக்குச் சிகிச்சையளிப்பதற்கான மிட்டாபிவாட் என்ற முதல் வாய்வழி மருந்தினை/மாத்திரையை அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) அங்கீகரித்துள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் அரசு மருத்துவமனையை அடிப்படையாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு (AI) மருத்துவமனை, கிரேட்டர் நொய்டாவில் உள்ள அரசு மருத்துவ அறிவியல் நிறுவனத்தில் (GIMS) தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ மௌசம் திட்டத்தின் கீழ் முப்பரிமாண முறையில் அச்சிடும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவானது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தானியங்கி வானிலை நிலையங்களை (AWS) உருவாக்கியுள்ளது.
- ❖ ஆர்க்டிக் பெருங்கடல் நீரில், திமிங்கலங்கள், ஓங்கில்கள், கடற்பன்றிகள் மற்றும் வலவம் திமிங்கலங்களைப் பாதிக்கும் அதிகத் தொற்று மிக்க வைரசான செட்டேசியன் மோர்பிலிவைரஸை அறிவியலாளர்கள் முதன்முறையாகக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ 2026 ஆம் ஆண்டு ஜனவரி 03 ஆம் தேதியன்று, வானில் ஆண்டின் முதல் முழு நிலவைக் குறிக்கின்ற உல்ப் சூப்பர் மூன் (பெருநிலவு) தோன்றியது.
- ❖ தொலைதூர மற்றும் நீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் உள்ள வீரர்களுக்குக் குடி நீரை வழங்குவதற்காக வேண்டி பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஒரு பெயர்த்தகு உப்புநீக்க அமைப்பினை உருவாக்கியுள்ளது.
- ❖ பாகிஸ்தான் விமானப்படை 600 கிலோமீட்டர் தூரம் வரை சென்று தாக்கும் தைமூர் வான்வழி எறிகணையின் ஏவுதல் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- ❖ கோவா ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட முதல் மாசுக் கட்டுப்பாட்டுக் கப்பல் மற்றும் ICG கடற்படையில் மிகப்பெரிய கப்பலான இந்தியக் கடலோர காவல்படை கப்பல் (ICGS) சமுத்திர பிரதாப், கோவாவில் படையில் இணைக்கப்பட்டது.

- மெக்சிகோவின் போபோகாட்பெட்ல் எரிமலையின் உள்ளக பாறைக் குழம்பின் இயக்கத்தை நன்கு புரிந்துகொள்வதற்கான அதன் முதல் முப்பரிமாண (3D) படங்களை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- நாசா முதன்முறையாக, ஒரு வெள்ளை நிற குள்ளக் கோள் அமைப்பின் உள் அமைப்பை விரிவாக ஆய்வு செய்துள்ளது.
- ஜவஹர்லால் நேரு மேம்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் (JNCASR) அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பனி உருவாவதை உருவகப்படுத்தவும் எம்பெம்பா விளைவை உறுதிப்படுத்தவும் மீக்கணினிகளைப் பயன்படுத்தினர்.
- ஒவ்வொரு 16 நிமிடங்களுக்கும் விண்வெளி தூசுகள் பூமியின் வளிமண்டலத்தைத் தாக்குவதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.
- நிதிசார் மென்பொருள் மற்றும் அமைப்புகள் (FSS) நிறுவனம் ஆனது இந்தியா, மத்திய கிழக்கு, ஆசியா பசிபிக் மற்றும் தென்னாப்பிரிக்கா பகுதியிலிருந்து ISO IEC 42001 சான்றிதழ் முன்னணி அந்தஸ்தைப் பெற்ற முதல் கொடுப்பனவு நிறுவனமாக மாறியுள்ளது.
- நாசாவின் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி மெஸ்ஸியர் 94 அண்டத்திற்கு அருகில் கிளவுட் 9 எனப்படும் நட்சத்திரமற்ற வாயு மேகத்தைக் கண்டுபிடித்துள்ளது.
- இராமன் ஆராய்ச்சி நிறுவனம் (RRI) ஆனது மீக்குளிர் அணுக்களைத் தொந்தரவு செய்யாமல் அளவிட ஒரு புதிய நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- ஒரு விண்வெளி வீரரைப் பாதிக்கும் மருத்துவப் பாதிப்பு காரணமாக, நாசா நான்கு விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து (ISS) சீக்கிரமாக பூமிக்கு அழைத்து வந்துள்ளது.
- குறுங்கோள் 2025 MN45 ஆனது இதுவரையில் பதிவான அதன் அளவிலான வேகமாகச் சுழலும் குறுங்கோள் ஆகும்.
- ஜப்பானின் தேசிய தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (NICT) ஆனது, வினாடிக்கு 2 டெராபிட்கள் (Tbit/s) என்ற வேகத்திலான உலகின் முதல் வளி மண்டல ஒளியியல் (FSO) தகவல் தொடர்பை அடைந்தது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட மனிதனால் சுமந்து செல்லக் கூடிய வழி காட்டப்பட்ட பீரங்கி எதிர்ப்பு எறிகணையை (MPATGM) வெற்றிகரமாக ஏவி பரிசோதனை செய்தது.
- SCORP எனும் கால்களைக் கொண்ட நடமாடும் மேனிபுலேட்டர் இயந்திரத்தினை கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் காப்பு நிறுவனமான xTerra Robotics நிறுவனம் உருவாக்கியது.
- சென்னையில் உள்ள ஆர்பிட்எய்ட் ஏரோஸ்பேஸ், சுற்றுப்பாதையில் செயற்கைக் கோள்களின் எரிபொருள் நிரப்புவதை மேற்கொள்ள இஸ்ரோவின் PSLV–C62 ஏவு கலத்தில் ஆயுல்சாட் செயற்கைக்கோளை விண்ணில் ஏவியது.
- பூமியின் பெருங்கடல் வெப்ப உள்ளடக்கம் (OHC) 2025 ஆம் ஆண்டில் கூடுதலாக ~23 ஜெட்டாஜூல் (ZJ) வெப்பத்தை உறிஞ்சுவதன் மூலம் ஒரு புதிய அளவை எட்டியது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆனது, 12 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தச் செயல்திறனை வெளிப்படுத்திய, அதி குளிர் நிலையிலான மற்றும் முழு அளவிலான ஸ்க்ராம்ஜெட் எரிபொருளின் நீண்ட காலத் தரை இயக்கச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.

- இந்தியாவின் மொழி செயற்கை நுண்ணறிவு (AI) சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்துவதற்காக மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) புது டெல்லியில் BHASHINI சமுதாயப் பயிலரங்கத்தினை ஏற்பாடு செய்தது.
- CSIR–தேசிய அறிவியல் தொடர்பு மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் (CSIR–NIScPR) 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் அதன் 5வது ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- வழக்கமான சர்க்கரை மற்றும் செயற்கை இனிப்புகளுக்கு ஆரோக்கியமான மாற்றான டேகடோஸை உற்பத்தி செய்வதற்கான திறமையான பெரிய அளவிலான முறையை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- அண்டார்டிக் பீடபூமியில் உள்ள கான்கார்டியா ஆராய்ச்சி நிலையத்தில் உலகின் முதல் உலகளாவிய மலைகளின் பனி மாதிரிகள் களஞ்சியத்தை அறிவியலாளர்கள் திறந்து வைத்தனர்.
- கூகுள் நிறுவனமானது, Gemma 3 உள்கட்டமைப்பில் கட்டமைக்கப்பட்ட, அதிக மற்றும் குறைந்த வளம் கொண்ட மொழிகள் உட்பட 55 உலகளாவிய மொழிகளை ஆதரிக்கின்ற செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான TranslateGemma எனும் அனைவருக்குமான மொழிபெயர்ப்பு மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 1977 ஆம் ஆண்டில் ஏவப்பட்ட நாசாவின் வாயேஜர் 1 விண்கலம் பூமியிலிருந்து ஒரு ஒளி நாள் தூரத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அமெரிக்காவில் உள்ள மெண்டோட்டா ஏரிக்கு அடியில் 5,200 ஆண்டுகள் பழமையான மரப் படகை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர், இது ஆரம்பகால மனித வாழ்க்கை மற்றும் மேம்பட்ட மரவேலைப்பாடுகள் திறன்கள் பற்றிய விவரங்களை வெளிப்படுத்துகிறது.
- மென்கேஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குச் சிகிச்சையளிக்க ஜைகுபோ மருந்தினை அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) அங்கீகரித்தது.
- சூரியன் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அதன் மிக சக்தி வாய்ந்த சூரிய கதிர்வீச்சு புயலை வெளியிட்டது என்பதோடு இது 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் பூமியை அடைந்தது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் சியாங் பள்ளத்தாக்கில் ஜிங்கிபெரேசி குடும்பத்தைச் சேர்ந்த பராகெம்ப்ஃபெரியா ஆல்பா என்ற புதிய இஞ்சி இனத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபை – மத்திய சுரங்க மற்றும் எரி பொருள் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR–CIMFR) இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் அழுத்த உயர்த்தி – வெளியீட்டு எந்திரத்தின் முழு–அமைப்பு பாதுகாப்பு மதிப்பீட்டை நடத்தி உள்ளது.
- ASC ARJUN என்பது மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை பயன்பாடுகளுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு மனித உருவ ரோபோ ஆகும்.
- மைக்ரோசாப்ட் நிறுவனம் Maia 200 என்ற செயற்கை நுண்ணறிவு சில்லுவை அறிமுகப் படுத்தியது என்பதோடு மேலும் ஒரு டாலருக்கு 30% அதிக செயல்திறனை வழங்கும் இது மைக்ரோசாப்ட் 365 கோபைலட் மற்றும் கிளவுட் AI சேவைகளுக்காக அமெரிக்கத் தரவு மையங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியப் புத்தொழில் நிறுவனமான ஆகாஷ்லப்தி, 'அந்தரிக்ஸ்ஹேப்' (AntarikshHAB) எனப்படும் நாட்டின் முதல் காற்றடைக்கும்/ ஊதி பெரிதாக்கும் விண்வெளி வாழ்விடத்தை வெளியிட தயாராகி வருகிறது.
- அணு விஞ்ஞானிகள் ஜனவரி 27, 2026 அன்று நள்ளிரவுக்கு நெருக்கமாக 85 வினாடிகள் முன்னோக்கி நகர்த்தி நிர்ணயித்தனர்.

- DRDO அமைப்பானது திட எரிபொருளால் இயங்கும் ராம்ஜெட் (SFDR) ஏவுகணை தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக செயல்விளக்கம் அளித்தது.
- DRDO அமைப்பானது, ஒடிசா கடற்கரையில் அணுசக்தித் திறன் கொண்ட அக்னி-3 உந்துவிசை (ballistic) ஏவுகணையை (நிலத்திலிருந்து நிலத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணை) வெற்றிகரமாக பரிசோதித்தது.
- இந்திய விமானப்படையின் பெச்சோரா தரையிலிருந்து வான் இலக்கை தாக்கும் ஏவுகணை அமைப்பானது, வான் பாதுகாப்புத் திறனை மேம்படுத்துவதற்காக முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளது.
- தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிர்வாகம் (நாசா), புறக்கோள்களைக் கண்டறிவதற்காக எக்ஸோமைனர்++ என்ற இலவச செயற்கை நுண்ணறிவு மாதிரியை வெளியிட்டுள்ளது.
- கூகுள் டீப் மைண்ட் நிறுவனம், மரபணு மாற்றங்களானது மரபணு ஒழுங்குமுறை மற்றும் மனித நோய்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் கணிக்கும் ஒரு செயற்கை நுண்ணறிவு கருவியான ஆல்பாஜெனோமை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒரு சக்திவாய்ந்த சூரியச் சுடரொளி வீச்சு புவி காந்தப் புயலைத் தூண்டியதைத் தொடர்ந்து, லடாக்கின் ஹன்லேவில் ஒரு அரிய சிவப்பு தென்முனைச் சுடரொளி காணப் பட்டது.
- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி (JWST), MoM-z14 என பெயரிடப்பட்ட மிக தொலை தூர விண்மீனைக் கண்டுபிடித்தது.
- உள்நாட்டுச் செயற்கைக்கோளைப் பயன்படுத்தி சர்வதேச விண்வெளி நிலையத்தை (ISS) படம் பிடித்ததன் மூலம் அஜிஸ்டா ஸ்பேஸ் இந்தியாவின் முதல் சுற்றுப்பாதையில் படம் பிடிக்கும் ("சுற்றுப்பாதையில் உளவு பார்த்தல்") திறனை அடைந்துள்ளது.
- சந்திரயான்-4 திட்டத்திற்காக சந்திரனில் மோன்ஸ் மவுட்டன் அருகே ஒரு பாதுகாப்பான தரையிறங்கும் தளத்தை இஸ்ரோவின் விண்வெளிப் பயன்பாட்டு மையம் அடையாளம் கண்டுள்ளது.
- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், மாரடைப்பின் ஆரம்பக் கட்டங்களுடன் தொடர்புடைய ஒரு முக்கியமான இதய உயிரியக்கக் குறி காட்டியான மயோகுளோபினை விரைவாகக் கண்டறியும் திறன் கொண்ட ஒரு மிக நெகிழ்வான மற்றும் விலை மலிவான உயிரி-உணர்வியை உருவாக்கியுள்ளனர்.
- உலகின் முதல் மருத்துவர் தலைமையிலான செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையில் இயங்கும் வீட்டு சுகாதார சூழல் அமைப்பாக iLive Connect தளம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2027 இல் ஏவ திட்டமிடப்பட்டுள்ள ஹேவன்-1 உலகின் முதல் தனியார் விண்வெளி நிலையமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியாவில் சூப்பர்ஜெட்-100 (SJ-100) விமானங்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தில் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) மற்றும் ரஷ்யாவின் யுனைடெட் ஏர்கிராஃப்ட் கார்ப்பரேஷன் (UAC) ஆகியவை கையெழுத்திட்டுள்ளன.
- சமீபத்தில், ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA), கோப்பர்நிக்கஸ் சென்டினல்-2 திட்டத்தினைப் பயன்படுத்தி வடக்கு இத்தாலியில் 2026 குளிர்கால ஒலிம்பிக் அரங்குகளின் உயர் தெளிவுத் திறன் கொண்ட படத்தை வெளியிட்டது.
- ஸ்டான்போர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் அரிய கண்ட கவச அடுக்கில் ஏற்பட்ட பூகம்பங்களின் முதல் உலகளாவிய வரைபடத்தை உருவாக்கினர்.

❖ புது தில்லியில் உள்ள எய்ம்ஸ் நிறுவனமானது அண்டார்டிகாவில் உள்ள இந்தியாவின் மைத்ரி ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு நோயாளிக்கு முதல் நிகழ்நேரத் தொலைக் கட்டுப்பாட்டு மீயொலி சோதனையை செய்தது.

❖ பெங்களூருவை தளமாகக் கொண்ட சர்வம் AI, புது தில்லியில் நடைபெற்ற இந்தியா AI தாக்க உச்சி மாநாடு 2026 என்பதில் இரண்டு செயற்கை நுண்ணறிவு (AI) மொழி மாதிரிகளை வெளியிட்டது

❖ பாஷினி தேசிய மொழி உள்கட்டமைப்பில் நடைபெற்ற இந்திய AI தாக்க உச்சி மாநாடு 2026 இல் VoiceERA என்ற இலவச குரல் செயற்கை நுண்ணறிவு (AI) தொகுப்பை அறிமுகப் படுத்தியது.

❖ Gnani.ai நிறுவனமானது ஒரு மில்லியன் மணி நேரத்திற்கும் அதிகமான இந்தியக் குரல் தரவுகளில் பயிற்சி பெற்ற உரைகளை பேச்சு வடிவில் அளிக்கும் (TTS) மற்றும் பேச்சுக்களை உரை வடிவில் அளிக்கும் (STT) மாதிரிகளை அறிமுகப்படுத்தியது.

❖ பாரத்ஜென், 17 பில்லியன் அளவுருக்கள் கொண்ட பன்மொழி நிபுணர்களின் கலவை (MoE) அடிப்படை மாதிரியான PARAM 2 17B என்பதை வெளியிட்டது.

❖ ஐஐடி மெட்ராஸ் குளோபல் ரிசர்ச் பவுண்டேஷன், ஐக்கிய அரபு அமீரகத்தின் துபாய் காமர்சிட்டியில் தனது முதல் பயன்பாட்டுச் செயற்கை நுண்ணறிவு (AI) புத்தாக்க மையத்தைத் தொடங்கியது.

❖ சர்வதேச சூரிய சக்தி கூட்டணி (ISA), புது தில்லியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு இந்திய AI தாக்க உச்சி மாநாட்டில் உலகளாவிய AI-for-Energy திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.

❖ பிப்ரவரி 1, 2026 அன்று சூரியன் X8.3 சூரிய ஒளிச்சுடர் ஒன்றை உருவாக்கியது என்பதோடு இது இந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட மிக வலிமையான சூரிய ஒளிச்சுடர் ஆகும்.

❖ தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரியக்குடி அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த பதின்மூன்று XI வகுப்பு மாணவர்கள், விக்கோ சாட்-1 என்ற 600 கிராம் எடையுள்ள சிறு செயற்கைக்கோளை வெற்றிகரமாக ஏவினர், விக்கோ சாட்-1, ஐந்து சிறப்பு சென்சார்களைப் பயன்படுத்தி படையடுக்கு மண்டலத்தில் பூஞ்சை வித்துகளைக் கண்டறிய வடிவமைக்கப்பட்டது.

❖ அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் ஒருங்கிணைந்தத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக, ஈரான் அதன் கோர்ராம்ஷஹர்-4 ("கெய்பார்") உள்ளிட்ட உந்துவிசை ஏவுகணைகளை ஏவியுள்ளது.

❖ தியான்வென்-1 திட்டத்தின் ஒரு பகுதியான சீனாவின் ஜுரோங் உலவியானது, செவ்வாய் கிரகத்தில் பண்டைய கடற்கரைகள் இருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்தது.

❖ நியூரோமார்பிக் வன்பொருள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) நெறிமுறைகளை இணைக்கும் மூளை இணை செயலிகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட Moonshot திட்டம் இந்திய அறிவியல் கழகத்தால் (IISc) தொடங்கப்பட்டது

❖ ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் (Skyroot Aerospace) நிறுவனம் இந்தியாவின் முதல் தனியார் சுற்றுப்பாதை ஏவுகலமான விக்ரம்-1 ஐ ஏவுவதற்குத் தயாராகி வருகிறது.

❖ மூளையில் சேதமடைந்த டோபமைனை உற்பத்தி செய்யும் நியூரான்களை மாற்றி அமைக்க தூண்டப்பட்ட ப்ளூரிபோடென்ட் ஸ்டெம் செல்களை (iPS Cells) பயன்படுத்தும், பார்கின்சன் நோய்க்கான உலகின் முதல் ஸ்டெம் செல் சிகிச்சைக்கு ஜப்பான் ஒப்புதல் அளித்துள்ளது.

❖ கனடாவின் வாட்டர்லூ பல்கலைக்கழக அறிவியலாளர்கள், சூரிய ஒளியை மட்டும் பயன்படுத்தி நெகிழிக் கழிவுகளை அசிட்டிக் அமிலமாக (வினிகர்) மாற்றும் வழியைக் கண்டறிந்துள்ளனர்.

- ஈரானுடன் தொடர்புடைய மேற்கு ஆசிய மோதல்களின் போது அமெரிக்க இராணுவத்தால் PrSM (துல்லியமாகத் தாக்கும் எறிகணை) எறிகணை பயன்படுத்தப் பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA), ஆற்றல் அமைப்பு செயலிழந்ததன் காரணமாக புரோபா-3 திட்டத்தின் கொரோனாகிராப் செயற்கைக்கோளுடனான தொடர்பை இழந்தது.
- DRDO) மற்றும் இந்திய கடற்படை ஆகியவை இணைந்து, கோவாவிற்கு அருகே போயிங் P-8I போஸிடான் விமானத்திலிருந்து ADC-150 (பொருட்களை வான்வழியாக விநியோகிப்பதற்கான கொள்கலன்-150) கொள் கலனை வெற்றிகரமாகச் சோதித்தன.
- பெங்களூருவின் நியூஸ்பேஸ் ரிசர்ச் டெக்னாலஜிஸ் தயாரித்துள்ள 'சேஷ்நாக்-150' என்ற நீண்ட தூரம் பாயும் தாக்குதல் ஆளில்லா விமானத்தை இந்தியா சோதனை செய்து வருகிறது.
- கனடாவின் நுனாவுட்டில் உள்ள டெவோன் தீவை, எதிர்கால செவ்வாய் கிரக பயணங்களுக்கான தொழில்நுட்பங்கள் மற்றும் உயிர்வாழும் முறைகளைச் சோதிப்பதற்கான இயற்கை தளமாக அறிவியலாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.
- இந்தியாவின் முதல் நிலம்-நீர் இரண்டிலும் இயங்கவல்ல ஆளில்லா விமானமான அவதார், AquaAirX Autonomous Systems நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் தொடர்புடைய நிலைகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையின் போது, ஈரான் முதன்முறையாக செஜ்ஜில் உந்துவிசை எறிகணைத் தாக்குதலில் ஈடுபடுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
- சூரியக் குடும்பத்தில் வியாழனைச் சுற்றி 4 நிலவுகள் மற்றும் சனியைச் சுற்றி 11 நிலவுகள் என மொத்தம் 15 புதிய நிலவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக Minor Planet Centre (சர்வதேச வானியல் ஒன்றியத்தின் ஆதரவின் கீழ்) அறிவித்துள்ளது.
- CERN அமைப்பு 'Xi-cc-plus' எனப்படும் புதிய துகளைக் கண்டறிந்துள்ளதாக அறிவித்து உள்ளது.
- IRNSS-1F செயற்கைக்கோளில் உள்ள அணுக் கடிகாரம் செயலிழந்த நிலையில், இது இந்தியாவின் NavIC (இந்திய செயற்கைக் கோள் தொகுப்பைக் கொண்டு வழிகாணல்) வழி செலுத்தல் அமைப்பைப் பாதித்துள்ளது.
- இந்திய விமானப்படை (IAF), இந்தியாவின் முதல் ஹெலிகாப்டர் மூலம் ஏவப்படும் ஆளில்லா விமான அமைப்பை உருவாக்க 'வாயு பாண்' திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- செவ்வாய் கிரகத்தில் எதிர்கால உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவக் கூடிய சின்திரிச்சியா கானினெர்விஸ் என்ற பாலைவனப் பாசியை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பசிபிக் பெருங்கடலில் உள்ள மினாமிடோரிஷிமா தீவு அருகே ஜப்பான் ஒரு மிகப் பெரிய ஆழ்கடல் அபூர்வ மண் தாதுப் படிவைக் கண்டுபிடித்துள்ளது.
- பூமியின் மேற்பரப்பிற்கு கீழே சுமார் 700 கி.மீ ஆழத்தில் கவசப் பகுதியில் ஒரு பெரிய நீர்த் தேக்கத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்
- நேவிகேஷன் அமைப்புகளை மேம்படுத்த ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் செலஸ்டே IOD-1 மற்றும் IOD-2 எனப் பெயரிடப்பட்ட இரண்டு செலஸ்டே செயற்கைக்கோள்களை ஏவியது.
- வன விலங்குகளின் புலம்பெயர்ந்த இனங்களைப் பாதுகாப்பதற்கான ஒப்பந்தத்தின் (CMS) கீழ் பனி ஆந்தைக்கு (பூபோ ஸ்காண்டியாகஸ்) சர்வதேசப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

- ❖ வானியலாளர்கள் பூமியில் இருந்து சுமார் 120 ஒளி ஆண்டுகள் தொலைவில் இரண்டு புவி போன்ற கோள்களைக் கொண்ட ஒரு புதிய கிரக அமைப்பைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- ❖ தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் உள்ள இந்தியாவின் PFBR (முன்மாதிரி வேக உற்பத்தி உலை/வேக ஈனுலை) செயல்பாட்டு நிலையை அடைந்தது.
- ❖ ஐக்கிய அரபு அமீரகம் உலகின் முதல் 10G (10 ஜிகாபிட்) U6GHz இணையச் சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ கேரளாவில் உள்ள CMLRE (கடல் வாழ் வளங்கள் மற்றும் சூழலியல் மையம்) அமைப்பின் பவசாகரா பரிந்துரை மையம் மற்றும் மகாராஷ்டிராவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை உயிரியல் பன்முகத் தன்மை சட்டம் 2002-இன் கீழ் தேசிய களஞ்சியங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- ❖ விண்வெளியில் மனிதர்கள் பயணித்த அதிகபட்ச தூரம் என்ற புதிய சாதனையை நாசாவின் ஆர்ட்டெமிஸ் II விண்வெளித் திட்டம் படைத்துள்ளது.
- ❖ அப்பல்லோவிற்குப் பிறகு நாசாவால் மேற்கொள்ளப்பட்ட மனிதர்கள் சென்ற முதல் வரலாற்றுச் சிறப்புமிக்க நிலவுப் பயணத்திற்குப் பிறகு ஆர்ட்டெமிஸ் II திட்ட விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாக பூமிக்கு திரும்பினர்.
- ❖ அமெரிக்காவின் "அமெரிக்க விண்வெளி அணுசக்திக்கான தேசிய முன்னெடுப்பு" என்பதன் கீழ்2028 ஆம் ஆண்டிற்குள் விண்வெளியிலும், 2030 ஆம் ஆண்டிற்குள் நிலவிலும் அணு உலைகளை நிலைநிறுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.
- ❖ நாசாவால் உருவாக்கப்பட்ட நான்சி கிரேஸ் ரோமன் விண்வெளி தொலைநோக்கி அதன் ஒருங்கிணைப்புப் பணிகளை முடித்து, 2026-ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்படுவதற்கு முன்னதாக இறுதிக் கட்ட சோதனையில் நுழைந்துள்ளது.
- ❖ சீன அறிவியலாளர்கள் இது வரை அடையாளம் காணப் பட்ட 11வது சந்திர கனிமமான சீரியம்-மக்னீசியம் சேஞ்ச்சைட் என்ற புதிய சந்திர கனிமத்தைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- ❖ வானியலாளர்கள் முதன்முறையாக பூமியிலிருந்து சுமார் 800 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் அமைந்துள்ள பிரம்மாண்டமான வேலா மீப்பேரடைத் தொகுப்பை (வேலா-பான்சி) வரைபடமாக்கியுள்ளனர்.
- ❖ பூஜ்ஜியத்திற்கு நிகரான கார்பன் உமிழ்வுடன் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய, உலகின் முதல் நிலக்கரி அடிப்படையிலான எரிபொருள் மின்கலத்தை சீனா உருவாக்கியுள்ளது.
- ❖ சீன இராணுவமானது கண்காணிப்பு மற்றும் தாக்குதலுக்காக 96 ஆளில்லா விமானங்கள் வரை ஏவக்கூடிய மற்றும் கட்டுப்படுத்தக்கூடிய செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான தளமான அட்லஸ் ஆளில்லா விமான தொகுப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியது.
- ❖ மேம்படுத்தப்பட்ட கவச வாகனங்களுக்கான விக்ரம் VT 21 திட்டத்தை DRDO நிறுவனம் தொடங்கியுள்ளது.
- ❖ 1,500 கிமீ-க்கும் அதிகமான தாக்குதல் வரம்பும், மாக் 10 வரையிலான வேகமும் கொண்ட, DRDO நிறுவனத்தால் உருவாக்கப் பட்ட நீண்ட தூர அதி மீயோலி கப்பல் எதிர்ப்பு ஏறிகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.
- ❖ ஹைதராபாத்தை மையமாகக் கொண்ட புத்தொழில் நிறுவனமான ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் உருவாக்கியுள்ள இந்தியாவின் முதல் தனியார் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட சுற்றுப்பாதை ஏவுகலமான விக்ரம்-1 தொடங்கி வைக்கப்பட்டது.

- ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியா ஆகியவை இணைந்து பிளாஸ்மோடியம் ஃபால்சிபாரத்தை குறிவைக்கும் அடுத்த தலைமுறை R78C மலேரியா தடுப்பூசியை உருவாக்க கூட்டு சேர்ந்துள்ளன.
- GalaxEye நிறுவனமானது, இந்தியாவின் தனியார் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் மற்றும் உலகின் முதல் OptoSAR செயற்கைக்கோளான திருஷ்டி திட்டத்தை விண்ணில் செலுத்தியது.
- Pixxel மற்றும் Sarvam நிறுவனங்கள் இணைந்து, இந்தியாவின் முதலாவது சுற்றுப்பாதை தரவு மையச் செயற்கைக்கோளான 'Pathfinder'-ஐ உருவாக்கி வருகின்றன; 200 கிலோ எடைப் பிரிவைச் சேர்ந்த இந்தச் செயற்கைக்கோள், 2026-ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ஒடிசா கடற்கரையில் உள்ள அப்துல் கலாம் தீவிலிருந்து, அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லக்கூடிய கண்டங்களுக்கு இடையிலான எறிகணையை (ICBM) இந்தியா முதன் முறையாகச் சோதனை செய்தது.
- திவ்யாஸ்திரா திட்டம் எனும் திட்டத்தின் கீழ், பல இலக்குகளைத் தனித்தனியாகத் தாக்கும் (MIRV) தொழில்நுட்பத்தைக் கொண்ட அக்னி-5 எறிகணையை இந்தியா வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.
- பல்கட்டி கருப்பை நோய்க்குறி (PCOS) என்பதன் உயிரியல் சிக்கலைச் சிறப்பாகப் பிரதிபலிக்கும் வகையில், ஒரு சர்வதேசக் குழு அதற்கு ‘பல்நாளமில்லாச் சுரப்பி வளர்சிதை மாற்றக் கருப்பை நோய்க்குறி' (PMOS) என மறுபெயரிட்டுள்ளது.
- DRDO மற்றும் இந்திய விமானப்படை ஆகியவை இணைந்து, இந்தியாவின் முதல் உள்நாட்டுக் காற்றை கிழித்துச் செல்லும் ஆயுத அமைப்பான TARA-வின் (உத்திரீ தியான மேம்பட்ட வரம்பு விரிவாக்கம்) முதற்கட்ட சோதனைப் பறப்பை வெற்றிகரமாக நடத்தின.
- 'ரோச்' நிறுவனமானது, நுரையீரல் புற்றுநோய் சிகிச்சைக்காக தோலுக்கு அடியில் செலுத்தப்படும் இந்தியாவின் முதல் நோய் எதிர்ப்புச் சிகிச்சை மருந்தான 'டெசென்ட்ரிக் எஸ்சி'-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.
- பால்வெளி அண்டத்திற்குள் 'லோகி' என்று பெயரிடப்பட்ட மறைந்திருக்கும் ஒரு பழங்கால குள்ள விண்மீன் மண்டலம் இருப்பதை அறிவியலாளர்கள் முன் மொழிந்து உள்ளனர்.
- இஸ்ரோவுடனான அறிவியல் ஒத்துழைப்பு மூலம் இந்தியாவின் வெள்ளி சுற்றுப்பாதை திட்டமான "சுக்ரயானில்" ஸ்வீடன் இணைந்தது.
- அண்டார்டிகாவின் ராஸ் பனிப்பாறைக்கு அடியில் சூரிய ஒளி இல்லாமல் வாழும் பல்வேறு வகையான நுண்ணுயிர் சமூகங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ULPGM-V3 எறிகணையின் இறுதி மேம்பாட்டுச் சோதனைகளை DRDO வெற்றிகரமாக முடித்தது.
- MAVEN-இன் தரவுகளைப் பயன்படுத்தும் அறிவியலாளர்கள், முதன்முறையாக செவ்வாய்க் கிரகத்தின் வளிமண்டலத்தின் ஆழத்தில் ஸ்வான்-வுல்ஃப் விளைவைக் கவனித்துள்ளனர்.
- பயிர்களுக்கான உலகின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் வடிவமைக்கப்பட்ட மரபணு திருத்தத் தளமான "பிளாண்ட்-ஓபன் சிஆர்ஐஎஸ்பிஆர்1" (Plant-OpenCRISPR1) என்பதை அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- ஐரோப்பிய விண்வெளி முகமையும் (ESA) சீன அறிவியல் அகாடமியும் (CAS) தங்களின் முதலாவது முழுமையான கூட்டு விண்வெளித் திட்டமான ஸ்மைல் (SMILE - சூரியக் காற்று, காந்தக்கோளம் மற்றும் அயனக்கோள இணைப்பு ஆய்வி) திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- ரெட் பலூன் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் மூலம், இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அடுக்குமண்டல அதி-அழுத்த பலூன் சனா திட்டம் விஜயவாடாவில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
- மனித நோயாளி ஒருவருக்கு பன்றியின் கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தை ஒரே நேரத்தில் மாற்று அறுவை சிகிச்சை செய்து சீனா உலகிலேயே முதல்முறையாக வெற்றிகரமாக நிகழ்த்தியுள்ளது.
- இந்திய இராணுவம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'திவ்யாஸ்திரா Mk-1' தந்திரோபாய இலக்கினை மட்டும் குறிவைத்து தாக்கும் இயந்திர வாகனத்தின் செயல்பாட்டுத் திறன் சோதனையை 2026 ஆம் ஆண்டு ஜூன் 1 அன்று ஜோத்பூரில் நடத்தியது.
- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது 3I/அட்லஸ் (3I/ATLAS) என்ற விண்மீனிடை வால்நட்சத்திரத்தில் மீத்தேன் இருப்பதைக் கண்டறிந்துள்ளதுடன் சூரியக் குடும்பத்திற்கு வெளியே தோன்றிய ஒரு பொருளின் மீது மீத்தேன் நேரடியாகக் கண்டறியப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- 2026 ஆம் ஆண்டு மே 31 அன்று ஒரு அசாதாரணமான சந்திர நிகழ்வான அரிதான நீல நிலவு - குறுநிலவு நிகழ்வு காணப்பட்டது.
- பில்ட் 2026 நிகழ்வில் மைக்ரோசாப்ட் நிறுவனமானது மஜோரானா 2 எனும் குவாண்டம் சில்லு/சிப்பை வெளியிட்டது; இதில் குபிட் (qubit) நிலைத்தன்மையில் ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அதன் சராசரி ஆயுட்காலம் 20 விநாடிகளாகவும், அதிகபட்சமாக 60 விநாடிகள் வரை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆர்ட்டெமிஸ் III திட்டத்திற்கான ராண்டி ப்ரெஸ்னிக் (அமெரிக்கா), லூகா பர்மிடானோ (இத்தாலி), ஆண்ட்ரே டக்ளஸ் (அமெரிக்கா) மற்றும் ஃபிராங்க் ரூபியோ (அமெரிக்கா) ஆகிய நான்கு பேர் கொண்ட குழுவை நாசா அறிவித்துள்ளது.
- மெட்ராஸ் இந்தியத் தொழில்நுட்பக் கழகமானது (IIT-M), உலகின் மிக விரிவான முப்பரிமாண மனித மூளைத்தண்டு வரைபடமான ANCHOR-ஐ (முப்பரிமாண புனரமைப்புடன் கூடிய மனித மூளைத்தண்டின் நரம்பியல் வேதியியல் பண்புகளின் வரைபடத் தொகுப்பு) வெளியிட்டுள்ளது
- கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறிவதற்காக Molbio Diagnostics நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட, இந்தியாவின் முதல் உள்நாட்டு மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) பரிசோதனையான Truenat HR-HPV-Plus சோதனையை இந்தியா அதிகாரப்பூர்வமாக சரிபார்த்து அங்கீகரித்துள்ளது.
- ஆய்வக வசதிகள் இன்றி குடிநீரில் உள்ள ஆர்சனிக் மாசுபாட்டை விரைவாகக் கண்டறியும் கையடக்கக் கருவியான ArsenSafe-ஐ புவனேஸ்வர் இந்திய தொழில்நுட்பக் கழகம் உருவாக்கியுள்ளது.
- முற்றிய புரோஸ்டேட் புற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பதற்கான நாட்டின் முதல் ரேடியோலிகண்ட் சிகிச்சையான (RLT) 'ப்ளூவிக்டோ'வுக்கு இந்தியா ஒப்புதல் அளித்து உள்ளது.
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் C-295 ராணுவப் போக்குவரத்து விமானம் ஆனது குஜராத்தின் வதோதராவில் தனது முதல் சோதனை ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தது.

- ❖ INS Agray எனப்படும் அர்னாலா-வகுப்பைச் சேர்ந்த ஐந்தாவது நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு ஆழமற்ற நீர் போர் கப்பல் (ASW SWC), இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப் பட்டது.
- ❖ டாப்500 பட்டியலில் (ஜூன் 2026 பதிப்பு) சீனாவின் LineShine மீத்திறன் கணினி, முதலிடம் பிடித்தது
- ❖ ஆர்க்டிக் அடிவானத்திற்கு அப்பால் பார்க்கக் கூடிய ரேடார் அமைப்பு (A-OTHR) எனும் அமைப்பைக் கொள்முதல் செய்வதற்காக ஆஸ்திரேலியா மற்றும் BAE சிஸ்டம்ஸ் ஆஸ்திரேலியா ஆகியவற்றுடன் 2.5 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் கனடா கையெழுத்திட்டது.
- ❖ அணுசக்தித் துறையானது (DAE) தமிழ்நாட்டின் கல்பாக்கத்தில் உள்ள IGCAR இல் அணுக்கரு செயல்முறை வெப்பத்தைப் பயன்படுத்தி உலகின் முதல் ஹைட்ரஜன் உற்பத்தி வசதியை 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் திறந்தது.
- ❖ தமிழ்நாட்டின் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ உந்துவிசை வளாகத்தில் (IPRC), அரை-குளிர்நிலை இயந்திரத்தின் ஆற்றல் பகுதி சோதனை மாதிரிகளின் (PHTA) 175 டன் வெப்பச் சோதனையை இஸ்ரோ வெற்றிகரமாக நடத்தியது.
- ❖ இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் (IOR) கடற்படுகை அடிப்படையிலான நீர்மூழ்கிக் கப்பல் கண்காணிப்பிற்காக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட நீரடி ஒளி இழை உணர்திறன் அமைப்பை (UFOSS) நிறுவுவதற்கான திட்டத்தை DRDO தொடங்கி உள்ளது.
- ❖ விஞ்ஞானிகள், இந்தியாவில் முதன்முறையாக கிளி போர்னா வைரஸ் 4 (PaBV-4)-ஐக் கண்டறிந்துள்ளனர்.
- ❖ மாசடைந்த நீரிலிருந்து ஈயத்தை அகற்றுவதற்காக, சயனோபாக்டீரியாவைப் (நீலப்பசும் பாசி) பயன்படுத்தி ஒரு உயிரியல் பொருளை IIT கவுகாத்தியின் (IITG) ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- ❖ உலகின் முதல் OptoSAR (Optical + Synthetic Aperture Radar) செயற்கைக்கோளான திருஷ்டி (Drishti) திட்டமானது, புவி காந்த சூரியப் புயலால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக தனது தகவல் தொடர்பை இழந்தது.
- ❖ நீல் கெரெல்ஸ் ஸ்விஃப்ட் ஆய்வகத்தின் ஆயுட்காலத்தை நீட்டிப்பதற்கான முதல் செயற்கைக்கோள் சேவைத் திட்டமான ஸ்விஃப்ட் பூஸ்ட் (Swift Boost) திட்டத்தை நாசா ஏவியது.
- ❖ உள்நாட்டில் அதிக நேரம் தாக்குப் பிடிக்கும் கண்காணிப்பு வான்வெளிக் கப்பல்களுக்காக, வான்வெளிக்கப்பல் அடிப்படையிலான 'அதி-உயர போலி செயற்கைக் கோள்' (AS-HAPS) திட்டத்தை இந்தியா அறிமுகப்படுத்தியது.
- ❖ Long March 10B ஏவுகலத்தைப் பயன்படுத்தி, கடல்வழி மறுபயன்பாட்டு ஏவுகல உந்து கலன் மீட்பு அமைப்பை சீனா வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.
- ❖ நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியை (JWST) பயன்படுத்தும் வானியலாளர்கள், பீட்டா பிக்டோரிஸ் அமைப்பில் 'பீட்டா பிக்டோரிஸ் டி' என்ற புதிய மாபெரும் புறக்கோளைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ பிரபஞ்சத்தில் இயற்கையாகத் தோன்றும் அறியப்பட்ட மிகக் குளிர்ந்த பொருளாக பூமராங் நெபுலா அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதன் வெப்பநிலை தனிச்சுழி வெப்பநிலைக்கு அருகில் சுமார் -272°C ஆக உள்ளது.
- ❖ சூரியனின் மேல் வளிமண்டலம் அதன் காணக்கூடிய மேற்பரப்பை விட வேகமாக சுழல்வதை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- 1945 அணுபடிகுண்டு வெடிப்புக்குப் பிறகு உருவான, ஜப்பானின் ஹிரோஷிமா விரிகுடாவிலிருந்து மீட்கப்பட்ட கண்ணாடி போன்ற ஹிரோஷிமைட்டுகளுக்குள் முன்பு அறியப்படாத ஒரு புதிய உலோகக் கலவையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ICAR - தேசிய உயர் பாதுகாப்பு விலங்கு நோய்கள் நிறுவனமானது (NIHSAD), பன்றிகளுக்கான இந்தியாவின் முதல் உள்நாட்டு 'MA-104' செல் வரிசையை அடிப்படையாகக் கொண்ட, வீரியம் குறைக்கப் பட்ட ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சலுக்கான (ASF) தடுப்பூசியை உருவாக்கி உள்ளது.
- நச்சுத்தன்மை வாய்ந்த மற்றும் புற்றுநோயை உண்டாக்கும் கன உலோகங்களை விரைவாகக் கண்டறிவதற்கான குறைந்த விலை கையடக்க ஒளியியல் உணர்திறன் கருவியான "E-Eye" என்பதை IIT குவஹாத்தி உருவாக்கியுள்ளது.
- பெங்களூரைச் சேர்ந்த ஆஸ்ட்ரோபேஸ் ஸ்பேஸ் டெக்னாலஜிஸ் (Astrobase Space Technologies) நிறுவனமானது, இந்தியாவின் முதல் தனியார் 800-கிலோநியூட்டன் (kN) முழு-ஓட்ட நிலை எரிப்பு (FFSC) ஏவுகல இயந்திரமான 'எவரெஸ்ட்' (EVEREST) என்பதை அறிமுகப்படுத்தியது.
- IIT டெல்லியின் சோனிபட் வளாகத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் உயர் செயல்திறன் கொண்ட கணினி வசதியான 'பரம் பிரக்யா' (Param Pragya) திறக்கப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

- குளிர்கால வலசை காலத்தில் முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் (MTR) ஓர் அரிய கிழக்கு இராசாளிக் கழுகு (அக்குய்லா ஹெலியாகா) தென்பட்டது.
- உத்தரப் பிரதேசத்தின் கோண்டா மாவட்டத்தில் உள்ள பார்வதி–அர்கா பறவைகள் சரணாலயத்தை இந்திய அரசு சுற்றுச்சூழல் தாங்குதிறன் மண்டலமாக (ESZ) அறிவித்து உள்ளது.
- அமேசானிய கொசுத் தேனீக்கள் சட்டப்பூர்வ உரிமைகளைப் பெற்ற உலகின் முதல் பூச்சிகளாக மாறியது.
- தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) வெளியிட்ட சமீபத்தியத் தரவுகளின் படி, 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் 166 புலிகள் இறப்பு (புலிகள் வளங்காப்புத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து மிக அதிக வருடாந்திரப் புலி இறப்பு விகிதம்) பதிவாகியுள்ளது.
- கர்நாடக மாநிலம் அதன் விஜயநகர மாவட்டத்தில், இந்தியச் சிறுத்தையின் அரிய வெளிறிய இளஞ்சிவப்பு உருவத்திலான சந்தன சிறுத்தை முதன்முதலில் தென்பட்டு உள்ளதாக பதிவு செய்துள்ளது.
- கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உலகின் அரிதான விண்மீன் தவளைகளில் ஏழு (மெலனோபாட்ராக்கஸ் இண்டிகஸ்) மறைந்து விட்டன, அதாவது இறந்து விட்டதாகக் கருதப் படுகிறது.
- கலமாரியா மிசோரமன்சிஸ் என்ற புதிய விஷமற்ற கீழ் மண்/நாணல் பாம்பு மிசோரமில் கண்டுபிடிக்கப்பட்டது.
- அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக, பொலிவியாவின் பெனி புல்வெளிக் காடுகளில் உள்ள ஒரு சிறிய ஆலிவ்–பச்சை நிறப் பறவையானது தவறாக வகைப்படுத்தப் பட்டது, ஆனால் புதிய ஆராய்ச்சி அதை ஒரு தனித்துவமான இனமாக உறுதிப்படுத்தியது.

- சென்னையில் ஒரு முன்னோடி முயற்சியாக, சென்னை கடற்கரைகளில் சிற்றாமைகளுக்கு செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்கும் கருவிகள் பொருத்தும் பணி தொடங்கியது.
- தமிழ்நாடு அரசு 2021–2025 காலகட்டத்தில் 100 வனப்பகுதிகளைக் காப்புக்காடுகளாக அறிவித்துள்ளது.
- ஜம்மு காஷ்மீரில், கோனோசெபாலஸ் உஸ்மானி, கோனோசெபாலஸ் நாகரியென்சிஸ் மற்றும் கோனோசெபாலஸ் காந்தர்பாலி எனப் பெயரிடப் பட்டுள்ள மூன்று புதிய புல்வெளி வெட்டுக்கிளி இனங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் 2026 ஆம் ஆண்டு அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டுக் கணக்கெடுப்பிற்கு MSTrIPES (புலிகளுக்கான கண்காணிப்பு அமைப்பு: தீவிரப் பாதுகாப்பு மற்றும் சூழலியல்) செயலி பயன்படுத்தப்படுகிறது.
- அடையாறு ஆற்றில் ஒரு ஆற்று நீர்நாய் அரிதாக தென்பட்டது.
- நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தில் உள்ள மோயார் நதிப் பள்ளத்தாக்கைச் சுற்றி தமிழ்நாட்டின் முதல் கழுகு வளங்காப்பு மண்டலம் உருவாக்கப்படும்.
- அருணாச்சலப் பிரதேசத்தில் சோமனின் மெலிந்த கை தவளை (லெப்டோ பிராச்சியம் சோமன்) மற்றும் மெச்சுகா மெலிந்த கை தவளை (லெப்டோ பிராச்சியம் மெச்சுகா) இரண்டு புதிய தவளை இனங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- சமீபத்திய முதலை கணக்கெடுப்பு ஒடிசாவின் சிமிலிபால் தேசியப் பூங்காவில் முதலை எண்ணிக்கையில் அதிகரிப்பைக் (84) காட்டியது.
- பம்பாய் இயற்கை வரலாற்றுச் சங்கம் (BNHS) டேராடூனில் தேசிய தூய்மை கங்கைக்கான திட்டத்தின் கீழ் இந்திய ஸ்கிம்மர் பறவை வளங்காப்பு திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- பெர்க்லி வருடாந்திர புவி வெப்பநிலை அறிக்கை, 2025 ஆம் ஆண்டானது இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக வெப்பமான லா நினா ஆண்டாகக் கண்டறிந்துள்ளது.
- நியூசிலாந்தின் ஃபியோர்ட்லேண்டின் ஆழ்கடலில் சுமார் 13 அடி உயரமும் 15 அடி அகலமும் கொண்ட 300–400 ஆண்டுகள் பழமையான ஒரு பெரிய கரும்பவளப் பாறையை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- தமிழ்நாடு அதன் முதல் மாநில அளவிலான இரைபிடிப் பறவை மதிப்பீட்டை ஜனவரி 31 மற்றும் பிப்ரவரி 01, 2026 ஆகிய தேதிகளில் நடத்த திட்டமிட்டுள்ளது.
- அறிவியலாளர்கள் லட்சத்தீவின் கவரட்டி உப்பங்கழியில் இந்தியாஃபோன்ட் பிஜாய் எனும் ஒரு புதிய சிறிய ஓட்டுடலி மீன் இனத்தைக் கண்டுபிடித்தனர்.
- பிரான்டு முள்ளெலி (பரேச்சினஸ் ஹைப்போமெலாஸ்) ஜம்மு மற்றும் காஷ்மீரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் இராஜஸ்தானில் உள்ள கும்பல்கர் வனவிலங்குச் சரணாலயத்தைச் சுற்றுச்சூழல் தாங்கு மண்டலமாக (ESZ) அறிவித்தது.
- டெல்லி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மெட்டாடன் கோர்படேய் மற்றும் மெட்டாடன் ரீமெரி என்ற இரண்டு புதிய மிகவும் அரிதான ஈசல்/ எறும்பு ஈ இனங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- மகாராஷ்டிராவின் வடக்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் ஜெஜினோஃபிஸ் வால்மீகி என்ற புதிய சிறுகண் காலிலி இனத்தை இந்திய அறிவியலாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் (MoEFCC), உத்தரப் பிரதேசத்தின் பிஜ்னோரில் இருந்து இந்தியாவின் இரண்டாவது இந்திய அளவிலான டால்பின் கணக்கெடுப்பைத் தொடங்கியது.
- சம்பல் நதிக்கு அடுத்தபடியாக, பீகாரில் உள்ள கண்டக் நதி இந்தியாவின் இரண்டாவது பெரிய கங்கை நீர் முதலைகள் வாழ்விடமாக மாறியுள்ளது.
- கடந்த 10 ஆண்டுகளில் (2015–2025) தமிழ்நாட்டில் வனவிலங்குத் தாக்குதல்களால் 685 மனித உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.
- உத்தரப் பிரதேசத்தின் எட்டா மாவட்டத்தில் உள்ள பட்னா பறவைகள் சரணாலயம் மற்றும் குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள சாரி-தாந்த் ஆகியவை இந்தியாவின் ராம்சர் வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.
- சுனபேடா வனவிலங்கு சரணாலயம் ஒடிசாவின் நுவாபடா மாவட்டத்தில் அமைந்து உள்ளது, இது சமீபத்தில் மாவோயிஸ்டுகள் அற்ற பகுதியாக அறிவிக்கப்பட்டது.
- அதிபர் டொனால்ட் டிரம்பின் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்கா பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து அதிகாரப்பூர்வமாக வெளியேறியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், சவூதி அரேபியாவின் அல்-ஜாவ்ஃப் பிராந்தியத்தின் உட்புறப் பாலைவனப் பகுதிகளில், வரலாற்றில் முதல் முறையாகப் பனிப்பொழிவு ஏற்பட்டது.
- இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள மணாலிக்கு அருகில் சுமார் 6,000 அடி உயரத்தில் ஒரு இணை மயில்கள் காணப்பட்டன என்ற நிலையில் இது வழக்கத்திற்கு மாறான ஒரு நிகழ்வாகும்.
- கேரளாவில் உள்ள கரிம்புழா வனவிலங்கு சரணாலயத்தில் நடத்தப்பட்ட விலங்கின கணக்கெடுப்பில், அந்த சரணாலயத்தில் பல புதிய இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- மத்திய அமெரிக்காவின் செயல்பாட்டில் உள்ள எரிமலைகளில் ஒன்றான வோல்கன் டி ஃபுயேகோ (Volcano of Fire) சமீபத்தில் குவாத்தமாலாவில் வெடித்தது.
- தமிழ்நாட்டில் கடற்பசுக்களின் எண்ணிக்கை 270 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் முதல் கடல் ஆமை பாதுகாப்பு மையத்திற்கான அடிக்கல் சென்னையில் உள்ள கிண்டியில் நாட்டப்பட்டது.
- கேரளாவிற்குப் பிறகு, கோவா மாநில அளவில் பறவைகள் பரவலை வெளியிட்ட இரண்டாவது இந்திய மாநிலமாக உருவெடுத்துள்ளது
- இந்திய இமயமலையில் ஹெமிலெசினம் இண்டிகம் என்ற புதிய காளான் இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.
- மேற்கு வங்காளக் கடற்கரையில் வடக்கு வங்காள விரிகுடாவில் இரண்டு புதிய கடல் புழு இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர், இந்த இனங்கள் நாமலிகாஸ்டிஸ் சோலெனோடோக்னாதா மற்றும் நேரீஸ் த்ரிதியே ஆகும்.
- இந்தோனேசியாவின் சுலவேசியில் ஒரு ரெட்டிகுலேட்டட் மலைப்பாம்பு (மலாயோபிதான் ரெட்டிகுலட்டஸ்) கண்டு பிடிக்கப் பட்டது.
- சால்டிசிடே குடும்பத்தைச் சேர்ந்த அரிய துள்ளும் சிலந்தியான கோலிட்டஸ் பிலினேட்டஸ், இந்தியாவில் முதன்முறையாக அசாமில் பதிவு செய்யப்பட்டது.
- கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் டிப்ளோசென்ட்ரம் பாப்பிலோசம் என்ற புதிய மந்தாரை இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர் என்ற நிலையில் இது தெற்கு மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழும் டிப்ளோசென்ட்ரம் இனத்தைச் சேர்ந்தது.

- ராஜஸ்தானின் பாரன் மாவட்டத்தில் உள்ள ஷெர்கர் சரணாலயத்தில் துரும்பன் பூனை உயிருடன் இருப்பது பதிவு செய்யப்பட்டது.
- 16வது தாமிரபரணி பகுதி நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பில் தெற்கு தமிழ்நாட்டில் 21,000க்கும் மேற்பட்ட நீர்ப்பறவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- தெலுங்கானாவின் பகால் வனவிலங்கு சரணாலயத்தில் "டிக்லிப்டெரா பகாலிகா" என்ற புதிய பூக்கும் தாவர இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சமீபத்தில், இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் (ICAR) - மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (CMFRI) ஆகியவை சதுப்புநில மட்டியான ஜெலோயினா எரோசாவின் காப்பினப்பெருக்கத்தை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- ஆராய்ச்சியாளர்கள் கேரளாவில் லிரியோதெமிஸ் கெரலென்சிஸ் என்ற புதிய தட்டாம்பூச்சி இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள ஆனைமலை பகுதிகளின் மனிதர்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலப்பரப்புகளில் சிங்க வால் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சமீபத்திய ஆய்வு தெரிவிக்கிறது.
- நாகாலாந்தில் உள்ள சாங்டம் பழங்குடி அமைப்பு பாங்கோலின்களைப் பாதுகாக்கவும் சட்டவிரோத வேட்டை மற்றும் வர்த்தகத்தை நிறுத்தவும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- அந்தமான் தீவுகளில் உள்ள திக்லிபூரில் சமீபத்தில் ஒரு சேற்று எரிமலை வெடித்தது.
- வனத்துறை நடத்திய பொது வாக்கெடுப்பில் இந்திய சாம்பல் நிற இருவாச்சி 'திருப்பத்தூரின் பறவை' மாவட்டமாக வாக்களிக்கப்பட்டது.
- சத்தீஸ்கர் வனத்துறையானது, மலபார் கறுப்பு வெள்ளை இருவாச்சிப் பறவைக்காக உதந்தி சீதாநதி புலிகள் காப்பகத்தில் ஆறு "ஹார்ன்பில் உணவகங்களை" தொடங்கி உள்ளது.
- "தெற்கு வங்காளத்தின் சிறுநீரகங்கள்" என்று அழைக்கப்படும் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள சதுப்பு நிலங்கள் ஆண்டுக்கு சுமார் 2.1% என்ற அளவில் வேகமாக சுருங்கி வருகின்றன.
- மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில் மூன்று புதிய குட்டிகள் பிறந்ததுடன் இந்தியாவின் மொத்த சிறுத்தைப்புலிகளின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்தது.
- "குரங்கு உண்ணும் பறவை" என்று பிரபலமாக அறியப்படுகிற பிலிப்பைன்ஸ் கழுகு உலகின் மிகப்பெரிய மற்றும் அரிதான கழுகுகளில் ஒன்றாகும்.
- ‘சமூக அடிப்படையிலான வனவிலங்குப் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்காக பலமு புலிகள் சரணாலயம் ‘வன்ஜீவி தீதி’ எனும் முன்முயற்சியைத் தொடங்கியது.
- இந்திய விலங்கியல் ஆய்வக அறிவிலாளர்கள் கிழக்கு இமயமலையில் லெபிடோகாம்பா சிக்கிமென்சிஸ் என்ற புதிய டிப்ளூரா இனத்தைக் கண்டுபிடித்து உள்ளனர்.
- ஆஸ்திரேலிய பிரதேசத்தில் H5N1 என்ற பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக உறுதிப் படுத்தப்பட்ட முதல் பறவை இனமாக ஜென்டூ பெங்குயின்கள் மாறியுள்ளது.
- நைஜரின் சஹாரா பாலைவனத்தில் ஸ்பினோசொரஸ் மிராபிலிஸ் என்ற புதிய டைனோசர் இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- காங்கோ ஜனநாயகக் குடியரசில் உள்ள மை-நோம்பே ஏரி மற்றும் தும்பா ஏரி ஆகியவை அருகிலுள்ள மக்கு நிலங்களில் (Peatland) சேமிக்கப்பட்ட பண்டைய கார்பனை வெளியிடுகின்றன.

- சர்வதேச பொருளாதார உறவுகள் ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில் (ICRIER) " Healing Soils in India: For Better Crop Health and Human Nutrition" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இந்தியாவின் முதல் தேவாங்கு பாதுகாப்பு மையம் திண்டுக்கல் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- புலம் பெயரும் வனவிலங்கு இனங்களின் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் (CMS) கீழ், வரிக் கழுதைப்புலிகளை இணைப்பு I மற்றும் II-இல் சேர்க்க தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் நாடுகள் முன்மொழிந்துள்ளன.
- பசுமை ஹைட்ரஜன் வழிப்பொருட்களின் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக, தேசிய பசுமை ஹைட்ரஜன் திட்டத்தின் கீழ் பசுமை அம்மோனியா மற்றும் பசுமை மெத்தனால் தரநிலைகளை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- குனோ தேசியப் பூங்காவில் 'ஜுவாலா' என்ற சிறுத்தை ஐந்து குட்டிகளை ஈன்றெடுத்ததைத் தொடர்ந்து, இந்தியாவில் சிறுத்தைகளின் எண்ணிக்கை 53ஐ எட்டியுள்ளது, இதன் மூலம் இந்தியாவில் பிறந்த சிறுத்தைக்குட்டிகளின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தின் சம்பா மாவட்டத்தில் உள்ள உயரமான பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் கடமான் (Rusa unicolour) முதல்முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இந்திய மாநிலங்களின் நிதி நிலையை மதிப்பிடுவதற்காக நிதி ஆயோக் 'நிதி ஆரோக்கியக் குறியீடு (FHI) 2026' என்ற குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தின் சோலன் பகுதியில் உள்ள இமயமலை அடிவாரத்தில் அசிடாக்சாந்தா பாராடோடோஃப்லாவா மற்றும் ஹெமிலியா சுனேரியே ஆகிய இரண்டு புதிய பழ ஈ இனங்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள ஆர்ஜியப்பள்ளி கடற்கரையில் முதன் முறையாக ஸ்டெனோதோ லோவ்ரி என்ற அரிய வகை கடல்வாழ் ஆம்பிபாட் / ஒட்டு மீன் கண்டறியப்பட்டுள்ளது.
- அறிவியலாளர்கள் இந்தியாவின் முதல் விரிவான மின்மினிப் பூச்சிகளின் பட்டியலை வெளியிட்டுள்ளனர் என்ற நிலையில் இதில் 1881-2025 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப் பதிவுகளிலிருந்து 27 பேரினங்களைச் சேர்ந்த 92 இனங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன.
- அந்தமான் தீவுகளில் சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு, ரெடுவிடே குடும்பத்தைச் சேர்ந்த அரிய வகை குகைவாழ் பூச்சியான 'மயோபேன்ஸ் கெம்பி' மீண்டும் கண்டறியப் பட்டுள்ளது.
- அசாமின் மானஸ் தேசியப் பூங்காவின் புல்வெளிகளில் மெலஸ்டோமேட்டேசி குடும்பத்தைச் சேர்ந்த 'ஆஸ்பெக்கியா ஜுபின்காஜியானா' என்ற புதிய தாவர வகை கண்டுபிடிக்கப் பட்டு, அதற்குப் பாடகர் ஜுபீன் கார்க் நினைவாகப் பெயரிடப் பட்டு உள்ளது.
- குஜராத்தின் பாவகத் மலையில் அரிய வகை நீலம் மற்றும் வெள்ளை நிறங்கொண்ட ஈப்பிடிப்பான் (மஸ்சிகாபிடே குடும்பம்) பறவை காணப்பட்டது.
- இந்திய விலங்கியல் ஆய்வு மையம் (ZSI), கிழக்கு இமயமலையில் 'கௌலோசிரா ஹாலோவே' மற்றும் 'அசுரா பக்ஸா' ஆகிய இரண்டு புதிய பாசி அந்துப்பூச்சி இனங்களைக் கண்டறிந்துள்ளது.

- அசாம் தேயிலைத் தோட்டங்களில் பிராகோனிடே குடும்பத்தைச் சேர்ந்த சிலோனஸ் (காரினிசிலோனஸ்) மகாதேப் என்ற புதிய ஒட்டுண்ணி குளவி இனம் கண்டறியப் பட்டு உள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் சுமார் 189 ஆண்டுகளுக்குப் பிறகு ஹென்கெலியா மோனோஃபில்லா என்ற அரிய வகைத் தாவரம் மீண்டும் கண்டறியப்பட்டுள்ளது, இது கெஸ்னேரியாசி குடும்பத்தைச் சேர்ந்தது; இது முதன்முதலில் 1836 ஆம் ஆண்டு சேகரிக்கப் பட்டது.
- திருச்சூர் மாவட்டத்தில் உள்ள பேச்சி-வாழானி வனவிலங்கு சரணாலயத்தில் டிராவிடா பேரினத்தையும் மோனிலிகாஸ்ட்ரிடே குடும்பத்தையும் சேர்ந்த டிராவிடா வாழானியா என்ற புதிய மண்புழு இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியைப் பயன்படுத்தி அறிவியலாளர்கள் புதிய வகை உருகிய திரவப் புறக்கோள்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்தியப் புவியியல் ஆய்வு மையத்தால் (GSI) கலிஞ்சர் குன்று தேசிய புவிசார் பாரம்பரியத் தளமாக அறிவிக்கப்பட்டது.
- இந்தியத் தாவரவியல் ஆய்வு மைய அறிவியலாளர்கள், அருணாச்சலப் பிரதேசத்தின் ஜிரோ பள்ளத்தாக்கு அருகே ஆக்டினிடியா இண்டிகா எனப்படும் புதிய வகை காட்டுக் கிவி பழ இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்திய விலங்கியல் ஆய்வு மையமானது (ZSI), மகாராஷ்டிராவின் புனேவில் டிஎன்ஏ அடிப்படையிலான வகைப்பாட்டியலைப் பயன்படுத்தி 'நியோலோபோப்டெரா பெனின்சுலாரிஸ்' என்ற புதிய கரப்பான் பூச்சி இனத்தைக் கண்டுபிடித்தது.
- ₹10,000 கோடி மதிப்பிலான உள்நாட்டு பசுமை உள்கட்டமைப்புப் பத்திரங்களை வெளியிட்ட இந்தியாவின் முதல் வங்கி என்ற பெருமையை பாங்க் ஆஃப் பரோடா (BoB) பெற்றது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள வீராங்கணா துர்காவதி புலிகள் காப்பகம் (VDTR), திட்டம் சிவிங்கிப்புலிகளின் கீழ் சிவிங்கிப்புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான இந்தியாவின் மூன்றாவது இடமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இந்திய வன ஆய்வு நிறுவனம் (FSI), செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான அனாவரன் காடழிப்பு அமைப்பிலிருந்து எச்சரிக்கைகளை வழங்குவதை 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து நிறுத்தியுள்ளது.
- 'பவசாகரா பரிந்துரை மையம்' ஆழ்கடல் விலங்கினங்களுக்கான தேசிய களஞ்சியமாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- டேராடூன் அருகிலுள்ள சிவாலிக் அடிவாரத்தில் கௌராமி உள்ளிட்ட நன்னீர் மீன் புதைபடிவங்கள் முதல்முறையாகக் கண்டறியப்பட்டன.
- ஐரோப்பிய ஒன்றியம் (EU) அதன் நீர் மாசுக் கண்காணிப்புப் பட்டியலில் PFAS (பெர்- மற்றும் பாலிஃப்ளூரோஅல்கைல் பொருட்கள்)-ஐ சேர்த்துள்ளது.
- இந்திய விலங்கியல் ஆய்வுத் துறை (ZSI) அறிவியலாளர்கள் தமிழகக் கடலோரத்தில் இரண்டு புதிய கடல்வாழ் உயிரினங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- நெடுந்தொலைவுப் பயணத்திற்குப் பிறகு, நர்கொண்டம் தீவில் வெள்ளை உள்ளான் பறவை ஒன்று காணப்பட்டது.
- சீனாவில் நு நதி என்று அழைக்கப்படும் சல்வீன் நதியில் பாதுகாப்பான வரம்புகளுக்கு மேல் அதிக அளவு ஆர்சனிக் மாசுபாடு காணப்படுகிறது.

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள நன்னீர் ஈரநிலமான ஷேகா ஏரி பறவைகள் சரணாலயம் இந்தியாவின் 99-வது ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது
- சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் உத்தரப் பிரதேசத்தில் உள்ள பாராசிங்கா வனவிலங்கு சரணாலயத்தைச் சுற்றி சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தை (ESZ) அறிவிப்பதற்கான வரைவு அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.
- அசாமில் நிலத்தடியில் வாழும் 'கிட்சாக் நகனா' எனப்படும் புதிய பார்வையற்ற மீன் இனம் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- நீலகிரி வரையாடு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாடுகளைக் கணக்கெடுக்கும் மூன்றாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு, மேற்கொள்ளப்பட்டது.
- செர்னோபில் பேரழிவின் 40-வது ஆண்டு நினைவு தினம் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 அன்று குறிக்கப்பட்டது.
- அரிய வகை கடல் நத்தையான டிஸ்கோடோரிட் செபுயென்சிஸ் இந்தியாவில் முதல் முறையாக மும்பையின் ஹாஜி அலி பகுதியில் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் சாங்லாங் மாவட்டத்தில் உள்ள நம்தாபா புலிகள் காப்பகத்தில் லிம்னோனெக்டெஸ் மோடிஜில் என்ற புதிய பல் கொண்ட தவளை இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- பாரிஸ் ஒப்பந்தத்தின் கீழ், பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கு (UNFCCC) 2031–35 ஆம் ஆண்டிற்கான புதுப்பிக்கப்பட்ட தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDCs) இந்தியா சமர்ப்பித்து உள்ளது.
- இந்தியாவில் சால்டிசிடே குடும்பத்தைச் சேர்ந்த மோக்ரஸ் ஷுஷ்கா மற்றும் மோக்ரஸ் புனே ஆகிய இரண்டு புதிய குதிக்கும் சிலந்தி இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மோக்ரஸ் ஷுஷ்கா ராஜஸ்தான் மற்றும் குஜராத்தின் வறண்ட பகுதிகளிலும், மோக்ரஸ் புனே மகாராஷ்டிராவின் நகர்ப்புற பூங்காக்களிலும் காணப்பட்டன.
- அமெரிக்காவின் அரிசோனா பாலைவனத்தில், தங்களை விட மிகப் பெரிய அறுவடை எறும்புகளை தாக்காமல் தூய்மைப்படுத்தும் "துப்புரவு எறும்புகளை" அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- ஐக்கிய நாடுகள் சபை (UN), மீத்தேன் எச்சரிக்கை மற்றும் பதில் அமைப்பை (MARS) நிலக்கரி மற்றும் கழிவுத் துறைகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு முட்டையிடும் பருவத்தில், தமிழ்நாடு கடற்கரையோரம் சுமார் 1.65 லட்சம் ஆலிவ் ரிட்லி கடல் ஆமைக் குஞ்சுகள் கடலில் விடப்பட்டன.
- கொலம்பியா மற்றும் பெருவின் மேகக் காடுகளில் 20 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய சோலனேசி குடும்பத்தைச் சேர்ந்த 'தத்துரோடென்ட்ரான்' என்ற அரிய வகை மாபெரும் மர இனத்தை ஆண்டிஸ் மலைத்தொடரில் அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- 2025-ஆம் ஆண்டில், இந்தியாவில் 166 புலிகள் உயிரிழந்த நிலையில் இது 1973-ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான மிக அதிக வருடாந்திர எண்ணிக்கையாகும்.
- இந்தியாவின் முதல் செயற்கைக்கோள் குறிக்கப்பட்ட கங்கை மென்-ஓடு ஆமை ஆனது 2026 ஆம் ஆண்டிற்கான தேசிய அழிந்து வரும் உயிரினங்கள் தினம் அன்று காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் விடுவிக்கப்பட்டது.
- 'பாரத் இன்னோவேட்ஸ் 2026' திட்டத்தின் கீழ், இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த கார்பன் பிடிப்பு, பயன்பாடு மற்றும் சேமிப்பு (CCUS) கள ஆய்வக வசதி இந்திய தொழில் நுட்பக் கழகம் (IIT) மும்பையில் திறந்து வைக்கப்பட்டது.

- 2026-ஆம் ஆண்டிற்கான சர்வதேசப் பெரும் பூனைகள் கூட்டமைப்பு (IBCA) உச்சி மாநாட்டிற்கு முன்னதாக, குஜராத்தின் சசான் கிரி பகுதியில் 'சிங்கம்' இனங்கள் குறித்த சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.
- அறிவியலாளர்கள், கர்நாடகாவின் காவேரி ஆற்றுப் படுகையில் 'லேபியோ காகே' என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய நன்னீர் மீன் இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- தெற்கு கிழக்குத் தொடர்ச்சி மலையில், தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சஞ்சீவி மலையில், வைட்டேசி குடும்பத்தைச் சேர்ந்த 'சைஃபோஸ்டெம்மா அண்ணாமலையி' என்ற புதிய தாவர இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- 31,468.25 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட சரண்டா வனத்தை வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்குமாறு ஜார்க்கண்ட் மாநில அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- இந்தியாவின் குஜராத்தில் உள்ள பர்தா வனவிலங்கு சரணாலயம், ஆசிய சிங்கங்களின் இரண்டாவது இயற்கை வாழ்விடமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- காற்று மாசுபாட்டைக் கட்டுப்படுத்த உதவும் இந்தியாவின் முதல் சூரிய சக்தியால் இயங்கும் "பாசி மரம்" (Algae Tree) போபாலில் நிறுவப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மணிப்பூரில் செயற்கைக்கோள் அலைபரப்பிகள் பொருத்தப்பட்ட அபாபாங் மற்றும் அலாங் எனப்படும் இரண்டு அமுர் பருந்து பறவைகள், வசந்த கால வலசையின் போது தென்னாப்பிரிக்காவிலிருந்து கிழக்கு ஆசியாவிற்கு திரும்புகின்றன.
- சவூதி அரேபியா சர்வதேசப் பெரும் பூனை இனங்கள் கூட்டணியின் (IBCA) 26-வது உறுப்பு நாடாக மாறியுள்ளது.
- 188 ஆண்டுகளுக்குப் பிறகு, அருணாச்சலப் பிரதேசத்தின் சாங்லாங் மாவட்டத்தில் 'வாக்சினியம் பிலிஃபெரம்' என்ற அரிய வகை புளுபெர்ரியுடன் தொடர்புடைய தாவரம் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- நகோயா நெறிமுறையின் கீழ் 'சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்களை' (IRCCs) வழங்குவதில் இந்தியா உலக அளவில் முன்னணியில் உள்ளது.
- 2026 ஆம் ஆண்டு சர்வதேச பல்லுயிர் பெருக்க தினத்தின் கருத்துருவான Local Action, Global Impact என்பதன் கீழ் கோப்ரா நீர்த்தேக்கம் ஒரு பல்லுயிர் மாதிரி அமைப்பாக உருவெடுத்துள்ளது.
- இந்தியா 191 வகையான கரப்பான் பூச்சி இனங்களைப் பதிவு செய்துள்ளது, இவற்றில் சுமார் 60%க்கும் அதிகமானவை இந்தியாவில் மட்டுமே வாழக்கூடிய உள்நாட்டு இனங்களாகும்.
- உத்தரப் பிரதேசத்தின் தேசிய சம்பல் சரணாலயத்தில் அடர் பழுப்பு நிற புள்ளி கொண்ட பூனை முதல்முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- அறிவியலாளர்கள், செந்தூர்ணி வனவிலங்கு சரணாலயத்தின் ஆற்றங்கரை காடுகளில் ஹம்போல்டியா நைரியானா என்ற புதிய பசுமைமாறா மர வகையை கண்டுபிடித்துள்ளனர்
- அஸ்ஸாமின் காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் முதன் முறையாக மஞ்சள்நிறத் தொண்டை கொண்ட கரும்வெருகு (மார்டெஸ் ஃபிளாவிக்குலா) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- மெசாலினா என்ற பேரினத்தைச் சேர்ந்த புதிதாகக் கண்டறியப்பட்ட 'மெசாலினா பிஷ்னோய்' என்ற பல்லி இனமானது, ராஜஸ்தானின் பிகானேர் மாவட்டத்தில் உள்ள கஜ்னேர் அருகே உள்ள திறந்தவெளி பகுதிப் பாலைவன வாழ்விடத்திலிருந்து இந்தியாவில் முதன்முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

- ❖ லட்சத்தீவு தீவுக்கூட்டத்தில் உள்ள கட்மட் தீவு அருகே உள்ள மாபெரும் 'பவோனா கிளாவஸ்' (உருளைக்கிழங்கு திட்டு) பவளப்பாறை தொகுதியை கடல் ஆராய்ச்சியாளர்கள் ஆவணப்படுத்தியுள்ளனர்.
- ❖ சமீபத்திய ஒருங்கிணைந்த கணக்கெடுப்பில், தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாட்டின் எண்ணிக்கை 1,364 ஆக அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ அறிவியலாளர்கள், மியான்மர் எல்லைக்கு அருகிலுள்ள நாகாலாந்தின் கிபைர் மாவட்டத்தில் 'அமோலோப்ஸ் கமல்' (நாகாலாந்து நீர்வீழ்ச்சிவாழ் தவளை) என்ற புதிய தவளை இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ❖ தமிழ்நாட்டின் முதலாவது விரிவான மாநில அளவிலான இரைப்பிடிப்பான் பறவைகள் மதிப்பீட்டில் 51 இரைப்பிடிப்பான் பறவை இனங்களைச் சேர்ந்த 5,712 பறவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன
- ❖ தமிழ்நாடு ஒருங்கிணைந்த பறவைகள் மதிப்பீடு 2025-இல் 397 நீர்நிலைப் பறவை இனங்கள் மற்றும் 401 நிலவாழ் பறவை இனங்கள் உள்ளிட்ட மொத்தம் 798 பறவை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன
- ❖ மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவில் வனவிலங்கு கணக்கெடுப்பின் போது, ஒரு அரிய வகை காட்டுப் பூனை (caracal) பதிவாகியுள்ளது.
- ❖ உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஜெய் பிரகாஷ் நாராயண் பறவைகள் சரணாலயமானது (சுர்ஹா தால்) ராம்சார் தளத்தின் கீழ் இந்தியாவின் 100-வது ராம்சார் தளமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- ❖ உலகளவில் இதுவரை பதிவு செய்யப்பட்டவற்றில் மிக விரைவான மற்றும் மிகவும் பரவலான நான்காவது உலகளாவிய பவளப்பாறை வெளுத்தல் நிகழ்வு 2025 ஆம் ஆண்டின் மத்தியில் முடிவடைந்திருக்கலாம் என அறிவியலாளர்கள் தெரிவித்து உள்ளனர்.
- ❖ கேரளாவில் ஆண்டு முழுவதும் பயிரிட ஏற்ற, புதர் வகையைச் சேர்ந்த 'KAU தேஜஸ்வினி' என்ற புதிய பச்சை மிளகாய் ரகத்தை கேரள வேளாண் பல்கலைக்கழகம் (KAU) வெளியிட்டு உள்ளது.
- ❖ அருணாச்சலப் பிரதேசத்தின் லாங்டிங் மாவட்டத்தில் உள்ள செதுவா கிராமத்தில் அரிய வகை மஞ்சள்நிற பஃப்பால் காளான் பதிவு செய்யப்பட்டது.
- ❖ மியான்மரில் உள்ள ஒரு தூய்மையான சமையல் திட்டத்திற்காக பாரிஸ் ஒப்பந்தத்தின் சரத்து 6.4-இன் கீழ் ஐக்கிய நாடுகள் சபை முதன்முறையாக கார்பன் வரவுகளை வழங்கியுள்ளது.
- ❖ பனிச்சிறுத்தைகள் மற்றும் குளிர் பாலைவன சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கான பிரத்யேக அமைப்பாக SHAN (பனிச்சிறுத்தை மற்றும் உயரமான மலைப்பகுதிச் சூழல்) பாதுகாப்பு சங்கத்திற்கு லடாக் துணைநிலை ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- ❖ ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்றத்திற்கான கட்டமைப்பு மாநாட்டின் (UNFCCC COP31) துருக்கியின் தலைமை மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து 'டர்க்கைஸ் இணைப்பு முன்னெடுப்பைத்' (TNI) தொடங்கி உள்ளன.
- ❖ பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனாவின் (PMMSY) கீழ் தமிழ்நாட்டின் ராமநாதபுரம் கடற்கரையில் இந்தியாவின் முதல் முப்பரிமாண (3D) அச்சிடப்பட்ட செயற்கை பவளப்பாறை தொகுதிகள் நிலைநிறுத்தப்பட உள்ளன.

- செயின்ட் ஹெலினா தீவில் வசிக்கும் செஷல்ஸ் ராட்சத ஆமையான ஜொனாதன், உலகின் மிக வயதான நிலவாழ் விலங்கு ஆகும், மேலும் இது கின்னஸ் உலக சாதனை சின்னமாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- மேகாலயா மாநில உயிரியல் பூங்காவில் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் குட்டை வால் குரங்கு (மகாக்கா ஆர்க்டாய்டீஸ்) முதல்முறையாக வெற்றிகரமாக ஈனப் பட்டு உள்ளது.
- சர்வதேசப் பெரும் பூனைகள் கூட்டமைப்பின் (IBCA) 27-வது உறுப்பு நாடாக வங்காள தேசம் இணைந்துள்ளது.
- நியோகோலோ-கோபா தேசியப் பூங்காவில் இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) முன்னெடுக்கும் புதிய பாதுகாப்பு முன்னெடுப்பிற்கு உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி (GEF) அமைப்பானது 1.26 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஒரு புதிய ஊர்வனவியல் ஆய்வானது, இந்தியாவில் சிஸ்தான் மண் பாம்பின் (எரிக்ஸ் சிஸ்டனென்சிஸ்) முதல் உறுதிப்படுத்தப்பட்ட பதிவைப் புகாரளித்துள்ளது.
- மேற்கு ஐரோப்பா முழுவதும் ஒரு தீவிரமான வெப்ப அலைக்கு ஒமேகா பிளாக் வானிலை அமைப்பு காரணமாக அமைந்துள்ளதுடன் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினின் சில பகுதிகளில் வெப்ப நிலை 40°C ஐத் தாண்டியுள்ளது.
- ஒடிசாவில் உள்ள சத்கோசியா புலிகள் காப்பகத்தில் புலிகள் மறுஅறிமுகத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.
- வன மகோத்சவம் 2026, இந்தியா முழுவதும் 2026 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் ஜூலை 7 வரை வருடாந்திர "காடுகளின் திருவிழாவாக" அனுசரிக்கப்படுகிறது.
- இந்திய விலங்கியல் ஆய்வகத்தின் விலங்கு கண்டுபிடிப்புகள்-2025 அறிக்கையானது, 483 புதிய சிற்றினங்கள் மற்றும் இந்தியாவில் முதல்முறையாகப் பதிவு செய்யப்பட்ட 226 சிற்றினங்கள் உட்பட இந்தியாவின் விலங்கினங்களில் 709 புதிய சேர்ப்புகளைப் பதிவு செய்துள்ளதுடன் இதன் மூலம் மொத்த விலங்கினப் பல்லுயிரியம் 105,953 சிற்றினங்களாக உயர்ந்து உள்ளது.
- தாவர கண்டுபிடிப்புகள்-2025 அறிக்கையானது, அறிவியலுக்குப் புதிய 221 வகைப்பாடுகள் (taxa) மற்றும் இந்தியாவுக்கான 132 புதிய பரவல் பதிவுகள் உட்பட இந்தியாவின் தாவர இனங்களில் 353 புதிய சேர்ப்புகளைப் பதிவு செய்துள்ளது.
- ஒரைசா ருஃபிபோகன் என்ற காட்டு நெல் வகையைப் பாதுகாப்பதற்காக, அஸ்ஸாமில் உள்ள போர்ஜூலி ஈரநிலம் அதிகாரப்பூர்வமாக பல்லுயிர் பாரம்பரியத் தளமாக (BHS) அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஹிமாலயன் பாங்கோலின் (மணிஸ் அவுரிடா) என்பது சீன பாங்கோலினிலிருந்து (மணிஸ் பென்டாடாக்டைலா) தனித்தனியாக இருக்கும் ஒரு தனித்துவமான இனமாகும்.
- பீகாரின் முங்கேரில் உள்ள ஓர் ஆலமரம் சுமார் 700 ஆண்டுகள் பழமையானது என மதிப்பிடப் பட்டுள்ளதுடன் இது உலகின் மிகவும் பழமையான துல்லியமாக வயதறியப் பட்ட ஆலமரமாக அறிவியல் பூர்வமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
- 2002 ஆம் ஆண்டின் உயிரியல் பன்முகத்தன்மை சட்டத்தின் கீழ் இந்தியாவின் 21-வது அங்கீகரிக்கப்பட்ட களஞ்சியமாக மிசோரமில் உள்ள இயற்கை வரலாற்று அருங்காட்சியகம் (NHM) அறிவிக்கப் பட்டுள்ளது.
- இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியமானது (IUCN), 175,909 உயிரினங்கள் உள்ள அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினங்களின் புதுப்பிக்கப்பட்ட செந்நிறப் பட்டியல் 2026-ஐ வெளியிட்டது. அவற்றில் 49,505 உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன.

- 2026 ஆம் ஆண்டு ஜூன் 25 முதல் 27 வரை நடத்தப்பட்ட நான்காவது காண்டாமிருகங்கள் கணக்கெடுப்பின்படி, உத்தரப் பிரதேசத்தின் துத்வா புலிகள் காப்பகத்தில் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது.
- ராஜஸ்தானின் உதய்பூரில் உள்ள உபேஷ்வர் வனவிலங்குப் பகுதியில் சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு அரிய வகை லௌடங்கியா கொடிப்பாம்பு (அஹேதுல்லா லௌடங்கியா) ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தியத் தர நிர்ணய அமைப்பு (BIS), "அலையாத்தி காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுத்தல் — வழிகாட்டுதல்கள்" என்ற தலைப்பில் அலையாத்தி காடுகள் சுற்றுச்சூழல் அமைப்பை மீட்டெடுப்பதற்கான இந்தியாவின் முதல் தர நிலையை தயாரித்து வருகிறது.
- மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனமானது (CMFRI) தெற்கு கேரளாவின் அரபிக்கடல் பகுதியில் 'சைட்டோப்சிஸ் இண்டிகா' என்ற புதிய ஆழ்கடல் மீன் இனத்தைக் கண்டறிந்து உள்ளது.
- 'சயானந்தஸ் ஹூக்கேரி' என்ற அரிய வகை ஆல்பைன் மலர் அருணாச்சலப் பிரதேசத்தில் 158 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கொலோபஸ் குடும்பத்தைச் சேர்ந்த இதற்கு 'கொலோபஸ் காங்கோயென்சிஸ்' என அறிவியல் பெயரிடப்பட்டுள்ள காங்கோ ஜனநாயகக் குடியரசின் (DRC) மழைக்காடுகளில் 'லிக்வேலி' என்ற புதிய குரங்கு இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஆராய்ச்சியாளர்கள் அருணாச்சலப் பிரதேசத்தின் சியாங் பள்ளத்தாக்கில் இரண்டு புதிய தனித்த தேனீ இனங்களைக் கண்டுபிடித்தனர்.
- உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான A23a, கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக நகர்ந்து வந்த நிலையில், தென் அட்லாண்டிக் பெருங்கடலில் சிறிய துண்டுகளாக உடைந்து உள்ளது.
- கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலையில் அறிவியலாளர்கள் 'லெஸ்டெஸ் பலோட்டி' (Lestes paloti) என்ற புதிய பரந்த இறக்கைகளைக் கொண்ட ஊசித்தும்பி இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- அறிவியலாளர்கள் மேகாலயா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் சிமோனியா லாபா (Simonia lawbah) மற்றும் ஹமடலிவா பாபிகொண்டா (Hamataliwa papikonda) ஆகிய இரண்டு புதிய சிலந்தி இனங்களைப் பதிவு செய்துள்ளனர்.
- வனவிலங்குகள் மற்றும் தாவரங்களின் அழிந்துவரும் இனங்களின் சர்வதேச வர்த்தகத்திற்கான மாநாட்டின் (CITES) தாவரங்கள் குழுவின் 28வது கூட்டம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்றது.
- லட்சத்தீவுகளில் பாக்கிசெலஸ் ரவிச்சந்திரனி (Pachycheles ravichandrani) எனப்படும் புதிய வகை பீங்கான் நண்டு இனத்தை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- புனேவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ARI) ஆராய்ச்சியாளர்கள், மேற்குத் தொடர்ச்சி மலையில் அல்லோகிராஃபாவின் (லைக்கனை உருவாக்கும் பூஞ்சை) அல்லோகிராஃபா கேரலென்சிஸ், அல்லோகிராஃபா நாயகே, அல்லோகிராஃபா பாரா கான்சங்குனியா, அல்லோகிராஃபா பெர்சிஸ்டின்ஸ்பெர்சா மற்றும் அல்லோகிராஃபா செமிகார்போனிசாட்டா ஆகிய ஐந்து புதிய இனங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ஒரு குறிப்பிட்ட பகுதியில் முற்றிலுமாக அழிந்துபோன புலிகளை, அறிவியல் பூர்வமாக மீண்டும் அறிமுகப்படுத்தும் உலகின் முதல் வெற்றிகரமான முயற்சி இந்தியாவின் ராஜஸ்தானில் உள்ள சரிஸ்கா புலிகள் காப்பகத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள துத்வா புலிகள் காப்பகத்தில் (DTR) இந்தியக் காண்டாமிருகங்களின் எண்ணிக்கை 53-ஆக உயர்ந்துள்ளது.

- உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள குக்ரைல் இரவு நேர உலா திட்டத்திற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.
- இஞ்சி அல்லியின் புதிய இனமான 'ஹெடிச்சியம் சுபீன்கார்கியானம்' (Hedychium zubeengargianum) என்பதற்கு மறைந்த அசாம் இசை மேதை சுபீன் கார்க் அவர்களின் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு பறவைகள் சரணாலயமானது, மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள தானே க்ரீக் ஃபிளமிங்கோ சரணாலயத்தில் (TCFS) உருவாக்கப்பட்டு வருகிறது.
- 2019 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி, மால்வி ஒட்டகங்களின் (வெள்ளை ஒட்டகம்) எண்ணிக்கை 102 ஆகக் குறைந்ததையடுத்து, இது அருகி வரும் இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஏரல் கடல் பகுதியில் பல்லுயிர் தன்மையை மீட்டெடுப்பதற்காக உஸ்பெகிஸ்தான், கராகல்பக்ஸ்தானில் 672 ஹூபாரா கானமயில்களை (கிளமிடோடிஸ் மேக்வீனி) விடுவித்தது.
- தேசியப் புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA), தெலங்கானாவில் உள்ள காவல் புலிகள் காப்பகத்தை, புலிகளை மீட்டெடுப்பதற்கான ஒரு முன்னுரிமைத் தளமாக அடையாளம் கண்டுள்ளது.
- கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள வரையாட்டுமுடி, அழிந்துவரும் நிலையில் உள்ள வரையாடுகளின் (நீலகிரி தார்) முக்கிய வாழ்விடமாக உருவெடுத்துள்ளதுடன், அதன் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.
- மேகாலயாவின் ரி-போய் (Ri-Bhoi) மாவட்டத்தில் நடந்த ஆய்வின் போது, ஜியுகோடாகஸ் உமியம் (Zeugodacus umiam) மற்றும் ஜியுகோடாகஸ் நாசிவிட்டாடஸ் (Zeugodacus nasivittatus) ஆகிய இரண்டு புதிய பழ ஈ இனங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்தனர்.
- ஒடிசாவின் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள புதாபாலங்கா நதியில் சூடோலாகுவியா கைரி (Pseudolaguvia khairii) என்ற புதிய நன்னீர் கெளுத்தி மீன் இனம் கண்டறியப் பட்டு உள்ளது.
- உலகில் உள்ள மொத்த காட்டுப் புலிகளில் சுமார் 70 சதவீதத்தைக் கொண்டுள்ள இந்தியா, உலகின் மிகப்பெரிய காட்டுப் புலிகள் எண்ணிக்கையைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது.
- அசாம் மாநிலத்தின் கோல்பாரா மாவட்டத்தில் தோண்டப்பட்ட கிணறுகளுடன் இணைக்கப்பட்ட நிலத்தடி நீர்நிலைகளில் 'ரக்தமிக்திஸ் அஞ்சி' (Rakthamichthys anchi) என்று பெயரிடப்பட்ட பார்வையற்ற, இரத்தச் சிவப்பு நிற விலாங்கு மீனின் புதிய இனம் ஒன்றை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள க்லாவ் ஏரி இந்தியாவின் 101வது ராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இது அம்மாநிலத்தின் முதல் ராம்சார் தளமாகும்.
- சாக்ஸிஃப்ராகா காண்டலப்ரம் (Saxifraga candelabrum) என்ற தாவரம் பூச்சியுண்ணும் தாவரம் என சார்லஸ் டார்வினின் 150 ஆண்டுகள் பழமையான கணிப்பை அறிவியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.
- நாகாலாந்தில் வேகமாகப் பாயும் லிகிம்ரோ நதியில் புதிய வகையைச் சார்ந்த நன்னீர் கெளுத்தி மீன் (சூடெசெனீஸ் லிகிம்ரோயென்சிஸ்) ஒன்று கண்டறியப்பட்டுள்ளது
- ஈரநில இருப்புப் பகுதிகளுக்கு தனித் தாங்கல் மண்டலம் அறிவிக்கப்படாத போதிலும், அறிவிக்கப்பட்ட அனைத்து ஈரநில இருப்புப் பகுதிகளுக்கும் 10 கி.மீ சுரங்கத் தாங்கல் மண்டலம் பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

- இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனமானது (ZSI), லெபிடோப்டெராவின் (பட்டாம் பூச்சிகள் மற்றும் அந்துப்பூச்சிகள்) தேசியப் பட்டியல் நிறைவடைந்ததை அறிவித்தது; அதன் இறுதித் தொகுதி Zoo taxa-வில் வெளியிடப்பட்டது.
- அமெரிக்காவின் மிகப்பெரிய நீர்த்தேக்கமான மீட் ஏரி (Lake Mead), கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,040.3 அடி (317.1 மீ) என்ற அதன் மிகக் குறைந்த நீர்மட்டத்தை எட்டியுள்ளது.
- குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்து சுமார் 35 கி.மீ தொலைவில் உள்ள 100 ஏக்கர் பரப்பளவிலான 'பை தி வாட்டர்ஸ்' என்ற குடியிருப்பு வளாகத்தில் 72,600 சதுர கெஜம் பரப்பளவில் 'ப்ளூ ஹார்ட்' என்ற மனிதனால் உருவாக்கப்பட்ட ஏரி உருவாக்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாட்டின் கொல்லிமலையில், டெரிடேசி குடும்பம் மற்றும் டெரிஸ் பேரினத்தைச் சேர்ந்த 'டெரிஸ் மதுசூதனனி' (Pteris madhusoodananii) என்ற புதிய பெரணி இனம் கண்டுபிடிக்கப்பட்டது.
- குஜராத்தின் 'கிரேட்டர் கிர்' (Greater Gir) நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட 16-வது சிங்கங்கள் எண்ணிக்கை மதிப்பீட்டில் (2025 ஆம் ஆண்டு மே மாதம்), ஆசியச் சிங்கங்களின் எண்ணிக்கை 891-ஆக அதிகரித்துள்ளது பதிவு செய்யப்பட்டுள்ளது.
- வடகிழக்கு இந்தியாவின் திரிபுராவில் இருந்து அம்மாச்சி அடுக்குத் தவளை (அமோலோப்ஸ் அம்மாச்சி), நாகாலாந்தில் இருந்து சென்டென்யு அடுக்குத் தவளை (அமோலோப்ஸ் சென்டென்யு) மற்றும் மேற்கு வங்கத்திலிருந்து அழகான அடுக்குத் தவளை (அமோலோப்ஸ் பெல்லா) ஆகிய மூன்று புதிய அடுக்குத் தவளை இனங்களை அறிவியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- அரிய வகை தனிமைப்படுத்தப்பட்ட இமயமலை தேனீயான 'கொலெட்ஸ் பூட்டானிகஸ்' (Colletes bhutanicus) அருணாச்சலப் பிரதேசத்தின் தவாங் மாவட்டத்தில் இந்தியாவில் முதல்முறையாகப் பதிவு செய்யப்பட்டது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

- உலக சிமெண்ட் மற்றும் கான்கிரீட் சங்கம் (GCCA)– இந்தியா ஆனது, தேசிய சிமெண்ட் மற்றும் கட்டிடப் பொருட்கள் சபை (NCB), 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதியன்று NCB சபையின் 63வது உருவாக்க தினத்தின் போது "Carbon Uptake by Concrete" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- வங்கித் துறையில் வளர்ந்து வரும் அபாயங்களை எடுத்துக்காட்டும் வகையில், இந்தியாவில் வங்கிகளின் போக்குகள் மற்றும் முன்னேற்றம் 2023–24 என்ற அறிக்கையை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டது.
- இந்தியாவின் நிலத்தடி நீர் நிலையை மதிப்பிடுவதற்காக ஜல் சக்தி அமைச்சகம் ஆனது 2025 ஆம் ஆண்டு மாறுநிலை நிலத்தடி நீர் வள மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டது.
- 2025 ஆம் ஆண்டு உலக வானிலை பண்புக்கூறு குறித்த வருடாந்திர அறிக்கையின் படி, 2025 ஆம் ஆண்டானது, 2024 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட உலகளாவிய வெப்பநிலை பதிவை விட அதிகமாக இல்லாவிட்டாலும், இதுவரை பதிவு செய்யப்பட்ட வெப்பமான ஆண்டுகளில் ஒன்றாக இது இருக்கும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படும் அதன் நிதி நிலைத்தன்மை அறிக்கையை (FSR) 2026 ஆம் ஆண்டு ஜனவரி 02 ஆம் தேதியன்று வெளியிட்டது.

- ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டுக்கான சர்வதேச மையம் (ICIMOD) ஆனது, இந்து குஷ் இமயமலை (HKH) பிராந்தியத்திற்கான பருவநிலை நிதி குறித்த அறிக்கையை வெளியிட்டது.
- இந்தியத் தலைமை கணக்காளர் (CAG) இரண்டாவது 'மாநில நிதி குறித்த அறிக்கை 2023–24' என்ற அறிக்கையை வெளியிட்டார்.
- தேசியப் பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) ஆனது 2025 ஆம் ஆண்டு ஆர்டிக் பெருங்கடல் அறிக்கையை வெளியிட்டது.
- நிதி ஆயோக் அமைப்பானது வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்துடன் இணைந்து "A Comprehensive Framework to Promote Affordable Housing" என்ற அறிக்கையைத் தயாரித்துள்ளது.
- ஐ.நா.வின் உலகப் பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள் அறிக்கை 2026 ஆனது ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையால் (UN DESA) தயாரிக்கப்பட்டது.
- உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB), ஒருங்கிணைந்த குற்றவியல் நீதி அமைப்பு (ICJS) 2.0 தரவரிசைகளின் இரண்டாவது பதிப்பை வெளியிட்டது.
- 2025–26 ஆம் நிதியாண்டின் முதல் (ஏப்ரல்–ஜூன் 2025) காலாண்டிற்கான "5வது காலாண்டு வர்த்தக கண்காணிப்பு அறிக்கையை" நிதி ஆயோக் அமைப்பானது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 06 ஆம் தேதியன்று வெளியிட்டது.
- எரிசக்தி மற்றும் வள நிறுவனம் (TERI) ஆனது, 2026 ஆம் ஆண்டு பாரத் பருவநிலை மன்றத்தில் "India's PV Manufacturing & Its Strategic Inflection Points" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- இந்தியாவின் அரிதான காட்டு ஆடான காஷ்மீர் மார்க்கோர் ஆடுகளில் (காப்ரா பால்கோனேரி காஷ்மெரியன்சிஸ்), 200–300 இனங்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் உள்ளூர் அழிவை எதிர்கொள்கிறது.
- மத்திய நிலத்தடி நீர் வாரியம் (CGWB) 2025 ஆம் ஆண்டு வருடாந்திர நிலத்தடி நீர் தர அறிக்கையை வெளியிட்டது.
- பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த 2025 ஆம் ஆண்டு உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கையின் படி (GAR 2025), உலகளாவிய காட்டுத்தீயானது மொத்தப் பொருளாதார இழப்புகளில் சுமார் 106 பில்லியன் அமெரிக்க டாலர் இழப்புகளை ஏற்படுத்தியது.
- உலக வங்கி உலகளாவிய வளர்ச்சியை மதிப்பிடுவதற்காக ஆண்டுதோறும் இரண்டு முறை வெளியிடப்படுகின்ற உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகள் (GEP) அறிக்கையை வெளியிட்டது.
- உலகப் பொருளாதார மன்றம் (WEF) 2026 ஆம் ஆண்டு உலகளாவிய அபாய அறிக்கையை வெளியிட்டது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) வேலைவாய்ப்பு மற்றும் சமூகப் போக்குகள் அறிக்கை 2026 எனும் அறிக்கையை வெளியிட்டது.
- ஐ.நா. சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு இயற்கைக்கான நிதி நிலை 2026 அறிக்கையை வெளியிட்டது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) "மாநில நிதிநிலை: 2025–26 வரவுசெலவுத் திட்டங்களின் ஒரு ஆய்வு" என்ற அறிக்கையானது, இந்தியாவில் ஏற்பட்டுள்ள மக்கள்தொகை மாற்றத்தை எடுத்துரைக்கிறது.

- நிதி ஆயோக் மற்றும் எரிசக்தி மற்றும் வளங்கள் நிறுவனம் (டெரி) ஆகியவை இணைந்து மின் கழிவுகள் மற்றும் லித்தியம்-அயன் பேட்டரி மறுசுழற்சி குறித்த அறிக்கையை வெளியிட்டன.
- ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) அமைப்பானது 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டது.
- உலக அணுசக்தி சங்கமானது உலக அணுசக்தி கண்ணோட்ட அறிக்கை 2026-ஐ வெளியிட்டது.
- ஐக்கிய நாடுகள் சபை ஜனவரி 2026-ல் உலகளாவிய நீர் திவால் நிலை குறித்த ஒரு முக்கிய அறிக்கையை வெளியிட்டது, அதற்கு "உலகளாவிய நீர் திவால்நிலை: நெருக்கடிக்குப் பிந்தைய காலத்தில் நமது நீரியல் வளங்களுக்கு அப்பாற்பட்டு வாழ்வது" என்று பெயரிடப்பட்டது.
- சர்வதேசப் புலம்பெயர்வு அமைப்பானது (IOM) உலகளாவிய வேண்டுகோள் 2026 அறிக்கையை வெளியிட்டது.
- உலக வங்கி, சிந்து-கங்கை சமவெளி மற்றும் இமயமலை அடிவாரப் பகுதிகளில் காற்று மாசுபாடு குறித்த "A Breath of Change" என்ற 2025 அறிக்கையை வெளியிட்டது.
- சர்வதேச எரிசக்தி நிறுவனம் (IEA) உலகளாவிய மின்சாரச் சந்தைகள் குறித்த மின்சாரம் 2026 எனும் அறிக்கையை வெளியிட்டது.
- Moltbook என்பது ஆக்டேன்ஏஐயின் தலைமை நிர்வாக அதிகாரி மேட் ஷ்லிச்ட் உருவாக்கிய AI-மட்டுமே அங்கம் வகிக்கும் சமூக வலைப்பின்னல் தளமாகும் என்ற நிலையில் இது செயற்கை நுண்ணறிவு (AI) முகவர்கள் மனிதத் தூண்டுதல்கள் அல்லது கட்டுப்பாடுகள் இல்லாமல் இடுகையிட, கருத்து தெரிவிக்க மற்றும் தொடர்பு கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- விக்சித் பாரத் மற்றும் சுழிய உமிழ்வை நோக்கிய சூழல்கள்" குறித்து NITI ஆயோக் 11 அறிக்கைகளை வெளியிட்டது.
- நிதி ஆயோக் 2025–26 நிதியாண்டின் 2வது காலாண்டிற்கான (ஜூலை–செப்டம்பர் 2025) "காலாண்டு கால வர்த்தக கண்காணிப்பு" இன் ஆறாவது பதிப்பைப் புதுதில்லியில் வெளியிட்டது.
- "Revitalising Apprenticeship Ecosystem: Insights, Challenges, Recommendations and Best Practices" என்ற தலைப்பில் நிதி ஆயோக் ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- ஆசியா மற்றும் பசிபிக் பகுதி SDG முன்னேற்ற அறிக்கை 2026, ஐக்கிய நாடுகள் சபையின் ஆசியா மற்றும் பசிபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தால் (ESCAP) வெளியிடப்பட்டது.
- எரிசக்தி பொருளாதாரம் மற்றும் நிதி பகுப்பாய்வு நிறுவனம் (IEEFA) மற்றும் Ember ஆகியவற்றின் புதிய அறிக்கை, உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகியவை மின்சார வாகன (EV) ஏற்பு மற்றும் பசுமை ஹைட்ரஜன் ஊக்குவிப்பதில் முன்னணியில் உள்ளன என்பதை எடுத்துக்காட்டுகிறது.
- யுனெஸ்கோவின் அரசுகளுக்கிடையேயான கடல்சார் ஆணையம் (IOC) ஆனது ஒருங்கிணைந்த பெருங்கடல் கார்பன் ஆராய்ச்சி (IOC-R) அறிக்கையை வெளியிட்டது.
- உலக வங்கியானது பெண்கள், வணிகம் மற்றும் சட்டம் (WBL) 2026 அறிக்கையை வெளியிட்டது என்ற நிலையில் இது பெண்களின் பொருளாதார உரிமைகளை செயல்படுத்துவதில் உள்ள இடைவெளிகளை எடுத்துக்காட்டுகிறது.

- ❖ சர்வதேச எரிசக்தி நிறுவனம் (IEA) அதன் எரிசக்தி புத்தாக்க நிலை 2026 எனும் அறிக்கையை வெளியிட்டது.
- ❖ "Ensuring and Strengthening Access to Justice for All Women and Girls" என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை ஐ.நா. பெண்கள் அமைப்பு வெளியிட்டது.
- ❖ "Reducing Methane Emissions from Landfills: The potential of biocover systems" என்ற ஒரு அறிக்கையை Climate and Clean Air Coalition என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) "பயன்படுத்தப்படாத மருந்துகளைப் பாதுகாப்பாக அகற்றுதல்" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ உயிரி தொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவி சபையானது (BIRAC) 'இந்திய உயிரி-பொருளாதார அறிக்கை (IBER) 2026'-ஐ புது தில்லியில் வெளியிட்டது.
- ❖ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI), “Delivering Prosperity at Scale: India’s Economic Transformation through the SDGs” என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்டது.
- ❖ இந்தியாவின் நுகர்வோர் தகராறு தீர்வு முறையை மதிப்பீடு செய்து இந்தியா ஜஸ்டிஸ் ரிப்போர்ட் அமைப்பு 'நுகர்வோர் நீதி அறிக்கை 2026'-ஐ வெளியிட்டது.
- ❖ புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் (MoSPI) நிலையான வளர்ச்சி இலக்குகளின் (SDGs) கீழ் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை குறித்த “Planet in Focus” அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபை, "Water for All People: Equal Rights and Opportunities" என்ற தலைப்பில் 2026 ஆம் ஆண்டிற்கான உலக நீர் மேம்பாட்டு அறிக்கையை வெளியிட்டது.
- ❖ உலக வானிலை அமைப்பு (WMO) 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய காலநிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது என்ற நிலையில் இதில் பூமியின் பருவநிலை "சிவப்பு எச்சரிக்கை" நிலையில் இருப்பதாக எச்சரித்துள்ளது.
- ❖ சர்வதேச சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (IIED) 'IIED உணவுப் பாதுகாப்பு குறியீட்டை' வெளியிட்டுள்ளது.
- ❖ நிதி ஆயோக் "Empowering Farmers: Natural Farming Training Toolkit & Best Practices Guide" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI), இஸ்ரோவின் தேசிய தொலை உணர்வு மையத்துடன் (NRSC) இணைந்து முதல் “தேசிய நெடுஞ்சாலைகள் பசுமைப் பரப்புக் குறியீட்டை (NH-GCI) 2025–26”-ஐ வெளியிட்டது.
- ❖ வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS), புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசியப் புள்ளியியல் அலுவலகத்தால் (NSO) வெளியிடப்படுகிறது.
- ❖ 'The Lancet Obstetrics, Gynaecology and Women's Health' இதழில் வெளியிடப்பட்ட உலகளாவியப் பகுப்பாய்வு 2023ம் ஆண்டிற்கான பேறுகாலத் தாய்மார்கள் இறப்புத் தரவை வெளியிட்டுள்ளது.
- ❖ யுனெஸ்கோ “Access and Equity: Countdown to 2030” என்ற தலைப்பில் 2026ம் ஆண்டிற்கான உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டது.
- ❖ தாஸ்ரா அமைப்பினால் “Under the Weather: India’s Climate-Health Intersections and Pathways to Resilience” என்ற புதிய அறிக்கை வெளியிடப்பட்டது.
- ❖ நிதி ஆயோக், "From Borrowers to Builders: Women and India’s Evolving Credit Market" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) அறிக்கை "Universal social protection in changing labour markets: Protecting workers in all types of employment" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிடப்பட்டுள்ளது.
- "இந்திய வௌவால்களின் நிலை (2024-25)" என்ற முதல் தேசிய அறிக்கை, இந்தியாவில் உள்ள வௌவால் இனங்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை எடுத்துக்காட்டுகிறது.
- இந்திய விண்வெளிச் சூழ்நிலை விழிப்புணர்வு அறிக்கை (ISSAR) 2025 என்ற ஒரு அறிக்கையினை இஸ்ரோ வெளியிட்டது.
- ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (UN ESCAP) தனது 2026 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை வெளியிட்டது
- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் உலக வானிலை அமைப்பு (WMO) ஆகியவை இணைந்து ஏப்ரல் 22, 2026 அன்று (புவி தினம்) "தீவிர வெப்பம் மற்றும் விவசாயம்" என்ற அறிக்கையை வெளியிட்டன.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன் Global Network Against Food Crises எனும் அமைப்பால் 10-வது உலகளாவிய உணவு நெருக்கடிகள் அறிக்கை (GRFC) வெளியிடப்பட்டது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மதிப்பிடுவதற்காக 2023-24 ஆம் நிதியாண்டிற்கான பஞ்சாயத்து அமைப்புகளின் முன்னேற்றக் குறியீடு (PAI) 2.0-ஐ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வெளியிட்டது.
- நிதி ஆயோக் "Moving Towards Effective City Government: A Framework for Million-Plus Cities" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- சர்வதேச இடம்பெயர்வு அமைப்பானது (IOM), உலக இடம்பெயர்வு அறிக்கையின் 13-வது பதிப்பை (2026) வெளியிட்டது.
- தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB), இந்தியாவில் உள்ள சிறைச்சாலை நிலவரங்கள் குறித்த 'இந்தியச் சிறைச்சாலை புள்ளிவிவரங்கள் (PSI) 2024' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஐநா வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, “Invisible Barriers: The Costs of Non-Tariff Measures” என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதில் பெரும்பாலான நாடுகளுக்குச் சாதாரண இறக்குமதி வரிகளை விட, கட்டணமற்ற தடைகளே (NTMs) அதிகப் பொருளாதாரச் செலவை ஏற்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ளது.
- நிதி ஆயோக், ‘இந்தியாவில் பள்ளிக் கல்வி முறை: காலப்போக்கு பகுப்பாய்வு மற்றும் தர மேம்பாட்டிற்கான கொள்கை வரைபடம்’ என்ற தலைப்பில் ஒரு கொள்கை அறிக்கையை வெளியிட்டது.
- DPIIT – இன் 2025 ஆம் ஆண்டிற்கான LEADS (பல்வேறு மாநிலங்களில் தளவாடச் செயல்பாடு எளிமை) அறிக்கையானது தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், மிசோரம் மற்றும் டெல்லியை தளவாடச் செயல்திறனில் "சிறந்த முன்மாதிரிகள்" என்று தரவரிசைப் படுத்தியுள்ளது.
- 'உலகளாவிய வன இலக்குகள் (GFG) அறிக்கை 2026' ஆனது, ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை மற்றும் காடுகள் மீதான ஐக்கிய நாடுகள் மன்றத்தின் (UNFF) செயலகத்தால் வெளியிடப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பானது (WHO), 2005 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் வெளியிடப் படும் உலகளாவிய சுகாதாரக் குறிகாட்டிகளின் தொகுப்பான 'உலக சுகாதார புள்ளிவிவர அறிக்கை 2026'-ஐ வெளியிட்டுள்ளது.

- உள்நாட்டு இடப்பெயர்வு குறித்த உலகளாவிய அறிக்கை (GRID) 2026 ஆனது உள்நாட்டு இடப்பெயர்வு கண்காணிப்பு மையத்தால், நார்வே அகதிகள் சபையுடன் இணைந்து வெளியிடப்பட்டது.
- 'நிலையான உணவு அமைப்புகளுக்கான சர்வதேச நிபுணர்கள் குழு' (IPES-Food) மூலம் "உணவு குறித்த ஒரு புதிய புவி அரசியல்" என்ற அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP), Sand and Sustainability: An Essential Resource for Nature and Development என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது.
- அஜர்பைஜானின் பாக்கு நகரில் நடைபெற்ற உலக நகர மன்றத்தில் 'உலக நகரங்கள் அறிக்கை 2026'-ஐ UN-Habitat வெளியிட்டது.
- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) "கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத்திற்கான உலகளாவிய நிலை அறிக்கை 2025-2026"-இன் 10-வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- உலக வங்கி குழுமமானது "கார்பன் விலை நிர்ணயத்தின் நிலை மற்றும் போக்குகள் 2026" என்ற அறிக்கையின் 13-வது பதிப்பை வெளியிட்டது.
- The Global Annual to Decadal Climate Update 2026–2035 என்ற அறிக்கையை , உலக வானிலை அமைப்பு (WMO) வெளியிட்டுள்ளது
- இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதார நிலை (SIDE) 2026 எனும் அறிக்கையை இணையம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான ICRIER-Prosus மையம் வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் குறைகடத்தி தொலைநோக்குப் பார்வை 2035-ஐ கோடிட்டுக் காட்டும் "இந்திய குறைகடத்தி தொழில்துறையின் எதிர்காலம்" என்ற அறிக்கையை நிதி ஆயோக் வெளியிட்டது.
- ஐநா பல்கலைக்கழகத்தின் நீர், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார நிறுவனம் (UNU-INWEH) ஆனது "Environmental Cost of AI's Energy Use: Carbon, Water and Land Footprints" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய அமைதிக் குறியீடு (GPI) பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனத்தால் (IEP) வெளியிடப்பட்டுள்ளது,.
- பான் பருவநிலை மாற்ற மாநாட்டின் (SB64) போது 'பூமியின் பருவநிலை குறித்த முக்கிய அறிகுறிகள் அறிக்கை 2026' வெளியிடப்பட்டது.
- இந்தியாவில் சுமார் 392 மில்லியன் குழந்தைகள் (92%) கடுமையான வெப்பத்தால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்றும், 89 மில்லியன் குழந்தைகள் தொடர்ச்சியான வெப்ப அலைகளை எதிர்கொள்கின்றனர் என்றும் யுனிசெஃபின் 'குழந்தைகளின் பருவநிலை அபாய அறிக்கை 2026' எடுத்துக்காட்டுகிறது.
- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) மற்றும் உலக உணவுத் திட்டம் (WFP) ஆகியவை "பட்டினி அபாயப் பகுதிகள் குறித்த அறிக்கை 2026"-ஐ வெளியிட்டன
- 'உலகளாவிய புத்தொழில் குழும சுற்றுச்சூழல் அமைப்பு அறிக்கை (GSER) 2026'-இல் ஆசியாவின் இரண்டாவது சிறந்த செயற்கை நுண்ணறிவு சார்ந்த புத்தொழில் குழுமங்களின் மையமாக பெங்களூரு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- Accenture நிறுவனத்துடன் இணைந்து உலகப் பொருளாதார மன்றமானது 'எரிசக்தி மாற்றம் குறியீடு (ETI) 2026'ஐ வெளியிட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, Blue Transformation: Turning Vision into Impact என்ற கருத்துருவின் கீழ் உலக மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிலை (SOFIA) 2026 என்ற அறிக்கையை வெளியிட்டது.

- ❖ QS Quacquarelli Symonds நிறுவனத்தால் வெளியிடப் பட்ட 'QS உலக எதிர்கால திறன் குறியீடு 2027'-இல், செயற்கை நுண்ணறிவு-பொருளாதார தயார்நிலையில் இந்தியா உலகளவில் 13-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ சர்வதேச நீர்மின் சங்கம் (IHA) ஆனது உலக நீர்மின் ஆற்றல் கண்ணோட்டம் 2026 எனும், அறிக்கையை வெளியிட்டது.
- ❖ சர்வதேச எரிவாயு ஒன்றியம் (IGU) சமீபத்தில் 2026-ஆம் ஆண்டிற்கான உலகளாவிய LNG (திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு) அறிக்கையை வெளியிட்டது.
- ❖ வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு அமைப்பானது (UNCTAD) உலக முதலீட்டு அறிக்கை 2026-ஐ வெளியிட்டது.
- ❖ உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது உலகளாவிய புற்றுநோய் நிலை அறிக்கை 2026- என்ற அறிக்கையை வெளியிட்டது.
- ❖ பள்ளி கல்வியில் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் (UTs) செயல்திறனை மதிப்பிடுவதற்காக மத்திய கல்வி அமைச்சகம் மாநிலங்களுக்கான செயல்திறன் தரக் குறியீடு (PGI) 2.0 அறிக்கையை 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளுக்காக வெளியிட்டுள்ளது.
- ❖ உலக அறிவுசார் சொத்துரிமை நிறுவனம் (WIPO) மற்றும் லூயிஸ் வணிகப் பள்ளி ஆகியவை இணைந்து உலக மகத்தான முதலீட்டு அறிக்கை 2026-ஐ வெளியிட்டது.
- ❖ வாழும் சூழ்நிலை மற்றும் நகர்ப்புற மீள்திறனின் அடிப்படையில் நகரங்களைத் தரவரிசைப்படுத்தும் 'உலகளாவிய வாழ்விடக் குறியீடு 2026'-ஐ எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட் (EIU) வெளியிட்டுள்ளது.
- ❖ சர்வதேச நாணய நிதியம் (IMF) 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கான உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் (WEO) புதுப்பிக்கப்பட்ட அறிக்கையை "Global Economy in Crosscurrents of War and Technology" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியமானது (UNFPA) இளைஞர்களின் அபிலாஷைகள், உறவுகள் மற்றும் குடும்ப முடிவுகளை பகுப்பாய்வு செய்யும் 'வாழ்க்கை, தேர்வுகள் மற்றும் எதிர்காலம் — மக்கள்தொகை எதிர்காலக் கணிப்பு அறிக்கை 2026'-ஐ வெளியிட்டது.
- ❖ நிலக்கரி அமைச்சகம் இந்தியாவின் அறிவியல் பூர்வமான சுரங்க மூடல் மற்றும் மறு பயன்பாட்டு நடைமுறைகள் குறித்த முதல் அறிக்கையான 'AAROH - சுரங்க மூடல் குறித்த வருடாந்திர அறிக்கை'யை வெளியிட்டது.
- ❖ டிஜிட்டல் அச்சுறுத்தல் அறிக்கை 2025-26-ஆம் ஆண்டின் 2-ஆம் பதிப்பு மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் (MeitY), CERT In, CSIRT Fin, மற்றும் SISA ஆகியவற்றுடன் இணைந்து வெளியிடப்படுகிறது.
- ❖ நிதி ஆயோக் "முதலீட்டாளர்களுக்கு உகந்த மாநிலங்கள் குறியீடு" குறித்த முதல் அறிக்கையை வெளியிட்டது.
- ❖ ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது (UNEP) "நீதியின்றி மாற்றமில்லை" (No Transition Without Justice) என்ற அறிக்கையை வெளியிட்டது.
- ❖ 2022 ஆம் ஆண்டின் அகில இந்தியப் புலிகள் மதிப்பீட்டின் அடிப்படையில் "Roadmap for Active Management of Tigers in India என்ற அறிக்கையை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் (NTCA) வெளியிட்டது.

- சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு (EPI) 2026 ஆனது மெக்கால் மெக்பெய்ன் அறக்கட்டளையின் ஆதரவுடன் யேல் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழக நிறுவனங்களால் உருவாக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO), கரிம மண் நிலங்களில் (peatlands) இருந்து வெளியேறும் பசுமைக்குடில் வாயு உமிழ்வு மதிப்பீடுகளின் துல்லியத்தை மேம்படுத்துவதற்காக Peat-Emit Report 2026 என்ற அறிக்கையை வெளியிட்டது.
- "உலக மேம்பாட்டு அறிக்கை 2026: செயற்கை நுண்ணறிவின் வாக்குறுதி" என்ற அறிக்கையை உலக வங்கி வெளியிட்டது.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது (DST) ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) புள்ளியியல் 2025-26 என்ற அறிக்கையை வெளியிட்டது.

| அறிக்கைகள் | நிறுவனம் | உயர்மட்ட நிலை | தாழ்மட்ட நிலை | இந்தியாவின் நிலை |
|---|---|---|---|---|
| **2026 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் முதலீடுகள்** | – | ஆந்திரப் பிரதேசம் – இந்தியாவின் சிறந்த முதலீட்டு இடம் (25.3%) | உத்தரப் பிரதேசம் (2.7%) மற்றும் கர்நாடகா (2.1%)குறைந்த பங்குகள் | – |
| **2025 ஆம் ஆண்டில் பதிவான உறுப்பு தானங்கள்** | ஜீவசர்த்தககதே – கர்நாடகாவின் மாநில உறுப்பு மற்றும் திசு மாற்று அமைப்பு (SOTTO) | கர்நாடகா– அதிகபட்ச உறுப்பு தானங்கள் (198) | – | – |
| **UN DESA அறிக்கை 2025** | ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை | – | – | இந்தியா– உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக உள்ளது |
| **ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு** | – | சிங்கப்பூர் | – | 80 |
| **பொறுப்புள்ள நாடுகளின் குறியீடு 2026** | – | சிங்கப்பூர் | – | 16 |
| **நம்பியோ பாதுகாப்புக் குறியீடு 2026** | – | சீனாவின் கிங்டாவோ – உலகின் பாதுகாப்பான நகரமாக தரவரிசைப் படுத்தப்பட்டது.<br><br>கர்நாடகாவின் மங்களூரு– இந்தியாவின் பாதுகாப்பான நகரமாக உருவெடுத்தது. | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பப்புவா நியூ கினியா, வெனிசுலா மற்றும் ஹைட்டி – மிகக் குறைந்த பாதுகாப்பான நாடுகளில் அடங்கும். | | |
| **நம்பியோ உலகளாவியப் பாதுகாப்புக் குறியீட்டில்** | – | அபுதாபி | – | – |
| **ஆசிய உற்பத்திக் குறியீடு 2026** | – | சீனா | – | 6 |
| **உலகளாவிய செயற்கை நுண்ணறிவு முதலீடுகள்** | உலகப் பொருளாதார மன்றம் (WEF) | – | – | 8 |
| **உலகளாவிய மென்பலக் குறியீடு 2026** | பிராண்ட் ஃபைனான்ஸ் | அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் | – | 32 |
| **பஞ்சாயத்து முன்னேற்றக் குறியீடு 2.0** | பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் | திரிபுரா | – | – |
| **QS ஐரோப்பா தரவரிசை 2026** | ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் | | – | – |
| **உலகளாவிய உயிரி எரிசக்தி உற்பத்தித் தரவரிசை 2026** | – | அமெரிக்கா | – | 5 |
| **QS 2026 - சர்வதேச மாணவர்களுக்கு உகந்த நகரங்கள்** | – | டெல்லி | – | – |
| **உலகளாவிய LEED சான்றிதழ்கள்** | அமெரிக்கப் பசுமைக் கட்டிட கவுன்சில் (USGBC) | அமெரிக்கா | – | 2 |
| **உலகளாவியப் புத்தாக்கக் குறியீடு** | உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு (WIPO) | சீனா | – | 7 |
| **நெட்வொர்க் தயார்நிலை குறியீடு 2025** | – | – | – | 45 |
| **பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு குறியீடு 2025–26** | – | டென்மார்க் | – | 131 |

| | | | | |
|---|---|---|---|---|
| **ஊழல் கண்ணோட்டக் குறியீடு 2025** | – | டென்மார்க் | – | 91 |
| உலகளாவிய AI அறிவுசார் பந்தய அறிக்கை 2026 | – | அமெரிக்கா | – | 6 |
| **உலகளாவிய குடியிருப்புத் திட்டக் குறியீடு 2026** | – | கிரீஸ் | – | – |
| புத்தாக்குநர்கள் வணிக சூழல் குறியீடு 2026 | StartupBlink | அமெரிக்கா | – | 54 |
| உலகளாவிய ஆயுத இறக்குமதி | ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் | உக்ரைன் | – | 2 |
| உலகளாவிய மூலதன ஓட்ட அறிக்கை 2025 | கொலியர்ஸ் | – | – | 4 |
| உலக மகிழ்ச்சி அறிக்கை 2026 | Wellbeing Research Centre | Finland | – | 116 |
| உலக வர்த்தகக் கண்ணோட்டம் 2026 | உலக வர்த்தக அமைப்பு | – | – | – |
| உலகளாவிய பயங்கரவாதக் குறியீடு | Institute for Economics and Peace | பாகிஸ்தான் | – | 13 |
| உலக காற்றுத் தர அறிக்கை 2025 | IQAir | பாகிஸ்தான் – மிகவும் மாசுபட்ட நாடு | – | 6 |
| உலகப் பத்திரிகை சுதந்திரக் குறியீடு | Reporters Without Borders | **நார்வே** | **–** | **157** |
| ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீடு | ஹென்லி & பார்ட்னர்ஸ் | சிங்கப்பூர் | **–** | **78** |
| நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீடு 2026 | UN SDSN | **–** | **–** | **94** |
| உலகளாவிய கடவுச்சீட்டு குறியீடு (GPI) 2026 | குளோபல் சிட்டிசன் சொல்யூஷன்ஸ் | ஸ்வீடன் | **–** | **125** |
| **ஹென்லி கடவுச்சீட்டு குறியீடு 2026** | ஹென்லி | சிங்கப்பூர் | **–** | **81** |

# மாநிலச் செய்திகள்

- குற்றம் வேறொரு மாநிலத்தில் நடந்திருந்தாலும், மேற்கு வங்காளக் காவல் துறை சுட்டி காவல் நிலையத்தில் எல்லை வரம்பிற்குட்படாத முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்தது.
- படத்ரவா தான் மறுசீரமைப்புத் திட்டம் (சங்கரதேவாவின் பிறப்பிடம்) அசாமில் தொடங்கப்பட்டது.
- இந்தியாவிலும் உலகிலும் உள்ள மிகப்பெரிய கோட்டைகளில் ஒன்றான, ரோஹ்தாஸ் கோட்டை என்றும் அழைக்கப்படுகின்ற ரோஹ்தாஸ்கர் கோட்டை பீகாரில் உள்ள சோன் நதிக்கரையில் அமைந்துள்ளது.
- டெல்லி அரசாங்கம், கான்பூர் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்துடன் (IIT) கூட்டு சேர்ந்து, நுண்ணறிவு சார் குறை தீர்க்கும் கண்காணிப்பு அமைப்பு (IGMS) என்று அழைக்கப்படுகின்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான குறை தீர்க்கும் அமைப்பை உருவாக்கியுள்ளது.
- கர்நாடக உத்தி சார் மற்றும் புலனாய்வுப் பிரிவானது, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு தரவுத் தளங்களிலிருந்து செயலி நிரலாக்க இடைமுகங்களை (API) ஒருங்கிணைக்க உள்ளது.
- குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள சிறுநீரக நோய்கள் மற்றும் ஆராய்ச்சி மையம் (IKDRC) ஆனது 2025 ஆம் ஆண்டில் 500 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை நிறைவு செய்து, ஒரே ஆண்டில் இந்த மைல்கல்லை எட்டிய இந்தியாவின் ஒரே பொதுத்துறை மருத்துவமனையாக மாறியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று இந்தியாவில் 8வது மாநில ஊதியக் குழுவை அமைத்த முதல் மாநிலமாக அசாம் மாறியுள்ளது.
- திட்டமிடப்பட்ட நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டு வசதித் திட்டங்கள் மூலம் சூரத் இந்தியாவின் முதல் முழுமையான குடிசைப் பகுதி இல்லாத நகரமாக மாற உள்ளது.
- திரிபுரா மாநிலப் பொதிகள் அனுப்பும் மையம் (SLDC) ISO/IEC 27001:2022 சான்றிதழைப் பெற்றது.
- புற்றுநோய் சிகிச்சைக்காக அசாம் ஒரு புரோட்டான் சிகிச்சை இயந்திரத்தை வாங்க உள்ளதுடன், பொது சுகாதார அமைப்பில் புரோட்டான் சிகிச்சையை வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக அசாம் மாற உள்ளது.
- மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் இந்தியாவிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளின் தற்கொலை விகிதங்கள் பதிவாகியுள்ளன என்பதோடு இது தேசிய சராசரியை விட சுமார் 2.5 மடங்கு அதிகம்.
- ஹரியானாவில் 2025 ஆம் ஆண்டில் பிறப்பின் போதான பாலின விகிதம் (SRB) 923 ஆக பதிவாகியுள்ளது என்பதோடு இது கடந்த ஐந்து ஆண்டுகளில் மிக உயர்ந்ததாகும்.
- தனியார் துறை ஊழியர்களை அலுவலக நேரத்திற்குப் பிறகு பணி சார்ந்த தகவல் தொடர்புகளிலிருந்துப் பாதுகாக்க வேண்டி, 2025 ஆம் ஆண்டு துண்டிக்கும் உரிமை மசோதாவினை கேரளா அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- போராம்தேவ் வழித்தட மேம்பாட்டுத் திட்டம் ஆனது, சத்தீஸ்கர் மாநிலம் கபிர்தாம் மாவட்டத்தில் உள்ள போராம்தேவ் தாமில் தொடங்கப்பட்டது.
- அருணாச்சல பிரதேசத்தில் 1,200 மெகாவாட் (MW) திறன் கொண்ட கலை–II நீர்மின் நிலையத்திற்குச் சுற்றுச்சூழல் அனுமதியை வழங்க நிபுணர் மதிப்பீட்டுக் குழு (EAC) பரிந்துரைத்துள்ளது.

- உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான இரண்டு குழந்தைகள் விதிமுறையை ரத்து செய்யும் மசோதாவை தெலுங்கானா சட்டமன்றம் நிறைவேற்றி உள்ளது.
- இந்தியா தனது முதல் வணிக ரீதியான வெப்பமண்டல மறுசுழற்சி வழியிலான மீன் வளர்ப்பு அமைப்பு (RAS) அடிப்படையிலான ரெயின்போ டிரவுட் மீன் பண்ணையை தெலுங்கானாவில் தொடங்கியுள்ளது.
- லக்னோ நகரின் வடக்குப் புறநகரில் உள்ள குக்ரெயில் வனப்பகுதியில் இந்தியாவின் முதல் நகர்ப்புற இரவு சுற்றுலா வசதி/சஃபாரி நிறுவப்பட உள்ளது.
- ஜார்க்கண்ட் அமைச்சரவையானது, 1996 ஆம் ஆண்டு பஞ்சாயத்துகள் (திட்டமிடப் பட்டப் பகுதிகளுக்கு விரிவுப்படுத்துதல்) சட்டத்தின் (PESA) கீழ், மாநிலத்தில் கிராம சபைகளுக்கு அதிகாரமளிக்கின்ற விதிகளை அங்கீகரித்தது.
- 2023–24 ஆம் ஆண்டில் 93,955 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு சுமார் 11.68 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன், குஜராத் மாநிலமானது இந்தியாவின் முன்னணி வெண்டைக்காய் உற்பத்தியாளராக உள்ளது.
- உத்தரப் பிரதேசம் பார்வைத் திறனற்றோருக்காக அர்ப்பணிக்கப்பட்ட அதன் முதல் பிரெய்லி நூலகத்தைத் திறந்துள்ளது.
- டெல்லியை முதல் முறையாக இந்திய ரிசர்வ் வங்கியின் முழு வங்கி, ரொக்கம் மற்றும் கடன் மேலாண்மை கட்டமைப்பின் கீழ் கொண்டுவருவதற்காக டெல்லி அரசு இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- நீரியல் இயக்க விசைச் சுழலி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் சுமார் 185 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய என்று திரிபுரா அரசு 10 நதி தளங்களை அடையாளம் கண்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள கேயி பன்யோர் மாவட்டம் இயற்கையோடு இயைந்த நலமான வாழ்வியல் கொண்ட இந்தியாவின் முதல் (பயோ–ஹேப்பி) மாவட்டமாக மாற உள்ளது.
- சமூக மற்றும் தொழில்துறை உள்ளடக்கத்தின் அடிப்படையில், பெங்களூரு 53.29 என்ற அதிக நகர உள்ளடக்க மதிப்பெண்ணுடன் 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் பெண்களுக்கு சிறந்த நகரமாக தரவரிசைப்படுத்தப்பட்டது.
- மத்திய உள்துறை அமைச்சகம் ஆனது அமராவதியை ஆந்திரப் பிரதேசத்தின் ஒரே தலைநகராக அங்கீகரித்தது.
- மேற்கு வங்க அரசானது, சாகர் தீவை பிரதான நிலப்பகுதியுடன் இணைப்பதற்காக முரிகங்கா ஆற்றின் மீது 5 கி.மீ நீளமுள்ள பாலத்தைக் கட்டும் பணியைத் தொடங்கியுள்ளது.
- ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (HPCL), ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள விசாகப்பட்டினத்தில் உலகின் அதிகபட்ச மாற்றும் திறன் கொண்ட முதல் திரவ மாற்ற (LC–Max) அலகைத் தொடங்கியுள்ளது.
- கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள கல்பேட்டா நீதித்துறை ஆனது இந்தியாவின் முதல் முழுமையான காகிதமில்லா மாவட்ட நீதிமன்றமாக மாறியுள்ளது.
- கேரள மாநில அரசு ஆரளம் வனவிலங்கு சரணாலயத்தை அதிகாரப்பூர்வமாக ஆரளம் பட்டாம்பூச்சி சரணாலயம் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளது.
- கொல்கத்தாவிலிருந்து சுமார் 100 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மேற்கு வங்காளத்தின் ஹால்டியாவில் இந்திய கடற்படை ஒரு புதிய தளத்தை நிறுவ உள்ளது.

- ஒடிசாவில் உள்ள பூரி கொதிக்கவோ அல்லது வடிகட்டவோ அவசியமில்லாமல் நேரடியாக குடிக்கப் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் இந்தியாவின் முதல் நகரமாக அதிகாரப் பூர்வமாக மாறியுள்ளது.
- இராஜஸ்தானில் உள்ள பமன்வாஸ் கங்கர் பஞ்சாயத்து, முழுமையாக இயற்கை வேளாண்மை முறை கொண்ட பஞ்சாயத்து ஆக சான்றிதழ் பெற்ற மாநிலத்தின் முதல் கிராம அமைப்பாக மாறியுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கமலா நீர்மின் நிலையத்தினை பொது முதலீட்டு வாரியம் அங்கீகரித்துள்ளது.
- ஒடிசாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா தொழில்துறை கல்வி மையம் (KIIT), சர்வதேச மாணவர்களை ஈர்ப்பதில் இந்தியாவில் ஐந்தாவது இடத்தைப் பிடித்தது.
- சத்தீஸ்கர் மாநிலம் ஆனது ராய்ப்பூரில் அமைக்கப்பட்டுள்ள வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) பிராந்திய அலுவலகம் திறக்கப்பட்டது.
- ஒரு மாத கால "போடா தியோஹர்" திருவிழா, இமாச்சலப் பிரதேசத்தின் நஹானில் தொடங்கப் பட்டது.
- ஜம்மு & காஷ்மீரின் பாரமுல்லாவில் உள்ள சுமார் 2,000 ஆண்டுகள் பழமையான ஜெஹான்போரா புத்த ஸ்தூபி வளாகம் அறிவியல் பூர்வமாக அகழாய்வு செய்யப் பட்டுள்ளது.
- ஜனவரி 07 ஆம் தேதி நிலவரப்படி மாணவர்களுக்கு 50,60,941 அடையாள எண்களை உருவாக்கித் தானியங்கி நிரந்தரக் கல்விக் கணக்குப் பதிவேடு (APAAR) அமைப்பை செயல்படுத்துவதில் சத்தீஸ்கர் முதலிடத்தில் உள்ளது.
- பிரஹன்மும்பை மாநகராட்சி கழகம் (BMC) 74,427 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டினை நாட்டின் மிகப்பெரிய நிதி ஒதுக்கீடு அளிக்கும் ஆணையங்களில் ஒன்றாகும்.
- மரப் பொம்மை (காத் = மரம், புட்லி = பொம்மை) என்று பொருள்படும் கத்புட்லி, இராஜஸ்தானின் பழமையான நாட்டுப்புறக் கலை வடிவங்களில் ஒன்றாகும்.
- கேரளச் சட்டமன்றம் மலையாளத்தை மாநிலத்தின் ஒரே அதிகாரப்பூர்வ மொழியாக மாற்றும் 2025 ஆம் ஆண்டு மலையாள மொழி மசோதாவினை நிறைவேற்றியது.
- உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வரலாற்று சிறப்புமிக்க கலங்கரை விளக்கங்களை சுற்றுலா மையங்களாக மேம்படுத்துவதே 3வது இந்திய கலங்கரை விளக்க விழா விசாகப்பட்டினத்தில் தொடங்கப்பட்டது.
- இராஜஸ்தானில் உள்ள பமன்வாஸ் கங்கர் கிராமப் பஞ்சாயத்து, மாநிலத்தின் முதல் முழுமையான இயற்கை வேளாண் பஞ்சாயத்தாக மாறியது.
- மார்ச் 31, 2026 ஆம் தேதிக்குள் விரிவான நாள்பட்ட சிறுநீரக நோய் (CKD) பதிவேட்டைத் தொடங்கும் முதல் இந்திய மாநிலமாக ஒடிசா மாற உள்ளது.
- திரிபுரா கிராம வங்கியானது, சூரிய சக்தியில் இயங்கும் ATM வேனை அறிமுகப் படுத்திய இந்தியாவின் முதல் பிராந்திய கிராமப்புற வங்கி (கிராம வங்கி) ஆனது.
- பழங்குடியினர் விவகார அமைச்சகம் (MoTA), தெலுங்கானாவின் ஐதராபாத்தில் பழங்குடியினர் மருத்துவர்களுக்கான தேசிய திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்திய மாநிலங்களில் 2025 ஆம் ஆண்டில் கேரளாவில் அதிக தனிப்பட்ட நான்கு சக்கர மின்சார வாகன (EV) ஏற்பு பதிவாகியுள்ளது.

- ❖ மகாராஷ்டிராவின் மாநில தேர்தல் ஆணையம் ஆனது, ஜில்லா பரிஷத் மற்றும் பஞ்சாயத்து சமிதி தேர்தல்களுக்கு மார்க்கர்–பேனா மை துடைக்கப்படக் கூடியதாக உள்ளது என்ற புகார்களைத் தொடர்ந்து பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் அழியாத மைக்கு மாற முடிவு செய்துள்ளது.
- ❖ ஆந்திரப் பிரதேச முதல்வர் ஹோப் தீவில் ஒரு புதிய விண்வெளி நிலையம் அமைக்கப் படும் என்று அறிவித்தார்.
- ❖ தெலுங்கானாவில் பஞ்சாரர்கள் என்றும் அழைக்கப்படும் லம்பாடா சமூகத்தின் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) அந்தஸ்து குறித்த பிரச்சினை மீண்டும் உச்ச நீதிமன்றத்தை எட்டியுள்ளது.
- ❖ மத்தியப் பிரதேசத்தின் நீமுச் மாவட்டத்தில் உள்ள மனாசா நகரில் அரிய நரம்பியல் கோளாறான குய்லின்–பாரே நோய்க்குறி (GBS) பரவல் சமீபத்தில் பதிவாகியுள்ளது.
- ❖ ஒடிசா அரசு ஆனது ஜனவரி 23, 2026 அன்று குட்கா, பான் மசாலா மற்றும் அனைத்து புகையிலை மற்றும் நிக்கோடின் பொருட்களுக்கும் முழுமையான தடையை அறிவித்தது.
- ❖ டெல்லி காவல்துறை, தீயணைப்பு, அவசர ஊர்தி மற்றும் பேரிடர் சேவைகளுக்கு 112 என்ற ஒரே அவசர எண்ணை அறிமுகப்படுத்த உள்ளது.
- ❖ பிரதமர் அசாமின் கௌஹாத்தியில் நடைபெற்ற பகுரும்பா துவோ 2026 கலாச்சார நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
- ❖ குஜராத் மாநிலதில் உள்ள சனந்த் (கோராஜ்) என்னுமிடத்தில் இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த தனியார் செயற்கைக்கோள் உற்பத்திப் பிரிவுக்கான அடிக்கல் நாட்டப் பட்டது.
- ❖ பிரதமர், அசாமில் உள்ள NH–715 நெடுஞ்சாலையில், 6,957 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 34.5 கிலோமீட்டர் நீளமுள்ள காசிரங்கா மேம்பால வழித்தடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- ❖ கேரளா தனது மாநில நுண்ணுயிரியாக பேசிலஸ் சப்டிலிஸை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளதுடன் ஒரு நுண்ணுயிரியலுக்கான சிறப்பு மையத்தையும் (CoEM) மாநிலத்திற்கு அர்ப்பணித்துள்ளது.
- ❖ கர்நாடக மாநிலம், கதக் மாவட்டத்தில் உள்ள லக்குண்டி கிராமத்தில் உள்ள கோட்டே வீரபத்ரேஸ்வரர் கோவிலில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் புதிய கற்காலத்தைச் சேர்ந்த கலைப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- ❖ நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமானது ராஜஸ்தானில் உள்ள தனது 300 மெகாவாட் (MW) பார்சிங்கர் சூரிய மின்சக்தித் திட்டத்தை முழு அளவில் இயக்கத் தொடங்கியுள்ளது.
- ❖ மகாராஷ்டிரா மாநிலமானது, அரசு மருத்துவமனைகள் மற்றும் நகர்ப்புற சுகாதார மையங்களில் இந்தியாவின் முதல் மாதவிடாய் நிறுத்தம் சார்ந்த சிகிச்சை மையங்களைத் தொடங்கியுள்ளது.
- ❖ 2025-26 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையின்படி, இந்தியாவின் உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு புத்தொழில் சூழலமைப்பில் கர்நாடகா முன்னணியில் உள்ளது.
- ❖ இந்தியாவானது, மேகாலயாவின் உயிர்வாழும் வேர்ப் பாலங்களை ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் (யுனெஸ்கோ) 2026-27 உலகப் பாரம்பரியப் பட்டியலில் சேர்ப்பதற்காகப் பரிந்துரைத்துள்ளது.
- ❖ உத்தரப் பிரதேச மாநிலமானது பிப்ரவரி 1, 2026 முதல் சொத்துப் பதிவுக்காக ஆதார் அடிப்படையிலான அங்கீகாரத்தைக் கட்டாயமாக்கியுள்ளது.

- ❖ கேரள அரசு தனது 2026-27 ஆம் ஆண்டுக்கான மாநில நிதிநிலையறிக்கையில், கலை மற்றும் அறிவியல் மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வியை அறிவித்துள்ளது.
- ❖ ஒடிசாவின் பௌத்த வைர முக்கோணப் பகுதி, யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய மையத்தால் இந்தியாவின் யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தற்காலிகப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- ❖ இலவசப் பட்டப்படிப்புக் கல்வி மற்றும் பள்ளி மாணவர்களுக்கான காப்பீட்டை வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக கேரளா திகழ்கிறது.
- ❖ ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு 5,555 மின்சார சைக்கிள்களை விநியோகித்ததன் மூலம் சித்தூர் மாவட்டம் கின்னஸ் உலகச் சாதனைகளில் இடம் பிடித்துள்ளது.
- ❖ அகமதாபாத் நகரக் குற்றப்பிரிவு, ஆதார் சரிபார்ப்பை PATHIK மென்பொருளுடன் ஒருங்கிணைத்த இந்தியாவின் முதல் காவல் படையாக மாறியுள்ளது.
- ❖ கர்நாடகா மாநிலம், ஜனவரி 2026ல் கர்நாடக இணையதளம் வழியே திரட்டப்படும் Gig தொழிலாளர்கள் நல மேம்பாட்டு வாரியத்தை அமைத்தது.
- ❖ சத்தீஸ்கரில் உள்ள தம்தாரி மாவட்டம், 'சமர்த் பஞ்சாயத்து' இணைய தளம் மூலம் சொத்து வரி வசூலித்த இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியுள்ளது.
- ❖ குஜராத் 42.58 ஜிகாவாட் திறன் கொண்ட இந்தியாவின் முன்னணி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாநிலமாக உருவெடுத்துள்ளது என்பதோடு இது நாட்டின் மொத்தத் திறனில் 16.5% பங்களிக்கிறது.
- ❖ மத்தியப் பிரதேசம் 2026-ஆம் ஆண்டை 'வேளாண்மை ஆண்டாக' அனுசரிக்கவுள்ளது.
- ❖ ஆந்திரப் பிரதேசம் Pilloo AI கணக்கியல் மற்றும் பட்டியலிடல் செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது, Pilloo AI என்பது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக (MSME) வடிவமைக்கப் பட்ட ஒரு குரல் அடிப்படையிலான கணக்கியல் செயலியாகும்.
- ❖ திரிபுராவில் உள்ள மாதாபாரி சுற்றுலாச் சுற்றுவட்டத்தின் மேம்பாடு குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு மத்திய தகவல் தொடர்பு மற்றும் வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத் துறை அமைச்சர் தலைமை தாங்கினார்.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள பிட்டிகயகுல்லா என்ற இடத்தில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த ஒரு அரிய தெலுங்குக் கல்வெட்டு கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ❖ பிரத்தியேக மகளிர் தொழிற்பூங்காவை நிறுவுவதற்காக ஆந்திரப் பிரதேசம் FICCI-FLO உடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ திரிபுரா கிராமின் வங்கியானது (TGB), கிராமப்புற மற்றும் பகுதியளவு நகர்ப் புறங்களில் டிஜிட்டல் வங்கிச் சேவைகளையும் நிதி உள்ளடக்கத்தையும் விரிவு படுத்தும் நோக்கில், இந்தியாவின் முதல் பிராந்திய கிராமப்புற வங்கி (RRB) கூட்டாண்மை ரூபே கடன் அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ NTPC Green Energy Limited (NGEL) நிறுவனமானது, ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினத்திற்கு அருகிலுள்ள புடிமடகா பசுமை ஹைட்ரஜன் மையத்தில், இந்தியாவின் முதல் பெரிய அளவிலான பசுமை யூரியா உற்பத்தி அமைப்பை உருவாக்க உள்ளது.
- ❖ ராஜஸ்தானின் அல்வார் மாவட்டம், "2047-க்குள் அனைவருக்கும் காப்பீடு" என்ற திட்டத்தின் கீழ் 100% காப்பீட்டுப் பாதுகாப்பை அடைந்த இந்தியாவின் முதல் மாவட்டமாக மாறியுள்ளது.

- 2035-ஆம் ஆண்டுக்குள் ஆந்திரப் பிரதேசத்தை ஒரு தூய்மையான எரிசக்தி மையமாக மாற்றுவதற்கான வரைவுத் திட்டத்தை நிதி ஆயோக் வெளியிட்டுள்ளது.
- 2027 நிதியாண்டிற்காக முதியோருக்கென பிரத்தியேக வரவு செலவுத் திட்டத்தை அறிவித்த முதல் இந்திய மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- எல்லைப்புற நாகாலாந்து பிராந்திய ஆணையத்தை (FNTA) உருவாக்குவதற்கான முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒன்றிய அரசு கையெழுத்திட்டது.
- கர்நாடகாவின் கௌரிபிதனூரில், பெங்களூரின் FICCI மகளிர் அமைப்பால் (FLO) முதல் பெண்கள் தலைமையிலான தொழிற்பூங்கா திறந்து வைக்கப்பட்டது.
- விமானப் போக்குவரத்துத் துறையில் நிலையான விமானப் போக்குவரத்து ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில், ஏர்பஸ் நிறுவனம் குஜராத்தின் வதோதராவில் உள்ள கதி சக்தி விஸ்வவித்யாலயாவில் (GSV) ஒரு சிறப்பு மையத்தைத் (CoE) திறந்து வைத்துள்ளது.
- ஒடிசா மாநில முதலமைச்சர், சம்பல்பூர் மாவட்டத்தில் உள்ள ஆதித்யா அலுமினியம் வளாகத்தில் இந்தியாவின் முதல் தட்டையான உருட்டப்பட்ட பொருட்கள் (FRP) அலுமினிய உற்பத்திப் பிரிவைத் திறந்து வைத்தார்.
- ஆந்திரப் பிரதேசம் அமராவதி குவாண்டம் பள்ளத்தாக்கு (AQV) திட்டத்தை முறைப்படி தொடங்க உள்ளது.
- விங்ஸ் இந்தியா 2026 நிகழ்வின் போது, ஒடிசா மாநிலம் ரங்கெய்லுண்டாவில் தேசிய ஆளில்லா வான்வழி வாகனம் (UAV) சோதனை மற்றும் புத்தாக்க வழித்தடத்தை உருவாக்குவதாக அறிவித்தது.
- ஜலந்தரில் நடைபெற்ற குரு ரவிதாஸின் பிறந்தநாள் விழாவின் போது, பஞ்சாபில் உள்ள ஆதம்பூர் விமான நிலையமானது, குரு ரவிதாஸ் ஜி மகாராஜ் ஜி விமான நிலையம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- விமான நிலையப போக்குவரத்தில் உமிழ்வைக் குறைக்க வேண்டி பயணிகள் போக்குவரத்திற்காக ஹைட்ரஜன் மூலம் இயங்கும் பேருந்துகளை இயக்கும் இந்தியாவின் முதல் விமான நிலையமாக கேரளாவில் உள்ள கொச்சின் சர்வதேச விமான நிலையம் (CIAL) மாறவுள்ளது.
- சுற்றுலா, உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிப்பதற்காக, சம்பாவத் மாவட்டத்தில் உள்ள தனக்பூரில் சாரதா நதி வழித்தடத் திட்டத்திற்கு உத்தரகண்ட் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- இமாச்சலப் பிரதேச முதல்வர் பிலாஸ்பூர் மாவட்டத்தில் Padhai with AI -ஐத் தொடங்கி வைத்தார், இந்த முன்முயற்சி டிஜிட்டல் கற்றல், தேர்வு சார்ந்த பாடப் பொருள் மற்றும் தனிப் பயனாக்கப்பட்ட ஆதரவை வழங்க செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்துகிறது.
- கேரளா மாநிலமானது, ஆக்கிரமிப்பு தாவர இனங்களைக் கண்டறிய செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் இயங்கும் கைபேசி செயலியான NeophyteID-யை அறிமுகப் படுத்தியது.
- உத்தரப் பிரதேசம் தனது முதல் பொருளாதார ஆய்வறிக்கை 2025–26 என்பதை அந்த மாநிலச் சட்டமன்றத்தில் சமர்ப்பித்தது.
- மும்பை கடற்கரை சாலையில், நரிமன் பாயிண்டிலிருந்து வொர்லி வரை வடக்கு நோக்கிச் செல்லும் பாதையில் இந்தியாவின் முதல் இசைச் சாலையை மும்பை கடற்கரை சாலை அறிமுகப்படுத்தியது.

- டெல்லி மெட்ரோ ரயிலின் மெஜந்தா பாதையானது, டெல்லி மெட்ரோ வலை எமைப்பின் மிக நீளமான வழித்தடமாக மாறவுள்ளது என்பதோடு இது சுமார் 89 கிலோ மீட்டர் நீளம் கொண்டதாக இருக்கும்.
- ஒடிசா ஐந்து ஆண்டுகளில் மிக அதிகமான கடல் ஓங்கில்கள் (டால்பின்) எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது என்ற நிலையில் 2026 கணக்கெடுப்பில் 765 டால்பின்கள் கணக்கிடப்பட்டுள்ளன.
- உத்தரப் பிரதேச அரசு 2026–27 நிதியாண்டிற்கான ₹9.12 லட்சம் கோடி பட்ஜெட்டை மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்தது.
- மாணவர்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக, WWF இந்தியா (இயற்கையான இந்தியாவிற்கான உலகளாவிய நிதியம்) உருவாக்கிய அதன் முதல் பல்லுயிர் மற்றும் கலாச்சார அம்ச வரைபடத்தை கோவா வெளியிட உள்ளது.
- ஆந்திரப் பிரதேச சட்டமன்றம் 2026 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு (MLA) செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான டிஜிட்டல்வழி வருகைப்பதிவு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியப் பிரதமர் குமார் பாஸ்கர் வர்மா சேது மற்றும் அசாமில் வடகிழக்கின் முதல் அவசர தரையிறங்கும் வசதி (ELF) ஆகியவற்றைத் திறந்து வைத்தார்.
- இந்தியாவில் ஒரு விரிவான நகர்ப்புறக் கொள்கையை அங்கீகரித்த முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- புது தில்லியில் நடைபெற்ற இந்தியா AI தாக்க உச்சி மாநாட்டில் பீகார் ஒரு செயற்கை நுண்ணறிவு (AI) - செயல்படுத்தப்பட்ட தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்தியது.
- கேரள அரசு கடல் ஓத வெள்ளத்தை மாநிலம் சார்ந்தப் பேரிடராக அறிவித்துள்ளது.
- கிராபீனின் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக இந்தியாவின் முதல் விரிவான கிராபீன் கொள்கையை கேரளா அங்கீகரித்துள்ளது.
- பீகார் மாநில அமைச்சரவையானது சரண் மாவட்டத்தில் உள்ள சோனேபூரில் ஒரு புதிய சர்வதேச விமான நிலையத்தைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- திபெத்தியப் புத்தாண்டையும் நெருப்பு குதிரை ஆண்டின் தொடக்கத்தையும் குறிக்கும் வகையில் லோசர் விழா 2026 பிப்ரவரி 18–20 வரை இமாச்சலப் பிரதேசத்தின் மெக்லியோட் கஞ்சில் கொண்டாடப்படுகிறது.
- டெல்லி முதல்வர் சரோஜினி நகரில் CM ஸ்ரீ பள்ளியைத் திறந்து வைத்தார் என்ற நிலையில் இது இந்தியாவின் முதல் AI மூலம் வழி நடத்தப்படும் ஒரு விரிவான கல்வி மாதிரியைக் குறிக்கிறது.
- முதலமைச்சர் தேவேந்திர ஃபட்னாவிஸ் தலைமையிலான மகாராஷ்டிர அரசு, முஸ்லிம் சமூகத்தின் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கான பத்தாண்டு பழமையான 5% இட ஒதுக்கீட்டை ரத்து செய்துள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள 1,750 மெகாவாட் Demwe Lower Hydel திட்டத்திற்கு 2037 வரை 11 ஆண்டு சுற்றுச்சூழல் அனுமதி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிராவின் பந்தாரா மாவட்டத்தைச் சேர்ந்த பேலா கிராமப் பஞ்சாயத்து, இந்தியாவின் முதல் நிகர-சுழிய உமிழ்வுப் பஞ்சாயத்தாக 2026 ஆம் ஆண்டு மும்பை காலநிலை வாரத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

- தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் (NGT), உத்தரப் பிரதேச அரசாங்கத்திற்கு, அதிகாரப் பூர்வப் பதிவுகளில் சுவாவின் நிலையை "வடிகால்" என்பதிலிருந்து "நதி" என மாற்ற உத்தரவிட்டது, சுவாவ் (சுவாவான் என்றும் அழைக்கப்படுகிறது) என்பது உத்தரப் பிரதேசத்தின் பல்ராம்பூர் மாவட்டத்தில் உள்ள ரப்தி ஆற்றின் துணை நதியாகும்.
- ஜம்மு-காஷ்மீர் அரசு, ஜம்மு பகுதிக்கு ராவி நதி நீரைத் திருப்பிவிடுவதையும், சிந்து நதி நீர் ஒப்பந்தம் (1960) இடைநிறுத்தப் பட்ட பிறகு துல்புல் நீர்வழி தடுப்பணைத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதையும் பரிசீலித்து வருகிறது.
- மகாராஷ்டிராவில் உள்ள சவுண்டலா கிராமம், பிப்ரவரி 5, 2026 அன்று கிராம சபைத் தீர்மானம் மூலம் தன்னை சாதியற்றக் கிராமமாக அறிவித்தது.
- கர்நாடகாவின் மாண்டியா மாவட்டத்தில் உள்ள கே. பெட்டஹள்ளி கிராமத்தில் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பன்மொழி ஹொய்சளர்கள் கல்வெட்டு கண்டுபிடிக்கப் பட்டது.
- ஹரியானா அரசு, மாநிலச் சட்டமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடரின் போது CM Shri பள்ளிகளைத் தொடங்குவதாக அறிவித்தது.
- திமாப்பூரில் தொடங்கிய வட கிழக்கு வசந்த விழா 2026 ஆனது, பிராந்தியங்களுக்கு இடையிலான கலாச்சாரப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்காக மத்திய தக்ஷிணி விழா 2026 உடன் நடத்தப்படுகிறது.
- சுதந்திரப் போராட்ட வீரர் திரிலோச்சன் போக்ரேலை கௌரவிக்கும் வகையில் பாக்யாங் விமான நிலையம் திரிலோச்சன் போக்ரேல் விமான நிலையம் என மறு பெயரிடப் படும் என்று சிக்கிம் முதல்வர் அறிவித்தார்.
- இரண்டுக்கும் மேற்பட்ட குழந்தைகளைக் கொண்ட வேட்பாளர்கள் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதைத் தடைசெய்யும் விதியை ராஜஸ்தான் அமைச்சரவை நீக்கியுள்ளது.
- கோவா, பனாஜியில் உள்ள தேசிய கடல்சார் நிறுவனத்தில் (NIO) நான்காவது உலகப் பெருங்கடல் அறிவியல் மாநாடு 2026 என்பதை நடத்துகிறது என்ற நிலையில் இது கடல் ஆரோக்கியம், காலநிலை மீள்தன்மை மற்றும் நிலையான கடல்சார் பொருளாதாரம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- ராஜஸ்தான் அரசாங்கம் மவுண்ட் அபுவை அபுராஜ் என்றும், காமன் என்பதை கம்வான் என்றும், ஜஹாஸ்பூர் என்பதை யக்யாபூர் என்றும் பெயர் மாற்றம் செய்துள்ளது.
- மாநிலம் முழுவதும் 1,06,905 பேர் பயனடையும் வகையில், பூர்வீக நிலமற்ற பழங்குடிக் குடும்பங்களுக்கு நிலப்பட்டாக்களை விநியோகிப்பதற்காக அசாம் அரசு தேமாஜி மாவட்டத்தில் மிஷன் பசுந்தரா 3.0 திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- கடைசி ஆயுதமேந்திய மாவோயிஸ்ட் உறுப்பினரும் சரணடைந்த பிறகு பீகார் நக்சல் இல்லாத மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- கேரள இருப்பிட அட்டை மசோதாவை கேரளச் சட்டமன்றம் நில வருவாய் மற்றும் தேவசம் தொடர்பான பிரிவுக் குழுவிற்கு பரிந்துரைத்துள்ளது.
- வாரணாசி ஒரு மணி நேரத்தில் 2.5 லட்சத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு கின்னஸ் உலக சாதனைகளில் இடம்பிடித்தது.
- இந்திய காட்டெருமை விழாவின் இரண்டாவது பதிப்பு மார்ச் 8, 2026 அன்று ஒடிசாவில் உள்ள திப்ரிகார் வனவிலங்கு சரணாலயத்தில் நடைபெறும்.
- கர்நாடக அரசு 2026–27 ஆம் ஆண்டிற்கான மாநில பட்ஜெட்டில் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடக அணுகலைத் தடை செய்வதாக அறிவித்தது.

- ஆந்திரப் பிரதேச மாநில அரசு இரண்டாவது அல்லது மூன்றாவது குழந்தையைப் பெறும் தம்பதிகளுக்கு ₹25,000 நிதி ஊக்கத்தொகையை அறிவித்தது.
- திருவனந்தபுரம் மாநகராட்சி, தூய்மை இந்தியா திட்டம் (நகர்ப்புறம்) 2.0ன் கீழ், கழிவுகளை அகற்றுவதற்கும் மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையைத் தவிர்ப்பதற்கும் 'ஜி-ஸ்பைடர்' (G-SPIDER) என்ற செயற்கை நுண்ணறிவு இயந்திர மனிதன் /ரோபோவை அமையிழஞ்சான் கால்வாயில் பணியமர்த்தியுள்ளது.
- சாராவதி பள்ளத்தாக்கு சிங்கவால் குரங்கு சரணாலயம் மற்றும் அதன் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தில் அனைத்து தரைநிலை நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு கர்நாடக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- சட்டவிரோத மத மாற்றங்களைத் தடுக்க சத்தீஸ்கர் அரசு 'சமயச் சுதந்திர மசோதா 2026' என்ற மசோதாக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- கட்டாய மதமாற்றத்தைத் தடுப்பதற்காக மகாராஷ்டிரா மத சுதந்திர மசோதா 2026-ஐ அம்மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது.
- மிசோரம் மாநிலத்தின் வசந்தகால திருவிழாவான சப்சார் குட் , 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கொண்டாடப்பட்டது.
- சர்ஹுல் என்பது சமீபத்தில் முக்கியமாக ஜார்கண்ட் மற்றும் ஒடிசா, மேற்கு வங்காளம், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் கொண்டாடப்பட்ட ஒரு முக்கிய பழங்குடியினத் திருவிழாவாகும்.
- அசாம் அரசு குக்கி ஆயுதமேந்திய குழுக்கள் மற்றும் ஹ்மார் மக்கள் பேரவை-ஜனநாயக அமைப்புடன் அமைதி ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.
- கிராமப்புற வீடுகளுக்கு அதிவேக இணைய வசதியை வழங்கவும், டிஜிட்டல் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும் உத்தரப்பிரதேசம் கங்கா திட்டம் எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டில் மூசி நதி புத்துயிரூட்டும் திட்டத்திற்காக அமைச்சரவை துணைக் குழுவை அமைப்பதாக தெலுங்கானா மாநில அரசு அறிவித்துள்ளது.
- உத்தரகாண்டைத் தொடர்ந்து, அனைத்து சமூகத்தினருக்கும் பொதுவான சட்டத்தை உருவாக்கும் பொது சிவில் சட்ட மசோதாவை (UCC) நிறைவேற்றிய இரண்டாவது மாநிலமாக குஜராத் உருவெடுத்துள்ளது.
- சட்டமன்ற உறுப்பினர்களின் (MLA) செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கான இந்தியாவின் முதல் டிஜிட்டல் தளமான 'MLATrack.com' ஐ கேரளா அறிமுகப்படுத்தியது.
- ஜல் ஜீவன் திட்டம் (JJM) 2.0-இன் கீழ் சீர்திருத்தம் அடிப்படையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்ட 12-வது மாநிலமாக மேகாலயா உருவெடுத்து உள்ளது.
- நகரங்களில் உள்ள ஏரிகளின் சுகாதாரம் மற்றும் காற்றின் தரத்தைக் கண்காணிக்கவும் மேம்படுத்தவும் குஜராத் அரசு 'ஏரி மற்றும் காற்று கண்காணிப்பு' முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- வாகனங்களால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் குறைக்க, இந்தியாவின் முதல் நுண்பாசி அடிப்படையிலான காற்று கோபுரம் புது தில்லியில் நிறுவப்பட்டுள்ளது.
- இந்திய தொல்லியல் ஆய்வு மையம் (ASI) பீகாரின் வரலாற்றுச் சிறப்புமிக்க பலிராஜ்கர் தளத்தில் 2026-ஆம் ஆண்டில் புதிய அகழ்வாராய்ச்சிப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

- ❖ அமராவதியை ஜூன் 2, 2024 முதல் ஆந்திரப் பிரதேசத்தின் ஒரே தலைநகராக அறிவிக்க ஆந்திரப் பிரதேச மறுசீரமைப்பு (திருத்த) மசோதா, 2026 மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- ❖ செயற்கைக்கோள் இணைய சேவைகளை மேம்படுத்துவதற்காக மேகாலயா மாநில அரசானது ஸ்டார்லிங்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளது.
- ❖ இந்தியாவிலேயே முதன்முறையாக போபால் மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் பாஸ்போர்ட் விண்ணப்ப தாரர்களுக்காக பிரெய்லி மற்றும் சைகை மொழிச் சேவைகளை அறிமுகப்படுத்தி உள்ளது.
- ❖ ஒரு புதிய அரசாணையின் மூலம் புற்றுநோயை 'அறிவிக்கப்பட வேண்டிய நோயாக' தெலுங்கானா அரசு அறிவித்துள்ளது.
- ❖ வாக்காளர்களைக் கவருவதற்காக 2026 புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலின் போது தனித்துவமான வாக்குச்சாவடிகளும், 'நிலா' என்ற மனித உருவ ரோபோவும் பயன்படுத்தப் பட்டன.
- ❖ இந்திய ராணுவம் சிக்கிம் மாநிலத்தின் முதல் எல்லைப்புற கிராம சமூக வானொலி நிலையத்தை "சிக்கிம் சுந்தரி" என்ற பெயரில் தொடங்கியது.
- ❖ 2030 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னதாக, விளையாட்டு வீரர்களுக்கான மரபணு தரவுத் தளத்தை உருவாக்குவதற்காக குஜராத் மாநிலம் விளையாட்டு மரபணு திட்டத்தை தொடங்கியுள்ளது.
- ❖ ஆங்கிலத்துடன் காசி மற்றும் காரோ மொழிகளுக்கும் அதிகாரப்பூர்வ மொழி அந்தஸ்தை வழங்குவதற்காக மேகாலயா அதிகாரப்பூர்வ மொழிகள் அவசரச் சட்டம், 2026-க்கு, மேகாலய அரசு ஒப்புதல் அளித்தது.
- ❖ ஜம்மு காஷ்மீர் மற்றும் புதுச்சேரி ஆகிய ஒன்றியப் பிரதேசங்களில் மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம் 2026 ஆம் ஆண்டு 17 ஏப்ரல் முதல் அமலுக்கு வந்தது.
- ❖ அகமதாபாத்தில் உள்ள கங்காரியா ரயில்பெட்டி பராமரிப்புப் பணிமனையானது, இந்தியாவின் முதல் நீர் நடுநிலை ரயில்வே பணிமனையாக மாறியுள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் மேம்பட்ட 3D குறைக்கடத்தி சில்லு பேக்கேஜிங்/பொதிகட்டுதல் அலகிற்கான அடிக்கல் நாட்டு விழா ஒடிசாவின் புவனேஸ்வரில் நடைபெறவுள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் பெரிய அளவிலான தனியார் தங்கச் சுரங்கத் திட்டமானது 2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆந்திரப் பிரதேசத்தில் தனது செயல்பாடுகளைத் தொடங்கவுள்ளது.
- ❖ கடல்சார் இடஞ்சார்ந்த திட்டத்தை (MSP) தொடங்கிய முதல் மாநிலமாக ஒடிசா உருவெடுத்துள்ளது.
- ❖ பெட்ரோகிளிஃப்ஸ் எனப்படும் பழமையான பாறைச் சிற்பங்களைப் பாதுகாப்பதற்காக, இந்தியாவின் முதல் பெட்ரோகிளிஃப் பாதுகாப்புப் பூங்காவிற்கான அடிக்கல் சிந்து நதிக்கரையில் உள்ள லடாக்கில் நாட்டப்பட்டது,
- ❖ அழிந்து வரும் கங்கை நதி டால்பினைப் பாதுகாக்கும் நோக்கில் 'டால்பின் நண்பர்கள்' என்ற தன்னார்வலர் வலையமைப்பை பிரயாக்ராஜில் உள்ள வனத்துறை தொடங்கி உள்ளது.
- ❖ குண்டூர் மாநகராட்சி (GMC) 2026 ஆம் ஆண்டிற்கான 4-வது பாலின சமத்துவ அணி திரட்டல் (GEM) விருதை வென்றுள்ளது.

- ❖ இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த லித்தியம்-இரும்பு பேட்டரிகள் மற்றும் அரிய வகை காந்தங்களுக்கான மறுசுழற்சி ஆலை உத்தரப் பிரதேசத்தின் சிக்கந்திராபாத்தில் அமைக்கப் பட்டுள்ளது.
- ❖ ஆந்திரப் பிரதேச மாநிலமானது ₹13,000 கோடி முதலீட்டில் தனது முதல் காளான் உற்பத்தித் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ 2016 ஆம் ஆண்டு மேற்கு வங்க மாநிலம் சிலிகுரியில் நடத்திய பிறகு, 2026 ஆம் ஆண்டிற்கான தெற்காசிய கால்பந்து சம்மேளனத்தின் (SAFF) மகளிர் சாம்பியன்ஷிப் போட்டியை இந்தியா கோவாவில் நடத்த உள்ளது,.
- ❖ மகாராஷ்டிராவின் விர்லி கண்டாரில் நடைபெற்ற ஒரு புதிய அகழ்வாராய்ச்சியானது தனித்துவமான அடக்கக் கட்டமைப்புகள் மற்றும் தொல்பொருட்களை வெளிப்படுத்தியுள்ளது.
- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் சுதந்திரத்திற்குப் பிறகு இதுவரையில் இல்லாத அளவில் அதிகபட்சமாக 92.47% வாக்குப்பதிவை பதிவு செய்துள்ளது.
- ❖ போதைப்பொருள் விசாரணைக்காக இந்தியாவிலேயே முதல்முறையாக செயற்கை நுண்ணறிவை (AI) அடிப்படையாகக் கொண்ட 'நாரிட் AI' என்ற கருவியை குஜராத் காவல்துறை உருவாக்கியுள்ளது.
- ❖ பழங்குடியினப் பல்லுயிர் மற்றும் பாரம்பரிய விவசாயத்தை மேம்படுத்துவதற்காக, ஆந்திரப் பிரதேசத்தின் அரக்கு பள்ளத்தாக்கில் 17-வது பழங்கால விதை திருவிழா நடைபெற்றது.
- ❖ இந்தியாவின் முதல் பசுமை மெத்தனால் உற்பத்தி ஆலையானது குஜராத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.
- ❖ முழுமையான காகிதமில்லா நீதித்துறையை ஏற்றுக் கொண்ட இந்தியாவின் முதல் மாநிலமாகச் சிக்கிம் மாறியுள்ளதுடன், இது டிஜிட்டல் நீதி வழங்கலில் ஒரு முக்கிய மைல்கல்லாகும்.
- ❖ இந்தியாவில் முதல் முறையாக, கிக் தொழிலாளர்களுக்கென பிரத்யேக டிஜிட்டல் குறைதீர்க்கும் அமைப்பைக் கர்நாடகா தொடங்கியுள்ளதுடன் இது நாட்டில் ஒரு பெரிய தொழிலாளர் நலச் சீர்திருத்த முன்னெடுப்பாகும்.
- ❖ பெங்களூரு நகரக் காவல்துறை, 'நம்ம 112' (Namma 112) அவசரக்கால அமைப்பில் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த பலமொழி மேம்பாட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ சாவில்ஸின் 'வளர்ச்சி மையங்கள் குறியீட்டில்', 2035 ஆம் ஆண்டு வரை உலகின் மிக வேகமாக வளரும் முக்கிய நகரமாக பெங்களூரு தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ இந்தியாவின் முதல் மாநிலத் தலைமையிலான விண்வெளித் தொழில்நுட்பத்திற்கான சிறப்பு மையத்தை கர்நாடகா, பெங்களூருவில் தொடங்கியது.
- ❖ 2026 ஆம் ஆண்டிற்கான புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் 2026 ஆம் ஆண்டு மே 4 அன்று அறிவிக்கப்பட்ட நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) பெரும்பான்மை இடங்களைப் பெற்றது.
- ❖ ஜார்க்கண்டில் உள்ள ஹசாரிபாக், பிரதான் மந்திரி மத்சய சம்பதா யோஜனாவின் (PMMSY) கீழ் இந்தியாவின் முதல் முத்து வளர்ப்புத் தொகுப்பாக மாறியது.
- ❖ பேரிடர்களை நிகழ்நேரத்தில் தெரிவிப்பதையும் மற்றும் பேரிடர் காலங்களில் விரைந்து செயல்படுவதையும் வலுப்படுத்தும் நோக்கில் மிசோரம் மாநிலம் 2026 ஆம் ஆண்டில் 'குவாரல்' மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியது.

- ❖ தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) படி, 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான மனிதக் கடத்தல் வழக்குகள் தெலுங்கானாவில் பதிவாகி உள்ளன.
- ❖ தேசிய குற்ற ஆவணக் காப்பக (NCRB) அறிக்கையின்படி, 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் அதிக வன்முறைக் குற்ற விகிதத்தை ஒடிசா பதிவு செய்துள்ளது.
- ❖ 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு மேற்கு வங்க மாநிலத்தின் முதல் பாஜக அரசை வழி நடத்த சுவேந்து அதிகாரி முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- ❖ ஹிமந்த பிஸ்வா சர்மா 2026 ஆம் ஆண்டு மே 12 அன்று தொடர்ந்து இரண்டாவது முறையாக அஸ்ஸாம் முதலமைச்சராகப் பதவியேற்றார் என்பதோடு இதன் மூலம் இப்பதவியில் தொடர்ந்து இருமுறை பணியாற்றும் முதல் காங்கிரஸ் அல்லாத தலைவர் என்ற பெருமையை அவர் பெற்றார்.
- ❖ 2026 ஆம் ஆண்டு மே 8 நிலவரப்படி, பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா-நகர்ப்புறம் (PMAY-U) 2.0 என்ற திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டி முடிப்பதில் ஒடிசா முதன்மையான மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- ❖ 2024-25 ஆம் ஆண்டில் ஜார்கண்ட் மாநிலம் ஆரம்பப் பள்ளிகளில் 0% இடைநிற்றல் விகிதத்தைப் பதிவு செய்து உள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டில் பெங்களூருவில் 17,561 இணையவழி குற்ற வழக்குகள் பதிவாகியுள்ளதோடு இது இந்தியாவின் பெருநகரங்களிலேயே மிக அதிகமாகும்.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் புட்டபர்த்தியில் மேம்பட்ட நடுத்தர போர் விமான (AMCA) திட்ட வசதிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.
- ❖ தனது மாநிலத்தில் பெண்களை மையமாகக் கொண்ட நலத்திட்டங்களை வலுப் படுத்துவதற்காக, மேற்கு வங்க அரசு 2026 ஆம் ஆண்டு மே 14 அன்று மாதம் ₹3,000 வழங்கும் அன்னபூர்ணா பண்டார் திட்டத்தைத் தொடங்கியது.
- ❖ மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான், ஒடிசாவின் சம்பல்பூர் மாவட்டத்தில் 'பீமமண்டலி சுற்றுச்சூழல் பாரம்பரிய தளத்தை' தொடங்கி வைத்தார்.
- ❖ தரமற்ற மருந்துகள் (NSQ) மற்றும் போதை/மயக்க மருந்துகள் மற்றும் மனநலப் பொருட்களின் (NDPS) மருந்து விற்பனையைக் கண்காணிக்க இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த டிஜிட்டல் இணையதளத்தை கர்நாடகா அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ மத்தியப் பிரதேசத்தில் உள்ள உர்தான் மற்றும் திரௌலி நிலக்கரிச் சுரங்கங்களில் இருந்து நிலக்கரி உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதாக நிலக்கரி அமைச்சகம் அறிவித்து உள்ளது.
- ❖ நாகாலாந்தை உலகளாவிய சிறப்பு காபி மையமாக மாற்றுவதற்காக ₹175 கோடி மதிப்பிலான "நாகாலாந்தின் காபிகள்" திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது
- ❖ கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டத்தின் மணியூர் கிராமத்தில் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹொய்சாளர்களின் வீரக்கல்/நடுகல் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளது.
- ❖ அமைச்சரவை அளவில் செயற்கை நுண்ணறிவுக்கான (AI) பிரத்தியேக இலாகாவை உருவாக்கிய முதல் இந்திய மாநிலமாக கேரளா உருவெடுத்துள்ளது.
- ❖ அதிக அளவிலான மத்திய அரசின் திட்டங்களைக் கொண்ட இந்தியாவின் முதன்மை மாநிலமாக மகாராஷ்டிரா உருவெடுத்துள்ளது.
- ❖ சீனப் பெருஞ்சுவருக்கு அடுத்தபடியாக, உலகின் இரண்டாவது நீளமான தொடர்ச்சியான சுவரைக் கொண்டிருப்பதாக யுனெஸ்கோ கணக்கெடுப்பில் ராஜஸ்தானின் கும்பல்கர் கோட்டை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- ஜார்க்கண்ட் மாநிலத்தின் ஹசாரிபாக் மாவட்டத்தில் அமைந்துள்ள சௌபரன் வட்டாரத்தின் மோஹானே ஆற்றுப் படுகையில், சுமார் 3,200 ஆண்டுகள் பழமையான மனிதக் குடியிருப்புக்கான ஆதாரங்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கஞ்சாம் மாவட்டத்தில் உள்ள அசல் போம்காய் நெசவு பாரம்பரியத்தைப் பாதுகாக்க ஒடிசா "நலிவடைந்து வரும் பொருட்களுக்குப் புத்துயிர் அளித்தல் (பருத்தி போம்காய் புடவை)" என்ற தலைப்பிலான ஒரு புத்துயிர் திட்டத்தை தொடங்கியுள்ளது.
- ஜார்கண்ட் மாநிலமானது, பலமு புலிகள் காப்பகத்தில் இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான மனித-யானை மோதல் ஆராய்ச்சி மையத்தை நிறுவ உள்ளது.
- மாநிலத்தில் ஒரு பொதுவான சிவில் சட்டக் கட்டமைப்பை உருவாக்குவதற்காக அசாம் சட்டமன்றம் பொது சிவில் சட்ட (UCC) மசோதா, 2026-ஐ நிறைவேற்றியது.
- விழிப்புணர்வு மற்றும் ஊழல் தடுப்புப் பணியகம் (VACB) மூலம் மாநில அளவிலான ஊழல் தடுப்பு முன்னெடுப்பாக Project Zero எனும் திட்டத்தை கேரளா அறிமுகப்படுத்தியது.
- இந்திரா மகிளா சக்தி திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களால் (SHGs) இயக்கப் படும் இந்தியாவின் முதல் சூரிய மின்சக்தி திட்டங்களை தெலுங்கானா மாநிலம் தொடங்கி வைத்துள்ளது.
- ULLAS (சமூகத்தில் அனைவருக்கும் வாழ்நாள் கற்றலைப் புரிந்துகொள்ளுதல்) திட்டத்தின் கீழ் இந்தியாவின் ஐந்தாவது முழுமையான எழுத்தறிவு பெற்ற மாநிலமாக சிக்கிம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- கேரளாவின் 'மாதவிடாய் கண்ணியத் திட்டம்' கேரளாவில் உள்ள பள்ளி மாணவிகளுக்கு மாதத்திற்கு மூன்று நாட்கள் வரை மாதவிடாய் விடுப்பு வழங்க முன்மொழிகிறது.
- கர்நாடகாவின் 18வது முதலமைச்சரான சித்தராமையா, மாநில வரலாற்றில் மிக நீண்ட கூட்டுப் பதவிக்காலத்தைக் கொண்ட முதலமைச்சர் என்ற சாதனையை இப்போது படைத்துள்ளார்.
- அஸ்ஸாமின் முகா பட்டினை உலகளாவிய ஆடம்பர தர அடையாளம்/பிராண்டாக மேம்படுத்துவதற்காக, வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத் துறையின் (DoNER) மத்திய அமைச்சர் செனெஜோரி என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு-6 (NFHS-6) 2023-24-இன்படி, மத்தியப் பிரதேசத்தில் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு அதிக அளவில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு-6 (NFHS-6) 2023-24 ஆனது மேகாலயாவில் குழந்தைகள் வளர்ச்சி குன்றிய நிலை குறைந்திருப்பதைப் பதிவு செய்துள்ளது.
- வனவிலங்கு குற்ற மேலாண்மைக்காக இந்தியாவின் முதல் நீதித்துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்ட டிஜிட்டல் அமைப்பாக HAWK என்பதை கேரளா அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்திய குறைக்கடத்தி திட்டத்தின் கீழ் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் முதல் குறைக்கடத்தித் திட்டத்திற்காக விசாகப்பட்டினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மேற்கு வங்க சட்டப் பேரவையானது தேசிய இ-விதான் பயன்பாட்டை (NeVA) செயல் படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டது.

- தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு-6 (NFHS-6) இன் படி, இந்தியாவின் மிகக் குறைந்த மொத்த கருவுறுதல் விகிதத்தை (TFR) அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் பதிவு செய்துள்ளன.
- கர்நாடகாவிலிருந்து நியூசிலாந்திற்கு, மூலிகைச் சத்துக்கள் சேர்க்கப்பட்ட மற்றும் சமைக்கத் தயாரான நிலையில் உள்ள சிறுதானிய அடிப்படையிலான சிறப்பு உணவுப் பொருட்களை, கடல் வழியாக ஏற்றுமதி செய்வதற்கான முதல் முயற்சியை APEDA (விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம்) முன்னின்று செயல்படுத்தியது.
- கேரள மாநில சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் (KSRTC) சாதாரணப் பேருந்துகளில் பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கான இலவசப் பயணத்தை வழங்கும் 'பிரியதர்ஷினி திட்டத்திற்கு' கேரள அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதுடன் இத்திட்டம் 2026 ஆம் ஆண்டு ஜூன் 15 முதல் நடைமுறைக்கு வருகிறது.
- அரசு வேலைகள் மற்றும் பணிப் பலன்களுக்கான தகுதியைக் கட்டுப்படுத்தும் இரண்டு குழந்தைகள் விதிமுறையை மத்தியப் பிரதேச அரசு திரும்பப் பெற்றுள்ளது.
- ஜெகநாதர் கோயில் நிர்வாகம் (SJTA) ஆனது நீலச்சக்கரம் சின்னம் மற்றும் பதிதபபனா மற்றும் ஆனந்த பஜாரா ஆகிய சொற்களுக்கு வர்த்தக முத்திரைப் பாதுகாப்பைப் பெற்றுள்ளது என்பதோடு இத்தகையப் பாதுகாப்பைப் பெறும் முதல் இந்திய வழிபாட்டுத் தலம் இதுவாகும்.
- சர்வதேச பயணத்திற்கான எளிதான இணைப்பு மாதிரியில் ஒருங்கிணைக்கப்பட்ட இந்தியாவின் முதல் நகரமாக உத்தரப் பிரதேசத்தின் வாரணாசி உருவெடுத்துள்ளது.
- டெல்லி-மும்பை விரைவுச்சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ராஜஸ்தானில் உள்ள முகுந்திரா மலைப் புலிகள் காப்பகத்தின் கீழ் இந்தியாவின் முதல் 8-வழி சுரங்கப் பாதை 2026 ஆம் ஆண்டு ஜூன் 20 அன்று திறக்கப்பட உள்ளது.
- கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் திறக்கப்பட்டதையடுத்து, தெலுங்கானா அரசு தனது 'காலை உணவு மற்றும் பால் வழங்கும் திட்டத்தை' தொடங்கியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூல் மாவட்டத்தில் உள்ள ஜொன்னகிரி தங்கச் சுரங்கம் வணிக ரீதியான செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் இது ஜியோமைசூர் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் இயக்கப் படுவதோடு சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவின் ஒரே தனியார் துறை முதன்மைத் தங்கச் சுரங்கமாக இது விளங்குகிறது.
- தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக்கழகம், இந்திய தர நிர்ணய அமைப்பால் (BIS) வழங்கப்படும் நான்கு சர்வதேச தர நிர்ணய அமைப்பு (ISO) சான்றிதழ்களை ஒரே நேரத்தில் பெற்ற இந்தியாவின் முதல் பல்கலைக்கழகமாக உருவெடுத்துள்ளது.
- லடாக்கின் லேயில் உள்ள ஹெமிஸ் மடாலயத்தில் ஹெமிஸ் திருவிழா 2026 தொடங்கியது.
- ட்ரீ திருவிழா 2026 ஆனது அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள அபடானி பழங்குடியினரின் முக்கிய விவசாயத் திருவிழாவாகும்.
- குஜராத் மாநிலம் தனது முதல் இரண்டு காற்று நிரப்பப்பட்ட ரப்பர் அணைகளை சோட்டா உதய்பூர் மாவட்டத்தில் உள்ள ஹெரான் ஆற்றின் குறுக்கேயும், தபி மாவட்டத்தில் உள்ள அம்பிகா ஆற்றின் குறுக்கேயும் கட்டி வருகிறது.
- நர்மதா திட்டம் தொடர்பான நிலுவையில் உள்ள விவகாரங்கள் குறித்து மத்தியப் பிரதேசம், குஜராத், ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிர மாநில அரசுகள் ஒரு ஒப்பந்தத்தை எட்டியுள்ளன.

- 'உல்லாஸ் – நவ பாரத் சாக்சரதா கார்யக்ரம்' (புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம்) -இன் கீழ், இந்தியாவின் ஆறாவது முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக உத்தரகண்ட் மாறியது.
- பசுமை செயல் திட்டம் 2026-27 ஆம் ஆண்டின் கீழ் 'திட்டம் 70 லட்சம் மரம் நடும் பிரச்சாரம்' மற்றும் 'டெல்லி மலைமுகடுப் புத்துயிர் பிரச்சாரம்' ஆகியவற்றை டெல்லி தொடங்கியது.
- இமயமலை ஓக் காடுகளை மீட்டெடுக்கும் நோக்கில் சிக்கிம் முதலமைச்சர் பிரேம் சிங் தமாங் "திட்டம்: 2047- ஆம் ஆண்டுக்குள் ஒரு மில்லியன் ஓக் மரங்கள் திட்டம்" என்ற முன்னெடுப்பைத் தொடங்கி வைத்தார்.
- குஜராத்தின் அகமதாபாத் நகரில் உள்ள பாதஜ் பகுதியில் 2026 ஆம் ஆண்டு ஜூலை 12 அன்று ஒரே மணி நேரத்தில் 3.61 லட்சம் மரக்கன்றுகளை நட்டு கின்னஸ் உலக சாதனை படைக்கப் பட்டுள்ளது.
- ONGC நிறுவனம் 2026 ஆம் ஆண்டு ஜூலையில் லடாக்கின் புகா பள்ளத்தாக்கில் தனது இரண்டாவது புவி வெப்பக் கிணற்றை தோண்டும் பணியை நிறைவு செய்துள்ளது.
- கர்நாடகாவின் சாம்ராஜநகர் மாவட்டம் குண்டலுபேட்டை தாலுகாவில் தோரியம் உள்ள கனிமப் படிமங்களை இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) அடையாளம் கண்டுள்ளது.
- 2006 ஆம் ஆண்டின் வன உரிமைச் சட்டத்தின் (FRA) கீழ் 8 குறிப்பாக பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினக் குழுக்களை (PVTGs) உள்ளடக்கிய 10 வாழ்விட உரிமை கோரிக்கைகளை ஒடிசா அங்கீகரித்துள்ளது.
- பெண் விவசாயிகளுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் அளிக்கும் மகாராஷ்டிரா பெண் விவசாயிகள் அதிகாரமளித்தல் சட்டம், 2026-ஐ இயற்றிய இந்தியாவின் முதல் மாநிலமாக மகாராஷ்டிரா உருவெடுத்துள்ளது.
- மேற்கு வங்கத்தின் ஹவுராவில் உள்ள அமுல் பெங்கால் பால் பண்ணைத் திட்டத்தின் கீழ் உலகின் மிகப்பெரிய தயிர் உற்பத்தி ஆலைக்கான அடிக்கல்லை மத்திய உள் துறை அமைச்சர் நாட்டினார்.
- மத்தியப் பிரதேசத்தின் சிவபுரி மாவட்டத்தில் உள்ள பிச்சோர் உருண்டை கிரானைட் (Pichhore orbicular granite) பாறையை, சுமார் 2.56 பில்லியன் ஆண்டுகள் பழமையான, உலகின் இரண்டாவது பழமையான அறியப்பட்ட உருண்டைப்பாறையாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- லடாக்கின் புகா பள்ளத்தாக்கில் இந்தியாவின் முதல் புவிவெப்ப ஆற்றல் கிணறு செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.
- பீகாரின் ஷியோஹரில், 68.80 கி.மீ நீளமுள்ள பெல்வா-மினாபூர் இணைப்பு வாய்க்காலை (பெல்வதார்) பீகார் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இந்திய மாநிலங்களிலேயே கர்நாடகா அதிகபட்சமாக 15,395 எம்பிபிஎஸ் (MBBS) இடங்களைக் கொண்டு முதலிடத்தில் உள்ளது.
- மிஷ்டி (MISHTI) திட்டத்தின் கீழ் சதுப்பு நிலக்காடுகளை மீட்டெடுப்பதில் இந்திய மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
- அசாம் மாநிலம் தனது முதல் சர்வதேச 'புராபி ஐஸ்கிரீம்/பனிக்கூழ்' (Purabi Ice Cream) தொகுப்பை பூட்டானுக்கு ஏற்றுமதி செய்துள்ளதுடன் இது அம்மாநில பால்வளத் துறையில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது.
- லடாக் தனது 2027 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின் இரண்டாம் கட்டத்தை 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 அன்று தொடங்கும். மேலும், சாதி விவரங்களைப் பதிவு செய்யும் முதல் பகுதிகளில் இதுவும் ஒன்றாக இருக்கும்.

# புவிசார் குறியீடுகள்

| புவிசார் குறியீடு | இடம் |
|---|---|
| பாண்டுரு காதி | ஆந்திரப் பிரதேசம் |
| அஸ்வகந்தா | ராஜஸ்தான் |
| பித்தோரா ஓவியம் | குஜராத் |
| ஜல்பாரா சந்தேஷ், ஜனாய் நகரின் மனோஹரா மற்றும் பாலாகரின் பாரம்பரிய மரப்படகுகள் (டிங்கி) | மேற்கு வங்கம் |
| பகையா பட்டு, குச்சாய் பட்டு, முண்டா நகைகள் மற்றும் மூங்கில் கைவினைப்பொருட்கள் | ஜார்க்கண்ட் |
| நரம்பு இசைக்கருவி – திரிபுரா சரிந்தா | திரிபுரா |
| அசாம் பிஹு பெபா, அசாம் மூங்கில் கைவினைப்பொருட்கள் மற்றும் தேவ்ரி கைத்தறி | அசாம் |
| 'மோஜாரி' (Mojari) கைவினைப் பொருட்கள் | ஜோத்பூர் |
| குராசானி புளி | மத்தியப் பிரதேசம் |
| இந்தூரின் மால்வி உருளைக்கிழங்கு, ரத்லாமின் கராடு (ஒரு வகை கிழங்கு) மற்றும் பாலம் கக்டி (வெள்ளரி), மாண்டுவின் பாபாப் (Baobab) மரப் பழம் | மத்தியப் பிரதேசம் |
| ஸ்பிதி சீபக்ஹார்ன் (சர்மம்), சலூனி சஃபேத் மக்கா (வெள்ளை மக்காச்சோளம்), சம்பா உலோகக் கலை, சிர்மௌரி லோயா, கின்னௌரி தொப்பி, மண்டி செபுவாடி, கின்னௌரி ஆப்பிள் மற்றும் கின்னௌரி நகைகள் | இமாச்சலப் பிரதேசம் |
| 'சிர்சா கின்னோ' பழம் | ஹரியானா |

# முன்னெடுப்புகள், திட்டங்கள் மற்றும் பிரச்சாரங்கள்

| பெயர் | அமைச்சகம்/அமைப்பு | நோக்கம் |
|---|---|---|
| இரட்டை நகரங்கள் கூட்டாண்மை | மதுரை மற்றும் கேம்பர்லே | கல்வி மற்றும் ஆராய்ச்சி, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம், சுற்றுலா, பொருளாதார மேம்பாடு மற்றும் நகர்ப்புற நிர்வாகம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் |
| VijAIpatha ஆய்வகங்கள் முன்னெடுப்பு | கர்நாடகா அரசு | அரசு பள்ளி மாணவர்களுக்கு AI, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM), எந்திரவியல், நிரல் குறியாக்கம் மற்றும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளில் எதிர்காலத்திற்கு தயாரான திறன்களை வழங்குதல் |
| மின்னணுக் கூறுகள் உற்பத்தி திட்டத்தின் (ECMS) – கட்டம் III | மத்திய அரசு | இந்தியாவில் உள்நாட்டு மின்னணுக் கூறு உற்பத்தியை வலுப்படுத்தச் செய்தல் |

| | | |
|---|---|---|
| **சந்தை அணுகல் ஆதரவு (MAS) திட்டம்** | இந்திய அரசு | ஏற்றுமதியின் பல்வகைப்படுத்தலை ஊக்குவித்தல் மற்றும் இந்திய ஏற்றுமதிகளின் உலகளாவிய போட்டித் தன்மையை மேம்படுத்துதல் |
| **ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தின் (EPM)** | இந்திய அரசு | இரண்டு சோதனைத் திட்டங்கள்–<br>வட்டி மானியத் திட்டம்– தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதிக் கடனில் 2.75% வட்டி ஆதரவு<br>பிணையக் கடன் ஆதரவுத் திட்டம்– குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளை (CGTMSE) மூலம் 10 கோடி ரூபாய் வரை கடன் உத்தரவாதம் |
| **தேசிய டிஜிட்டல் நில முன்னெடுப்பு – நிலப் பதிவு தரவுதளம்** | கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் (MoRD) | நிலப் பதிவு மேலாண்மையில் வெளிப்படைத்தன்மை மற்றும் அணுகலை மேம்படுத்துதல் |
| **உலகம் உங்கள் கையில் திட்டம்** | தமிழக அரசு | அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணாக்கர்களுக்கும், தகுதியான தனியார் கல்லூரி மாணாக்கர்களுக்கும் இலவச மடிக்கணினி வழங்கல் |
| **முசி நதிக்கரை மேம்பாட்டுத் திட்டம்** | தெலுங்கானா அரசு | தெலுங்கானாவின் ஐதராபாத்தில் உள்ள முசி நதியைப் புத்துயிர் பெறச் செய்தல் |
| **சன்ஸ்கார் ஷாலா** | அசாம் அரசு | இந்தியக் கலாச்சார மரபுகள், ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்பை சிறு வயதிலேயே (4 முதல் 14 வயது) கற்பித்தல் |
| **முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம்** | தமிழ்நாடு அரசு | குறிப்பிட்டப் பயிர்கள் வளர்க்கப்பட்டு மண்ணில் கலக்கப்பட்டு மண் ஆரோக்கியத்தை மேம்படுத்தப்படுகின்ற பசுந்தாள் உரத்தை ஊக்குவித்தல் |
| **உலகளாவிய ஆளுகை முன்னெடுப்பு** | சீனா | உலகளாவிய ஆளுகையை உள்ளடக்கியதாகவும், பிரதிநிதித்துவமாகவும், மக்களை மையமாகக் கொண்டதாகவும் மாற்றுதல் |
| **BHARATI முன்னெடுப்பு** | வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) | வேளாண் உணவு மற்றும் வேளாண் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களை ஆதரிக்கிறது என்பதோடு மேலும் அவை உலகளாவிய சந்தைகளை அடைய உதவுதல் |
| **சர்வதேச மசாலாப் பொருட்கள் வர்த்தகப் பாதைகள் பாரம்பரிய வலையமைப்பு முன்னெடுப்பு** | கேரளா மாநில அரசு | கேரளாவை உலகச் சந்தைகளுடன் இணைக்கும் வரலாற்று மசாலாப் பொருட்கள் வர்த்தகப் பாதைகளை புதுப்பித்தல் |

| | | |
|---|---|---|
| **ரைசினா அறிவியல் தூதரக முன்னெடுப்பு (RSDI) 2026** | இந்திய அரசு | புவிசார் அரசியல் மற்றும் புவிசார் பொருளாதாரம் குறித்த இந்தியாவின் முதன்மை மாநாடான ரைசினா உரையாடலில் அறிவியல் ராஜதந்திரத்தை ஒருங்கிணைத்தல் |
| **பால் விவாஹ் முக்த் பாரத் பிரச்சாரம்** | இந்திய அரசு | 2026 ஆம் ஆண்டிற்குள் குழந்தை திருமணத்தை 10% குறைத்து 2030 ஆம் ஆண்டிற்குள் நாடு முழுவதும் அந்த நடைமுறையை ஒழித்தல் |
| **ஜவுளித் துறை பரிமாற்ற (DLTT) முன்னெடுப்பு** | ஜவுளி அமைச்சகம் | 100 உயர் திறன் கொண்ட மாவட்டங்களை உலகளாவிய ஏற்றுமதி சாம்பியன்களாக மாற்றுதல், 100 இலட்சிய நோக்கமிக்க மாவட்டங்களை சுய சார்பு மையங்களாக உருவாக்குதல் |
| **SHINE திட்டம்** | இந்தியத் தரநிலைகள் வாரியம் | இந்தியாவின் தர நிர்ணய பயணத்தின் மையமாக பெண்களை வைத்தல் |
| **அக்கா படே திட்டம்** | கர்நாடகா | பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை நன்கு மேம்படுத்துவதற்காக |
| **'ஆமே பதிபா ஆமா பசாரே' திட்டம்** | ஒடிசா அரசு | 3 முதல் 6 வயதுடைய குழந்தைகளுக்கான தாய்மொழியில் ஆரம்பகாலக் குழந்தைப் பருவக் கல்வியை வழங்குவதற்காக தொடங்கியது. |
| **கலைஞர் கனவு இல்லம் திட்டம்** | தமிழக அரசு | கிராமப்புறங்களில் உள்ள ஏழை மற்றும் வீடற்றக் குடும்பங்களுக்கு நிரந்தர கான்கிரீட் வீடுகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **மகாத்மா காந்தி கிராம சுயராஜ்ய முன்முயற்சி** | – | இந்த முன்முயற்சியானது, காதி மற்றும் அது தொடர்பான பொருட்களுக்கான உலகளாவியச் சந்தை இணைப்புகளையும் வணிக அடையாள ஆதரவையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **திவ்யாங்ஜன் கௌஷல் யோஜனா** | – | தகவல் தொழில்நுட்பம் (IT), AVGC (Animation, Visual Effects, Gaming and Comics), விருந்தோம்பல் மற்றும் உணவு மற்றும் பானங்கள் துறைகளில் மாற்றுத் திறனாளிகளுக்குத் தனிப்பயனாக்கப்பட்ட, தொழில் துறைக்குத் தொடர்புடைய பயிற்சியை வழங்கும். |
| **திவ்யாங் சஹாரா யோஜனா** | – | தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உயர்தர உதவி சாதனங்கள் சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **SBI சக்ரா முன்முயற்சி** | – | வளர்ந்து வரும் மற்றும் உயர் தொழில்நுட்பத் துறைகளை மதிப்பிடுவதற்கும் நிதி அளிப்பதற்கும் தேவையான நிறுவனத் திறனை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். |
| **சம்பூர்ணதா அபியான் 2.0** | – | இந்தப் பிரச்சாரத்தின் நோக்கம், இந்தியா முழுவதும் உள்ள 112 லட்சியமிகு மாவட்டங்களில் 5 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளிலும் (KPIs) மற்றும் 513 லட்சியமிகு வட்டாரங்களில் 6 முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளிலும் முழுமையான இலக்கை அடைவதாகும். |

| | | |
|---|---|---|
| **எரிபொருள் சேமிப்புப் பிரச்சாரம்** | – | பிப்ரவரி 1 முதல் பிப்ரவரி 15, 2026 வரை அனுசரிக்கப்படும் சாக்சம் (சம்ரக்சன் சமதா மகோத்சவம்) 2026 எனும் சண்டிகரில் தொடங்கப் பட்டது. |
| **யுவ சஹகார் திட்டம்** | தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் (NCDC) | புதுமையான யோசனைகளைக் கொண்ட புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களை ஊக்குவிக்கிறது. |
| **சபாசார் முன்முயற்சி** | பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் | இது ஒலி மற்றும் காணொளிப் பதிவுகளைத் தானாகவே உரைச் சுருக்கங்களாக மாற்றுவதன் மூலம், கிராம சபை மற்றும் பஞ்சாயத்துக் கூட்டங்களை ஆவணப் படுத்துவதை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **தமிழ்நாடு நகர்ப்புறப் பசுமையாக்கல் கொள்கை 2026** | – | நகர்ப்புறப் பசுமைப் பரப்பை அதிகரிப்பதன் மூலம், தட்பவெப்பநிலையைத் தாங்கக்கூடிய, நீடித்த மற்றும் வாழத்தகுந்த நகரங்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். |
| **ஜலாஜ் வாழ்வாதார மையங்கள்** | மத்திய ஜல் சக்தித் துறை | இந்த முயற்சி, கங்கை நதிப் படுகையில் நதியின் பாதுகாப்பை நீடித்த வாழ்வாதாரங்களுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **என்.பி.எஸ் ஸ்வஸ்த்யா ஓய்வூதியத் திட்டம்** | ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) | இது உடல்நலம் தொடர்பான நிதிப் பலன்களை தேசிய ஓய்வூதிய அமைப்புடன் (NPS) ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **முதலமைச்சர் கிராமோதயத் திட்டம்** | குஜராத் | கிராமங்களில் கிராமப்புற நிர்வாகத்தையும் உள்கட்டமைப்பையும் வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். |
| **முக்கிய மந்திரி எதி கோலி துதி பாத் திட்டம்** | அசாம் அரசு | இந்த முயற்சி தேயிலைப பழங்குடியினர் மற்றும் அசாமின் பழங்குடிச் சமூகங்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **புதுமைப் பெண் திட்டம்** | – | இந்தத் திட்டத்தின் கீழ், கல்லூரிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மாதத்திற்கு ₹1,000 வழங்கப்படுகிறது. |
| **லக்பதி பிடியா யோஜனா** | டெல்லி அரசு | ஏப்ரல் 1, 2026 அன்று தொடங்கும் இந்தத் திட்டம், ஒரு பெண்ணின் பள்ளிப் படிப்பு மற்றும் உயர்கல்வியின் போது மொத்தம் ₹56,000 நிதி உதவி வழங்கும் என்பதோடு இது வட்டியுடன் சேர்த்து சுமார் ₹1 லட்சமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| **யானைக்கால் நோய் ஒழிப்பு பிரச்சாரம்** | மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் | நீடித்த வளர்ச்சி இலக்கு 3 (SDG-3) இன் கீழ் 2027 ஆம் ஆண்டுக்குள் யானைக்கால் நோயை ஒழிப்பதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| **PM RAHAT திட்டம் - PM RAHAT (சாலை விபத்தில் பாதிக்கப் பட்டவர்களை மருத்துவ மனையில் சேர்த்தல் மற்றும் கட்டாய சிகிச்சை அளித்தல்)** | – | இந்தத் திட்டம், விபத்து நடந்த நாளிலிருந்து 7 நாட்களுக்கு சாலை விபத்தில் பாதிக்கப் பட்டவருக்கு ₹1.5 லட்சம் வரை பணமில்லா சிகிச்சையை வழங்குகிறது. |
| **குழந்தைப் பராமரிப்பு பெட்டகம் திட்டம்** | தமிழ்நாடு அரசு | குறைந்த எடை கொண்ட குழந்தைகளிடையே குழந்தை இறப்பு விகிதத்தை (IMR) குறைக்க |
| **லக்பதி தீதி திட்ட விரிவாக்கம்** | இந்திய அரசு | இந்த முயற்சி வருமான வாய்ப்புகளை அதிகரிப்பதையும் கிராமப்புறப் பெண்களின் தொழில்முனைவோரை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஸ்த்ரீ சுரக்சா திட்டம்** | கேரள அரசு | வேலையில்லாத பெண்கள் மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவுகளைச் சேர்ந்த திருநங்கைகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக. |
| **'அன்பு கரங்கள்' திட்டம்** | – | பெற்றோரை இழந்த குழந்தைகளைப் பாதுகாக்கவும், 18 வயது வரை பள்ளிப் படிப்பை கைவிடாமல் தொடரவும் மாதாந்திர நிதி உதவி ரூ.2,000 வழங்குகிறது. |
| **'அன்புச் சோலை'** | – | முதியோர் எதிர்கொள்ளும் சிரமங்களைப் போக்க, மூத்தக் குடிமக்களுக்காக 25 இடங்களில் எனப்படும் பகல்நேரப் பராமரிப்பு மையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. |
| **'பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம்'** | – | கலை மற்றும் அறிவியல், பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் உள் கட்டமைப்பை மேம்படுத்தல். |
| **'கல்லூரிக் கனவு' திட்டம்** | – | பள்ளிக் கல்வியை முடித்த மாணவர்கள் தங்கள் ஆர்வத்திற்கு ஏற்ப உயர்கல்வி படிப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் வழிகாட்டுவதற்காக. |
| **'வெற்றி நிச்சயம்' திட்டம்** | – | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப் படுகிறது என்பதோடு இது இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து அவர்களை வேலைவாய்ப்புக்குத் தயார்படுத்துகிறது. |
| **'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டம்** | – | மக்களின் நீண்டகாலக் குறைகளிலிருந்து எழும் பத்து முன்னுரிமை கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக தொடங்கப் பட்டு உள்ளது. |
| **'கலைஞர் கைவினை திட்டம்** | – | 25 வகை கைவினைஞர்களின் மேம்பாட்டிற்கு நிதி உதவி, திறன் பயிற்சி மற்றும் விரிவான உள்கட்டமைப்பு ஆதரவை வழங்கும் நோக்கத்துடன் ' தொடங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| **‘நெய்தல் மறுசீரமைப்பு இயக்கம்’** | – | 3,733 ஹெக்டேர் பரப்பளவில் சதுப்புநில மறு சீரமைப்பை அரசு மேற்கொண்டு வருகிறது. |
| **‘அயோத்தி தாஸ் பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்’** | – | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்விடங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டு வருகின்றன. |
| **தொல்குடி’ திட்டம்** | – | பழங்குடியினர் வாழ்விடங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக. |
| **‘அண்ணல் அம்பேத்கர் வெளிநாட்டு உயர் கல்வி உதவித் தொகை திட்டம்’** | – | முதுகலை அல்லது ஆராய்ச்சி படிப்புகளைத் தொடரும் மாணவர்களின் நிதிச் சுமையைக் குறைக்க தொடங்கப் பட்டுள்ளது. |
| **ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக-பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (CM ARISE)** | – | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த நபர்களைத் தொழில்முனைவோராக மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படுகிறது |
| **Mobile Bidi Pustaka Hidi எனும் பிரச்சாரம்** | கர்நாடக அரசு | இந்தப் பிரச்சாரம் மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்ப்பதையும், கவனம் செலுத்துதல் மற்றும் கல்வித் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **Rah-Veer திட்டம்** | சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சகம் | இந்தத் திட்டம் சாலை விபத்து இறப்புகளைக் குறைத்து, பயமின்றி மற்றவர்களுக்கு உதவும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **Project HANUMAN** | ஆந்திரப் பிரதேசம் | மனித-வனவிலங்கு மோதலை நிவர்த்தி செய்தல் |
| **herSTART 5.0 திட்டம்** | குஜராத் | பெண் தொழில்முனைவோரை ஆதரித்தல் |
| **நிர்பயா நிஷா முன்னெடுப்பு** | கேரள மாநிலக் காவல்துறை | இரவில் பயணம் செய்யும் பெண்களுக்கு விரைவான காவல்துறை உதவி |
| **Say No to Proxy Sarpanch பிரச்சாரம்** | பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் | 'சர்பஞ்ச் பதி' முறையைத் தடுத்தல் |
| **குப்பைக் கிடங்கு சீரமைப்பு விரைவாக்கத் திட்டம்** | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் | 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் இலக்கு சுழிய குப்பைக் கிடங்கு என்ற இலக்கை அடைதல் |
| **கௌதாம் யோஜனா** | சத்தீஸ்கர் | கைவிடப்பட்ட மற்றும் தெருவோரக் கால்நடை களுக்காக சுமார் 1,460 தங்குமிடங்களை அமைத்தல் |
| **தீர்க்கவதி கிருஷக் புஞ்சி சாகர் யோஜனா** | தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகதம் | கூட்டுறவுச் சங்கங்களுக்கான நீண்டகாலக் கடனை வலுப்படுத்துல் |
| **IOS SAGAR initiative** | இந்திய கடற்படை | பிராந்திய கடல்சார் உறவுகளை வலுப்படுத்தல் |

| | | |
|---|---|---|
| **RISA Timeless Tribal Scheme** | பழங்குடியினர் விவகார அமைச்சகம் | பழங்குடியின கைவினைப்பொருட்கள் மற்றும் ஜவுளிகளை ஊக்குவித்தல் |
| **ரிஃபார்ம் எக்ஸ்பிரஸ் முன்னெடுப்பு** | இந்திய இரயில்வே | இரயில்வே துறையை நவீனப்படுத்தவும், சரக்கு மற்றும் பயணிகள் சேவையில் செயல்திறனை மேம்படுத்தல் |
| **'பாரத தொழில் வளர்ச்சித் திட்டம் (BHAVYA)** | மத்திய அரசு | இந்தியாவின் தொழில்துறை உள்கட்டமைப்பை மேம்படுத்தல் |
| **தேசிய AI திறன் மேம்பாட்டு முன்னெடுப்பு** | தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் | AVGC துறையில் 15,000 நிபுணர்களுக்குப் பயிற்சி அளித்தல் |
| **MyWAVES தளம்** | தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் | பல மொழிகளில் இந்தியப் படைப்பாளர்களுக்கு ஆதரவளிக்கிறது |
| **மேம்படுத்தப்பட்ட EPG** | தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம் | தொலைதூரப் பகுதிகளில் டிஜிட்டல் அணுகல் |
| **Atoms4NetZero** | சர்வதேச அணுசக்தி முகமை | நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடைவதற்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதை ஆதரிப்பதற்கான முன்னெடுப்பு |
| **மித்ரா திட்டம்** | இஸ்ரோ | ககன்யான் திட்டத்திற்காக விண்வெளி வீரர்களைச் சோதித்தல் |
| **e-SafeHER முன்னெடுப்பு** | மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் | இணையப் பாதுகாப்பு விழிப்புணர்வு |
| **இந்திய மொழிகளின் முன்னேற்றம் மற்றும் வளர்ப்பிற்கான வீரியமிக்கப் பரிந்துரைப்பு (VAANI 3.0)** | அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) | இந்திய மொழிகளில் தொழில்நுட்பக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் கற்றலை மேம்படுத்தல் |
| **உலகளாவிய கடல்சார் பாதுகாப்பு முன்னெடுப்பு** | இங்கிலாந்து & பிரான்ஸ் | ஹார்முஸ் நீர்ச்சந்தி வழி கப்பல் வழித்தடங்களைப் பாதுகாத்தல் |
| **விஸ்வ சூத்ரா முன்னெடுப்பு** | ஜவுளி அமைச்சகம் | இந்தியக் கைத்தறிகளை உலகளவில் மேம்படுத்தல் |
| **ஒரு வழக்கு ஒரு தரவு' முன்முயற்சி** | உச்ச நீதிமன்றம் | நீதித்துறைத் தகவல்களை ஒன்றிணைத்தல் |
| **சு சஹாய்' உரையாடல் மென் பொருள்** | உச்ச நீதிமன்றம் | சட்ட மற்றும் தகவல் உதவி |

| | | |
|---|---|---|
| **புதிய நாட்டின் மூலோபாய வாய்ப்புகள் திட்டம் (COSOP)** | இந்திய அரசு & சர்வதேச விவசாய மேம்பாட்டு நிதியம் | கிராமப்புற வாழ்வாதாரங்களை வலுப்படுத்தல் |
| **அருணாச்சலப் பிரதேசத்தின் கிவி திட்டம்** | வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம் | இயற்கை கிவி சாகுபடி வளர்ச்சி |
| **JEEVAN செயலி** | சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் | முதியோர்களின் பாதுகாப்பு, சுகாதார வசதிகளைப் பெறுதல், நல்வாழ்வு, கண்ணியம் மற்றும் சமூக உள்ளடக்கம் |
| **SHATAYU முதியோர் பராமரிப்பாளர் தகவல் பலகை** | சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் | முதியோர் பராமரிப்பாளர்களின் இருப்பைக் கண்டறிதல் |
| **உலகளாவிய இரசாயனங்கள் கண்காணிப்புத் திட்டம் (GCMP)** | UNEP & GEF | உலகளவில் அபாயகரமான இரசாயனங்களின் கண்காணிப்பு |
| **SUMAN செயல்வரைபடம் 2030** | மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் | தாய் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் சுகாதாரப் பராமரிப்பை வலுப்படுத்தல் |
| **ஒருங்கிணைந்த குழந்தை சுகாதாரத் திட்டம் - SSBSK** | மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் | பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தைகள் சுகாதாரப் பராமரிப்பு |
| **கிராமோதயம் திட்டம்** | நபார்டு | கிராமப்புற தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக |
| **'ஆஸ்தா வன சம்ரக்ஷன் யோஜனா'** | தேசிய ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையம் | 15,000 புனிதக் காடுகளைப் பாதுகாப்பதற்கு |
| **PARIVARTAN திட்டம்** | மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் | போக்குவரத்து தொடர்பான காற்று மாசுபாட்டைக் குறைப்பதற்கு |
| **'பாரத் உத்யோகிக் விகாஸ் யோஜனா ரசாயன்'** | மத்திய அரசு | ரசாயனப் பூங்கா |
| **"கோல்டன் ஸ்பைஸ்" திட்டம்** | வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம் | லக்காடாங் மஞ்சளின் மதிப்புச் சங்கிலி மேம்பாடு |
| **சமுத்திர மந்தன் திட்டம்** | பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் | கடலோர ஹைட்ரோ கார்பன் வள ஆய்வு |

| | | |
|---|---|---|
| **பிரதான் மந்திரி சூர்ய சரோவர் யோஜனா** | இந்திய சூரிய ஆற்றல் நிறுவனம் | மிதக்கும் சூரிய ஒளி மின் திறனை உருவாக்குதல் |
| **'தான்வீர்' (DAANVEER) முன்னெடுப்பு** | பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் | கிராம ஊராட்சிகளில் உள்ள உடனடி கணினித் தேவையை நிவர்த்தி செய்தல் |
| **விக்சித் பாரத் சங்கல்ப் அபியானுக்கான நாஷா முக்த் யுவா பிரச்சாரம்** | – | நாடு தழுவிய போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு |
| **கோபர்தன் திட்டம்** | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் | சுருக்கப்பட்ட உயிரிவாயுவுக்கான திட்டம் |

## பிரபலமானவர்கள் மற்றும் விருதுகள்

| நபர் | தொடர்புடைய துறைகள் | குறிப்பு |
|---|---|---|
| **ஸ்மிருதி மந்தனா** | – | மகளிர் சர்வதேசப் போட்டிகளில் 10,000 ரன்களைக் கடந்த இரண்டாவது இந்திய வீராங்கனை மற்றும் நான்காவது வீராங்கனை |
| **ராகேஷ் அகர்வால்** | இந்தியக் காவல் பணி அதிகாரி | தேசியப் புலனாய்வு முகமையின் (NIA) இடைக்காலத் தலைமை இயக்குநராக நியமனம் |
| **கலீதா ஜியா** | முன்னாள் வங்காள தேசப் பிரதமர் (வங்காளதேசத்தின் முதல் பெண் பிரதமர்) | – |
| **திவ்யா அருள்** | புதுச்சேரி | ஐரோப்பாவின் மிகவும் உயரமான சிகரமான ரஷ்யாவில் உள்ள எல்ப்ரஸ் மலையின் உச்சியை (5,642 மீட்டர்) வெற்றிகரமாக அடைந்தார் |
| **காம்யா கார்த்திகேயன் (மும்பை)** | 18 வயதான இந்திய மலையேறும் வீராங்கனை | தென் துருவத்திற்கு பனிச்சறுக்கு செய்த இளம் இந்தியர் மற்றும் உலகின் இரண்டாவது இளம் பெண் |
| **ராகுல் சாங்கிருத்யாயன் (1893–1963)** | இந்திய அறிஞர், எழுத்தாளர் | வால்கா முதல் கங்கை வரை ஏழாவது முறையாக தமிழில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது |
| **வாரன் பஃபெட்** | – | பெர்க்சையர் ஹாத்வேயின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) பதவியில் இருந்து ஓய்வு |
| **மேயர் ஜோஹ்ரான் மம்தானி** | நியூயார்க் நகர மேயர் | நியூயார்க் நகர மேயர் ஒருவர் பதவியேற்க இஸ்லாத்தின் புனித நூலைப் பயன்படுத்திய முதல் சந்தர்ப்பம் |

| | | |
|---|---|---|
| **இராஜேந்திர சிங்** | நீர் வளங்காவலர் | தாமிரபரணி நதியில் நிலவும் மாசுபாடு குறித்து ஆய்வு செய்வதற்காக ஆணையர் |
| **டெல்சி ரோட்ரிகியுஸ்** | – | வெனிசுலா நாட்டின் இடைக்கால அதிபர் |
| **சுரேஷ் கல்மாடி** | மூத்த காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சர் | – |
| **பாத்திமா அப்துல் ரஹ்மான் அல் அவதி** | – | அண்டார்டிகாவில் உள்ள வின்சன் மலையில் ஏறிய இளம் அரேபியர் |
| **சித்தராமையா** | – | கர்நாடகாவின் மிக நீண்ட காலம் பதவி வகித்த முதல்வர் |
| **D.B. வெங்கடேஷ் வர்மா** | முன்னாள் இந்திய வெளியுறவுச் சேவை (IFS) அதிகாரி | 2026–27 ஆம் காலக் கட்டத்திற்கான ஆயுதக் குறைப்பு விவகாரங்கள் குறித்த ஐ.நா. ஆலோசனைக் குழுவின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| **ஆர்யன் வர்ஷ்னி** | – | இந்தியாவின் 92வது சதுரங்க கிராண்ட் மாஸ்டர் |
| **ரேவதி மோஹிதே டெரே** | – | மேகாலயா உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதி |
| **பிரவீன் வஷிஸ்டா** | – | மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்தின் (CVC) ஊழல் கண்காணிப்பு ஆணையர் |
| **சுனிதா வில்லியம்ஸ்** | – | 27 ஆண்டுகள் பணியாற்றிய டிசம்பர் 27, 2025 அன்று அவர் நாசாவிலிருந்து ஓய்வு பெற்றார். |
| **சாய்னா நேவால்** | – | ஒலிம்பிக் பதக்கம் வென்ற அவர் 2026 ஆம் ஆண்டு ஜனவரியில் போட்டி முறை பாட்மிண்டன் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். |
| **யாஷ் அனில் ரஷியா** | ரோல் பால் தடகள வீரர் | துபாயில் நடைபெற்ற 7வது ரோல் பால் உலகக் கோப்பை 2025 போட்டியில் அவர் தங்கப் பதக்கம் வென்றார். |
| **நோவாக் ஜோகோவிச்** | செர்பிய டென்னிஸ் வீரர் | அவர் கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் 400 ஒற்றையர் பிரிவு போட்டிகளில் வெற்றிகளைப் பெற்ற முதல் வீரராக மாறியுள்ளார். |
| **லெப்டினன்ட் கே. எம். சுதா** | – | தேசிய மாணவர் படை (NCC) அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்வில் தங்கப் பதக்கம் வென்ற இந்தியாவின் வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த முதல் நபர் ஆக மாறியுள்ளார். |
| **சிம்ரன் பாலா** | – | ஜம்மு காஷ்மீரின் ரஜௌரி மாவட்டத்திலிருந்து மத்திய ரிசர்வ் காவல் படை (CRPF) அதிகாரியாக இணைந்த முதல் பெண்ணாக உருவெடுத்து உள்ளார். |

| | | |
|---|---|---|
| **டி. ஞானசுந்தரம்** | தமிழ்ப் பேரறிஞர் | மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் துணை இயக்குநராகப் பணியாற்றினார். |
| **அஜித் பவார்** | மகாராஷ்டிர துணை முதல்வர் | ஆறாவது முறையாக மகாராஷ்டிராவின் துணை முதல்வராகப் பதவியேற்றார். |
| **ரோஷினி** | ராணிப்பேட்டையைச் சேர்ந்த 9ம் வகுப்பு மாணவி | கோவாவில் நடைபெற்ற 29வது அகில இந்தியத் தேசியப் பாரம்பரியத் தற்காப்புக் கலை சாம்பியன்ஷிப் போட்டி 2026 என்ற போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். |
| **கேப்டன் ஹன்சா சர்மா** | – | இந்திய ராணுவத்தில் ஆயுதம் தாங்கிய ருத்ரா ஹெலிகாப்டரை ஓட்டத் தகுதி பெற்ற முதல் பெண் அதிகாரியாக மாறியுள்ளார். |
| **சுனேத்ரா பவார்** | – | இவர் மகாராஷ்டிராவின் முதல் பெண் துணை முதலமைச்சர் ஆனார். |
| **சர் மார்க் டல்லி** | முன்னாள் பிபிசி பத்திரிகையாளர் | 2002-ல் 'நைட்வுட்' பட்டம் வழங்கப்பட்டதுடன், 2005-ல் பத்ம பூஷன் விருதும் வழங்கப்பட்டது. |
| **எஸ்.எஸ். ராஜகோபாலன்** | புகழ்பெற்ற கல்வியாளர் | சமச்சீர் கல்வி முறையை உருவாக்கிய குழுவில் ஒரு உறுப்பினராக இருந்ததுடன், அகில இந்தியக் கல்வி உரிமை மன்றத்தின் தொழில்நுட்பக் குழுவிலும் பணியாற்றினார் |
| **எலோன் மஸ்க்** | – | 800 பில்லியன் டாலர் நிகர சொத்து மதிப்பைத் தாண்டிய வரலாற்றின் முதல் நபராக மாறியுள்ளார். |
| **யும்னம் கேம்சாந்த் சிங்** | மணிப்பூரின் புதிய முதலமைச்சர் | – |
| **சோரயா அகாஹே ஹஜிஹா** | ஈரானிய பேட்மிண்டன் வீராங்கனை | சர்வதேச ஒலிம்பிக் குழுவிற்கு (IOC) ஈரானில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் பெண் உறுப்பினராக மாறியுள்ளார் |
| **கியால்யம் ஆஷி டோர்ஜி வாங்மோ வாங்சுக்** | பூடான் அரசரின் ராணி தாயார் | 22வது உபேந்திர நாத் பிரம்மா 'மனிதநேயப் போர்வீரர்' விருது- 2025 ஐ பெற்றுள்ளார். |
| **சாம்ராட் ராணா மற்றும் சுருச்சி சிங்** | – | புது டெல்லியில் நடைபெற்ற ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் 2026 போட்டியில், ஆகியோர் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றனர். |
| **அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த கபக் யானோ** | இந்திய மலையேற்ற வீரர் | அர்ஜென்டினாவில் உள்ள அகோன்காகுவா மலையின் சிகரத்தின உச்சியை வெற்றிகரமாக அடைந்தார் |
| **தேவிகா சிஹாக்** | ஹரியானாவைச் சேர்ந்த பேட்மிண்டன் வீராங்கனை | தாய்லாந்து மாஸ்டர்ஸ் 2026 போட்டியில் தனது முதல் பேட்மிண்டன் உலகக் கூட்டமைப்பு (BWF) சூப்பர் 300 பட்டத்தை வென்றார். |

| | | |
|---|---|---|
| **மேகனா சஜ்ஜனார்** | – | புது தில்லியில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு ஆசிய ரைபிள் மற்றும் பிஸ்டல் துப்பாக்கி சுடும் சாம்பியன்ஷிப் போட்டியில் தனிநபர் வெண்கலப் பதக்கம் வென்றார். |
| **ஆதித்ய பாண்டியா** | – | குஜராத்தின் கட்ச் ரான் பகுதியில் உள்ள தோலாவிராவில் சந்திர-வாழ்விட சூழலை உருவகப்படுத்தும் ஆய்வில் கலந்து கொண்டதன் மூலம், 17 வயதான இத்தகையத் திட்டத்தில் பங்குபெற்ற இந்தியாவின் இளம் விண்வெளி வீரராக மாறியுள்ளார். |
| **ஸ்மரன் சர்வேஷ் ரீகர்வ்** | இந்திய வில்வித்தை வீரர் | பிரான்சில் நடைபெற்ற NIMES வில்வித்தைப் போட்டி 2026 இல், 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். |
| **தன்யா நாதன் சி** | – | கேரள மாநிலத்தில் உரிமையியல் நீதிபதி ஜூனியர் பிரிவு ஆட்சேர்ப்புக்கான நீதித்துறை சேவையின் மாற்றுத்திறனாளி தகுதிப் பட்டியலில் முதலிடம் பிடித்த முதல் பார்வையற்ற பெண்மணியாக மாறியுள்ளார். |
| **அனாஹத் சிங்** | இந்திய ஸ்குவாஷ் வீராங்கனை | அமெரிக்காவின் வாஷிங்டனில் நடந்த ஸ்குவாஷ் ஆன் ஃபயர் ஓபன் 2026 இல் தனது முதல் தொழில்முறை ஸ்குவாஷ் சங்க PSA வெண்கலப் பட்டத்தை வென்ற பிறகு உலகின் முதல் 20 வீரர்கள் தரவரிசையில் நுழைந்தார். |
| **ரிது தவ்டே** | மும்பை மேயர் | மும்பையின் முதல் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| **10 மாத குழந்தையான ஆலின் ஷெரின் ஆபிரகாம்** | – | கேரளாவின் இளம் வயது உறுப்பு தானம் செய்தவராக மாறியுள்ளார். |
| **லூகாஸ் பின்ஹெய்ரோ பிராத்தன்** | – | 2026 குளிர்கால ஒலிம்பிக்கின் போது நடந்த மாபெரும் ஸ்லாலோம் பிரிவு ஆல்பைன் பனிச்சறுக்கு போட்டியில் பிரேசிலின் முதல் குளிர்கால ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை வென்றார். |
| **டேவிட் ஜே. ஃபார்பர்** | "இணையத்தின் தாத்தா | அமெரிக்க கணினி விஞ்ஞானியான இவர் ஆரம்பகால கணினி வலையமைப்பின் வளர்ச்சிக்கும் இணையத்தின் முன்னோடியான ARPANET இன் விரிவாக்கத்திற்கும் பங்களித்தார். |
| **சனே தகைச்சி** | – | ஜப்பானின் முதல் பெண் பிரதமராக மாறியுள்ளார். |
| **ரன்வீர் சச்தேவா** | – | இந்திய AI தாக்க உச்சி மாநாடு 2026 இல் உரையாற்றிய இளம் வயது பேச்சாளராக மாறியுள்ளார். |

| | | |
|---|---|---|
| **கியூ விளையாட்டு வீரர்** | பங்கஜ் அத்வானி | Liber Win Champions Cup 2026 ஐ வென்று Liber Win-க்கான இந்திய விளம்பர தூதராக நியமிக்கப் பட்டார். |
| **ராப் ஜெட்டன்** | – | நெதர்லாந்தின் இளம் வயது பிரதமராக பதவியேற்று உள்ளார். |
| **ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி அதுல்யா மிஸ்ரா மற்றும் ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய் குமார் சிங்** | தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மாநிலத் தகவல் ஆணையர் | – |
| **ஆர். நல்லகண்ணு** | – | இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த இவர், 1992 முதல் மூன்று முறை தமிழ்நாடு மாநிலச் செயலாளராகப் பணியாற்றினார். |
| **ஜதீந்தர் மெஹ்ரா** | – | அவர் முன்னதாக எஸ்ஸார் குழுமத்தில் உலோகங்கள் மற்றும் சுரங்கப் பிரிவின் துணைத் தலைவராகப் பணியாற்றினார். |
| **நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி** | – | சென்னை உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதி |
| **திரௌபதி முர்மு** | – | ராஜஸ்தானில் உள்ள இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கு அருகே பிரசந்த் என்ற இலகு ரகப் போர் ஹெலிகாப்டரில் (LCH) பறந்த முதல் இந்தியக் குடியரசுத் தலைவர். |
| **சச்சின் டெண்டுல்கர்** | – | ஐக்கிய நாடுகள் சபையால் (UN) சாலைப் பாதுகாப்புக்கான உலகளாவிய சாம்பியனாக நியமிக்கப்பட்டுள்ளார். |
| **கிரீஸ் நாட்டைச் சேர்ந்த ஸ்டெஃபனோஸ் சகெல்லாரிடிஸ்** | – | டெல்லி ஓபன் 2026 இல் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார். |
| **டி.கே. உம்மன்** | – | 2008 ஆம் ஆண்டு பத்ம பூஷண் விருதைப் பெற்ற இவர் சுமார் 20 புத்தகங்களையும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். |
| **R.M. நாச்சம்மை** | – | இந்தியாவில் செயல்படும் அணுமின் நிலையத்திற்குத் தலைமை தாங்கும் முதல் பெண்மணி |
| **A. விஜயராம்** | – | புதிய தமிழ்நாடு மாநில தகவல் ஆணையர் |
| **மயங்க் சக்ரவர்த்தி** | – | இந்தியாவின் 94-வது சதுரங்க கிராண்ட்மாஸ்டர் |
| **இமயம்**<br>**(V. அண்ணாமலை)** | தமிழ்நாடு மாநில SC/ST ஆணைய துணைத் தலைவர் | தமிழ்நாடு மாநில SC/ST ஆணைய தற்காலிக பொறுப்பு தலைவர் |
| **நிரஞ்சன் ஜோதி** | – | தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவர் |
| **கிரண் உமேஷ் மஹல்லே** | – | தேசியப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| **ஆர்.கே. ராகவன்** | CBI முன்னாள் இயக்குனர் | சுய சரிதை - "A Road Well Travelled" |
| **மேனகா குருசாமி** | – | இந்தியாவின் முதல் வெளிப்படையான பால் புதுமையர் நாடாளுமன்ற உறுப்பினர் |
| **ஹரிவன்ஷ் நாராயண் சிங்** | – | மாநிலங்களவை நியமன உறுப்பினர் |
| **சாம்ராட் சவுத்ரி** | – | புதிய பீகார் மாநில முதலமைச்சர் |
| **ரோமன் கோஃப்மேன்** | – | இஸ்ரேலின் மொசாட் அமைப்பின் புதிய தலைவர் |
| **ஹரிவன்ஷ்** | – | தொடர்ந்து மூன்றாவது முறையாக மாநிலங்களவையின் துணைத் தலைவராக போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார் |
| **அரோன்யக் கோஷ்** | – | 95வது கிராண்ட்மாஸ்டர் |
| **உபேந்திர திவேதி** | இந்த கௌரவத்தைப் பெறும் மூன்றாவது இந்திய ராணுவத் தளபதி | அமெரிக்க ராணுவப் போர் கல்லூரியின் சர்வதேச புகழவையின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார் |
| **எம்.எம். நரவனே** | முன்னாள் ராணுவத் தளபதி | "The Curious and the Classified" புத்தகத்தை வெளியிட்டுள்ளார் |
| **ஆர். ரித்திகா ஸ்ரீ** | கிரிக்கெட் | இந்தியாவின் முதல் திருநங்கை கிரிக்கெட் நடுவர் |
| **ஜோரம் அனியா மற்றும் ஆர். பாலசுப்ரமணியம்** | – | நிதி ஆயோக்கின் முழுநேர உறுப்பினர்கள் |
| **ரோஹித் ஜெயின்** | – | இந்திய ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் |
| **பி.வி. சிந்து** | பேட்மிண்டன் | தடகள ஆணையத்தின் தலைவர் |
| **எஸ். ராஜா சுப்ரமணி** | லெப்டினன்ட் ஜெனரல் ஓய்வு | புதிய பாதுகாப்புப் படைத் தலைவர் |
| **விஜய் நாராயண்** | | தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் |
| **பிரவீன் சூட்** | CBI இயக்குநர் | ஓராண்டு பதவி நீட்டிப்பு |
| **காமி ரிடா ஷெர்பா** | மலையேற்ற வீரர் | 32-வது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை |
| **சிசிலி** | – | தமிழ்நாட்டின் முதல் பெண் காவலர் |
| **கே. ஆறுமுகம்** | ஹாக்கி வரலாற்று ஆய்வாளர் | India's First Olympic Gold புத்தக ஆசிரியர் |
| **அஜய் கோச்சார்** | கடற்படை துணை அதிகாரி | கடற்படையின் 48-வது துணைத் தளபதி |
| **வி. மோகனா** | மூத்த வழக்கறிஞர் | வழக்கறிஞர் பொறுப்பிலிருந்து நேரடியாக உச்ச நீதிமன்ற நீதிபதியாக உயர்த்தப்பட்ட இரண்டாவது பெண்மணி |
| **என்.எஸ். ராஜா சுப்ரமணி** | – | புதிய முப்படைத் தலைமைத் தளபதி |

| | | |
|---|---|---|
| **பி. சுமதி** | தமிழ்நாடு சட்டத்துறைச் செயலாளர் | இந்தப் பதவியை வகிக்கும் முதல் பெண் |
| **கிருஷ்ண சுவாமிநாதன்** | அட்மிரல் | 27வது கடற்படைத் தளபதி |
| **ஆர். பிரக்ஞானந்தா** | சதுரங்கம் | 2026 ஆம் ஆண்டிற்கான நார்வே செஸ் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் |
| **வினோத் ராய்** | முன்னாள் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் | 'When Audit Matters: CAG Interventions That Made a Difference' – புத்தக எழுத்தாளர் |
| **எலான் மஸ்க்** | – | உலகின் முதல் டிரில்லியனர் |
| **விவேக் அகர்வால்** | – | FATF துணைத் தலைவராக நியமிக்கப் பட்ட முதல் இந்தியர் |
| **பேராசிரியர் பிமல் N. படேல்** | இந்திய சட்ட நிபுணர் | கடல் சட்டத்திற்கான சர்வதேச தீர்ப்பாயத்தின் (ITLOS) நீதிபதி |
| **துஷார் மேத்தா** | – | இந்தியாவின் துணைத் தலைமை வழக்கறிஞராக மறு நியமனம் |
| **ஜெனரல் தீரஜ் சேத்** | – | 31வது ராணுவத் தலைமைத் தளபதி |
| **தீஜன் பாய்** | புகழ்பெற்ற பாண்டவானி கலைஞர் | சத்தீஸ்கர் |
| **கிரிஷ் பரத்வாஜ்** | – | இந்தியாவின் பால மனிதர் |
| **வி.டி. வள்ளுவன்** | – | UN FAO - 'மண் பாதுகாப்பு நாயகன்' |
| **பாடகி எஸ். ஜானகி** | – | தென்னிந்தியாவின் நைட்டிங்கேல் |
| **ஹர்ஜித் சிங் கிரேவால்** | – | தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் (NCM) தலைவர் |
| **விஸ்வநாதன் ஆனந்த்** | முன்னாள் உலக சதுரங்க சாம்பியன் | சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் (FIDE) இடைக்காலத் தலைவர் |
| **அனுராக் ஜெயின்** | – | நிதி ஆயோக்கின் தலைமைச் செயல் அதிகாரி |
| **வர்ஷா அசோக் அக்லாவே** | தொல்லுயிரியல் ஆய்வாளர் | இந்திய நிலவியலாய்வு மையத்தின் முதல் பெண் தலைமை இயக்குநர் |
| **பெலிக்ஸ் ஜெரால்டு** | – | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் |
| **டி. கிருஷ்ணகுமார்** | மணிப்பூர் உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி | மறுசீரமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் |
| **ஏ. எஸ். ராஜீவ்** | – | பொறுப்பு மத்திய விழிப்புணர்வு ஆணையர் |

| பரிசு / விருது | விருது பெற்றவர் | தொடர்புடைய துறை |
|---|---|---|
| **இஸ்ரேல் அமைதிக்கான பரிசு** | டொனால்ட் டிரம்ப் | அமெரிக்க அதிபர் |
| **நிருத்ய கலாநிதி விருது** | ஊர்மிளா சத்தியநாராயணன் | பரதநாட்டிய நடனக் கலைஞர் |
| **IFFCO சாகித்ய சம்மான் 2025** | மைத்ரேயி புஷ்பா (இந்தி மொழி எழுத்தாளர்) | இந்தி மொழி இலக்கியத்திற்கு, குறிப்பாக கிராமப்புற வாழ்க்கை தொடர்பான படைப்புகளுக்கு ஆற்றியப் பங்களிப்பிற்காக |
| **IFFCO இளம் இலக்கிய விருது 2025** | அங்கிதா ஜெயின் | – |
| **டெய்ரி டைட்டன் விருது** | ஆவின் நிறுவனம் | பால்வளத் துறையில் நிலைத்தன்மையை மேம்படுத்துவதிலும் விவசாயிகளின் நலனிலும் ஆற்றிய தலைமைப் பண்பிற்காக |
| **70வது அதி விசிஷ்ட இரயில் சேவா புரஸ்கார் 2025 விருது** | 100 இரயில்வே துறை அதிகாரிகள் | இந்திய இரயில்வே துறையில் வழங்கப்படும் மிகவும் உயர்ந்த விருதுகளில் ஒன்று |
| **SKOCH தங்க விருது** | NLC இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனம் | நிதி மேலாண்மை, செயல்பாட்டு திறன் மற்றும் மதிப்பு உருவாக்கத்திற்காக நிதிச் செயல்திறனுக்காக |
| **அமைதிக்கான நோபல் பரிசு 2025** | மச்சாடோ | வெனிசுலாவில் ஜனநாயக உரிமைகள் மற்றும் அமைதியான மாற்றத்தை ஊக்குவித்ததற்காக |
| **தமிழ்நாடு மாநில விருதுகள் 2026** | திருவள்ளுவர் விருது 2026 – டாக்டர் சத்தியவேல் முருகனார்<br><br>காமராஜர் விருது 2025 – இதயத்துல்லா<br><br>மகாகவி பாரதியார் விருது 2025 – நெல்லை ஜெயந்தா<br><br>2025ஆம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது – கவிஞர் யுகபாரதி<br><br>தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது 2025 – இறையன்பு<br><br>தந்தை பெரியார் விருது – A. அருள்மொழி | |

| | | |
|---|---|---|
| | அண்ணல் அம்பேத்கர் விருது – M. சிந்தனைச் செல்வன்<br>பேரறிஞர் அண்ணா விருது – துரைமுருகன் | |
| **நீடித்த அமைதிக்கான 2025 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. பொதுச் செயலாளர் விருது** | மேஜர் சுவாதி சாந்த குமார் | – |
| **தமிழ்நாட்டின் அயலகத் தமிழர் விருதுகள் 2026** | தமிழ் மாமணி விருது – அண்ணாமலை<br>கணியன் பூங்குன்றனார் விருதுகள்:<br>முகமது ஹனிஃபா பின் அப்துல்லா (கல்வி)<br>சரவணன் பத்மநாபன் மற்றும் செந்தில்குமார் இராமலிங்கம் (சமூக மேம்பாடு)<br>கோகிலவாணி பிரகாஷ்தேவன் (பெண்கள்)<br>அன்சாரி வாஹித் (வர்த்தகம்)<br>திருமலைசாமி வேலவன் (அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்)<br>கபிலன் தர்மராஜன் (மருத்துவம்)<br>சிறந்தக் கலாச்சாரத் தூதர் விருது–தீபா இராணி | – |
| **அதி விஷிஷ்ட் இரயில் சேவா புரஸ்கார் விருது** | சந்தன சின்ஹா (RPF காவல் ஆய்வாளர்) | குழந்தைகள் கடத்தலைத் தடுப்பதிலும், குழந்தைகளை மீட்பதிலும் அவர் ஆற்றிய சிறப்பான பணி |
| **டைலர் பரிசை** | டோபி கியர்ஸ் (அமெரிக்க உயிரியலாளர்) | மைக்கோரைசல் பூஞ்சை வலையமைப்புகள் குறித்த அவரின் ஆராய்ச்சிக்காக சுற்றுச்சூழல் சாதனை |
| **2025ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) பொதுச் செயலாளர் விருது** | சுவாதி சாந்த குமார் | இந்திய இராணுவ மேஜர் |

| | | |
|---|---|---|
| **பத்மபாணி விருது** | இளையராஜா | மூத்த இசையமைப்பாளர் |
| **அமைதி, ஆயுதக் குறைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான இந்திரா காந்தி பரிசு 2025** | கிராகா மச்செல் (மொசாம்பிக் நாட்டு உரிமை ஆர்வலர்) | |
| **பத்ம பூஷன்** | அல்கா யாக்னிக், மம்மூட்டி மற்றும் உதய் கோடக் | |
| **பத்மஸ்ரீ விருது** | கிருஷ்ணன்<br>விஜய்<br>குமார்<br>ஏ.இ. முத்துநாயகம் (மூத்த விண்வெளி விஞ்ஞானி) | |
| **வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் 2026** | பீட்டர் ஜான்சன்<br>வி. சங்கர்,<br>எஸ். ரமேஷ்குமார் மற்றும் பி. சுரேஷ் | – |
| **அசோக சக்ரா விருது 2026** | சுபான்ஷு சுக்லா (விண்வெளி வீரர்) | |
| **கோட்டை அமீர் விருது** | எம். கலிமுல்லா | |
| **நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறன் விருது** | விவசாயி ஜி. வீரமணி | |
| **காந்தி அடிகள் காவல் பதக்கங்கள்** | காவல்துறை ஆய்வாளர் பி. நடராஜன், உதவி ஆய்வாளர்கள் எம். சத்யானந்தன், எஸ். மணிகண்டன், கே. நடராஜன் மற்றும் காவலர் வி.பி. கண்ணன் | – |
| **குடியரசு தின அணிவகுப்பு 2026** | சிறந்த அணிவகுப்புக் குழுவிற்கான விருதை - இந்தியக் கடற்படை<br><br>சிறந்த அணி வகுப்புக் குழுவிற்கான விருதை - டெல்லி காவல்துறை<br><br>மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் இருந்து சிறந்த மூன்று அலங்கார ஊர்திகள் - மகாராஷ்டிரா (கணேசோத்சவம்: | – |

| | | |
|---|---|---|
| | தற்சார்பின் சின்னம்), ஜம்மு காஷ்மீர் (கைவினைப் பொருட்கள் மற்றும் நாட்டுப்புற நடனங்கள்), மற்றும் கேரளா (கடல்வழி மெட்ரோ மற்றும் 100% டிஜிட்டல் எழுத்தறிவு: தற்சார்பு இந்தியாவிற்கான தற்சார்பு கேரளா) ஆகும்.<br><br>மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் இருந்து சிறந்த அலங்கார ஊர்திக்கான விருதை - கலாச்சார அமைச்சகம் | |
| **தமிழ்நாடு மாநில திரைப்பட விருதுகள் – 2016/2022** | சிறந்த நடிகருக்கான விருது - விஜய் சேதுபதி, கீர்த்தி சுரேஷ், கார்த்தி, நயன்தாரா, தனுஷ், ஜோதிகா, சூர்யா, அபர்ணா பாலமுரளி, ஆர்யா, லிஜோமோல் ஜோஸ், விக்ரம் பிரபு, சாய் பல்லவி<br><br>சிறந்த திரைப்பட விருதுகள் - மாநகரம், அறம், பரியேறும் பெருமாள், அசுரன், கூழாங்கல், ஜெய் பீம், கார்கி<br><br>சிறந்த இயக்குநர் விருதுகளுக்கு - லோகேஷ் கனகராஜ், புஷ்கர்–காயத்ரி, மாரி செல்வராஜ், ஆர்.பார்த்திபன், சுதா கொங்கரா, டி.ஜே.ஞானவேல், கௌதம் ராமச் சந்திரன் | – |
| **விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவ தற்கான சிறந்த மாநிலத்திற்கான தேசிய விருது** | உத்தர காண்ட் | – |

| | | |
|---|---|---|
| **குடியரசுத் தலைவரின் காவல்துறை வண்ண விருது** | சிக்கிம் காவல்துறை | |
| **பத்ம பூஷண்** | S.K.M. மயிலானந்தன்<br>K.R. பழனிசாமி | |
| **பத்மஸ்ரீ விருது** | எச்.வி. ஹண்டே, ரஞ்சனி, காயத்ரி, புண்ணிய மூர்த்தி, நடேசன், சிற்பி ராஜஸ்தபதி, காளியப்ப கவுண்டர், வி. காமகோடி, கே.ராமசாமி, கலைக்காக – ஓதுவார் திருத்தணி சுவாமிநாதன், கலைக்காக – திருவாரூர் பக்தவத்சலம் மற்றும் இலக்கியம் மற்றும் கல்விக்காக – எழுத்தாளர் சிவசங்கரி | |
| **கிராமி விருதுகள் 2026** | சிறந்த ஆடியோ புத்தகம், கதைசொல்லல் மற்றும் ஒலிப்பதிவுப் பிரிவு – தலாய் லாமா, சிறந்த இசைத் திரைப் படத்திற்கான விருது – ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் | |
| **ஸ்வச்சதா பக்வாடா விருதுகள் 2025-ல் முதல் பரிசு** | ஒடிசாவின் பாரதீப் துறைமுக ஆணையமானது 'ஆண்டின் தூய்மையான துறைமுகம்' | |
| **சர்வதேச ஆசிரியர் பரிசு 2026** | இந்திய ஆசிரியையான ரூபிள் நாகி | |
| **பூம்புகார் மாநில விருதுகள் 2025-26** | கே. வெங்கடேஷ், சி. சங்கீதா, ஏ. பாபு, கே. ரீட்டா, எம். ஷபானா, எஸ். முருகன், ஏ. ராஜ், ஏ. கல்வாபீவி, டி. செலின் மேரி மற்றும் எம். குமார் ஆவர். | |
| **கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது** | மூத்த நடிகர் எம்.என். ராஜம் (2024) மற்றும் மூத்த திரைப்பட தயாரிப்பாளர் எஸ்.பி. முத்துராமன் | |

| | | |
|---|---|---|
| **பிராந்திய இணைப்புத் திட்டம் – உடே தேஷ் கா ஆம் நாக்ரிக் (RCS–UDAN) திட்டத்தின் கீழ், முன்னுரிமை யற்ற பகுதிப் பிரிவில் "மிகவும் முனைப்பான மாநிலம்" என்ற விருதைப் பெற்றது** | உத்தரப் பிரதேசம் | |
| **விலே ஆராய்ச்சி ஹீரோஸ் பரிசு 2025** | டாக்டர் சந்திரகாந்த் லஹாரியா (இந்தியப் பொது சுகாதார நிபுணர்) | இந்த உலகளாவிய ஆராய்ச்சி அங்கீகாரத்தைப் பெற்ற முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெற்றார். |
| **கிராஃபோர்டு பரிசு 2026** | வீரபத்ரன் ராமநாதன் (இந்திய வம்சாவளியைச் சேர்ந்த காலநிலை விஞ்ஞானி) | வீரபத்ரன் ராமநாதன் பசுமை இல்ல வாயுக்கள் (GHG) மற்றும் புவி வெப்பமடைதல் பற்றிய ஆராய்ச்சிக்காக அறியப்படுகிறார். |
| **சாங்-கிராண்டால் மனிதாபிமான விருது 2026** | டாக்டர் ஹரிப்ரியா அரவிந்த் மற்றும் டாக்டர் ஆர். வெங்கடேஷ் | மூத்த கண் மருத்துவர்கள் |
| **2026ஆம் ஆண்டுக்கான பார்வையின்மைத் தடுப்புக்கான சிறந்த சேவை விருது** | மோகன் ராஜன், | கண் மருத்துவர் |
| **2026 ஃப்ரீஸ்டைல் சதுரங்க உலகச் சாம்பியன்ஷிப்** | மேக்னஸ் கார்ல்சன் | – |
| **பிபிசி விருதுகள் 2025** | ஸ்மிருதி மந்தனா - 2025 ஆம் ஆண்டின் பிபிசியின் சிறந்த இந்திய விளையாட்டு வீராங்கனை<br><br>திவ்யா தேஷ்முக் - ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் வீராங்கனை விருது<br><br>ப்ரீத்தி பால் - ஆண்டின் சிறந்த பாரா-விளையாட்டு வீராங்கனை<br><br>அஞ்சலி பகவத் துப்பாக்கி சுடுதல் - வாழ்நாள் சாதனையாளர் விருதைப் | – |
| **2025 ஆம் ஆண்டுக்கான யுனெஸ்கோ ஆசிய-பசிபிக் கலாச்சாரப் பாரம்பரிய** | மகாராஷ்டிராவின் வசாய் நகரில் உள்ள 475 ஆண்டுகள் பழமையான அருள் அன்னை கதீட்ரல் | – |

| | | |
|---|---|---|
| **பாதுகாப்பு விருதுகளில் உயரிய நிலை விருது** | | |
| **சிறந்த வருகை வசதி தரும் விமான நிலையத்திற்கான 2025 விமான நிலைய சேவை தர (ASQ) விருது** | மங்களூரு சர்வதேச விமான நிலையம் | – |
| **ஆசியா-பசிபிக்கின் சிறந்த புறப்பாடு சேவை வழங்கும் விமான நிலையம்** | சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையம் | – |
| **BAFTA விருது 2026** | மணிப்பூரி மொழி இந்தியத் திரைப்படமான பூங் - சிறந்த குழந்தைகள் மற்றும் குடும்ப திரைப்படத்திற்கான விருது | – |
| **சிகாகோ முன்னாள் மாணவர் விருது** | K.V. சுப்பிரமணியன் | முதல் இந்தியப் பொருளாதார நிபுணர். |
| **12வது பொதுத்துறை நிறுவன (PSU) தேசிய விருது** | கர்நாடக மாநில சாலைப் போக்குவரத்துக் கழகம் | 'த்வனி ஸ்பந்தனா' திட்டத்திற்காக |
| **2026-ஆம் ஆண்டிற்கான ஞானபீட விருது** | வைரமுத்து | – |
| **சாகித்ய அகாடமி விருதுகள் 2025** | ச. தமிழ்செல்வன் | புத்தகம் - 'தமிழ் சிறுகதையின் தடங்கள்' |
| **ஸ்டாக்ஹோம் தண்ணீர் விருது 2026** | காவே மதனி | நீர்வளம் குறித்த ஆராய்ச்சி மற்றும் கொள்கை |
| **மார்க் லிண்டன் வரலாற்று விருது** | வில்லியம் டால்ரிம்பிள் | The Golden Road: How Ancient India Transformed the World புத்தகத்திற்காக |
| **பிரிட்டன் நாட்டின் அரசு கௌரவ நைட்ஹுட் விருது** | N. சந்திரசேகரன் | டாடா குழுமத்தின் தலைவர் |
| **Women Empowerment Trailblazer Award** | கல்பனா சோரன் | ஜார்கண்ட் MLA |
| **National Award for Outstanding Performance** | கர்நாடகா கிராமின் வங்கி | 2024–25 ஆம் ஆண்டிற்கான சுய உதவிக் குழு வங்கி இணைப்பு திட்டத்தில் சிறந்த செயல்பாடு |
| **பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதன் விருது** | டாக்டர் செருகுமல்லி சீனிவாச ராவ் | IARI இயக்குனர் |
| **சுகுமார் அழீக்கோடு நூற்றாண்டு தேசிய விருது 2026** | மேதா பட்கர் மற்றும் பெருமாள் முருகன் | சமூகம் மற்றும் இலக்கியம் |
| **விட்லி விருதுகள்** | பர்வீன் ஷேக் & பர்கா சுப்பா | பெண் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் |

| | | |
|---|---|---|
| **மால்கம் ஆதிசேஷையா விருது** | ராகவ் தாஸ் | சமூக அறிவியலாளர் |
| **எலிசபெத் ஆதிசேஷையா விருது** | கனிகா மகாஜன் | சமூக அறிவியலாளர் |
| **யுனெஸ்கோ/கில்லர்மோ கானோ உலகப் பத்திரிகைச் சுதந்திர விருது** | சூடான் பத்திரிகையாளர்கள் சங்கம் | பத்திரிகையியல் |
| **புலிட்சர் பரிசு** | ஆர். கே. ஆனந்த் மற்றும் சுபர்ணா சர்மா | பத்திரிகையாளர் |
| **'ராயல் ஆர்டர் ஆஃப் தி போலார் ஸ்டார், டிகிரி கமாண்டர் கிராண்ட் கிராஸ்'** | பிரதமர் நரேந்திர மோடி | ஸ்வீடன் நாட்டினால் வழங்கப்படும் மிக உயரிய கௌரவ விருது |
| **அக்ரிகோலா பதக்கம் – FAO** | | – |
| **ஆர்டர் ஆஃப் தி ஒயிட் டபுள் கிராஸ், முதல் வகுப்பு'** | | ஸ்லோவாக்கியா நாட்டின் உயரிய அரசு விருது |
| **Guardian of the Blue Horizon** | | சீஷெல்ஸ் நாட்டின் உயரிய விருது |
| **Bintang Adipurna of the Republic of Indonesia'** | | இந்தோனேசியா நாட்டின் உயரிய குடிமை விருது |
| **Speaker of the Knesset Medal விருது** | | இஸ்ரேலின் மிக உயர்ந்த நாடாளுமன்ற விருது. |
| **சர்வதேச புக்கர் பரிசு** | 'தைவான் டிராவலாக்' | எழுதியவர்-யாங் ஷுவாங்-ஸி ஆங்கில மொழிபெயர்ப்பு - லின் கிங் |
| **UNESCO-வின் அறிவியல் துறையில் பெண்களுக்கான விருது** | லீசல் சூல்கே (தென்னாப்பிரிக்கா), ஃபெலிஸ் ஜாக்கா (ஆஸ்திரேலியா), சாரா ஏ. டீச்மேன் (யுனைடெட் கிங்டம்), ராகேல் லியா சான் (அர்ஜென்டினா) மற்றும் கோர்டானா வுன்ஜாக்-நோவாகோவிக் (அமெரிக்கா) | வாழ்க்கை மற்றும் சுற்றுச்சூழல் அறிவியலுக்கான பங்களிப்புகளுக்காக |
| **'கோடார்ட் விண்வெளிப் பயண விருது** | இஸ்ரோவின் சந்திரயான்-3 | – |
| **ஐநா சபையின் ஆண்டின் சிறந்த இராணுவப் பாலினப் பாதுகாவலர் விருது** | மேஜர் அபிலாஷா பராக் | – |
| **FAO Soil Farmer Hero** | வள்ளுவன் | தமிழக விவசாயி |
| **The Earth Prize** | விவான் சாவ்சாரியா, அரியானா அகர்வால் மற்றும் அவ்யானா மேத்தா | Plas-Stick என்ற மட்கக்கூடிய நீர் சுத்திகரிப்பு கண்டுபிடிப்பு |

| | | |
|---|---|---|
| **2026ஆம் ஆண்டிற்கான விளையாட்டுக்கான 'பிரின்சஸ் ஆஃப் அஸ்டூரியாஸ் விருது'** | லியோனல் மெஸ்ஸி | கால்பந்து |
| **2026 ஆம் ஆண்டிற்கான இயற்பியலுக்கான உல்ஃப் பரிசு** | ஜெயனேந்திர கே. ஜெயின் | முதல் இந்திய வம்சாவளியைச் சார்ந்த அறிவியலாளர் |
| **சர்வதேச வானிலை அமைப்பு (IMO) பரிசு** | பிரெஞ்சு வானிலை ஆய்வாளர் டாக்டர் புளோரன்ஸ் ராபியர் | எண்ம வானிலை முன்னறிவிப்பு |
| **சிறந்த எக்மாண்ட் வழக்கு விருது** | நிதி உளவுப் பிரிவு-இந்தியா | இரண்டாம் இடம் |
| **60-வது ஞானபீட விருது (2025)** | ஆர். வைரமுத்து | |
| **லோக்மான்ய திலகர் தேசிய விருது** | அஜித் தோவல் | தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் |
| **பாரத் சம்மான் 2026** | சமூக ஆர்வலர் டாக்டர் நந்தினி | பெண்கள் மேம்பாடு |
| **ஃபீல்ட்ஸ் பதக்கம் 2026** | யு டெங் (சீனா), ஜான் பார்டன் (அமெரிக்கா), ஹாங் வாங் (சீனா) மற்றும் ஜேக்கப் சிம்மர்மேன் (கனடா) | கணிதத் துறையின் மிக உயரிய விருது |
| **2026 ஆம் ஆண்டிற்கான COSPAR விக்ரம் சாராபாய் பதக்கம்** | அன்னபூர்ணி சுப்பிரமணியம் | வானியற்பியல் அறிவியலாளர் |
| **சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருது 2026** | பி. பேச்சியம்மாள் மற்றும் கோவிந்தம்மாள் | சுற்றுச்சூழல் பாதுகாப்பு |
| **டிராக் பதக்கம் 2026** | தீபக் தர் | இந்திய இயற்பியலாளர் |

## நிகழ்வுகள் மற்றும் மாநாடுகள்

- ❖ சந்தாலி மொழியின் ஒல் சிக்கி எழுத்து வடிவத்தின் நூற்றாண்டு விழா ஜார்க்கண்டின் ஜாம்ஷெட்பூரில் நடைபெற்றது.
- ❖ புத்தரின் பூதவுடலுடன் தொடர்புடையவை என்று நம்பப்படுகின்ற புனித பிப்ரவா நினைவுச்சின்னங்களின் கண்காட்சி டெல்லியில் நடைபெற்றது.
- ❖ 'One World, One life – The spirit of new humanity' என்ற கருத்துருவின் கீழ், பிரம்மஞான சபையின் 150வது சர்வதேச மாநாடு அடையாறில் கொண்டாடப்பட்டது.
- ❖ அருணாச்சலப் பிரதேச மாநில அரசானது தனது முதல் புத்தாண்டு சூரிய உதய விழாவை 2026 ஆம் ஆண்டில் அஞ்சாவ் மாவட்டத்தில் உள்ள டோங் என்ற கிராமத்தில் நடத்தியது.
- ❖ கலாச்சார மற்றும் பாரம்பரியச் சுற்றுலாவை வலுப்படுத்துவதற்கும், கேரளாவை உலகளாவியப் பாரம்பரியத் தளமாக நிலை நிறுத்துவதற்காகவும் என்று, கேரளாவின் கொச்சியில் மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச நறுமணப் பொருட்கள் வழித்தட மாநாடு நடைபெற உள்ளது.

- ❖ PRAGATI (செயல்பாடு சார் ஆளுகை மற்றும் சரியான நேரத்திலான அமலாக்கம்) தொழில்நுட்பம் சார்ந்த தளத்தின் 50வது கூட்டம் ஆனது, புது டெல்லியில் நடைபெற்றது.
